உ

கணபதி துணை

சந்திரசேகரம்

சுன்னாகம்

ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்

மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



வெளியீடு:

சுன்னாகம்

ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்

விஜய வருடம் ஆடித்திங்கள் 27ஆம் நாள்

11.08.2013

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADITYAPATHAM ROAD
KOKUVIL WEST

சந்திரசேகரம்



மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

2013

வெளியீடு

சுன்னாகம்

ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்

விஜய வருடம் ஆடித்திங்கள் 27ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

11-08-2013

தலைப்பு : சந்திரசேகரம்
கும்பாபிஷேக நிறப்பு மலர்

முகவரி : ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்
சுன்னாகம்.

உரிமை : தேவஸ்தானத்திற்கு

பதிப்பு : ஆவணி 2013

வெளியீடு : ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்
சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு : கரிகணன் (பிறைவேட்) லிமிட்டெட்
681, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.



மூலமூர்த்தி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சமர்ப்பணம்



"சந்திரசேகரம்" மலரை

எல்லாம் வல்ல ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாரின் திருவ-

டிகளுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

சந்திரசேகரம் மலரின் உள்ளே...

1. இந்திய துணைத்தூதர் அவர்களின் வாழ்த்துச்செய்தி vii
2. மலர் ஆசிரியர் viii

ஆசியுரைகள்

1. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் ix
2. பிரம்மஶ்ரீ தா.மகாதேவக் குருக்கள் x
3. பிரம்ம ஶ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள் xi
4. பிரம்மஶ்ரீ சிவசாமி பாஸ்கரக்குருக்கள் xii
5. சிவ ஶ்ரீ பொ. வாமதேவன் xiii
6 . கலாநிதி ஆறு.திருமுருகன் xiv

வாழ்த்துரைகள்

1. திருமதி சாந்தி நாவுக்கரசன் xv
2. டாக்டர் சு. ரவிராஜ் xvi

கட்டுரைகள்

1. ஆலய வரலாறு 1
2. பிள்ளையார் 8
3. விநாயகர் அருட் பெருமை 10
4. சித்தாந்தம் காட்டும் விநாயகப் பெருமான் 12
5. திருக்கோயில்கள் வளர்த்த வாழ்வியற் செல்நெறியில் அறப்பணிகளும் ஆன்மநேயமும் 16
6. விநாயகர் பெருமை வணக்கத்தில் முதலிடம் பெறும் விநாயகர் 25
7. மஹா கும்பாபிஷேகம் 29
8. பிள்ளையார் வழிபாடு 32
9. பதினொராந் திருமுறையும் விநாயகப் பெருமான் தோத்திரங்களும் 38
10. பிறவிப் பிணி நீக்கும் நெறிகள். 41
11. காணாபத்தியம் ஒரு நோக்கு 46
12. நலம் தரும் நாயகன் 48
13. சைவ வாழ்வு 50
14. விநாயகருக்கு உகந்தவையும் அதன் தத்துவமும் 52
15. திருக்குறளில் அறம் 55

16. ஈழநாடும் விநாயகர் வழிபாடும் 63
17. பிள்ளையார் கதை - சிவராத்திரி புராணம் தந்த சுன்னாகம் வரதபண்டிதர் 79
18. அமைதியாக வாழ்ந்து அரும்பணி ஆற்றிய அந்தணப் பெருமகன் 81
- சிவஸ்ரீ சபாரத்தின ஐயர் - சேமஸ்கந்தக்குருக்கள்
19. ஆலய வழிபாடு 82
20. பிள்ளையார் ஆயுதங்கள் 93
21. செல்லாச்சி அம்மையார் 98
22. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழியில் குமாரசுவாமிப் புலவர் 101
23. சைவ சமயிகள் இலக்கணம் 106
24. ஒளவையார் அருளிய விநாயகர் அகவல் உரையுடன் 108
25. ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் மஹா கும்பாபிஷேக வாழ்த்து - 1958 111
26. ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் இரட்டை மணிமாலை 113
27. ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் திருவூஞ்சல் 117
28. ஸ்ரீ சந்திரசேகர விநாயகரே சகல கலைகளையும் தருவீர் 122
29. ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கும்மிப் பாடல் 123
30. ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் நாலாவது கும்பாபிஷேக வாழ்த்து பாமாலை 126
31. ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் மீது பாடிய கீர்த்தனம் 128

பிரார்த்திக்கிறேன்

நன்றி

भारत का प्रधान कौंसलावास
जॉफना



Consulate General of India
Jaffna

மஹா கும்பாபிஷேக மலருக்கான

வாழ்த்துச்செய்தி

பசுமை வாய்ந்த வயல்வெளிகளுக்கு நடுவே இயற்கைச் சூழலில் அமைந்துள்ள ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து இறையருள் பெற்ற ஆனந்தத்துடன் கும்பாபிஷேக சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

400 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக்கொண்டுள்ள இவ்வாலயமும் ஆலயம் அமைந்துள்ள சுற்றுப்புறமும் பக்திமயமான ஓர் சூழலைத் தோற்றுவித்திருக்கின்றது. அத்துடன் ஆலய நிர்வாகமானது இவ்வாறான மலர்களை வெளியிட்டு இளையோர் மத்தியில் அறநெறிகளைப் போதித்து வருவது இன்றைய சமுதாயச் சூழலில் அவசியமானதொன்றாகிறது.

இந்தியாவிலிருந்து குளக்கோட்ட மன்னரால் இலங்கைக்கு ஸ்ரீ உத்தரகோஜமங்கை என்ற இடத்திலிருந்து அழைத்துவரப்பட்ட பரம்பரையினரே தற்போதைய பிரதம குருவும் ஆதீனகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ சோ.சந்திரகாந்தக்குருக்கள் என்பதை அறிந்து பெருமகிழ்வு கொள்கின்றேன்.

மக்கள் உயிர் காக்கும் வைத்தியச்சேவையுடன் ஆன்ம ஈடேற்றம் அளிக்கும் ஆன்மீக சேவையையும் ஆற்றிவரும் வைத்திய கலாநிதி திரு.ரவிராஜ் அவர்களுடைய சேவைகள் தொடரவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வெங்கடாசலம் மகாலிங்கம்,
இந்திய துணைத்தூதர்,
யாழ்ப்பாணம்.

மலர் ஆசிரியரின் செய்தி

வளம் கொழிக்கும் சுன்னையம்பதியில் மருத நிலத்தில் கோயில் கொண்டிருக்கும் சந்திரசேகர விநாயகப்பெருமானுக்கு 28 - 06 - 2013 ஆந் திகதி நடைபெற்ற புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் சம்பந்தமாக "சந்திரசேகரம்" என்ற இந்த மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பழமைப் பெருமையும் அருட்பொலிவும் பக்திச் சிறப்பும் பொருந்திய இவ்வாலயத்தின் வரலாற்று ஆவணமாகவும் சமயநெறிகளை வாழ்க்கையில் கைக்கொண்டு ஒழுகுவதற்கு இன்றைய சந்ததியினரையும் எதிர்காலச் சந்ததியினரையும் தூண்டும் வகையில் சமய தத்துவங்களையும் அனுபூதிமான்களின் அறிவுரைகள் ஆகியவற்றைக் கொண்ட சமயக்களஞ்சியமாகவும் வாழ்க்கை முறைகளை விளக்கும் வழிகாட்டியாகவும் அமையவேண்டும் என்ற நிருவாகசபையின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இந்த மலர் உருவாக்கப்படுகிறது.

இம் மலரில் விநாயகப்பெருமானின் பெருமைகளையும் அவரை வழிபடும் முறைகளை சமயதத்துவங்கள், சைவசமயிகளின் இலக்கணம், பிள்ளையாரை வழிபட்ட பெருமைக்குரியவர்கள், ஈழநாடும் விநாயகவழிபாடும் முதலானவற்றை விளக்கும் கட்டுரைகள் பல உள்ளன.

ஆசியுரைகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப்பாக்கள் ஆராய்ச்சிக்கட்டுரைகள், பேராசிரியர், விரிவுரையாளர்கள், சிவாச்சாரியார்கள், பண்டிதர்கள், சைவப்புலவர்கள், முதலானோர் வழங்கியுள்ளனர். குறுகிய காலத்தில் இவற்றைத் தந்துதவியுள்ளனர். மலர் சம்பந்தமான ஆலோசனைகளை சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை, பிரம்மஶ்ரீ சி. சிவசரவணபவன்(சிற்பி) திரு. ஆ. சபாரத்தினம், திரு. அ. பரமநாதன் திருவாட்டிகலாதேவி பொன்னம்பலம் ஆகியோருடன் ஆதீனகர்த்தாவாகவிருக்கும் பிரம்மஶ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள், பிரம்மஶ்ரீ சோ. ஈஸ்வரசர்மா ஆகியோரும் வழங்கினர்.

ஆலய வரலாற்றுடன் தொடர்பான படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. விநாயகரின் பெருமைகளை அறிந்து வழிபடுவதன்மூலம் ஆலயத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆன்மீக சமுதாய முன்னேற்றத்திற்கும் இம்மலர் உதவும் என நம்புகிறோம். குறுகிய காலத்தில் வெளியிடப்பட்டதால் சேர்க்கப்பட வேண்டிய தகவல்கள் விடுபட்டிருக்கலாம். அறிந்தவர்கள் அவற்றைத்தந்துதவி சிறப்பான ஆவணமாக அடுத்த மலர் வெளிவர உதவவேண்டும் என்று கோருகிறோம். பலவழிகளிலும் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட அனைவரும் வழங்கிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் தாராளமான நிதி உதவியும் விரைவாக மலர்வெளிவர காரணமாகின்றது.

சுன்னாகம்
11. 08. 2013

க. செல்வக்குமாரன் M.A.
மலர் ஆசிரியர்
நிர்வாக சபையின் சார்பில்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் அவர்களின்

ஆசிச்செய்தி

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்லபரம்பொருளான சிவபெருமானின் மூத்த திருக்குமாரரான விநாயகப் பெருமான் சுன்னாகம் எனும் நற்பதியிலே சந்திரசேகரப் பிள்ளையார் என்ற திருநாமத்துடன் எழுந்தருளி வீற்றிருந்து வழிபடும் அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

பேரோடு புகழீட்டி உலகம் போற்றும் உத்தமர்கள் அறிஞர் பெருமக்கள் வாழ்ந்த இடம் சுன்னாகம். இச் சிறப்புமிகு நற்பதியிலே எழுந்தருளியுள்ள சந்திரசேகரப் பிள்ளையாருக்கு மஹாகும்பாபிஷேகம் வெகு விமரிசையாகச் சிறப்போடு நடைபெற்றது. அதையொட்டி வெளிவரும் மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலருக்கு அருளாசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

வேரோடு வினை நீக்கும் விநாயகப் பெருமான் இந்தச் சுன்னாகப் பதி வாழும் அனைத்து மக்களுக்கும் அருள்புரிந்து சந்திரசேகர விநாயகராகத் திருக்காட்சியளிக்கின்றார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவது இந்தக் குடமுழுக்கு என்று சொல்லப்படுகின்ற பெருஞ்சாந்தி விழாவாகும். இதனை நிறைவேற்றியிருக்கும் அன்பர்கள் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்தவர்களாவர். இத்திருப்பணியை முன்னின்று நடாத்தியவர்களுக்கும் சகல விதத்திலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் நல்ல க்ஷேமத்தையும் சகல சௌபாக்கியங்களையும் அருளவேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

இணுவில் காயத்திரிபீடம் தர்மசாஸ்தா குருகுலம் முதல்வர்
அவர்களின்

ஆசிச்செய்தி

நிரம்ப அந்தணப் பெருமக்களுக்கும் குலதெய்வமாக விளங்கி அருள் புரியும் சுன்னாகம் சந்திரசேகர விநாயகப் பெருமானது புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் அடியார்களது பெரு முயற்சியால் சிறப்பாக நிறைவெய்தியது. வாசலில் கம்பீரமாக அமைந்திருக்கும் இராஜகோபுரமும் மணிமண்டபமும் ஆலயத்திற்கு புதுப்பொலிவு அளித்திருக்கின்றதென்றால் அது மிகையாகாது. பல அன்பர்களினதும் கொடைவள்ளல்களினதும் நிதி விநாயகப் பெருமானது திருப்பணியை செவ்வனே நிறைவேற்ற உதவியிருக்கின்றது. திருப்பணியில் பெருமக்களோடு வைத்திய நிபுணர் சு.ரவிராஜ் அவர்களது பெரு முயற்சியும் அமைந்தது ஆலய கைங்கரியங்கள் நிறைவேற ஒரு உந்து கோலாக அமைந்தது. எல்லோருக்கும் விநாயகர் திருவருள் கிடைப்பதாகுக.

விநாயகப் பெருமானுடைய சஹஸ்ர நாம அர்ச்சனையில் 1008ஆவது நாமம் "அநந்த ஆனந்த சௌக்ய தாய நம:" என்பதாகும் . எப்போதும் சந்தோஷத்தையும் ஆரோக்கியத்தையும் விரும்பும் மக்களுக்கு எண்ணிலாத சந்தோஷத்தையும் ஆரோக்கியத்தையும் விநாயகர் அருளுகிறார். எண்ணிலாத ஆனந்தத்தையும் சௌக்யத்தையும் தருகின்ற விநாயகப் பெருமானே உமக்கு வணக்கம் என்பதே அம்மந்திரத்தின் பொருளாகும். ஆகவே சமீபத்தில் நடந்தேறிய வல்லபாம்பிகா சமேத சந்திர சேகர விநாயகப் பெருமானது புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தின் பயனாக மக்கள் எல்லோரும் அனைத்து ஆனந்த சௌக்யத்தைப் பெற்று சிறப்புற வாழ்வார்களாக.

விநாயகப் பெருமானுடைய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தை பல அந்தண சிவாச்சாரியார்களோடு பிரதம குருவாக இருந்து நடாத்திவைத்த சிவஸ்ரீ. சோ. சந்திரகாந்தக்குருக்கள் மந்திரம், கிரியை பாவனைகளில் தனக்கே உரித்தான வல்லமை மிக்கவர். அவரும் அவரது குடும்பத்தவர்களும் விநாயகப் பெருமானின் பாதசேவை செய்பவர்கள். அவர்களும் இக் கும்பாபிஷேகத்தின் பயனாக எல்லாச் செல்வங்களும் பெற்று சிறப்புற வாழ விநாயகர் திருவருள் துணைநிற்பதாகுக.

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
காயத்திரி பீடம் தர்மசாஸ்தா குருகுல முதல்வர்
இணுவில்.

ஆசிச்செய்தி

சுன்னாகம் பதியில் பல நூற்றாண்டு காலமாக கோவில் கொண்டு பக்தர்களைத் தன்பால் வசப்படுத்தி அனுக்கிரகம் புரிந்துவரும் ஸ்ரீ சந்திரசேகர விநாயகருக்கு, மங்களகரமான விஜயவருஷம் ஆனித்திங்கள் 14ஆம் நாள் (28.06.2013) சுக்கிரவாரம் ஷஷ்டித்திதியும், சதயநட்சத்திரமும் கூடிய சுபதினத்தில நடைபெற்ற ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக பெரும் சாந்தி விழாவினை பக்தர்கள் மனம்குளிர பரவசத்துடன் கண்டு களித்தது அற்புதக்காட்சியாக அமைந்தது.

1975ஆம் ஆண்டு ஆனிமாதம் சதய நட்சத்திரத்தில் புணருத்தாரண மஹாகும்பாபிஷேகம் நவாலியூர் " பிரதிஷ்டாசிரோமணி" சாமி விஸ்வநாதக் குருக்களினால் நடாத்தப்பட்டது. பின்னர் 1993ஆம் ஆண்டு ஐப்பசி மாத உத்திராட நட்சத்திரத்தில் சம்புரோக்ஷன மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு ஆலயத்தை நிர்வாக சபையினர் பொறுப்பேற்று விநாயகருக்கு திரிதள விமானம், சிவபெருமானுக்கு துவிதள விமானம், வாசலில் அழகிய கலையம்சம் பொருந்திய மணிமண்டபம், 65அடி உயரத்தில் பஞ்சதளராஜ கோபுரம், துவிதளவிமானத்தோடு கூடிய வசந்த மண்டபம், பஞ்சமுகவிநாயகர் வாசலில் சிறிய கோபுரம், இன்னும் பல சிறப்பு வேலைகளை இனிதே நிறைவேற்றினர்.

இந்த ஆலய வளர்ச்சிக்கு ஆலயத் தொண்டர்களின் பங்கு அளப்பரியது. அவர்களின் ஒத்தாசையும், சிரமதானமும் அன்பும் அளவிடமுடியாதது. தொண்டர்களினால் வளர்ந்தது இந்த ஆலயம் எனலாம்.

விநாயகர் இருக்குமிடம் ஆனந்த புவனம். ஆனந்தம் தாண்டவமாடுகின்ற இடம் மூர்த்தி, தலவிருட்ஷம், தீர்த்தம் பெருமை கொண்ட ஆலயம் முன்னைய கும்பாபிஷேக தினமான ஆனிச்சதய நட்சத்திரத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது சிறப்பம்சமாகும்.

இவ்வாலய புணருத்தாரண வேலைகளை முன்னின்று நடாத்திய நிர்வாக சபையினருக்கும், தொண்டாற்றிய இளைஞர்களுக்கும் பண உதவி பொருளுதவி புரிந்த அன்பர்களுக்கும் மற்றும் அடியார்களுக்கும் விநாயகப் பெருமானின் பேரருள் கிடைக்கப் பிரார்த்தித்து கும்பாபிஷேகமலர் சிறப்புற அமைய சந்திரசேகரனின் பாதார விந்தங்களைத் தொழுது என்னுடைய ஆசியையும் அன்பையும் " அவனருளாலே அவன் தாள் வணங்கி" சமர்ப்பிக்கின்றேன்.

" வாழ்க சைவம், வளர்க இறை தொண்டு"

"கிரியாசிரோமணி"
சோ. சந்திரகாந்த குருக்கள்
ஆதீனகர்த்தா,
பிரதம குரு, சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்.

ஆசிச்செய்தி

ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாண மாநகரில் சுன்னாகம் பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் சந்திரசேகரப்பிள்ளையாரின் புனராவர்த்தன கும்பாபிஷேகம் பல சிறப்புகளோடு கண் கொள்ளாக் காட்சியாக நடந்தேறியது.

இவ்வுலகத்தை ஒரு சக்தி படைத்துக் காப்பாற்றி வருகின்றது. இச்சக்திக்கே கடவுள் என்று பெயர். கடவுள் எல்லா உலகத்துக்கும், எல்லா உயிர்களுக்கும் தலைவராவார். அவர் நமக்குப் பல அவயவங்களையும், சகல சௌபாக்கியங்களையும் கொடுத்திருக்கின்றார். அன்புடன் நம்மைக் காப்பாற்றுகின்றார். விநாயகரை நாம் உண்மையுடன் வழிபட்டால் இவருக்கு நம்மிடம் கருணை ஏற்பட்டு நம்மை எல்லாத் துக்கங்களினின்றும் விடுவித்து அழியாத ஆனந்த நிலையை அடைவிப்பார்.

தெய்வ வழிபாட்டை எல்லோரும் அவரவர் வீடுகளில் செய்வதுடன், அனேக பக்தர்களுடன் ஒன்று சேர்ந்து சிற்பசாஸ்திர முறையில் ஆலயங்களை நிர்மாணித்து சாஸ்திரீயமாக அமைக்கப்பட்ட இஷ்ட மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வித்து இம்மூர்த்திகளை வழிபடுவதும் சீக்கிரம் விரும்பும் பயன்களை அளிக்கக் கூடியதாகும்.

ஆலயத் திருப்பணி செய்வது சுலபமான காரியமல்ல, இப்பெரும் பாரத்தை ஏற்று ஒழுங்கமைப்பு செய்து கும்பாபிஷேகம் நடாத்தும் பாக்கியம் இந்த ஆலய நிர்வாக சபையினருக்குப் பூர்வ ஜன்ம புண்ணிய வசத்தால் கிடைத்துள்ளது. இத் தெய்வப்பணியை விநாயகப் பெருமானின் ஆக்ஞையாகச் சிரமேற்றுக் கருமமே கண்ணாகி வெற்றிகரமாக நடாத்தி முடித்த நிர்வாக சபையினருக்கும், இப்பணியில் பொருளுதவிகள் செய்தும் ஏனைய வழிகளில் ஈடுபட்டு ஒத்துழைத்துமுள்ள எல்லா அன்பர்களுக்கும் அஷ்ட ஐஸ்வர்யங்களும், ஆரோகதிடகாத்திரமும், சகல சம்பத்துக்களும், நீண்ட ஆயுளும் சிந்தித்தசந்திரசேகரவிநாயகப் பெருமானின் அருளும், ஆசியும் கிட்ட வேண்டுகின்றேன்.

சிவப்பிரம்மஶ்ரீ சிவசாமி பாலபாஸ்கரக் குருக்கள்
தேவஸ்தானக்குரு,
சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்.

ஆசிச்செய்தி

சுன்னாகத் திருவூரிலே குடிகொண்டிருக்கும் சந்திரசேகரப் பிள்ளையாரின் மஹாகும்பாபிஷேகச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்வடைகின்றேன். தும்பிக்கையானைத்தொழுபவர்க்கு நம்பிக்கையான நல்வாழ்வு கிட்டும். மக்களை மாசற்ற வழியில் வழிநடாத்துவதற்கு திருக்கோயில்கள் சிறக்க வேண்டும். அவ்வகையில் இளைய தலைமுறையினர் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்யவும் தொண்டு செய்யவும் ஊக்குவித்தல் காலத்தின் கட்டாயம் ஆகும். அவ்வகையில் எம் ஊரிலே தாளையம்பதி ஐயனுடன் அருகில் அமர்ந்து அருள் ஆட்சி நடாத்தி வரும் எம் விநாயகப் பெருமானிற்கு மஹா கும்பாபிஷேகம் நடாத்தி எம் பெருமான் இராஜகோபுரத்துடன் புதுப்பொலிவு பெற்று விளங்கி நிற்கும் இவ் வேளையில் எம்பெருமானது அருளால் மாணவர்கள் கல்வியில் உயரவும் விவசாயிகளின் விவசாயம் தலை சிறக்கவும் அவனால் அனைத்து செல்வங்களையும் பெற்று வாழவும் எம் பெருமான் விநாயகப் பெருமான் திருவருள் வழங்கவேண்டும் எனப் பிரார்த்தித்து இந்நூலிற்கு எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெ. வாமதேவன்
ஆதீன கர்த்தாவும், பூசகரும், ஐயனார் தேவஸ்தானம், சுன்னாகம்.

ஆசியுரை

அருள்வளம் நிறைந்த சுன்னாகம் சந்திரசேகர விநாயகரின் மஹாகும்பாபிஷேகம் குறித்து வெளியிடும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். இத்திருக்கோவிலின் மேன்மையை அறியாதவர்களில்லை. இவ்வாலயத்தைப் பரம்பரையாகப் பேணிப்பாதுகாத்த சிவாச்சாரிய பெருந்தகைகளை யான் அறிவேன். இத் திருக்கோவிலில் தொடர் விரிவுரைகள் ஆற்றும் பாக்கியம் எனக்கு இருபத்துமூன்று ஆண்டுகளுக்கு மேல் கிடைத்தது. எனது வளர்ச்சிக்கு உறுதுணை செய்த ஆலயங்களில் சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தையும் அடியார்களையும் மறக்கமுடியாது. இத் திருக்கோவிலின் இன்றைய திருப்பொலிவுக்கும் பெரிதும் உழைத்தவர் வைத்திய நிபுணர் ரவிராஜ் அவர்கள். அவர்களின் தூய சிந்தனையும் அவருக்குப் பக்க பலமாக நின்ற ஏனையவர்களின் அர்ப்பணிப்பும் இராஜகோபுரத்துடனும் அழகிய மணி மண்டபத்துடனும் ஆலயம் காட்சி அளிக்க வழிசெய்துள்ளது. இந்திய சிற்பக் கலைஞர் திரு. க. புருஷோத்மனின் கை வண்ணத்தில் ஆலயம் புதுப் பொலிவு பெற்றிருப்பது கண்டு பிரமிக்காதவர்கள் இல்லை. இத் திருக்கோவில் மேலும் சிறக்க சந்திர சேகர விநாயகரைப் பிரார்த்தித்து நல் வாழ்த்துக் கூறி அமைகின்றேன்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் சுன்னாகப் பிரதேசத்தில் சிறந்து விளங்குகின்ற ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்திற்கும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் வரலாற்றுத் தொன்மை கொண்ட ஆலயங்களில் ஒன்றாக இவ்வாலயம் விளங்குகின்றது. இயற்கை எழில் பொழியும் மருதநிலச் சூழலில் அழகுடன் அமையப்பெற்றுள்ள இந்த ஆலயமானது 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். ஆலயங்களுக்குரிய அடிப்படை அம்சங்களான மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவை இங்கு காணப்படுகின்றமை சிறப்பாகும். விசுவநாதர் சமேத விசாலாட்சி அம்மன், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், மகாலெட்சுமி, வைரவர், சண்டேசுவரர், சனீஸ்வரர் முதலிய பரிவார தெய்வ மூர்த்தங்களும் இவ்வாலயத்தில் அமைந்துள்ளமை சிறப்புக்குரியதாகும்.

ஆலயம் என்பது இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் இடமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள ஆலயங்கள் அப்பிரதேச மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும், சமூகம், கலைகள் சம்பந்தமான வாழ்வியல் வளர்ச்சிக்கும் தளமாக அமைந்துள்ளன. அந்தவகையில் ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருந்ததுடன், அவற்றை வெளிக்காட்டும் இடமாகவும் விளங்கின, விளங்குகின்றன. இத்தகைய ஆலயங்களைச் சிறப்பாக புனராவர்த்தனம் செய்து கும்பாபிஷேகம் நடாத்திப் பராமரித்தல் அவசியமானதாகும்.

அந்த வகையில் சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் புனருத்தாரண மஹா கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்திய ஆச்சாரியப் பெருமக்களுக்கும், கும்பாபிஷேகத்தைச் செம்மையாக ஒழுங்கமைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் கும்பாபிஷேக மலர் வெளிவருவதற்குரிய பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவி அனைவரும் இன்பமாக வாழ எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
இல. 248 1/2, காலி வீதி,
கொழும்பு – 04

ஆலய நிருவாகசபைத் தலைவரின் வாழ்த்துரை

ஒரு "திருவருட்களஞ்சிய" மாக உருவாகிவரும் சந்திரசேகரம்-கும்பாபிஷேகமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். விநாயகப்பெருமானின் அருளால், திருப்பணி வேலைகள் அனைத்தையும் நிறைவு செய்து, கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், ஆகியவற்றிலும்பங்குபற்றி வழிபடும்வாய்ப்பினைப்பெற்றுள்ளேன். அடியார்கள், தொண்டர்கள், நிர்வாக சபையினர் ஆகியோரின் விருப்பமும் என்னுடைய விருப்பமும் வரலாற்று ஆவணமாகக் கும்பாபிஷேக மலர் ஒன்றை வெளியிட வேண்டும் என்பதாகும். எம்பெருமான் அருளால் அந்த விருப்பம் இன்று நிறைவேறுவதைக்கண்டு பேருவகை அடைகின்றேன். விநாயகப்பெருமானின் பெருமைகள், சமயத்தத்துவங்கள், இன்றைய சமுதாயத்தினர் அறிந்து ஒழுகவேண்டிய கருத்துக்கள் முதலானவற்றை உள்ளடக்கிய கட்டுரைகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள் முதலானவற்றை மனமுவந்து வழங்கியுள்ள சமயத்தலைவர்கள், அந்தணப் பெரியார்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பண்டிதர்கள், சைவப்புலவர்கள் ஆகிய அனைவரையும் எல்லாவற்றையும் ஒழுங்கான முறையிலே தொகுத்தளித்த மலராசிரியரையும் பாராட்டுகிறேன். விநாயகப்பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்கப்பிரார்த்திக்கின்றேன்.

க. ரவிராஜ்
சத்திரசிகிச்சை நிபுணர்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

சுன்னாகம் - ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான வரலாறு

அமைவிடம்

சுன்னாகம் பல்வேறு வழிகளிலும் வளம் பொருந்திய பட்டினம். முன்பு உடுவில் கிராமச் சபையாகவும் வலி வடக்கு DRO பிரிவாகவும் (தற்போது DRO பிரிவு பிரதேச செயலர் பிரிவு என்று அழைக்கப்படுகின்றது) இன்று வலி தெற்கு பிரதேச செயலக பிரிவில் வலி தெற்கு பிரதேசபை எல்லையினுள் சுன்னாகம் நகர் மத்தி J/198 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ளது. யாழ்ப்பாண நகரில் இருந்து காங்கேசன்துறை வீதிவழியாக 10 கிலோமீற்றர் வடக்காக பிரயாணம் செய்து சுன்னாகத்தை அடைந்த பின் ஆலயத்தை ஐயான் வீதியூடாக சென்றடையலாம். இவ்வாலயத்துக்கு அருகில் இப்பிரதேசத்தின் பழைய ஆலயங்களுள் ஒன்றான அருள்பாலிக்கும் ஐயனார் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்துடன் தாளை விருட்சமும் வானளாவி வளர்ந்துள்ள மருத மரமும் காணப்படுகின்றது.

சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம் மிக அமைதியான இடத்தில் எவருக்கும் மனச் சாந்தியையும் இன்பத்தையும் அளிக்கக்கூடிய சூழலில் அமைந்துள்ளது. அதிகாலையிலேயே உழவர்கள் ஆலயச்சூழலில் தம் வேலைகளை ஆரம்பித்து மாலை வரை வேலை செய்வார்கள். பறவைகளின் ஒலியும் நடமாட்டமும் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் இனிமையாகவிருக்கும் ஆவினங்கள் அணிவகுத்துச் செல்வதை இன்றும் காணலாம். நெல் உட்பட தானியப் பயிர்கள் காய்கறிப் பயிர்கள் சிறப்பாக விளைவிக்கப்படுகின்றன. ஆலயத்தின் வட மேற்குப் புறமாக அழகான நன்னீர்த் தடாகம் காணப்படுகின்றது. இன்று தாமரை வளர்ந்துள்ளமை கண் கொள்ளாக் காட்சியாகவுள்ளது. கோயிலின் வடக்காக கேணி உண்டு. ஐப்பசி கார்த்திகை, மார்கழி மாதங்களில் ஆலயச் சூழலில் நெல் மட்டும் பயிரிடப்பட்டு பசுமையாகக் காட்சியளிக்கும். மழைகாரணமாக வெள்ளம் தேங்கி வரம்புகளின் மேல் உயர்ந்து நெல்லை மூடி சமுத்திரம் போலவும் சில சமயங்களில் காட்சியளிக்கும், பிள்ளையார் கதை கேட்பதற்கு விரதம் அனுட்டிக்கும் பக்தர்கள் வெள்ளத்தினைத் தாண்டி ஆலயத்திற்கு வருவதும் ஒரு காட்சியாகத்தான் இன்றும் காணலாம்.

ஆரம்பம்

விநாயகப் பெருமான் இக்கிராமத்தவர்களுக்கு மட்டுமல்லாது அயற்கிராமத்தவர்களுக்கும் "சந்திர சேகரப்பிள்ளையாராக" அருள்பாலிக்கத் தொடங்கி 400 வருடங்களுக்கு மேலாகின்றதாக அறியமுடிகின்றது. இலங்கையில் உள்ள தொன்மையான கோயில்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

சுன்னாகம் ஐயனார் வீதியிலுள்ள "தோப்பு வளவில்" இறைபக்தி மிகுந்த சைவ வேளாண் பரம்பரையினர் வாழ்ந்து வந்தனர். இக்காணி சிறந்த தோட்ட நிலமாகவும் விளங்கியது. இந்த இடத்தில் வெள்ளரிக் கொடிகள் பயிரிடப்படுவது வழமையாகவிருந்தது. ஒரு நாள் அந்த வெள்ளரிக் கொடிகளுக்கு நீர் பாய்ச்சும் பொழுது கொடிகளின் நடுவில் எமது பெருமானாராகிய பிள்ளையார் சிலையாகக் காட்சியளித்தார். அவர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தம் எல்லை மீறிச் சென்றது. பக்தி மேலிட்டது.

அவர்கள் புனிதமான இடத்தில் பெருமானை

அமரச் செய்ய வேண்டும் என்று விரும்பி தற்போதுள்ள ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஒரு சிறு கொட்டகை அமைத்து வழிபாடு செய்ததாக பரம்பரை கதைகள் மூலம் அறிய முடிகிறது.

ஆலயச் சிவாச்சாரியார்கள்

இவ்வாலயத்திற்குஒழுங்கானவிதிமுறைப்படி பூசைகள் நடைபெற வேண்டும் என எண்ணி அந்தணச் சிவாச்சாரியார்களை அழைத்து வந்தனர். ஸ்ரீ உத்தரகோஜ மங்கை என்ற இடத்தில் இருந்து காரை நகர் (காரைதீவு) வியாவில் ஐயனார் கோயிலுக்கும் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் புகழ்பூத்த ஆலயங்களுக்குமாக குளக்கோட்ட மன்னரால் அழைத்துவரப்பட்ட பரம்பரையினரே இந்த ஆலயத்தின்பூஜகராகவிளங்குகின்றனர். இவர்கள் பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் இப்பரம்பரையில் இவ்வாலயத்தில் பூஜை வழிபாடு நடாத்திய முன்னோரின் எல்லா விபரமும் கிடைக்கவில்லை.

மகாகணபதிக் குருக்கள்
↓
முருகேசக் குருக்கள்
↓
வைத்தியநாதக் குருக்கள், கார்த்திகேஜ குருக்கள்
↓
சபாரத்தின ஐயர்
↓
சோமஸ்கந்தக் குருக்கள்
↓
சந்திரகாந்தக் குருக்களும் சகோதரர்களும்

தற்பொழுது இவ்வாலயத்தின் ஆதீன கர்த்தாக்களாகவும் பூஜகர்களாகவும் விளங்குகின்றனர். சோமஸ் கந்தக் குருக்கள் ஆலயப் பொறுப் புக்களை சந்திர காந்தக் குருக்களிடம் கையளிக்கும் போது சில நிபந்தனைகளை குறிப்பிட்டுள்ளார்.

1. ஆலயபூசைகள், உற்சவங்கள் எப்பொழுதும் ஒழுங்காக விதிமுறைப்படி நடைபெற வேண்டும்.
2. ஈஸ்வர சர்மா, சிறீபவன், சசிகரன், சுகுமாரன் ஆகிய ஆண் சகோதரர்களின் ஆலோசனையையும் அறிந்துநடக்க வேண்டும்.
3. கோயிலை நன்கு பராமரிக்க வேண்டும். தந்தையாரின் விருப்பப்படி இன்றுவரை பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருவது ஒரு சிறப்பம்சமாகும்.

தலவிருட்சம் - வன்னி

மூர்த்திகள்

மூலமூர்த்தி

- கண்டெடுக்கப்பட்டவர்

சிவன்

-

அம்மன்

- திருமதி அ. சின்னம்மா குடும்பம்

மகாஇலக்குமி

- திரு. மண்டநாயகம் (விதானையார்) குடும்பம்

சுப்பிரமணியர்

- திரு சரவணமுத்து (Baby)

வைரவர்

- திரு. சின்ன நயினார் (பருத்திக்கலட்டி) குடும்பம்

சனீஸ்வரன்

- திருகந்தவனம் பாலசுப்பிரமணியம் (Msc)

சண்டேஸ்வரர்

- திரு. பொன்னையா வல்லிபுரம்

ஐம்பொன்னாலான எழுந்தருளி மூர்த்திகள்

மூர்த்தி	உதவியவர்கள்
1. பஞ்சமுக விநாயகர்	- திரு. தம்பு பாலசுப்பிர மணியம் (HNB)
2. ஏக விநாயகர் (எழுந்தருளி)	- Dr. ம. செல்லப்பா (மண்டலநாயகம் குடும்பம்சார்பாக)
3. பழைய பிள்ளையார்	
4. சிவன்	- திரு. சுவாமிநாதன் மல்லாகம்
5. அம்மன்	- திரு.க. சிவகுமாரன் (ஆசிரியர்)
6. முருகன் வள்ளியம்மை	- திரு. சரவணமுத்து (Baby)
7. தெய்வானையம்மை	- திரு. க. பவேந்திரநாதன் குணதேவி குடும்பம்
8. சண்டேஸ்வரர்	- திரு சந்திரசேகரம் சூரியகுமார்

வேறு அன்பளிப்புகள்

(1) பிள்ளையார் கிரீடம் (வெள்ளி)	- திரு. க. பவேந்திரநாதன்
(2) பிள்ளையாரின் வெள்ளி அங்கி	- திரு. M. சபாரத்தினம் பதிவாளர், மல்லாகம்

கடந்த காலங்களில் ஆலயத்தில் நிகழ்ந்த திருப்பணிகளும் உதவிகளும்

1. மணிக்கோபுரம்	- திரு நித்தியானந்தன் குடும்பம், மா. மகாதேவன் ஆசிரியர் குடும்பம், சுன்னாகம்
2. கொடித்தம்பம்	- திரு. ச.சர்வேந்திரன் (USA)
3. வாகனசாலை, நூலகம்	- திரு. சரா சேதுகாவலர் (அதிபர்)
4. மடப்பள்ளி, சுற்றுமதில்	- பிரம்மஸ்ரீ சபாரத்தின ஐயர்
5. சுற்று மதில் புனரமைத்து உயர்த்தியமை	- பிரம்ம ஸ்ரீ ச. சோமஸ்கந்தக்க குருக்கள்
6. வெளிக்கிணறு	- சின்னையா குடும்பம் (மலையாளி)

ஆலயத்திலுள்ள வாகனங்கள்

1. மூஷிகம்	- பிரம்மஸ்ரீ சபாரத்தின ஐயர் (1957)
2. யானை	- திரு. கதிரவேல் சந்திரபோஸ் (இன்ஸ்பெக்ரர்)
3. நாகம்	- பிரம்மஸ்ரீ சோ. சந்திரகாந்தக்குருக்கள் (1993)
4. குதிரை	- திரு. ஐ. கெங்காதரன்
5. சிம்மாசனம்	- Dr. சு. ரவிராஜ்
6. காராம்பசு	- திரு.S. சிவலிங்கம் (விதானையார்)
7. கட்டுத்தேர்	- Dr. சு. ரவிராஜ்
8. சப்பரம்	- திரு. வைத்திலிங்கம் குடும்பம்



ஆலயத்தின் காணி கொள்வனவு

1. ஆலயத்திற்குச்சொந்தமானதுவாக்கைவயல் விற்கப்பட்டு கோயிலுக்கு தெற்காகவுள்ள வயற்காணியை ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள் கொள்வனவு செய்துள்ளார் நிலப்பரப்பு : 8

2. ஆலயத்தின் வடகிழக்குப் பக்கமாக உள்ள வயல் நிலத்தை உரிமையாளரான- திரு.சி.சுந்தரேஸ்வரன் அவர்கள் தேவையான அளவு பெற்றுக் கொள்ளுங்கள் என்று கேட்டபோது ஆலயத்தினரும் தமக்குத் தேவையான அண்ணளவாக 2.0 பரப்பு நிலத்தை அன்பளிப்பாகப் பெற்றுள்ளனர்.

3. ஆலய வாசலுக்கு ஐயனார் வீதியில் இருந்து தனியான பாதை அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அன்பர்கள் வழிகொடுத்து வருவதும் பெருமானாரின் அருள் என்றே கூற வேண்டும்.

அன்பளிப்புகள்

அடியார்கள் பக்தர்கள் காலத்திற்குக் காலம் அன்பளிப்புகளைத் தாராளமாக வழங்கி ஆலய வளர்ச்சிக்கு உதவுவதன் மூலம் " நம்பினோர் கைவிடப்படார்" என்றமுதுமொழிக்கமைவாக விநாயகப் பெருமானின் அருளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வருகின்றனர்.

அண்மைக்கால திருப்பணிகள் (2013)

1. பஞ்சதள இராஜகோபுரம் - பிரம்மஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்களின் பிள்ளைகளும் உள்ளூரிலும், வெளிநாட்டிலும் வாழும் விநாயகர் அடியார்களும்.

2. மணிமண்டபம் - சத்திர சிகிச்சை நிபுணர் Dr. சு. ரவிராஜ் அவர்களும் அன்பர்களும்

3. பிள்ளையார் திரிதள விமானம் - திரு. சுந்தரேஸ்வரன் ஜெயக்கிருஷ்ணா

4. சிவன்திரிதளவிமானம் - திரு. சரவணமுத்து குடும்பம்

5. அம்மன் தூபி (2013) - திரு. புஸ்பநாதன் குடும்பம் ஐயனார் கோயிலடி

6. மணிக் கோபுரம் - திரு. நித்தியானந்தன் குடும்பம்

7. அன்னதான மண்டபம்- திரு. க. தியாகரா குடும்பம்

8. வசந்த மண்டபம் - Dr.க. ஹரிஹரன் குடும்பம்

9. மகாலக்குமி - திரு. மண்டலநாயகம் குடும்பம்

10. முருகன் கோயில் - திரு. க.பவேந்திரநாதன் குடும்பம்

11. தம்பப் பிள்ளையார்- திரு. மா. இராமலிங்கம் J.P குடும்பம்

12. உள் வீதி - உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் நிதி

கட்டட வேலைகளை இந்தியாவின் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஸ்தபதி க. புருசோத்தமன் அவர்களும் நிபுணத்துவ ஆலோசனைகளை பொறியியலாளர் V. பாலசந்திரன் BSC (Civil Eng), பொறியியலாளர், R. சுரேஸ்குமார் BSC (Eng. Hons) அவர்களும் சிறப்பாக வழங்கினர்.

மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற ஆண்டும் நடத்திய பெருமைக்குரிய சிவாச்சாரியார்கள்

1) 1958, வைகாசி, ரேவதி - பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள். சுழிபுரம்

2) 1975, ஆனி, சதயம் - பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள் - நவாலி

3) 1993 ஐப்பசி, உத்தரட்டாதி - பிரம்ம சோ. சந்திரகாந்தக் குருக்கள்

4) 2013 ஆனி சதயம் - பிரம்மஸ்ரீ சோ. சந்திரகாந்தக்குருக்கள்

1958 ஆம் ஆண்டு பிரமஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் உபயகாரர்களினதும் ஊர் மக்களினதும் ஆதரவுடன்கும்பாபிஷேகத்தைநிறைவேற்றினர்.

1975ஆம் ஆண்டு திரு. மா. சபாரத்தினம் (பதிவாளர்) அவர்கள் முன்னின்று தொண்டர்கள் உபயகாரர்கள் ஊரவர்களையும் அயற்கிராம அன்பர்களை அரவணைத்து சிறப்பாக நிறை வேற்றினார்.

1993 ஆம் ஆண்டு சந்திரகாந்தக் குருக்கள் உபயகாரர்கள், தொண்டர்கள் வெளிநாட்டில் வாழும் அடியார்கள், ஊரவர்கள் அயற்கிராமங்களைக் கொண்டு நிறைவேற்றினார்.

2013ஆம் ஆண்டு - ஆலய தர்மகர்த்தா பிரமஸ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்களின் ஏற்பாட்டால் நிருவாக சபை அமைக்கப்பட்டு அதன் போசகராக பிரம்மஸ்ரீ சந்திரகாந்தக் குருக்களும் Dr. சு. ரவிராஜ் அவர்களைத் தலைவராகவும் திரு. ம.கோமேஸ்வரன் அவர்களை செயலாளராகவும், திரு. பா. பாலபத்மன் அவர்களை பொருளாளராகவும், 21பேரைக்கொண்ட திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு மஹாகும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம்(45நாட்கள்) அன்னதானம், மற்றும் திருப்பணி வேலைகள் என்பன நிறைவேற்றப்பட்டன.

நிர்வாக சபை உறுப்பினர்களாக திரு. K. தேவராஜ் (உபதலைவர்) திரு. R. யுகராஜ் (உபசெயலாளர்) திரு. T: ராஜ்குமார் (கணக்காய்வாளர்) திரு. க. செல்வாகுமாரன் (சந்திரசேகரம் கும்பாபிஷேக சிறப்பு மலர் 2013 - ஆசிரியர்) திரு. V.M. இராமலிங்கம் J.P, திரு மு. சிவம், திரு து. கெங்காதரன், திரு. S. யோகநாதன் திரு. S. சூரியகுமார் (அமரர்) திரு. S. கருணைநாதன் திரு. S. கார்த்திகேயன் திரு. S. பாபுதாஸ் திரு. R. கவிக்குமார் திரு. V. கண்ணதாசன், திரு. K. ஜெகநாதன், திரு. M. சதானந்தன், திரு. R. கமலயோகேஸ்வரன், திரு. S. நடராஜா ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் இவ்வாலயம் 07.11.2012ஆந் திகதி முதல் இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதளைப் பெற்றுள்ளது.

தற்பொழுது நிருவாக சபையினால் ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் கிளையில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் நிதி கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படுகிறது. வழங்கப்படும் காணிக்கைகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது. வங்கிகணக்குஇல1170005229 HNB சுன்னாகம் . விநாயகப் பெருமானின் அன்பர்களிடமிருந்து அதிக நிதி கிடைத்தால் மேலும் பல சமய சமூக அறப்பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

நிதிசேகரிப்புக்காகபிரம்மஸ்ரீசபாரத்தினஐயர் அவர்கள் 1948ஆம் ஆண்டிற்கு முன்பு தனது நேரத்தையும் சிரமத்தையும் பாராது சுன்னாகம் சந்தையில் முதல் வருடம் சந்திரசேகரப் பிள்ளையாருக்காயின் அடுத்த வருடம் சுன்னாகம் ஐயனார் கோயிலுக்கென காலம் ஒதுக்கீடு செய்து நிதிசேகரித்து ஆலயத்திருப்பணிகளையும் பூசை, திருவிளக்கேற்றல் அனைத்தையும் சிறப்பாக செய்துள்ளார். இதுமட்டுமல்லாது காளை களை வளர்த்து அதனை விற்பனை செய்தும் வருவாயை பெற்று ஆலயத்தினை திறம்பட நிர்வகித்தார் என அறிய முடிகிறது. அக்காலத்தில் மாட்டுவண்டி, வில்லு வண்டி என்பன பிரதான போக்குவரத்துச் சாதனங்கள். மேலும் வயல் உழுவதற்கும் காளைகளையே பயன்படுத்துவதால் காளைகளை இலகுவில் விற்பனை செய்ய முடியும். எனவே ஐயா நிதிசேகரிப்புக்கும் இந்த யுக்தியை பயன்படுத்தினார்.

ஆலயத்தின் ஆத்மீகப் பணிகள்

1. விநாயகர் சஷ்டி காலத்தில் பிள்ளையார் கதை 21 நாளும்



படிக்கப்படுகிறது. அடியார்கள் காப்பு கட்டி விரதம் இருந்து பிள்ளையார் கதையைக் கேட்பார்கள், படிப்பார்கள் திரு. முருகேசு வாத்தியார் பண்டிதர் நமசிவாயம் திரு. கு. அம்பலவாணபிள்ளை, திரு. க. இராஜநாயகம், Dr. இளையப்பா, திரு. ச. சேதுகாவலர், திரு. அழகர் திரு. S. தம்பையா, மா .பண்டிதர் நாகலிங்கம் திரு. தம்பியப்பா உட்பட இன்னும் பலர் கதையைப் படிப்பதற்கு வருவார்கள்.

2. புராணபடனம்: பௌரணிகர் வித்தகர் கொக்குவில் சுன்னாகத்தைச் சேர்ந்தவர் பண்டிதர் நமசிவாயம் அவர்கள் ஏறத்தாழ 12 ஆண்டுகள் விநாயக புராணம் , கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் ஆகியவற்றை படித்து பக்தர்களுக்கு வேண்டிய விளக்கங்களுடன் பயன் கூறுவர். இவர்களை போலவே திரு. அம்பலவாணபிள்ளை ஏழாலை முரு கேசு வாத்தியார், திரு. அழகர், திரு. கு. இளையப்பா, திரு. அ.தம்பியப்பா ஆகியோரும் பங்கு பற்றி அரும்பணி ஆற்றினார்கள். இவர்களுக்கு வேண்டிய தாகசாந்திப் பணியை திருமதி மீனாட்சிப் பிள்ளை இராமநாதர் சிறப்பாகச் செய்து வந்துள்ளார்.

3. தொடர்சொற்பொழிவு: திருமுருகதிருபானந்த வாரியார் சுவாமிகள் சுவாமி நாததம்பிரான், பண்டிதர் நமசிவாயம், கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தியுள்ளனர். தனித்தனி பிரசங்கங்கள் குடாநாட்டிலுள்ள சைவ அறிஞர்களால் திறம்பட மேற் கொள்ளப்பட்டது. எதிர்காலத்திலும் இத்தகைய பணிகளைச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அமரர்களான திரு. ச. சூரியகுமார், சட்டத்தரணி த. தம்பிரத்தினம் J.P, ஆகியோர் தொடர் பிரசங்கங்களை ஏற்பாடு செய்வதற்கு முன்னின்று உழைத்தனர்.

ஆலகத்தில் இடம் பெற்ற சிறப்பம்சங்கள்

1. பிள்ளையார் கதையை வரத பண்டிதர் அவர்கள் ஆலய மண்டபத்தில் அரங் கேற்றியமை

2. சுன்னாகம் தவஞானி செல்லாச்சியம்மையார் அவர்கள் வழிபட்டமை.

ஆலயத்தின் சமூகப்பணி

1. சுனாமி (2005 டிசம்பர் 25) ஏற்படுத்திய அழிவுகளால் மக்கள் துன்புற்று அவதியுற்ற நேரம் ஆலயத்தின் நிதி ரூ 5000/=ஐ முதலாகக் கொண்டு கிராம, மற்றும் அன்பர்களின் உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

2. உதவி தேவைப்பட்ட உதவி குறைவாகக் கிடைக்கும் ஐந்து குடும்பங்களில் இருந்து ஐந்து பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டு வங்கியில் பணம் வைப்புச் செய்யப்பட்டது.

விழாக்கள்

1. ஆலய மஹோற்சவம்

   10 நாட்கள் நடைபெற்று சித்திரைப் பூரணை நாளில் தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. அடுத்த நாள் பூங்காவனம் நடைபெறுகிறது.

2. சித்திரை வருடப்பிறப்பு
3. சதுர்த்தி
4. சங்கட சதுர்த்தி
5. ஆனிச்சதயம்
6. நவராத்திரி
7. தீபாவளி
8. ஐப்பசி வெள்ளி
9. சர்வாலய தீபம்
10. பிள்ளையார் கதை
11. திருவெம்பாவை
12. இலட்சார்ச்சனை

இவ் விழாக்களின் உபயகாரர்கள் மிகவும் பயபக்தியுடன் விழாக்களை சிறப்பாக நிறைவேற்றி வருகின்றனர்.

ஆலயத் தொண்டர்கள்

தொண்டர்களே ஆலய வளர்ச்சிக்கு அரும்பெரும் பங்காற்றிவருகின்றனர். விழாக்காலங்களிலும் கும்பாபிஷேக காலங்களிலும் அவர்களின் தொண்டு மகத்தானது. இவ்வாலய தொண்டர்களுடன் அயலில் உள்ள ஆலயங்களில் இருந்தும் தொண்டர்கள் தொண்டு புரிவதற்கு வருவது வழமை.

ஆலயத்தின் தேவைகள்

1. நீர்த்தாங்கி
2. மின்பிறப்பாக்கி
3. ஒலிவாங்கி மேசை (பிரசங்கத்திற்குரியது)
4. சித்திரத்தேரும் தேர்த்தரிப்பிடமும்

சுன்னாகம் ஐயனார் ஆலயம்

சுன்னாகம் ஐயனார் ஆலய பூசகர்களும், நிருவாக சபையினரும் எப்பொழுதும் இவ் வாலயத்திற்கு வேண்டிய உதவிகளை நல்கி வருவது ஒரு சிறப்பம்சமாகும். நீண்ட வரலாற்றைக் கொண்ட ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தின் வரலாற்றை இங்கு சுருக்கமாக, கிடைத்த தகவல்களுக்கமைய எழுதப்பட்டுள்ளது. மேலும் தகவல்கள், படங்கள், கதைகள் (அற்புதங்கள்) ஆவணங்கள் கிடைக்குமாயின் ஆலய நிர்வாகத்திடம் சமர்ப்பித்துதவுமாறு அன்பர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். அடுத்த பதிப்பில் அவற்றையும் சேர்க்கமுடியும் என கருதுகிறேன்.

க.செல்வக்குமாரன் M.A,

என்னரேயாயினும் யாவதொன்றெண்ணுதல்
முன்னரே உனது தாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தம் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை
உன்னலார் செய்கையை ஊறு செய்திடுதி நீ.

பிள்ளையார்

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்தில்" என்பது 'சத்'தானகருத்துள்ளமுத்தான ஒரு முதுமொழி எந்த அளவுக்குக் குழந்தையைச் சீராட்டி, பாராட்டி, சிரிப்பூட்டி, அணைத்து விளையாடி அதன்உள்ளத்திலேகுளிர்ச்சியையும் குதூகலத்தையும் நாம் உண்டாக்குகின்றோமோ அந்த அளவுக்கு அந்தக் குழந்தை எம்முடன் அணையும், இணையும், அன்புடன் எம்மை ஏற்றுக்கொண்டு மகிழ்விக்கும். அதேபோல், உள்ளன்புடன், இதய சுத்தியுடன் இறைவனை வணங்கி, அன்புடன் நீராட்டி, வாசம் மிக்க வண்ண மலர்களைச் சூட்டி அவன் பாதம் பணிந்து பாடிப் பரவினால், அவன் இன்னருள் பொழிவான்; இன்பமெல்லாம் சொரிவான்.

தெய்வமே ஒரு குழந்தையாகக் காட்சி தரும் திருவடிவந்தான் பிள்ளையார். இந்தக் குழந்தைத் தெய்வத்தை உருவாக்குவதும் உபசரிப்பதும் அதன் உள்ளத்தை மகிழ்விப்பதும் இலகுவான விஷயங்கள். சிவபெருமான், அம்பாள், முருகப்பெருமான், ஐயனார், மஹாவிஷ்ணு போன்றவர்களின் திருவுருவங்கள் சிற்ப சாஸ்திர முறைப்படி செய்யப்பட வேண்டியவை. அப்படிச் செய்யப் படாவிட்டால், சிறுபிழைகள் இருந்தாலும்கூட, அவற்றை வழிபடுபவர்களுக்கு நற்பலன்கள் கிடைக்க மாட்டா. ஆனால், பசுஞ்சாணம், சந்தனம் மஞ்சள்மா ஆகியவற்றுள் ஒன்றிற் சிறிதளவு எடுத்து நீளப்பாட்டில் உருட்டிப் பிள்ளையாரை அழைத்தாலே போதும். அந்த நீள் உருண்டையில் அவர் வந்திருந்து அருள் புரிவார். எந்தக் காலத்திலும் மிக இலகுவாகக் கிடைக்கக் கூடிய அவல், பொரி, வெல்லம், கடலை, பழங்கள் போன்றவற்றைப் பிரசாதமாகப் படைத்து வழிபட்டு அப்பெருமானின் பேரருளைப் பெறலாம். மோதகம், கொழுக்கட்டை ஆகியவையும் அவருக்கு உவப்பானவை. அறுகம்புல் அவரை அர்ச்சிப்பதற்கு மிகச் சிறந்தது. இவை எதுவுமே கிடைக்காவிட்டால், எங்கும் என்றும் மலர்ந்து அழகுடன் திகழும் மலர்களுள் ஒன்றை உள்ளன்புடன் அவருடைய திருவடிகளில் வைத்து வணங்கினால் நமக்கு அத்தியாவசியமாக உள்ள அத்தனையையும் அப்பெருமான் தந்து அருள் புரிவார்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

என்ற ஔவை பாடல் இந்த உண்மையைத் தெளிவாக்குகின்றது. தூய திருமேனியையும் தும்பிக்கையையுமுடைய பிள்ளையாரின் திருப் பாதங்களிற் பூவை வைத்து வணங்கினால், மனிதர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கல்வி கிடைக்கும்; (வஞ்சகம், பொறாமை, பயம், கோபம் போன்ற குற்றங்கள் இல்லாத அன்பு, கருணை, இரக்கம் முதலியவை நிறைந்த) நல்ல மனம் உண்டாகும்; தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலட்சுமி தேவியின் கடாட்சம் கிடைக்கும்; குறைவற்ற செல்வம் என்று சொல்லப்படும் நோயற்ற வாழ்வும் கிடைக்கும்.

கணபதி, விக்னேஸ்வரன், விநாயகன் போன்ற பல திருப் பெயர்களுடைய அப் பெருமானின் திருவவதாரம், திருவருட்செயல்கள் பற்றி விநாயகர் புராணம், பவிஷ்ய புராணம் முதலியவை விரிவாகக் கூறுகின்றன. அவர் சிவபெருமானின் முதற் குழந்தையாகவும், என்றும் இளையோனாகவும் இருப்பதாற் பிள்ளையார் எனப் போற்றப்படுகின்றார். கணங்களுக்குத் தலைவனாக இருப்பதாற் கணபதி ஆகின்றார். இடர்கள், துன்பங்கள்

ஆலய பரிவார மூர்த்திகள்



ஆதி விநாயகர்



தம்ப பிள்ளையார்



விஸ்வநாதசுவாமி



விசாலாட்சி



சிவன் நந்தி பலிபீடம்




மூஷிகம் பலிபீடம்




அம்மன் ஏகதள விமானம்




மகாலட்சுமி



புதிதாக அமைக்கப்பட்ட
மகாலட்சுமி ஆலயம்




வள்ளி தெய்வசேனா சமேத
சுப்பிரமணியர்



புதிதாக அமைக்கப்பட்ட
முருகன் ஆலயம்




சனீஸ்வரன்



புதிதாக அமைக்கப்பட்ட
சனீஸ்வரன் ஆலயம்




வைரவர்



புதிதாக அமைக்கப்பட்ட
வைரவர் ஆலயம்



கும்போதர சண்டேஸ்வரர்



புதிதாக அமைக்கப்பட்ட
சண்டேஸ்வரர் ஆலயம்



மூலஸ்தான திரிதள விமானம்



சிவன் துவிதள விமானம்

வரத பண்டிதர் - விநாயகர் - ஔவையார்



பிள்ளையார் கதையை இயற்றிய சுன்னாகம் வரதபண்டிதர்
(படம் இல்லாத காரணத்தால் உருவம் கொடுக்கப்பட்டுள்ளது)





பூத கணங்கள்

விக்கினங்களைத் தீர்த்து அருள் புரிபவராதலால் அவர் விக்னேஸ்வரன் ஆகின்றார். விநாயகன் என்ற சொல் விசேடமாகச் சிந்திக்கத் தக்கது. வி + நாயகன் என்பது தனக்குமேல் வேறு தலைவன் இல்லாதவன் என்ற கருத்தை த்ருவது. அவர் சிவபெருமானின் முதற் குழந்தை என உபசாரமாகச் சொல்லப்பட்டாலும், அவரும் சிவபெருமானும் வேறல்லர்; இருவரும் ஒருவரே என்பது அநுபூதிமான்கள்-சமயஞானிகள் தேர்ந்து தெளிந்த உண்மையாகும்.

சிவபெருமானுக்கு ஐந்து முகங்களுண்டு. ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்பவை அவை. அதே பெயர் களையுடைய ஐந்து முகங்கள் விநாயகருக்கும் உண்டு; இருவருக்கும் முக்கண்ணன் என்ற பெயருமுண்டு. சடையிலே பிறை சூடியவர் சிவபெருமான்; நெற்றியிலே பிறை சூடி, பாலச்சந்திரன் ஆனவர் விநாயகர் சிவபெருமானின் அருவுருவத் திருமேனியாகத் திகழ்வது சிவலிங்கம்; மஞ்சள்மா, சந்தனம், பசுஞ்சாணம் ஆகியவற்றுள் ஒன்றினால், உருவாவது விநாயகரின் அருவுருவத் திருமேனி.

சதுர்த்தி விரதம், சுக்கிர விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக ஷஷ்டி விரதம் ஆகியவை விநாயகப் பெருமானுக்குரிய விசேட விரதங்கள்.

மந்திரங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படை யாகத் திகழ்வது "ஓம்" என்னும் பிரணவ மந்திரம் அந்தப் பிரணவ மந்திரத்தின் வடிவமாக இருப்பவர் பிள்ளையார். அதனால் பிரணவரூபன்" என்ற திருப்பெயரும் அவருக்குண்டு. இந்தப் பிரபஞ்சம், ஜீவராசிகள், புல், பூண்டு, ஊர்வன, நீர்வாழ்வன முதலிய அனைத்துமே இந்தப் பிரணவத்திலிருந்துதான் தோன்றின. ஆகவே அனைத்துக்கும் ஆதாரமாக அடிப்படையாக அமைந்துள்ள பிரணவத்தை, அதன் வடிவாகத் திகழ்கின்ற பிள்ளையாரை மனம், மொழி, மெய்யால் எஞ்ஞான்றும் வணங்கி நமது ஆன்மா ஈடேற்றத்தை உறுதி செய்வோமாக!

சி - சிவசரவணபவன்-

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

-கபிலதேவநாயனார்



விநாயகர் அருட்பெருமை

சைவமக்களின் முதல் வணக்கத்துக்கு உரிய தெய்வமாக விளங்குபவர் விநாயகப் பெருமான். விநாயகப்பெருமானை வணங்குவது சிவபெருமானை வணங்குதற்கு இணையானது என்றும் விநாயகப் பெருமானை வணங்குவதால் எல்லாத் தெய்வங்களும் எல்லாக்கிரகங்களும்திருப்தியுறுகின்றனஎன்றும் சொல்லப்பெறுகின்றது.

விநாயகப் பெருமானை வணங்கி அருள் பெற்றவர்களின் வரலாறுகளை அவதானிக்கும் போது அப்படி அவர்கள் பெற்ற அருளால் பலர் தன்மையுறும் தன்மையை அறிய முடிகின்றது. ஔவையார் அகத்தியர் இந்திரன் நம்பியாண்டார்நம்பிகள் வியாசமுனிவர் எனப் பலர் பெற்ற விநாயகர் அருள் சமுதாயம் முழுவதற்கும் பயனாகியிருக்கின்றது.

ஔவையார் விநாயகப்பெருமான் அருளால் சங்கத்தமிழ் மூன்றிலும் புலமை பெற்றவர். இவர் பெற்ற புலமை அன்றிலிருந்து இன்றுவரை தமிழர் அனைவருக்கும் வழிகாட்டியாகவும் மகிழ்வளிப்பதாகவும் உள்ளது. அதேபோல் இவ்வரலாறும் தமிழர் அனைவரும் பெருமையுறவும் முன்னேறவும் தூண்டுதலாக உள்ளது.

நாரதமுனிவர் யோசனைப்படி இந்திரன் காவேரியாற்றை விரும்பி விநாயகரை வழிபட்டான். விநாயகர்காட்சிகொடுத்தபோது அகத்தியர்கமண்டலத்திருக்கும்காவிரியாற்றை சீர்காழிக்கும் வரும்வண்ணம் அருள்புரிய வேண்டினான் அதற்கிணங்கிய விநாயகப் பெருமான் காகமாகச் சென்று கமண்டலத்தைக் கவிழ்த்து ஆறாகப் பெருக அருளினார். பின் அகத்தியர் பிரார்த்திக்க அவருக்கும் கமண்டலத்தில் ஆற்றை முன்போல் கிடைக்க அருளினார்.

இவ்வரலாற்றால் இன்றுவரை காவிரி ஆறு பெருகக் காரணமானவர் விநாயகர் என்பது தெளிவு. இந்திரனுக்கு அருளும் காரணத்தை முன்னிட்டு இன்றுவரை காவிரி ஆறு பெருக அருளிய தன்மையிலிருந்து விநாயகர் ஒருவற்கு அருளும்போது பலருக்கும் அருளும் சிறப்பை அறிய முடிகின்றது. இந்திரனுக்கு அருளிய காரணத்தால் அகத்தியருக்கு இழப்பு உண்டாகாமல் அகத்தியருக்கு ஆறு முன்போல் இருக்க அருளிய தெய்வீக ஆற்றலையும் அறிந்து மகிழவேண்டும்.

இந்திரன் பொருட்டு அகத்தியர் ஆற்றைக் கவிழ்த்துப் பின் அகத்தியருக்கும் ஆற்றை அருளியது போல இராவணன் விடயத்தில் நிகழவில்லை. இராவணனின் சிவலிங்கத்தை தேவர் வேண்ட விநாயகப்பெருமான் பெற்று நிலத்தில் வைத்தார். அதற்காக விநாயகரைக் கோபித்ததனாலும் விநாயகரை வணங்கத் தெரியாத அசுரகுணத்தாலும் இராவணன் இலிங்கத்தை இழந்தான். இராவணன் அகத்தியர் போல் விநாயகப்பெருமானை வணங்கியிருந்தால் விநாயகர் அகத்தியருக்கு ஆறுகொடுத்தது போலஇராவணனுக்கும் சிவலிங்கம்கொடுத்திருப்பார்என்றஉண்மையை அறிந்து விநாயகர் பெருமை கருணைகளை நினைந்து நாம் விநாயகப்பெருமானை எத்தகைய நட்டமுற்றபோதும் வணங்கினால் அந்நட்டத்தைப் போக்கியருள்வார்.

இந்திரன் விநாயகரை வணங்கிக் காவிரியாற்றை எந்நாளும் பெருகச்செய்தது போல் நம்பியாண்டார் நம்பிகளும் தான் விநாயகர் அருள்பெற்றசிறப்பால்நாமெல்லாம்நன்மையுறச் செய்திருக்கின்றார்.

நம்பியாண்டார் நம்பிகள் விநாயகர் அருளால் வேதாகமங்களை ஓதாது உணர்ந்தார். ஔவையாரைப்போல் பின் அரசன் வேண்டுகோளின் படி விநாயகர் அருளால் மூவர்தேவாரங்களும் சிதம்பரத்தின் மறைந்திருப்பதை அறிந்து அதை வெளிப்படுத்தி ஏழு திருமுறைகளாக வகுத்தார். நம்பியாண்டார் நம்பிகள் மூவர்தேவாரங்கள் இருக்கும் இடத்தை அறியவும் அதை ஏழுதிருமுறைகளாக வகுக்கவும் காரணமாக இருந்தது விநாயகர் அருளேயாகும்.

இதுபற்றி நன்கு சிந்தித்தால் தமிழ்நாட்டில் காவிரியாறு பெருகுவது போல் சைவ உலகில் திருமுறைகள் சிறந்து விளங்கிப் பயன்தர அருளிய விநாயகர் மகிமை தெளிவாகும். சிவபெருமான் பெருங்கருணையால் திருஞான சம்பந்தசுவாமிகள் முதலிய மூவரால் தேவாரங்கள் தோன்றின. விநாயகப்பெருமானின் பெருங்கருணையால் இன்று நாமெல்லாம் அத்தேவாரங்கள் கிடைக்கப்பெற்றவர்களாக உள்ளோம். திருமுறைகளை இட்டுச்சைவசமயம் பெருமையுறவும் திருமுறைப் பாராயணத்தால் சைவமக்கள் அருள்நலம் பெற்று மேன்மையுறவும் காரணமாயிருப்பது விநாயகப்பெருமானே எனும் உண்மையைச் சைவமக்கள் எக்காலமும் மறக்கலாகாது.

வேதங்களை நான்காக வகுத்துப் பெருமை பெற்ற வியாசர் பதினெண் புராணங்களையும் நந்திதேவர் மாணாக்கராகி சனற்குமாரனிடம் கேட்டு அறிந்தார். பின் அதனை உலகில் நிலைபெறும்படி வெளிப்படுத்த விரும்பிய போது தன்மனவிருப்பம்போல் செயற்பட இயலாது கலக்கமடைந்தார். அப்போது வியாசர் முன்பிரமதேவர் வெளிப்பட்டு விநாயகப்பெருமானை வணங்கி அவரருள் பெற்றால்தான் புராணங்களை வெளிப்படுத்தும் ஆற்றல் கிடைக்கும் என்று கூறக் கேட்டு வியாசர் விநாயகப்பெருமானை வணங்கி அருள்பெற்றுப் பதினெண்புராணங்களை வெளிப்படுத்தினார் என்பர்.

காவிரியாறும் திருமுறைகளும் பதினெண் புராணங்களும் உலகிற்கு நலம்பயக்கக் காரணமான விநாயகப் பெருமானின் அருட்பெருமை காலம்தோறும் ஒவ்வொரு தலங்களிலும் விநாயக அடியார்களைக் காப்பாற்றியும் அவர்கள் விருப்பங்களையும் நிறைவேற்றியும் வருகின்றது.

விநாயகப் பெருமானை வணங்கி. அவ்வையும் நம்பியாண்டார் நம்பியும் இந்திரனும் தனிப்பட்ட முறையிலும் பின் எல்லோருக்கும் நன்மை பெருக்கியமை போல் நாமும் விநாயப்பெருமானை வணங்கி நாம் நலமுறுவதோடு நம் சைவ சமுதாயம் மேன்மையுறக் காரணராவோம்.

பண்டிதர் - தி- பொன்னம்பலவாணர்
பொன்னாலை அருள்மிகு சித்திவிநாயகர்
ஆலய அர்ச்சகர்.

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார் மிசைவிளங்க
ஞானமத ஐந்து கர மூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

-சேக்கிழார்



சித்தாந்தம் காட்டும் விநாயகப் பெருமான்

விநாயகர் என்ற சொல் வி+ நாயகர் என்று இரு சொற்களை உடையது. நாயகன் - தலைவன் - இல்லாதவர் என்பது பொருள். அவருக்கு மற்றொரு பெயர் கணநாதன். சிவனது பூதகணங்களுக்குத் தலைவர் அவர். அவருக்கு மேலே வேறு ஒரு தலைவர் இல்லாதவர்.

சைவர்கள் மிக உயர்ந்த சித்தாந்த சாஸ்திரம் எனப் போற்றும் நூல் சிவஞானபோதம். அதன் கடவுள் வாழ்த்து:

"கல்லால் நிழல் மலைவில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே."

கல்லால மரத்தின் கீழ் இருந்து நான்கு முனிவர்களுக்கு ஞானம் உபதேசித்தவர் தென்முகக்கடவுள் எனப்படும் தட்சிணாமூர்த்தி ஆவர். திரிபுரம் எரித்த போது மகாமேரு மலையை வில்லாக வளைத்து வெற்றிபெற்றவர் மலையை வில்லாக வளைக்க முடியுமா? என்று விஞ்ஞான மாணவர்சிறுவார்கள்

"முப்புரம் என்பது மும்மல காரியம்" ஆன்மாவை மூடியிருக்கும் மூன்று மலங்களை அறுப்பதையே முப்புரம் எரித்தல் என்று உருவகமாகக் கூறியிருக்கிறார் திருமூலர். அவரே தமது 'மந்திரமாலிகை' என்ற திருமந்திரநூலைப் பாடியபோது, விநாயக வழிபாடாக,

"ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்திமகன் தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே"



என்பதை நூலின் தொடக்கத்தில் வைத்துள்ளார்.

சிவஞான போதத்தின் வழிநூல் சிவஞான சித்தியார் அதில் வரும் காப்புச் செய்யுள்

"ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங்கரத்தான் ஆறு
தருகோட்டம் பிறைஇதழிந்தாழ் சடையான் தரும்
ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே
இரவு பகல் உணர் வோர் சிந்தைத்
திருகுஓட்டும் அயன் திருமால் செல்வமும் ஒன்றே
பன்னச் செய்யும் தேவே"

இதற்கு சிவாக்கிர யோகிகள் எழுதிய உரை:

கங்கையையும் வளைந்த பிறையையும் கொன்றை மலையையும் தரித்த நெடிய சடையை உடைய பரமேசுவரனுடைய அருளாலே தரப்பட்டு, ஒரு கொம்பையும் இரண்டு செவியையும், இச் சாஞானக் கிரியை என்னும் மூன்று மதத்தையும், நான்ற (தொங்கிய) வாயையும் ஐந்துகரங்களையும் உடையவராய் யானை போன்ற திருமுகத்தராய், தமக்கு ஒரு நாயகன் இல்லாமையால், விநாயகன் என்ற திருநாமத்தை உடையராய், ஒப்பற்ற வருடைய பாதாரவிந்தங்களிலே கரைந்த பக்தியுடனே இரவு பகல் இடையறாது தியானிப்போருடைய பார்வை (த்ருக்) யாகிய அஞ்ஞானத்தை ஒழித்து, பரமபிரயோசனமாகிய மோட்சத்தையும், பிரமவிஷ்ணுக்கள் செல்வமும் சிறிது என்னும் படி இடையிட்ட பிரயோசனம் ஆகிய யோகத்தையும் கொடுப்பவர் கையால் அத் தேவனே இந்நூலுக்கும் காப்பு.

சித்தியார் பரபக்கத்தில் மற்றொரு விநாயக வணக்கம் வருகிறது

இயம்புநூல் இருந்தமிழின் செய்யுள் ஆற்றால்
இடையூறு தீர்த்து இனிது முடிய வேண்டி
தயங்குபேர் ஒளியாகி எங்கும் நின்ற
தலைவனார் மலைமாது தன்னோடு ஆடி
பயந்த ஐங்கரம் நாற்றோள் முக்கண் இருபாத
பரியது ஒருநீள் கோட்டு பெரிய பண்டி

கயம்தன் அடிக்கமலங்கள் நயந்து போற்றி
கருத்தில் உற இருத்தி மிகக் காதல் செய்வோம்.

தமிழ் வடமொழி இரண்டுமே ஆன்மீகச் செல்வம் மிக்கவை. அதனால் இரும் - பெரிய தமிழ் என்று புகழத்தக்க உயர்நிலையில் உள்ளது. தமிழில் நிறைந்த அறிவைப்பெற்றவன் என்று சொல்பவன் சித்தியார் படித்தவனாயிருக்க வேண்டும். அதை இடையூறு ஏதும் வராமல் படிக்க, தொல்காப்பியம் முதலிய இலக்கண நூற்கல்வி அவசியம். அக்கல்வி பெற விநாயகர் அருள் பெற வேண்டும். அவர் ஐங்கரமூர்த்தி, நான்குதோள்களை உடையவர் மூன்று கண்ணர். இரண்டு திருப்பாதங்களை உடையவர். நீண்ட ஒரு தனிக்கொம்பு உடையவர். பெருவயிற்றர். யானைமுகத்தினர். அப்பாதங்களை மனத்தில் வைத்து இடைவிடாது பிரார்த்தித்தால், அன்பு செய்தால் நூல்கற்பது எளிதாகும்.

அவருக்கு அவ்வளவு பெருமை எப்படி ஏற்பட்டது. அவர் சிவகுமாரர். பெரிய ஒளியே உருவமான சிவன், மலையரசன் புத்திரியை மணந்து பெற்ற பிள்ளை.

அவர் தோற்றம் பற்றிச் சம்பந்தப்பெருமான் பாடிய தேவாரம்:

பிடிஅதன் உரு உமை கொள,மிகு கரியது
வடிகொடு தனது அடி வழிபடும் அடியவர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலம் உறை இறையே.

உலகின் தோற்றம் சிவ பரம்பொருளில் இருந்தே தொடங்குகிறது. எண்ணில் கோடி ஆன்மாக்கள் மூலமல பந்தத்தினால் வருந்தும் போது , அவற்றின் பந்த நீக்கத்துக்காக இறைவன் திருஅருள் உணர்வு கொள்கிறார். தம் எல்லையில்லாத சக்தியைத் தன்னிலிருந்து வெளிப்படுத்துகிறார். அதுவே சிருட்டியைத் தொடங்கப் போகிறது. அதை இறைவன் பார்க்கும் முதல் நிலையில் குடிலையை நோக்கிறார். குடிலை பிரணவம். அம்பிகையை சிருட்டிக்கும் ஓம் பட வைக்கிறார். " ஓம்" பிரணவம். அதற்கு ஒலிவடிவம் பல நிலைகளில் உண்டு. செவியில் கேட்பது மிகக் கீழ்நிலையில் உள்ளது. ஆன்மாவின் தூய்மை அதிகரிப்பதற்கு ஏற்றபடி ஒலியும் உயர்வுறும், தூலஓங்காரம் , சூக்கும ஓங்காரம், காரணநிலை என்று உயர்ந்து உயர்ந்து செல்லும். முனிவர்கள் உயர்நிலையில் அகத்தே கேட்கும் ஓங்காரம் பற்றி உபநிடதங்கள் கூறும் சாந்தோக்கிய உபநிடதம் தொடங்குகிறது.

உத்கீதம் எனப் பெயர் பெற்ற 'ஓம்' என்னும் அட்சரத்தை உபாசிக்க வேண்டும். ஓம் என்று (ஆரம்பித்தே வேதம்) கானம் செய்யப்படுவதால் (அது உத்கீதம்) எனப்படுகிறது. (உத் + கீதம்) கேட்போரைத் தன் இசையால் உயர்த்துவது) .....வாக்கின் ரசம் 'இருக்கு', இருக்கின் ரசம் 'சாமம்', சாம வேதத்தின் ரசம் ஓங்காரம், ஓங்காரத்தினாலேயே மூன்று வேதங்களும் பெருகுகின்றன.

இந்த அட்சரத்தின் மகிமையாலும் ரசத்தாலும் பரம்பொருளைப் போற்றுவது ஆகின்றது.

"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் பொதுவும் என்று உன்னுக.

சைவசித்தாந்தம் படிக்கின்றவர்கள் தொடங்கும் அத்திவார நூல் மனவாசகம் கடந்தாரின் **உண்மை விளக்கம்** அதன் காப்புச் செய்யுள்: வண்மை தரும் ஆகம நூல் வைத்தபொருள் வழுவா உண்மை விளக்கம் உரை செய்ய - திண்மதம்சேர் அந்தி நிறத் தந்திமுகத் தொந்திவயிற்(று) **ஐங்கரனை** பந்தம் அறப் புந்தியுள் வைப்பாம்.

சைவ ஆகம நூலிலே பரமேஸ்வரன் அருளிச் செய்தபதி, பசு, பாசம்என்ற மூப்பொருள்களை விளக்க, உண்மை விளக்கம் என்ற



இந்தநூலைக்கற்பதற்கு, செக்கர்வானம்போன்ற திருமேனியையும், யானைமுகத்தினையும், தொந்தி வயிற்றினையும் ஐந்துகரத்தினையும் உடைய விநாயகக் கடவுளை சித்தத்தில் வைத்துத் தியானம் செய்வோம்.

சிவப்பிரகாசம் உமாபதி சிவாச்சாரியாரின் சார்புநூல், அதில் காப்புச் செய்யுள்:

திருமேவும் உண்மைச் சிவப்பிரகாசத்தின்
மருமேவுபேர் உரைக்கு மாணா- செருமேல்
தொடங்கும் சமர்க்கண் சுரிகுழல் மன் தந்த
கடக் குஞ்சரக்கன்றே காப்பு.

மேலும் நாலாம் செய்யுளில்,

"நலந்தரு நூல் இருந்த தமிழின் செய்யுட்குற்றம்
நண்ணாமை இடையூறு நலியாமை கருதி
இலங்கும் இரு குழை அருகு பொருது வரி சிதறி
இணைவேல்கள் இகழ்ந்த கயற்கண்ணி யொடும்
இறைவன்
கலந்து அருள வரும் ஆனை முகத்தான் மும்மை
கடம் மருவி என நிலவு கணபதியின் அருளால்
அலந்து மதுகர முனிவர் பரவ வளர் கமலம்
அனைய திருவடிஇணைகள் நினைதல் செய்வோம்.

இந்த நூலுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்படி இரு மகரக்குழைக்காதுகள், கண்களின் செவ்வரிகள் உள்ளபரமேசுவரியுடன் பரமேசுவரன் கூடியபோது தோன்றிய ஆனை முகத்தானின் மதநீர் பொழியும் கன்னங்களுடைய பெருமான் முனிவர்களாகிய வண்டுகள் துதிக்கின்ற தாமரை போன்ற பாதங்களை நினைத்து வணங்குவோம்.

உமாபதி சிவாச்சாரியார் தமது **திருவருட்பயனின்** தொடக்கத்தில், ஓங்காரமூர்த்தியாகிய விநாயகரைத் துதிக்கின்றார்.

நற்குஞ்சரக்கன்று நண்ணில் கலைஞானம்
சற்குஞ் சரக்கன்று காண்"

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இதற்கு எழுதிய உரை

" நல்ல யானைக் கன்றாகிய விநாயகக் கடவுளைஅணுகினால் கலைகளும் ஞானம் வருத்திக் கற்கும் பண்டங்கள் அல்ல. மேலும் அதை விளக்குகின்றார்.


"பராசக்தி ஆன்மாக்களுக்கு அருளும் பொருட்டு முகம் செய்யும் முதனிலை ஓங்கார வடிவாகிய விநாயக மூர்த்தம் ஆதலின், அம்மூர்த்தம் நற்குஞ்சரக் கன்று என நூலின் முகத்தில் வாழ்த்தப்பட்டது. அதுதான் "உய்ய என் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற மெய்" என்று திருவாசகத்தில் பேசப்பட்டது"

பெரிய புராணத்தில் சேக்கிழார் விநாயக வணக்கம் செய்கிறார்.

"எடுக்கும் மாக்கதையின் தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திட
தடக்கை ஐந்து உடை, தாழ்செவி நீண்முடி
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்"

வேதத்தில் விநாயகர் என்றொரு தெய்வம் சொல்லப்பட வில்லையே என்பவர் மேற்புல ஆய்வாளர். நம் மரபு தெரிந்தவர்கள் "கணானாம் துஆ கணபதிம் ஹவாமஹே" என்று துதிக்கும் கணபதியே.

மௌன தவ முனிவர் பொ. கைலாசபதி அவர்கள் தமது புத்திவிருத்திக் கட்டமைப்பில் விநாயகர் முதலிய சிவக்குமாரர்களுக்குரிய இடத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார்.



ஆ. சபாரத்தினம்,
நாரந்தனையூர்.



திருக்கோயில்கள் வளர்த்த வாழ்வியற் செல்நெறியில் அறப்பணிகளும் ஆன்மநேயமும்

மனிதகுலத்தை வாழ்வாங்கு வாழும் நெறியில் வழிப்படுத்தவே வழிபாடுகளும் சமயங்களும் தோன்றின. சைவநெறியாகிய சிவநெறியின் சீலம் உயிரிரக்கத்தில் தான் தங்கியுள்ளது. அன்பு நெறியில் வளர்ந்தது வளர்வது உயிர்கட்கு நலம் தரும் அன்பு நெறியும் அறிவு நலமும் இயங்கும் தன்மையுடையன - இயக்கும் தன்மையுமுடையன, இவையிரண்டும் சீராகத் தொழிற்படுவதன் மூலமே உலகின் இயக்கம் - சீலம் - உயர் நலங்கள் அனைத்தும் தங்கியுள்ளன.

"அன்பே என் அன்பே என்று அன்பால் அழுதலற்று
அன்பே அன்பாக அறிவழியும்....."

(திருக்களிற்றுப்படியார்)

என்பது சித்தாந்த வாழ்வியலாகும். மாமழையின் சிறு துளிகள் சேர்ந்து பேராறாக விளங்குவது போல சமுதாயமும் கூட்டுறவால் பேராற்றலும் பேருருட்பாங்குமுடையதாக விளங்கவேண்டும். இச்சமுதாயக் கூட்டுறவினைப் பேணி வளர்ப்பதில் இந்துக்களின், திருக்கோயில்களின் பணி அளவிடற்கரியது. பழந்தமிழ் நாட்டில் திருக்கோயில்கள் இந்துக்களின் சமூக உறவுகளுடன் பின்னிப்பிணைந்திருந்தன. இவை மக்களது உடலையும் உயிரையும் ஒருங்கே வளர்க்கும் சமய நிறுவனங்களாக வளர்ந்து வந்தன. எந்தக் காரியங்களும் பூசகர்களும், கோயிலும், அறங்காவலரும் தொடர்புபடாமல் நடப்பதில்லை.



நாயன்மார் காலத் திருக்கோவிற் பணிகளும் சமூகப் பணிகளும்

திருக்கோவிலில் எழுந்தருளி யிருக்கும் இறைவனைத் தலைவனாகக் கொண்டு சைவநெறி சார்ந்த சமூகம் ஒருமைப்பாட்டுடன் கூடிவாழக்கற்றுக்கொண்டமையினைநாயன்மார் கால சமுதாய வாழ்வு புலப்படுத்தும். கோயில்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட காலமுதல் சமூக உறவுகளுடன் பின்னிப்பிணைந்திருந்தன. விருந்தோம்பலும் ஆன்ம நேய ஒருமைப்பாடும் இந்துக்களிடையே வளர்ந்திருந்தன. கோவிற் பூசகர்கள் வேத விற்பன்னர்களாகவும் ஒழுக்கத்தின் சின்னமாக பாமர இந்துக்கட்கும் அறிவுரை கூறும் ஆசிரியனாக - நம்பிக்கையின் சின்னமாகவும் விளங்கினர். நாயன்மார்களும் எல்லா வர்ணங்களிலிருந்தும் தோன்றி ஆலய வழிபாட்டையும் அறப்பணிகளையும், பக்தி ஒழுக்கத்தினையும் நிலைபெறச்செய்தனர். சாதி ஆசாரங்களைக் கடந்து சைவம் பொது மக்களிடையே செல்வாக்குப்பெற்றது. நாயன்மார்கள் பெயரில் தொண்டு செய்யும் சைவ மடங்கள் பலவும் தோன்றின. சமயத்தவர்களாக இருப்போர் சமயங்களை உடைப்பவர்களாக இல்லாது சமயங்களைக் கடந்தவர்களாக திருத்தொண்டு செய்வதே உண்மையான மனித பண்பாகும்.

மெய்கண்டாரின் முதல் மாணவ பரம்பரையில் வந்த நமசிவாய தேசிகரால் திருவாவடுதுறை ஆதீனம் தோற்றுவிக்கப்பட்டது. அதே பரம்பரையில் வந்த ஞானசம்பந்த தேசிகரால் உருவாக்கப்பட்டது தருமபுர ஆதீனம். இவையிரண்டும் கோவில்களின் ஆட்சியைக் கவனிப்பதுடன் இன்றும்

பொதுக் கல்வி - சமயக் கல்வி நிறுவனங்களை நடத்தி வருகின்றன. இவற்றிற்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தவை பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற மடங்களாகும். கி.பி 8ம் நூற்றாண்டினை அடுத்தே தமிழகத்தில் சைவ மடங்கள் தோன்றின. இவை அனைத்தும் இந்து சமுதாயத்திற்குத் தேவையான அறப்பணிகளை மேற்கொண்டிருந்தன. திருக்கோவில்களது நிர்வாகத்தைக் கவனிப்பதுடன் அவை யாத்திரிகர் மடங்களாகவும் உணவு வழங்கும் நிலையங்களாகவும் சமய சாஸ்திரங்களைக் கற்பித்தலுடன் - ஒழுக்கத்தை வளர்க்கும் நிறுவனங்களாகவும் நோயாளர் நலன்புரி நிலையங்களாகவும் பணியாற்றின. சேரநாட்டு மடம் ஒன்று விலங்குகட்கு மருத்துவம் அளித்துள்ளது.

அப்பரடிகளின் பெயரால் அமைத்த 'திருநாவுக்கரசர்' தண்ணீர்ப்பந்தல் அன்னதான மடம், திருஞானசம்பந்தர் ஆதீனம் என்பன புறச் சமயங்களால் விளைந்த தீமைகளை எதிர்த்து சமூகப்பணிகள், சமயப்பணிகளை முன்னெடுக்கவும் பின்வந்த மடாலயங்கட்கு முன்னோடியாகவும் அமைந்தன. சோழர்காலத் திருமடங்களின் பணிகள் மென்மேலும் விரிவுபடுத்தப்பட்டன. திருக்கோவில்களது பெயரில் அவற்றின் நிதியைப் பயன்படுத்திப் பல ஆலய நிர்வாகங்கள் அன்னதானத்துடன் புராண படனம் செய்தல் - செய்வித்தல், நாயன்மார்கள் குருபூசைகளை ஆற்றுதல் சமூக மேம்பாட்டு வளத்தில் இயற்கை வளம் பேணுமுகமாக யாகங்கள், ஹோமங்களை நடத்துதல், அடியவர்கட்கு உணவு, உடை, உறையுள், கொடுத்து ஆதரித்தல் போன்ற பணிகளையும் ஆற்றிவந்தன. ஈழத்திலும் பாடல்பெற்ற தலங்களான திருக்கேதீஸ்வரம், கோணேசர் கோயில், கீரிமலை சிவாலயம், நல்லூர் திருத்தலம் முதலிய திருக்கோவில் மடங்களும் இத்தகைய பணிகளை ஆற்றிவந்தன. அன்னதானம், அபயதானம், ஔடத தானம், என்பன இவற்றில் தலைசிறந்தன. எனவே பழம் காலத் திருக்கோவில்கள் மக்கள் பணிமன்றங்களாகவும் விளங்கின. அந்த வகையில் கல்விக்கூடங்களாக, கலைபயில் நிலையங்களாக நாடக அரங்கங்களாக, மருத்துவ நிலையங்களாகவும் அவை பணி செய்தவாற்றினைப் பல கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது. வழக்குகளைத் தீர்த்து வைக்கும் மன்றங்கள் கூட இருந்தன. கிராம சபைகள், ஊர்ச் சபைகள் கூடக் கோவில்களிலேயே இயங்கின.

" திருக்கோவில்களும் திருமடங்களும் கல்வியறிவு சமயப்பணி, ஒழுக்கம் இவற்றினை வளர்த்தெடுக்கும் இடமாகும். இவையிரண்டும் சமத்துவமுடையவை. அவற்றிலே செய்யத்தகாத குற்றங்கள் செய்தவர்கள் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர் என ஆகமங்கள் உரைக்கின்றன.

எனவே இவற்றினைப்பொறுப்பேற்று நடத்துபவர்கள் உயரிய ஒழுக்கநெறியினைக் கடைப்பிடிப்பவராகவும், சைவாசாரமுடையோராய், தம்மைச் சார்ந்தோரை வழிப்படுத்துவோராய், வேதாகம சித்தாந்த நெறி வழிபட்டோராயுமிருத்தல் வேண்டும் "

(4ஆம் பாலபாடம்)

என்று ஆறுமுக நாவலர் கூறியிருப்பது இங்கு மனம் கொள்ளத்தக்கது.

வெறுமனே கோவில்களைக் கட்டுவதுடன் பணி முடிந்து விடுவதில்லை. புராதன ஆலயங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். அக்கோவில்களைப் பராமரித்து திருவருள் நிலைபெறும் பொருட்டு நித்திய நைமித்திய கைங்கரியங்களை ஆற்றுதலும் அவசியமாகும். உற்சவம் என்றால் 'துன்ப நீக்கமும் சுகப்பேறும் அருள்வது' எனவும் ஒரு பொருள் உண்டு. விசேட பூஜா காலங்களில் சுவாமி தரிசனம் செய்வதால் தீராத குற்றங்கள், தோஷங்கள்



அகலும் என சாஸ்திரங்களும் சொல்லியுள்ளன. மோட்டர் இயந்திரம் இருந்தால் தான் ஒரு வாகனம் ஓடமுடியும். அவ்வாறே பூசைகள் ஒழுங்காக நடைபெறும் ஆலயங்களில் தான் அருட்சக்தி பெருகும். எஞ்சின் இயக்கும் எண்ணெய் போன்று இறைமையின் சக்தி வெளிப்பாட்டிற்கு அபிஷேகம், ஆராதனை, மந்திரம், பக்தி, பாவனை என்பன இன்றி யமையாதது. திருக்கோவில் பூசைகள் கிரமமாக நடைபெறுவதனால் நாட்டிலும் சகல நற்பயன்களும் தவறாது நடைபெறும்.

" நாடும் நகரமும் நற்திருக் கோவிலும்.....
தேடிச் சென்று பாடிப் பணிமின் "

(திருமந்திரம்)

என்பது சித்தர் வாக்கு. பொதுவாக உயர் விழுமியங்களைக் கொண்ட வாழ்க்கைத் தரம் மேம்பட்ட சமுதாயத்தில் இவை இயல்பாகவே பொலிவுற்று விளங்கும். ஆனால் தற்காலத்திலே யுத்த பூமியில் மக்கள் அல்லற்பட்டு அகதிகளாகி, ஆதரவற்றோராகி, வீடிழந்து, தொழில் இழந்து, உற்றார் பெற்றார் உறவுகளையிழந்து வீதியோரங்களிலும் நலன்புரி நிலையங்களிலும், அகதி முகாம்களிலும் ஊனமுற்றோராகி, நோயாளராகிப் பரிதவிக்கும் அவலம் தொடர்கின்ற ஒரு சமுதாயத்திலே புதிய கோயில்களை அமைப்பது, புதிய வாகனங்கள் செய்வது, புதிய மண்டபங்களைக் கட்டுவது, பரிவாரக் கோவில்கள் நிர்மாணித்தல் என்பன பற்றி அதற்குரிய தகுதி வாய்ந்த புலமையாளர்களுடன் ஆலோசித்து அவை காலத்தின் தேவை கருதி அவசியமானவை ஒன்றிற்கு நூறு தடவை இந்து நிறுவனங்கள், நிர்வாக சபைகள், சிந்தித்து செயலாற்றுவது வரவேற்கத்தக்கது. திருப்பணிகட்குச் சமமாக அறப்பணிகளாற்றி சமுதாய வாழ்வை முன்னேற்றுவது பற்றியும் சிந்தித்தும் செயலாற்றுவது இன்றைய தேவையாகும்.



சோழர் கால ஆலயங்களில் அறப்பணிகள்

இத்தகைய ஒரு காலகட்டத்தில் முன்னைய கோவில்களின் சமுதாயப் பணிகள் பற்றி அறிவதும் இன்றியமையாததாகும். சோழர் கால அரசியல் வரலாற்றில் மன்னர்கள் மேற்கொண்ட யுத்தங்களினால் மக்கள் பெரும் சிரமப்பட்டதையும் அப்போது ஆலயங்கள் மூலம் அரசர்கள் அரும்பெரும் சமூகப் பணிகள் ஆற்றியமையும் அக்காலக் கல்வெட்டுக்கள் தரும் செய்திகளாகும். சோழர் காலத்தில் கடல் கடந்த நாடுகளில் நடைபெற்ற போர்களினால் வெற்றியீட்டிப் பெறப்பட்ட செல்வங்கள் ஆலயங்களைக் கட்டுவதற்கு மட்டுமன்றி திருப்பணிகளுடன் சமுதாயத்தில் அறப்பணிகள் ஆற்றுவதற்கும் பயன்படுத்தப்பட்டன என்பது வரலாறு தரும் உண்மையாகும். அக்காலத்தில் கோவில்கட்குள் நடத்தும் பள்ளிகட்கும் அவற்றில் பணி யாற்றும் ஆசிரியர்கட்கும் வசதி செய்து கொடுப்பதற்காக பல அறக்கட்டளைகளை நிறுவின. இவர்கட்காக கோயில்களில் உணவுச்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. சிறந்த நூல்கள் ஓலைச் சுவடிகளில் எழுதி வைக்கப்பட்டன. இவற்றினைப் பல கோவில்கள் நூல் நிலையங்களை ஏற்படுத்தி அங்கு தொகுத்து வைத்தன. கோவில்களில் அமைந்த பாடசாலைகளில் வேதாகமங்கள், தேவாரத்திருமுறைகள், திருவாய்மொழி முதலியனவும் கற்பிக்கப்பட்டன. இவற்றிற்கெனப் பல நன்கொடைகளும் வழங்கப்பட்டன. திருவாதிரை நாளில் இரவு சாமவேதம் ஓதுவோர்க்கு சிறந்த பரிசு வழங்கவும் அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டது.

மேலும் ஆலயங்களில் திருத் தொண்டு செய்வோர் நன்கொடைகளை, அறக்கட்டளைகளை ஏற்று அவற்றினை வழங்கியவர்களின் விருப்பப்படி பல்வேறு

அறப்பணிகளையும் நடத்தி வந்தனர் எனவும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. கோயில்களைப் புதுப்பித்தல், திருவிழாக்களை நடத்துவித்தல், கோவில் தொண்டர், மரவேலை, இரும்பு வேலை செய்வோர்க்கு ஊதியம் வழங்குதல் அவர்கட்குத் தங்குமிடவசதி செய்து கொடுத்தல் என்பவற்றிற்கும் ஆலயங்களின் நிதிகள் பயன்படுத்தப்பட்டன. எச். கேட்ற்ஸ் (H.Gaetz) என்பவர். இந்தியக் கலைச் செல்வங்கள் பற்றிக் கூறுமிடத்து கோவிலால் பயனடைந்த பூசகர்களை விட மிகுந்த நன்மை பெற்றவர்கள் தொழிலாளரும் கோயிற் பணியாளர்களும் என்றே குறிப்பிட்டுள்ளார். திருப்பதிகம் ஓதுவோர், திருநந்தவனம் அமைப்போர், பூசகர், சமையற்காரர், காவற்காரர், ஆடைகட்குச்சாயமிடுவோர். கோயிற்பணியாளர் எனப்பலரும் இதில் அடங்குவர். அதனால் கோவிற் பணிகளால் கோவில் மட்டுமன்றி கோவில் சார்ந்த சமுதாயமுமே பயனடைந்தது.

கோவில் நிர்வாகங்களில் ஊழல்கள் ஏற்படுமிடத்து அரசர்கள் தலையிட்டு விசாரணைகள் மேற்கொண்டு நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தியும் கோவிற் சொத்துக்களைப் பாதுகாத்தும் வந்த செய்திகளையும் கல்வெட்டுக் குறிப்புக்கள் தந்துள்ளன. உதாரணமாக இராஜகேசரிவர்மனான ஆதித்த சோழன் ஆட்சியில் திருவலஸ்தானம் கோயில் வருமானம் அறமல்லாத கருமங்கட்குப் பயன்படுத்தப்பட்டமையினை ஆட்சியாளர் விசாரணை மூலம் கண்டறிந்து நகரக்கணக்கர்களார் கணக்கெழுதுவினைஞர் முதலிய நால்வர்க்கு மூன்று கழஞ்சு பொன் தண்டம் விதித்ததாகவும் ஒரு தகவல்களைக் காணமுடிகின்றது. தவிர ஆலயங்களில் அங்கவீனர்கட்கும், நாடோடிகட்கும் உணவு வழங்கவும் சான்றோர் பலர் நிவந்தங்களை வழங்கியுள்ளனர் என்பன போன்ற செய்திகளிலிருந்து கோவிற் பணி வைப்பு நிதிகளிலிருந்து பொதுப் பணிகள் நிறைவேற்றப்பட்டமையினையும் அறிய முடிகின்றது.

திருக்கோவில் நிர்வாகமும் அறப்பணியும்

சோழர் காலத் திருக்கோயில்கள் பலபொதுக் காரியங்களை முன்னெடுத்து நடத்துவதற்கு முன்னோடியாகவிளங்கின. கோயில்களில் கிராம சபைகள் கூட்டின. தேர்தல்கள் நடைபெற்றன. சேந்தலை உத்தர மேரூர் காவேரிப் பாக்கம், திருப்பாற் கடல் முதலிய சில கல்வெட்டுக்கள் சோழர் காலத்தில் ஊராட்சியானது மக்களால் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆலயங்கள் பெருமளவிற்கு பங்களிப்புச்செய்தமை பற்றியும் அறக்கட்டளைக் கொண்டுள்ளமையையும் வல்ல சான்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்ட மையையும் கூறுகின்றன. ' சதுர்வேதி பட்டாரப் பெருமக்கள்' அறக்கட்டளைகளை நிர்வகித்த செய்தி ஒன்று முதலாம் பராந்தகனின் 31 ஆம் ஆண்டுக் கல்வெட்டிலே இடம் பெற்றுள்ளது. வேதாரணியத்தில் 'தேவரிடைச் சான்றோர்' என்றும் கோவில் நிர்வாகக் குழு சில மாடுகளை நன்கொடையாகப் பெற்றதால் அவற்றிற் கிடைத்த மெய்யினால் திருக்கோயில் விளக்குகள் ஏற்றப்பட்டனஎன்று T.N. சுப்பிரமணியம் என்பவர் தனது நூலில் குறிப்பிட்ட செய்தியும் அறியப்படும். இவை அக்காலத்து அறக்கட்டளைகள் கல்வியறிவும் சீரிய ஒழுக்கமும் சான்ற பெருமக்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தமையினை மேல் வரும் செய்திகள் உணர்த்துகின்றன.

வீரராஜேந்திரன் காலக் கல்வெட்டொன்று மூன்று அறக்கட்டளைகள் சேர்ந்தமைந்து செய்த அறப்பணிகள் பற்றிக் குறிப்பிடும். அக்கட்டளை நிதியத்தின் ஆண்டு வருமானம் 3243 கல் நெல்லும், 216 1/2 கழஞ்சு பொன்னும் கிடைத்து வந்துள்ளன. அவற்றினைக் கொண்டு ஆலயத்தின் நித்திய நைமித்திய



செலவுகள், வேதம் பயிற்றுவிக்கும் ஒரு கல்லூரி, அதில் பயிலும் மாணவர்கட்கென ஒரு விடுதி, அதனை நடாத்துவதற்குரிய செலவுகள் ஆதுலர்சாலை, ஆயுள் வேத வைத்திய சாலை, அமைத்து அவற்றிற்குரிய செலவீனங்கட்கும் பயன்படுத்தப்பட்ட முறைமைகளை விபரித்துள்ளது. விடுதியில் தினம் தோறும் அறுபது பேருக்கு உணவு வழங்கப்பட்டது. அங்கு கல்விபயிலும் மாணவர்கட்குப் பாய்கள், விளக்கிற்கு எண்ணெய், முழுக்கு முதலியவற்றுக்கும் வசதி செய்யப்பட்டது. ஆசிரியர், வேலையாட்களுக்கு ஊதியமும் வழங்கப்பட்டது. வைத்தியசாலை வைத்தியர், தாதிகள் இருவர், நாவிதன், காவற்காரன், 15 படுக்கை வசதிகள், 40 காசுகள், பெறுமதியான மருந்துகளும் சேமித்து வைத்து, ஊதியமும் வழங்கப்பட்டுள்ளன. சுந்தரச் சோழன் வைத்திய அறக்கட்டளை ஒன்று தஞ்சையில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு உதவி வழங்கப்பட்ட செய்தியையும் அங்கு காணமுடிகின்றது. இங்ஙனமாக அக்காலத்திய ஆலயங்களின் நடவடிக்கைகள் செயற்பாடுகள், சமூகப்பணிகள் யாவும் மக்கள் சமுதாயத்தின் நலனையும், மகிழ்வையும் உயர்வையும் உருவாக்கி வளர்ப்பதற்கே பயன்பட்டன. இவற்றினைப் போன்று இன்றைய பெரும் நிதிவசதி படைத்த பெரும் கோவில்கள் இந்நடைமுறைகளில் ஏதேனும் ஒன்றினை முன்னெடுத்துப் பணிபுரிய முன்வரலாம்.

அக்காலத்துத் திருக்கோவில்களின் அறப்பணிகள், தருமகாரியங்கள்யாவும்அரசர்கள் இந்துக்களாகவும் ஆட்சியாளர்களாகவும் விளங்கியமையினால் அனைத்து பெருமளவு இலகுவில் கைகூடி வந்தன எனலாம். இன்றைய நிலையில் மதச் சார்பற்ற அரசுகளிடம் ஓரளவு நிதியுதவிகளை எதிர்பார்க்கலாமே தவிர ஏனைய பொதுப் பணிகளை முன்னெடுப்பதனால் ஆலய நிர்வாகங்களும் இந்து சமய நிறுவனங்களும் பொருள் வசதி படைத்த சான்றோர்களுமே கைகொடுக்க வேண்டும்.

"ராஜலட்சணம் அல்லது ராஜாங்க லட்சியம் தர்மத்தை நிலைபெறச்செய்வதாகும் எந்த வர்ணத்தில் பிறந்து எந்தப் பதவியை வகித்தாலும் அவன் சமூகப் பணிகள் மூலமே தனது சிறப்பினை வெளிப்படுத்த முடியும். கடமைகளைச்செய்வதன்மூலமே ஆத்ம சொரூபத்தைக் காணமுடியும். கடமைகளை ஆற்றுவதன் மூலமே ஒவ்வொருவரும் ஆத்மானுபவம் பெறும் சுதந்திரம் உடைய வர்களாகின்றனர். சுதந்திரம் என்பது தான் தோன்றித் தனமல்ல நியாய பூர்வமாகவும் சமூகக் கட்டுக் கோப்பு கட்கு உட்பட்டு நடப்பதிலுமே உண்மை யான சுதந்திரமுள்ளது. சமுதாயமளிக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்துபவன் சுதந்திரமடைகின்றான் ஆகவே மதத்தால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளை ஆதாரமாகக் கொண்டே ராஜாங்கம் அமைய முடியுமா?[5]"

என்ற கௌடில்யரின் கருத்தும் அரசுகள் சமயத்தை ஆதாரமாகக் கொண்டு தர்மத்தை நிலைபெறச் செய்ய முடியும் என்பதனை வலியுறுத்துகின்றது. 'ஆலயம் என்ற சமூக நிறுவனமே இப்பணிகளைச் செய்வதற்கு பேருதவியாக அமையும்.

அரசன் தர்மத்துவஜன் அறக்கொடி தாங்குபவன். அர்த்தமாகிய பொருளின்றி தர்மமுமில்லை - காமமுமில்லை நியாயமான விருப்பங்களும் சிறந்த சுகமான வாழ்வும் நேர்மையாகப் பொருளைச் சேகரிப்பதிலேயே உள்ளனஎன அர்த்த சாஸ்திரம் கூறுவதிலிருந்து சேமித்த பொருளின் ஒரு பகுதி தர்ம கைங்கரியத்திற்கும் செலவிட வேண்டும் என்பது அதன் துணிபாகும். எனவே அரசாங்கமும் கோயில்கள் முதலியபுனித இடங்களைப்பேணிப் பாதுகாத்து குளங்கள், நந்தவனங்கள், மடங்கள்,

அறிநிதியங்கள் என்பவற்றினை அமைத்து குடிமக்கள் நன்மைகளை மேன்மையுறச் செய்ய வேண்டும் என்பதானது அர்த்த சாஸ்திரத்திலும் அறப்பணிக்குக் கிடைத்த அங்கீகாரமும் ஆகும். ' சமுதாயத்திற்குப் பயன்படும் ஒப்புரவாளர்கள் செயல்கள், பள்ளிகள், மருத்துவமனை உதவிகள் என தன்னைச் சுற்றி வாழும் சமூகத்திற்கும் நல்வாழ்வு வாழ்வதற்குரிய கருணையோடும் சேவையாற்றும் தென்னாட்டின் இடைக்காலக் கோவில்கள்மனித இனவரலாற்றில்ஒப்புயர்வுற்று விளங்குகின்றன என்றும் வரலாற்றாசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்களின் மதிப்பீடு முற்றிலும் பொருத்தமானதே.

சிவம் எழுத்தருளி வரும் வாகனம் எருது, அவனது கொடி ரிஷபம், எருதின் கடுமையான உழைப்பில் தான் உலகிலே உணவுப் பயிர் விளைகின்றது, சுவை மிக்க பாலுணவு கிடைக்கிறது, தாயற்றகுழந்தைகட்கும்கோமாதா தாயாகிறது. அதனால் தான் மக்கட்குத் தன் உழைப்பினையும் இரத்தத்தையும் பாலாக்கி வழங்கும் பசுக் குலம் சார்ந்த எருதினை ஈசன் வாகனமாகக் கொண்டருளினான். தருமத்தைப் பரிபாலிப்பவன் இறைவன். இன்று ஆலயங்களில் தருமகர்த்தா சபை அறங்காவலர் சபை எனப் பரிபாலனம் செய்து, துயரப்படும் மக்களை இரட்சிப்பதற்கேயாகும். மரம் பழத்தினைப் பிறருக்கே வழங்குகின்றது. நீர் நிலைகள் நீரைத் தானே பருகுவதில்லை. வயல் வெளிகள் நெல்லினைத் தான் புசிப்பதில்லை. அவ்வாறு பிரதி பலன் கருதாது பிறருக்கு உதவுவதே அறவாழ்வு - இயற்கை நியதி.

" இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்

கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார் - ஐயன் ஐயாறனாரே"

என்றார் அப்பரடிகள். அதனால் ஆலயங்கள் பொருளை சேர்த்து திருப்பணிகளையும் அறப்பணிகளையும் இணையாகசெயற்படுத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அத்தகைய சிவசொத்தை தமதாக்கி கவர்ந்து கொள்ள முற்படும் கயவர்கட்கு கடுநரகங்களை வைத்தார் இறைவன் எனத் தேவாரங்களில் அச்சுறுத்தல் தரப்பட்டுள்ளது.

இன்றைய சமுதாய சூழ்நிலைகளில் இந்துக் கோவில்கள் பலவும் ஆடம்பரமான சமயக்கிரியைகள், படோபடமான திருவிழாக்கள் தேவையற்ற வேடிக்கை, கேளிக்கை விளையாட்டுக்களில் பணத்தைச் செலவிடுகின்றன. ஆனால் இந்துக்களான நூற்றுக்கணக்கான சிறுவர்கள். முதலியோர்கள், அனாதரவான குடும்பங்கள் பல சரியான கல்வியின்றி, உணவின்றி, பராமரிப்பின்றி ஊமையாய், செவிடராய், ஊனமுற்றோராய் புழுதியில் கிடப்பதனை ஆலய நிர்வாகங்கள் உணர்ந்துதலைப்படுதல்அவசிய தேவையாகும். வசதியுள்ள இத்தகையோரை இனம் கண்டு அவர்களது ஒருசில தேவைகளைப்பூர்த்திசெய்ய முடியாதவிடத்து கோவிற் கிரியைகளையும், சடங்குகளையும், விழாக்களையும், ஏனையோர் கேலி செய்வார். அதன் விளைவாக ஏற்பட்ட துன்பங்களால் பலர் நாத்திகராகின்றனர், சிலர் உணவிற்கும், தொழிலுக்குமாக மதம் மாறிச் செல்வதும், ஒழுக்க மீறல்கள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகின்றது. சாப்பாடு போடாத சமயம் இருந்தென்ன, வாழ்ந்தென்ன என ஆற்றாமை கொள்வதும், ஆதரிப்பாரை நாடிச் செல்வதும், பாலுக்கும் கூழுக்கும் ஏழைகள் அழுகையில் ஆயிரம் கோயில்கள் தேவையா என்ற வினாக்களை சமுதாய வரலாறு எழுப்பத்தான் செய்யும் மோட்சத்திற்கும், மறு உலக இன்பங்கட்கும் வழிகாட்ட முதல் இந்த உலகில் துன்பம், வறுமையிலிருந்து விடுபட என்ன வழி எனச் சிந்திப்பதே சமயங்களின் முதற் கடமையாகும்.



'மனிதனை மனிதனாக்காத சமயம்
மனிதனை மனிதனாக்காத கல்வி
மனிதனை மனிதனாக்காத தத்துவம் - இவை
மனித சமூகத்திற்குத் தேவையற்றவை'

(சுவாமி விவேகானந்தர்)

என்னும்வீர இளைஞர்சிந்தனை இந்துசமயம் - இந்து ஆலயங்களின் பணி எவை என்பதனை உணர்த்துவதற்குப் போதுமானது. எனவே திருப்பணிகளைப்போன்று இந்து ஆலயங்கள் அறப்பணிகளை மீண்டும் உயிர்ப்பிப்பது காலத்தின் தேவையாகும்.

நடமாடும் கோயில்களை அடியவர்களை, சாதுக்களை, வறுமைப்பட்ட மக்களை நாடிப் போற்றுவதே சமயங்களின் உண்மையான கிரியாத் தத்துவமாகும். ஏழையின் வயிற்றிற் குச் சோறிடுவோர் எனக்குச் சாதம் படைத் தோராவாய் என்றார் கீதையின் பகவான், இதனையே

' நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயீன்
படமாடும் கோயில் பகவர்க்கதாமே'

(திருமந்திரம்)

என விளக்கினார் திருமூலர். பல திருக்கோயில்கள் திருப்பணிகளுடன் தமது பணி நிறைவடைந்ததாகக் கருதுகின்றன. பூசைகளைப் போன்று சேவைகளும் சமயப் பயன் உடையவையே.

அண்மைக் காலத்து வரவேற்கத்தக்க மாற்றங்கள்

சமீபகாலங்களில் இந்து சமய நிறுவனங்களில் தலையாயதாக விளங்கும் திருக்கோயில்களில் சிலவற்றில் நல்ல மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன. இவை தொண்டு செய்ய விரும்பும் பலரது விருப்பங்களை நிறைவேற்றவும், சமுதாயத்தில் அறவிழிப் புணர்வு ஏற்படவும் வழிகாட்டுவதாக உள்ளன. சுமார் இருபது வருடங்கட்குமுன்னரே இந்து ஆலயங்கள் தம்மை சமூகப்பணிகட்கும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற மறுமலர்ச்சியை சிவத்தமிழ்ச்செல்வி . கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எமது ஈழத்து திருக்கோயில்களில் ஏற்படுவதற்கு வித்திட்ட சிறப்புடையார். அவரது ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம் போன்று நயினாதீவு நாகபூசணி அம்மன் தேவஸ்தானம், வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம், மற்றும் அகில இலங்கை இந்துமாமன்றம், சமய சமரசம் பேணும் சத்யசாயி நிறுவனங்கள் ஏற்றுச் செய்யும் சமூகப் பணிகள் பிற இந்து நிறுவனங்கட்கும் முன்மாதிரியானவை.

சிவநெறி சார்ந்த சைவ மக்களின் சமூக அமைப்பானது கோயில்களைச் சார்ந்து குடிமக்களும் குடிமக்களைச் சார்ந்த கோயில் வளர்ச்சியும் செழுமையாக வளர்வதற்கு இத்தகைய சமுதாய அறப்பணிகள் பெரும் பங்களிப்பு நல்க முடியும். அண்மைக் காலங் களில் தமிழகத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் சமய வாழ்வில் சமூக முன் னேற்றம் பற்றி பல அரிய சிந்தனைகள் செயற்திட்டங்களை விளக்கியுள்ளார். எனவே சமயப் பண்பாட்டினைக் காப்பாற்றுவதென்பது கட்டிடங்களைப் பாதுகாப்பது தத்துவங்களைப் பாதுகாப்பது கலைகளைப் பாதுகாப்பது இலக்கியங்களைப் பாதுகாப்பது. சமயம் கூறும் ஒழுக்க மேம்பாடுகளை நடத்தைகளில் ஊடுருவி செய்யுமாறு மக்களின் மூடத்தனமான அறியாமைகளை விலகச் செய்ய வசதியளித்து - அருள் நெறியை - அன்பு நெறியை இளைய சந்ததியினரின் உள்ளத்தில் பதியச் செய்யுமாறு அறிவுறுத்தி சமய வாழ்வினை அனுபவத்திற்குள் கொண்டு வருமாறு வாழ்வதற்குப் பயிற்சியளிப்பதிலுமே ஆலயம் சார்ந்த திருப்பணிகள் - அறப்பணிகளால் ஏற்படக்கூடிய நீடித்த நிலையான பயன் பாட்டின் ஒரு சமுதாயம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆலயங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

ஒருகாலகட்டத்திலே மாணவர்களது கல்விக் கூடங்கள், நாடகங்கள், நடனம், இசை, தர்க்கம், நூல் அரங்கேற்றம், பொதுக்காரியங்களில் வழக்குகள், நியாயத் தீர்ப்புகள் அனைத்தும் இந்துக் கோயில்களை மையமாக வைத்தே செயற்பட்டு வந்தன. இதனால் இந்து சமூகத்தவரிடையே ஆன்ம நேய ஒருமைப்பாடு பண்பு, பாசம், வீரம், இறை வழிபாடு போன்ற விழுமியங்கள் யாவும் சிறப்பாகப் பேணப்பட்டு வளர்ந்தன. கோயில்களில் பெரும் சொத்துக்கள் திருப்பணிகட்கும், பொதுப்பணிகட்கும் பங்கீடு செய்யப்பட்டன. இன்றைய கால கட்டத்திலோ அநேகமான கோவிற் பூசைகள் நித்திய, நைமித்திய, வழிபாடுகளுடன் நின்றுவிடுகின்றன. அவற்றினை ஆற்றிக் கொடுக்கும் பூசகர்களும் கோயில் நிர்வாகங்களை நடாத்தும் தர்மகத்தா பரிபாலன சபையினரும் பெரும்பாலும், பொது நலத்தைக் கைவிட்டு சொத்துடைமை, புகழாசை, பதவி மோகம் என்பவற்றிற்கு முக்கியமளித்து நிலைகுலைந்து போனதால் கோயில் வழக்குகள் தீர்க்கப்படுவதற்குப் பதில் பிணக்குகள் உருவாகின்றன. ஆலயங்கள் நீதிமன்றங்களாக இயங்கிய நிலைமாறி ஆலயங்கள் வழக்குகட்காக நீதிமன்றம் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்துக்களது அளவு கடந்த பக்தி வெளிப்பாட்டினால் அவர்களிற் பலர் 'நேர்த்தி' என்ற பெயரில் பெரும் பணத்தையும், தங்க நகைகளையும் இறைவனுக்குக் கொடுத்து அழகு பார்க்க விரும்புகிறார்கள். கோயில்களில் தங்க நகைகள், பணம் பரிசுப்பொருட்கள் சேர்வது அவை திருட்டுப் போகவும், கணக்கறிக்கைகள் சரியாக நிர்வகிக்கப்படாது போவதால் அவை திருட்டுப்போகவும் சொத்துக்கள் பறிபோவதற்கும் திருக்கோயில்கள் ஆளாகும் நிலை வளர்ந்திருக்கின்றது. இது மிகவும் வருத்தம் தரும் நிகழ்வாகும். அத்துடன் இப்படியான பெரும் தொகைப்பணம், நகைகள், ஆலயங்களில் சேர்த்து வைக்கப்படுவதால் முன்னொரு காலம் அன்னியப் படையினர் வந்து நகைகளையும், விக்கிரகங்களையும் கொள்ளையிட்டது போல தற்காலத்திலும் திருக்கோயில் நிதியங்களை நாத்திகர்களும், அரசியல்வாதிகள் பலரும் மீண்டும் கொள்ளையடிப்பதிலே தான் அவை போய்முடியும்.

இத்தகைய ஆலயச் சொத்துக்களை திருப்பணிகட்குச் செலவிட்டது போக மீதியை அறப்பணிகட்கும் பொதுப்பணிகட்கும் செலவிட்டு இந்துக்களது சமுதாயப் பணிகளை ஊக்குவிப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆலயத்திருப்பணிகட்கு மட்டும் எனப் பெருந்தொகைப்பணம் சேரும் போது ஒரோவிடத்து அவை துஷ்பிரயோகம் செய்வதற்கும் வழிகோலப்படும். பழுதடைந்த திருக்கோயில்களைப் புதுப்பித்தல், புனருத்தாரணம் செய்தல், நித்திய நைமித்திய கிரியைகட்கு வழிசமைத்தல் இன்றியமையாத பணியாகும். அதனை விடுத்து இன்றைய மக்களின் அவல நிலைக்கு மத்தியில் புதியதாகப் பெரும் கோயில்களை விஸ்தரிப்பது. புதிய மண்டபங்களை அமைப்பது, பெரும் செலவில் கோயில் உபகரணங்கள், புதிய விக்கிரகங்கள், புதிய வாகனங்கள், புதிய பரிவாரக்கோயில்கள் அமைக்க முற்படுவது. சந்தர்ப்பம் சூழ்நிலைகளைப் பொறுத்து தவிர்க்க முடியாத விடத்து அவை பற்றி சிந்தித்துச் செயற்பட வேண்டுமே தவிர தத்தம் பணப் பெருமை, அந்தஸ்துப் போட்டியை அறிவிப்பதற்காக அவை அமையக்கூடாது.

தினசரி வழிபாட்டிற்கும், விசேட கால வழிபாட்டிற்கும் ஆலயம் செல்வோர் தீபாராதனை காண்பதுடன் பூசையை முடித்துக் கொள்கின்றனர். பூசை காண்பதுடன் நில்லாது கூட்டுப்பிரார்த்தனை, அறநீதிச் சிந்தனை கட்கு செவிசாய்த்தல், தியானம், ஜெபம், பிரசாதம் பெறுதல், நாமசங்கீர்த்தனம் என இவற்றில்



ஏதாவதொரு நிகழ்வுடன் தம்மை இணைத்துக் கொள்ளப்பழக வேண்டும். விஞ்ஞான உண்மைகளை நிறுவுவதற்குப் பரிசோதனைக் கூடங்கள் (Laboratories) இருப்பது போல இந்துக்களின் ஆன்மீக உண்மைகளைப் பரிசோதிக்கும் பரிசோதனைக் கூடங்களாக விளங்குபவை ஆலயங்களே. ஆங்கு தான் மக்கள் சமயம் போதிக்கும் ஆத்மீக சாதனைகளைப் பயிற்சிக்குக் கொண்டு வந்து பரீட்சித்துப் பார்க்கவும் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

சமய ஒழுக்கங்களைப் பேசுவதுடன் மாத்திரம் நில்லாது சமயப் பணிகளில் ஈடுபடுதல், திருப்பணிகட்கு உதவுதல், பூசைக் கிரமங்கட்குத் தொண்டாற்றுதல், திருக்கோயில்களை, சுற்றாடலை, தீர்த்தாக்களை, திருநந்தவனங்களை அமைத்துப் பேணுதல் போன்றவற்றை வாரத்தில் ஒரு நாளாவது குழந்தைகளை ஒழுங்கு முறையில் பயிற்றுவித்தல் சமுகத்தில் சமுதாய ஒழுக்கம் மேம்படவும் வழிவகுக்கும். இவற்றின் விளைவாக நல்ல காற்று, நல்ல குடிநீர், பூசைகளினால் விளையும் சுகந்த வாசனை, ஓமப்புகைகள் யாவும் கிராமத்தில் சூழலையும் சுகாதாரத்தையும் சுத்திகரிப்பதாக அமைகின்றன. இவற்றினையே சம்பந்தரும், அப்பரும் தத்தம் சமயத் தொண்டாக மேற்கொண்டிருந்தனர். சமயப் பாடப்பரீட்சைக்குப் படித்து பரீட்சை எழுதுவதுடன் கடமை முடிந்ததாகக் கருதுகிறார்களே தவிர போதனைகளைச் சாதனைகட்கு கொண்டுவரும் போதே அவை முழுமையான பலனைத் தரமுடியும் என்பதில் பலரும் அக்கறை காட்டுவதில்லை.



தற்காலத்தில் பெற்றோர்களும் பிள்ளைகளை விஞ்ஞானம், கணிதபாடத்திற்கும் ரியூசனுக்கு அனுப்ப முன் வருவது போல, வாரத்தில் ஒருநாள் அறநெறி ஆன்மீகப் பயிற்சிக்கும் பாலர்களை அனுப்புவதற்கும் முன்வரவேண்டும். அப்போது தான் தாம் கற்ற கல்வி ஒழுக்கத்திற்கேற்ப ஒழுக்கவிழுமியம் கொண்ட சமுதாயம் உருவாக முடியும்.

" கண்ணைத் திறக்கும் கல்வி இன்று குருடாய்ப் போனதே

காசு கொடுத்தால் கதவு திறக்கும் வணிகம் ஆனதே"

என்ற ஒரு கவிஞர் வரிகள் இன்றைய கல்வியொழுக்கத்தினை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன. கோயில் நிர்வாக சபையினரும் பூசைகள் நிறைவுற்றதும் திருக்குறள், திருமந்திரம், கீதை, திருமுறைகள், தொடர்பான வகுப்புக்களை ஏற்படுத்தி மனனப் போட்டிகள் வைத்து பரிசளிப்பதன் மூலமும் இவற்றினை ஊக்கப்படுத்த முடியும்.

சிவாச்சாரியார்கள் எனப்படுவோர் சிவ ஆசாரம் மிக்கவர்கள் என்போராவார். கோயில் சார்ந்த சமூக அமைப்பில் " முப்போதும் திருமேனி தீண்டும் பேறு" பெற்றவர்கள் சிறந்த நல்லாசிரியர்களாகவும் இருந்து ஆன்மீகக் கல்வியறிவில் மேம்பட்டவர்களாக விளங்கி ஒரு காலத்திலே அரச குலத்தவர்களுக்கு குலகுருவாகவும், அமைச்சர்களாகவும் விளங்கிய ஆசார சீலர்களாக இருந்தனர். இன்றோ இவர்களின் மரபில் வந்தவர்கள் பூசகர் பலரும் புரோகிதர்களாக மட்டும் விளங்குவதனால் பலரது நிலைப்பாடு வெறும் தரகர்களாகும் நிலைக்கு இட்டுச் செல்வதாகவும் விமர்சனங்கள் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. சிவாச்சாரியார்களின் அந்தஸ்து பொருளாதாரத்தில் மட்டுமன்றி அருளாதாரத்திலும் அறிவாதாரத்திலும் சிறந்து விளங்கினால் அவர்கட்குப் பொருட்பலம் தானாகவே வந்து சேரும். இல்லாமை விலகிவிடும். அவர்களைத் தாங்குவதும் இந்துக்களது கடமையாக அமைகின்றது.

பேராசிரியர் (திருமதி) கலைவாணி இராமநாதன்,
இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

விநாயகர் பெருமை வணக்கத்தில் முதலிடம் பெறும் விநாயகர்

" மண்ணுலகத்தினில் பிறவி மாசற - எண்ணிய பொருள் எல்லாம் எழிதின் முற்றுற - கண்ணுதலுடைய தோர் களிற்று மாமுகப் பண்ணவன்மலரடி பணிந்துபோற்றுவாம்" எனக் கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் கூறினார்." கந்தரனுபூதி பாடிய அருணகிரிநாதன்" செஞ்சொற் புனைமாலை சிறந்திடப் பஞ்சக் கர ஆனை பதம்பணிவாம்" என்றார். இதனால் நாம் விளங்கிக் கொள்வது என்ன என்பது வினா? அதாவது மக்கள் செல்லும் நெறிகளில் தடைகளை நீக்குபவர் விநாயகர் என்பதுதான். இதனால் இவருக்கு விக்கினராசா என்றும் பெயருண்டு. விக்கினங்களை நீக்குபவரும், தம்மை வழிபடாதவர்களுக்கு விக்கினங்களைக் கொடுப்பவரும் ஆகின்றார். விநாயகர் எனும் பதத்திற்குத் தனக்கு மேல் ஒரு தலைவனை இல்லாதவர் என்பது கருத்தாகும். எனவே இந்து மக்களின் வணக்கத்தில் முதலிடம் பெறுகின்றார். எடுத்த கருமங்கட்கெல்லாம் முன்வைக்கப்படுகின்றார். சைவமக்கள் வாழ்வியலில் ஒன்றுபட்டு விட்ட விநாயகப் பெருமான் இல்லாத கருமங்களே இல்லை. நாம் வேண்டிய போது எமது கரங்களில் வெகுவாக வந்துவிடுவார். அறுகும் சாணமும் இருந்தால் போதும்; பிள்ளையார் பிடித்து விடலாம்.

இத்தகைய விநாயகருக்கு கணேசர், ஐங்கரன், கஜானனர், லம்போதரன், வக்கிரதுண்டர், விகடசக்கரன், ஆகுதரர் என்றெல்லாம் பெயர் கள் உள்ளன. பூதகணங்களுக்குத் தலைவர் ஆதவன் கணேசர் என்றும், ஐந்து கரங்களை உடையவர் ஆதலால் ஐங்கரன் என்றும், யானை முகமுடையவர் ஆதலால் கஜானனர் என்றும், பெரிய வயிறு உடையவராதலால் இலம்போதரன் என்றும், வளைந்ததுதிக்கையை உடையவராதலால் வக்கிரதுண்டர் எனவும், மூஷிகத்தை வாகனமாகக்கொண்டவராதலால் ஆகுதரர் எனவும் அழைக்கப்பட்டார். முக்கண்ணும், ஐந்து கரமும், ஒற்றைக் கொம்பும், பானை வயிறும், யானை முகங்கொண்ட விநாயகரின் தோற்றமே அற்புதமானது, இவற்றைப் பார்க்கும் பொழுது விநாயகர் எல்லாமாக இருக்கின்றார். என்பதை உணரலாம். பஞ்ச பூதங்களானது உலகத் தோற்றம் பஞ்சபூதங்களாக அவற்றிற்கு எட்டாமலும் விநாயகர் விளங்குகின்றார். என்பதை அவரது தோற்றப் பொலிவு காட்டுகிறது. முக்கண்ணுடைமையும், யானைமுகமும், பானை வயிறும், தேவரும் அல்லர், விலங்குமல்லர், பூதகணங்களுமல்லர், என்பதையும் ஐந்து கரங்கள் பஞ்சகிருத்தியத்தையும் செய்பவர் என்பதனையும் உணர்த்துகின்றது. எனவே உலகசராசரங்களுக்கு அப்பாற்பட்டவர் என்ற உண்மையை உணரவைக்கின்றது.

பிள்ளையார் பிரணவ வடிவினர்

விநாயகருடைய தோற்றம் பிரணவ வடிவம் நாதவிந்துவடிவானவர் விநாயகர். நாதத்திற்கு வரிவடிவம் கீறு , விந்துவுக்கு வரிவடிவம் சுழி . இந்தக் கீறும் சுழியும் சேரும் போது யானையின் துதிக்கை போன்ற வடிவம் உண்டியாகும். இதனையே விநாயகக் கடவுளின் முகம் யானைமுகம் என்று கூறுவர். நாதவிந்துக்களின் வடிவம்" உ" என்பதாகும். இதனைப் பிள்ளையார் சுழி என்பர். சிவமும் சக்தியுமாகிய பிரணவ வடிவமே விநாயகர் வடிவம். துதிக்கையுடன்



கூடிய அவரது திருமுகம் ஓங்கார மூர்த்தி என்பதைக் குறிக்கும். அகர, உகர, மகர எழுத்துக்கள் மூன்றும் ஓங்காரத்துள் அடங்கும். "அ" பிரம்மாவையும், "உ" விஸ்ணுவையும் "ம்" சிவனையும் குறிக்கு மென்பார். எனவே விநாயகரே மும்மூர்த்திகளின் வடிவினர். உலகத் தோற்றத் திற்கும் ஒழுக்கத்திற்கும் காரணமானவர் விநாயகர். நாதவிந்து வடிவினரான விநாயகர் மூலாதார சக்தியாக விளங்குகின்றார். இதனை விளக்கவே கொடி மரத்தின அடியில் கொடிமரப் பிள்ளையாராக வீற்றிருக்கின்றார்.

விநாயகர் தோற்றம்

ஆறு ஆதாரங்களில் மூலாதார சக்தியாக இருப்பவர் விநாயகர். ஞானத்தைத் தருபவரும் விநாயகரே. ஞானிகள் ஆறு ஆதாரங்களிலும் மனதை நிலை நிறுத்தி இறைவனைக் காண்பர்.

கொடியேற்றம் பஞ்ச கிருத்தியத் தத்து வங்களை விளக்குகின்றது. எனவே விநாயகப் பெருமானுடைய தோற்றமே அற்புத வடிவமாக விளங்குவதைக் காணலாம். பார்வதியும், பரமசிவனும், பெண்யானையாகவும், ஆண்யானையாகவும். உருமாறியபோது விநாயகர் பிறந்தார். என்று புராணங்கள் கூறும் இதனுண்மை "அ" கரம் ஆண்யானையையும் "உ"கரம் பெண்யானையையும் குறித்தது. அகர உகரச் சேர்க்கை ஓங்கார வடிவம் என்பதே. இவ்வாறு தோற்றம் பெற்றமையை மதகரி உரித்தோன் மதகளிறாகவும், உமை பிடி வடிவமாகவும் கூடிய கல்வியுடன் கூடாதாடலும் ஐங்கரக்கரி முகன் வந்தவதரித்தார். எனப் பிள்ளையார் கதை கூறும். மேலும் அவர் தோற்றத்தில் அழகினைச் சித்தரித்து

"முண்டக மலர் போல் முழுதுஞ்சிவந்த
தண்டையும் சிலம்பும் அலப்புதாளிகளையும்
"குண்ட வட்டியும்தண்டாளமாலையும்"

என்றும் புண்டர நுதலுடனும் முப்புரி நூலுடனும் தோளொரு நான்கும் தொடைபுனை கழுத்தும் பொற்கரி முகத்துடனும் இமையா முக்கண்ணுடனும் அங்குச பாசத்துடனும் ஐங்கரக் கரிமுகன் வந்தவதரித்தான். என்று கூறப்படுகின்றது- விநாயகருடைய அற்புத வடிவம் அப்படியே சித்தரிக் கப்படுகின்றது.

இலக்கண சுந்தரியும் சஷ்டி விரதமும்

விநாயகப் பெருமான் சைவ மக்களுடைய வாழ்வியலில் ஒன்றித்துக் காணப்படுகின்றார். அவருடைய அற்புதச்செயல்களைப்புராணங்கள் வாயிலாக அறிகின்றோம். இவரை வழிபட்டுப் பயன் அடைந்தோர் பலர்.

விநாயகருக்குரிய விரதங்களில் ஒன்று விநாயகர்சஷ்டி விரதமாகும். இது கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம் கழித்து வரும் தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழிமாத வளர்பிறை சஷ்டி வரையிலான இருபத்தொரு நாட்கள் கொண்ட விரதமாகும். இவ்விரதத்தை விக்கிரமாதித்தன் மனைவி ' இலக்கண சுந்தரி' நோற்கத் தொடங்கினாள். விரத நெறி பிழைத்தலால் அல்லலுற்றாள். கணவனைப் பிரிந்ததும் வீடுதோறும் அலைந்தும், துரத்தப்பட்டும் வருந்தினாள் மீண்டும் ஔவையாரின் ஆலோசனைப்படி விரதம் முறையாக அனுட்டித்து அருள் பெற்றார். விநாயகப் பெருமானுடைய அருட்கடாட்சம், முழுமையும் அவளுக்குக் கிடைத்தது. இக்கதை விநாயகர்சஷ்டி விரதத்தின் போது பிள்ளையார் கதையெனயாவரும் படித்தும் கேட்டும் பயன் பெறுகின்றனர்.

விநாயகரின் அற்புதச் செயல்கள்

ஒரு சமயம் பொய்ச்சாட்சி சொன்ன குற்றத்தால் திருமால் உமையம்மையால்

குருட்டுப் பாம்பாகும் படி சபிக்கப்பட்டார். அக்குருட்டுத்தன்மை நீங்கும் பொருட்டு திருமால் விநாயகரை வழிபட்டுக் குருட்டுத் தன்மையையும் பாம்புருவும் நீங்கப்பெற்றார். நம்பியாண்டார் நம்பி விநாயகரை வழிபட்டு , திருமுறைகள் இருக்குமிடம் கண்டும், அவற்றைத் திருமுறைகளாகவும் வகுத்துத் தந்தார். கைலைத் திருமணங்காண விரும்பிய ஔவைக்கு கைலைசேர்த்துத்திருமணம்காணச் செய்தவர். விநாயகர்கஜமுகாசுரனைச்சம்காரித்து தேவர்கள் துன்பந்துடைத்தார். சிவபெருமான் திரிபுரதகனத்தில் தன்னை வணங்காமல் சென்ற குற்றத்திற்காக எலிவடிவமாகி தேரின் அச்சை அறுத்தலும், தேர் ஓடாது நின்றதும் மீண்டும் சிவன் விநாயகரை வழிபடத் தேர் ஊர்ந்தது. என்றும் கதைகள் உண்டு. " அச்சது பொடி செய்த அதிதீரன் " என்று திருப்புகழ் புகழ்ந்து பேசும். இவை யாவும் விநாயகப் பெருமானின் பெருமைகளைக் கூறுவன.

அறுகம்புல்லால் அர்ச்சனை

அனலாசுரன் என்னும் அரக்கன் மக்களைக் கொடுமைப்படுத்தினான். துன்பமுற்ற மக்கள் விநாயகப் பெருமானைத் துதித்தனர். மக்களுடைய துயர் போக்க விநாயகப் பெருமான் அனலாசுரனைத் துதிக்கையால் தூக்கி விழுங்கி விட்டார். பெருமானில் வயிற்றுக்குள் புகுந்த அனலாசுரன் வெம்மையை வெளியிட்டுக்கொண்டே இருந்தான். உலகம் முழுவதும் வெம்மையால் உயிர்கள் துவண்டன. இதனை அறிந்த முனிவர்கள் ஒவ்வொருவரும் இருபத்தொரு அறுகுகளால் அர்ச்சித்து வழிபட்ட போது வெம்மை அடங்கிற்று மூவுலகும் மகிழ்ந்தன.

அவந்தி என்னும் நகரில் சுலபன் என்னும் அரசன் இருந்தான். அவன் கொடையிற் சிறந்தவன். அவனிடம் மதிசூதனன் என்னும் வறிய அந்தணன் யாசித்தான். மன்னன் ஏளனமாகச் சிரித்தான். கோபங்கொண்ட அந்தணன் அரசனை எருதாகும் படி சபித்தான். மனைவி சுபத்திரை அந்தணனைக் கழுதையாகும் படி சபித்தாள். அந்தணனும் சுபத்திரையை சண்டாளப்பெண்ணாகக் கடவாய் என்றான். மூவரும் சாபத்தால் உருமாறினர். ஒரு நாள் மழை பெய்தது. மேய்ந்து கொண்டிருந்த கழுதையும் எருதும் அயலிலே உள்ள விநாயகர் ஆலயத்துள் சென்றன. பெண்ணும் புல்லுக்கட்டுடன் ஆலயமண்டபத்தை அடைந்தாள். அவள் கொண்டு வந்த அறுகம்புல்லை மாடும் , கழுதையும் உண்ணத் தொடங்கின. தடியால் அடித்தாள். அவை ஒன்றை ஒன்று கொம்பால் குத்திச் சண்டை இட்டன. அப்பொழுது பலமாக வீசிய காற்றால் அறுகம் புல் விநாயகருடைய மேனிமேல் போய் விழுந்தது. அறுகம்புல் விநாயகருக்கு அர்ச்சனையானது அதனால் மகிழ்ந்த பெருமான் மூவருக்கும் அருள் புரிந்தார். மூவரும் தேவலோகம் செல்வதைக் கண்ட முனிவர்கள் அன்றிலிருந்து விநாயகருக்கு அறுகினால் அர்ச்சனை செய்து விமோஷனம் பெற்றனர். விநாயகப்பெருமானுக்கு அறுகு உகந்த அர்ச்சனைப் பொருளாகும்.

மேலும் அறுகின் பெருமை பற்றிய சம்பவம் ஒன்றுளது. கவுண்டிய முனிவரும் , அவரது மனைவி ஆசிரியையும் அறுகினால் கணபதியை வழிபட்டுவந்தனர். ஒருநாள் முனிவரைப்பார்த்து ஆசிரியை ஐயனே அறுகினால் தினமும் ஆனைமுகனைப் பணிகின்றோம். எமக்குச் செல்வம் கைகூட வில்லையே என்றாள். அதற்கு முனிவர் பூசையில் வைத்த அறுகம்புல் ஒன்றினை எடுத்து அவளிடம் கொடுத்து இதற்குப் பெறுமதியான பொருளை இந்திரனிடம் பெற்றுவா என்றார். ஆசிரியை மகிழ்ந்து கொண்டு இந்திரனிடம் சென்றாள். இந்திரன் குபேரனிடம்



அனுப்பினான். குபேரன் அறுகினை ஒரு தராசிலும் தனது செல்வம் முழுவதையும் மறு தராசிலும் இட்டும் தராசு சமநிலைப்படவில்லை பின்பு பிரம்மா ,விஸ்ணு, முதலியோர் வந்து தராசுத்தட்டில் ஏறவும் சமநிலை அடைந்தது. அப்பொழுது விநாயகருக்கு அர்ச்சித்த அறுகின் பெருமை எல்லோருக்கும் புலப்பட்டது. விநாயகருக்கு இன்றுவரை அறுகுஅர்ச்சனை நடைபெற்றுக்கொண்டே வருகிறது. காரணம்கருதி வழிபடுவோருக்கும், காரணம் கருதாது வழிபடுவோருக்கும் கணபதி அருள்புரிவார்.

இது போன்ற பல அற்புதச் செயல்களை விநாயகர் நடாத்தியுள்ளார். அவற்றை கந்தபுராணம், மச்சபுராணம், விநாயகர் புராணங்கள் வாயிலாக அறியலாம். அறுவகைச் சமயங்களுள் ஒன்று கணபதிவழிபாடு. இதனைக் காணாபத்திய நெறி என்பர். சிவனை முழுமுதற்கடவுளாக வழிபடும் சமயம் வைசமயம். சைவசமயத்தவர்கள் அறுவகைச் சமையத்தையும் கடவுளரையும் ஒப்புக்கொள்வர். கடவுள் ஒருவரே. அவர் பல்வேறு வடிவங்களில் காட்சி தருகின்றார். இதனைச் சிவஞானசித்தியார்.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார்."

என்கிறது. ஆகவே சைவசமயத்தவராகிய நாம் இறைவழிபாட்டில் நம்பிக்கை வைத்துக் கணபதியின் அருளைப் பெறுவோமாக. அத்தி முகனை நித்தம் நினைப்பவர் சித்தமகிழ்வோடு முத்தி பெறுவரே.

கலாபூஷணம், பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை
ஆசிரியர்
இணுவில்.

"நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையோம் ஆதலால் முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவபுண்ணியங்களை உள்ளபடி அறிதலும் பாவங்களை ஒறுத்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்"

-ஆறுமுகநாவலர்.

மஹா கும்பாபிஷேகம்

நினைக்கும் ஆற்றல் உள்ள மனத்தை உடையவன் மனிதன். அவன் அப்பர் சுவாமிகள் கூறியவாறு.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை"

நினைப்பதற்கு நிறுவும் இடமே கோயில் (கோ+இல்) கடவுளின் வீடு. ஆலயம் - ஆன்மா இறைவனிடம் லயிக்கும் இடம். அப்பர் மிக அழகாக திருக்கோயில் என்பார். கோவில் இல்லாவூரை அவர்,

'திருகோயிலில்லா திருவிலூர்'

என்று கூறி அதை "அடவி காடே" என்றும் அழைக்கின்றார்.

இதற்கு வலுச்சேர்க்கும் விதமாக ஔவைப் பாட்டியும்,

'கோயில் இல்லாவூரில் குடி இருக்க வேண்டாம்

என்று உரக்கக் கூறிவிட்டார். கோவில் ஏன் அவசியம்? சுந்தரர் கூறுகின்றார்.

'சலம் பூவோடு தூபம் மறந்தறியேன் "

என்று சலம், பூ, தூபமிட்டு இறைவனை வாயார வாழ்த்தி தாளை வணங்க வேண்டும் அல்லவா? அப்போதுதான் நாம் வாழ்வாங்கு வாழமுடியும் என்பதை வள்ளுவர், இறைவனை வழிபட்டால்

"நிலமிசை நீடுவாழ்வார், யாண்டும் இடும்பை இல,"

என்று கூறி மேலும் அல்லாவிடில், மனக்கவலை மாற்றல் அரிது, பிறவாழி நீத்தல் அரிது" என்றும் கூறுகின்றார். எனவே தான் அப்படிப்பட்ட கடவுளை எழுந்தருள வைக்க ஓர் இடம் வேண்டும். அதுதான் எமது திருக்கோயில்கள் அந்த எழுந்தருள வைக்கும் கிரியையே மஹா கும்பாபிஷேகம் ஆகும். அந்தக் கிரியை முறையையும் கூட இறைவனே வகுத்துத் தந்துள்ளான் என்பது பெரியோர்களின் கருத்து.

"வேதாகமென மயா புறோக்தெள த்வயி விறேஹேந பார்வதி" என்று சிவன் பார்வதிக்குக் கூறியதாக உள்ளது. ஆன்மாக்களிடத்தில் உள்ள அன்பினால் தான் அந்த வேத ஆகமங்களைக் கூறினார். இறைவன் ஓர் இடத்தில் (பிர - திஷ்டை = சிறப்பாக நிற்கவைத்தல்) சிறப்பாக விளங்கச் செய்யும் அதி நுட்ப அறிவுதான் (Technology) கும்பாபிஷேகம். அதை நடைமுறைப்படுத்தும் முறை தான் அந்தக் கிரியைகள்.

அந்த அறிவையும் ஆற்றலையும் கொண்டவர்தான் பிரதான சிவாச்சாரியார். அவருக்கு உதவியாக சர்வபோதகம், சாதகாசிரியர், உதவி சிவாச்சாரியார், யாகரஷ்கர்கள் எனப் பலர் இருப்பார்கள். அந்தச் சிவாச்சாரியார்களின் தெய்வத்தன்மையின் சிறப்புத்தான் அந்த கிரியையை தெய்வீகம் மிளிரச்செய்வது.

இதற்காக ஒதுக்கிய செல்வத்தைப் பதினொரு பாகங்களாகப் பிரித்துத் திரவியங்கள் பெறுதல், சிவாச்சாரியார்களின் செலவுகள், தட்சனைகள், உணவு ஆகியவற்றிற்கும், மற்றும் பிற செலவுகளுக்குமாகச் செலவு செய்வார்கள். இந்தக் கும்பாபிஷேகமானது பலவகைப்படும். முதலில் புதிதாகக் கோவில் அமைப்பது அநாவர்த்தன பிரதிஷ்டை தீ, நீர் என்பவற்றால் அழிந்து செய்யும் பிரதிஷ்டை ஆவர்த்தன பிரதிஷ்டை இருந்ததை புதிதாக திருத்தம் செய்து செய்வது புனராவர்த்தன பிரதிஷ்டை, திருடர் பிரவேசித்தல் போன்ற எதிர்பாராத நிகழ்வுகளால் செய்யப்படும் பிரதிஷ்டை, அத்தரிதம் எனப்படும்.



இந்தக் கிரியைகள் அனுக்ஞை முதல் மண்டலபூர்த்தி வரை அறுபத்திநான்கு கிரியைகள் கூறப்பட்டுள்ளன. கும்பாபிஷேகத்திற்கு முன்பு யந்திரபூசை ஒரு மண்டலம் நடைபெறும். அந்த யந்திரமே சுவாமிக்கு அடியில் வைக்கப்படும். இந்த யந்திரபூசைதான் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தெய்வசான்னித்யத்தை ஏற்படுத்துவது. நாம் மின்கலம் 'சார்ஜ்' எடுப்பது போல இதுவும் உருவேற்றப்படுகின்றது.

இக் கும்பாபிஷேகத்தை வைஷ்ணவர்கள் மஹாசம்ப்ரோஷணம் என்றும் கூறுவர். கும்பாபிஷேகத்தினால் மகோற்சவங்களில் ஏற்படும் குற்றங்கள் நீக்கப்படும்.

" அகரவுயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து"
என்பார் உமாபதி சிவச்சாரியர்.

'திக் காலாதி அனவச்சிந்த அநந்த சிந்மாதிரா மூர்தயே'

என்று பாத்ருஹரி கூறியபடி, திசைகள் காலங்கள்போன்ற எவையாலும்பிரிக்கப்படாத, உட்படுத்தப்படாத இறைவன் அவைகளுக்கு உட்பட்ட மாதிரிக் காட்சியளிக்கும் நிலையே அருவுருவத் திருமேனிகள். கும்பாபிஷேகத்தின்போது, ஆகாயத்தில் உள்ள இறைவன் காற்றிற்குவந்து, காற்றிலிருந்து அக்கினிக்கும், அக்கினியில் இருந்து நீரிற்கும் நீரில் இருந்து நிலத்திற்கும் வருகின்றான். நிலம் = பிருதிவி - நிலத்தில் அம்சமான கல்லு, உலோகம் என்பவற்றில் செய்த சிலைகள் கும்பநீரை அபிஷேகித்து அதில் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது.



யாகசாலை - ஆகாயம்
காற்று, குண்டம் } அக்கினி + காற்று
யாககும்பம் - நீர்
பிம்மம் (சிலைகள்) - நிலம்

இறுதியில் பிம்பம் என்ற பெயர் நீங்கி இறைவன் நாமத்தை பெறுகின்றது. இதை தைத்திணிய உபநிஷதம் அழகாகக் கூறும்.

ப்ரஹ்மணஆகாச : ஸம்பூத
ஆகாசாத் வாயு:
வாயோராக்நி:
அக்நேராப:
அத்ப்ய! பிருதிவி!

மண்டலாபிஷேகம் மிகவும் முக்கியமான செயல். கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளாவிடில் இதிலாவது கலந்து தெய்வ அருளைப் பெறுவது முக்கியமெனப் பெரியோர் கூறுவர்.

இந்தக் கும்பாபிஷேகத்திற்கு எடுக்கப்படும் முகூர்த்தம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. அதில் உள்ள கிரகநிலைகள் சிவாச்சாரியர், எசமான்கள், ஊர் என்பவற்றைப் பாதிக்கும் - எனவேதான் இந்த விடயத்திலே சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் அக்கறை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். அத்தோடு அமைப்பு முறை, சிலைகள் என்பனவும் ஆகம முறைக்கு ஏற்ப இருக்கவேண்டும். இல்லையெனில் இந்த விடயத்தைத் தான் திருமூலர்,

"ஆற்றருநோய் மிக்கு அவல் மழையின்றி
போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர்
கற்றவத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில்தானே"

என்று பாடியுள்ளார்.

மூலமூர்த்தி, பரிவாரமூர்த்திகள், ஸ்தூபிகள், இராசகோபுரம் என்பன கும்பாபிஷேகம் மூலம் சக்தியூட்டப்படுகின்றன. இதைப் பக்தகோடிகள் யாவரும் நினைவில் வைத்திருக்க வேண்டும். உரிய காலத்தில் தவறவிடாது கும்பாபிஷேகத்தை நடாத்துவிக்கவேண்டும். இத்தகைய காரியங்களில் பங்கு கொள்வது ஊருக்கே சிறப்பைக் கொடுக்கும். இறைவனை வணங்கி உலகில் வாழ்வாங்கு வாழ இந்த கும்பாபிஷேகமும் கோவிலும் மனிதகுலத்திற்கு



கணபதி ஹோமம் ஆரம்பம்



தானியசால பிரவேசம்



இயந்திரங்களுக்குப் பூசை செய்தல்



மகாலட்சுமி தானியவாசம்



யாகபூசை



கிரியைகள் ஆரம்பம்



காப்புக் கட்டுதல்



தீர்த்தக்கேணிக்கரையில் யாக ஆரம்பத்திற்கு
அக்கினி எடுத்தல்




கிரியைகள் ஆரம்ப நிகழ்வு



கும்பங்கள் வீதியுலாவரும் காட்சி



பூர்ணாகுதி



மூலஸ்தான விமானத்தை அமைத்த சுந்தரேசன்குடும்பம்
குருக்களிடம் ஆசீர்வாதம் பெறும் காட்சி



மகாலக்சுமி ஜலவாசம்



இராஜகோபுர கலசத்தை ஸ்தபதியிடமிருந்து
டாக்டர் ரவிராஜ் பெற்றுக்கொள்ளும் போது...



கோபுர கலசங்கள் வீதியுலா வரும் காட்சி



மஹா கும்பாபிஷேக நிகழ்வில்...

ஒரு வரப்பிரசாதமாகக் கருதி யாவரும் இறைவன் அருளைப் பெற்று வாழ்வோமாக.

வாழ்க அந்தணர் வாவை ராளினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

உசாத்துணை நூல்கள்

(1) பிரதிஷ்டா முகூர்த்த நிர்ணயம் - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்

(2) காரைநகர் சிவன்கோவில் மஹாகும்பாபிஷேக மலர்

கலைஞர் பா. பாலச்சந்திரன்,
(ஓய்வுநிலை அதிபர்)
மயிலணி, சுன்னாகம்.

கடவுள் உறைவிடம்

"தேடிக்கண்டு கொண்டேன்
திருமாலொடு நான் முகனும்
தேடித்தே டொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டே_ன்"

- திருநாவுக்கரசர்

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து

- மணிவாசகர்

" பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கே ஒத்த தேவர் பிரான்
செய்யானுங்கரிய நிறத்தானும் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான் கழிப்பாலையதே"

- சுந்தரர்



பிள்ளையார் வழிபாடு

பிள்ளையார் வழிபாட்டின் தொன்மை

இந்திய இலக்கியங்களில் மிகப்பழைமை வாய்ந்தவை வேதங்கள். அவற்றுள்ளும் இருக்குவேதம் முந்தியதாகும். இருக்குவேதத்தில் "கணபதி" எனும் சொல் பல இடங்களில் இடம் பெறுகிறது. இச்சொல் தேவகணங்கள் பதினெட்டுக்கும் தலைவனாகிய இந்திரனைக் குறிக்கும் என்ற கருத்தும் உண்டு. ஆயினும் "தந்தின்" என்ற சொற்பிரயோகமும் ஆங்காங்கே இடம் பெறுவதால் யானை முகக் கடவுளையே அது குறிக்கிறது என மறுப்பாருமுளர்.

யசுர் வேதத்தில் "கணானகம் த்வா" எனத் தொடங்கும் மந்திரம் கணபதியைப் போற்றுகின்றது. அதர்வவேதம் "கணாதிம் பூர்வம்" என்ற மந்திரவாயிலாக கணபதி வழிபாட்டை எடுத்துக் காட்டுகிறது ஹேரம்ப உபநிடதம், கணபதி உபநிடதம் என இருஉப நிடதங்களும் கணபதி வழிபாட்டை முதன்மைப் படுத்துகின்றன.

இதிகாசங்களுள் ஒன்றாகிய மகாபாரதம் கணேசப் பெருமானாலே எழுதப்பெற்றதாக இந்துக்கள் நம்புகின்றனர். உலகிற்கு எழுத்துக் கலையை முதலில் வழங்கியவரே கணேசர்தான் என நம்புகின்றோம். வியாசர் கூறக்கூற விநாயகர் எழுதிய பாரதம் 8800 சுலோகங்களைக் கொண்டிருந்தது.

பதினெண்புராணங்களுள் ஒன்றாகிய ஸ்காந்தத்தில் விநாயகமூர்த்தியின் தோற்றம் பற்றிய செய்தி இடம் பெறுகின்றது. "பார்வதிகல்யாணமான பின் பார்வதியும் பரமேசுவரரும் உய்யான வனத்திலுள்ள பொன்மயமான மண்டபத்திற்குள் நுளைந்தனர். அம்மண்டபத்தில் ஏழுகோடி மகாமந்திரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றின் நடுவே சமஷ்டிப் பிரணவமும் வியஷ்டிப் பிரணவமும் இலங்கின. இரண்டின் மீதும் முறையே இருவரும் பார்வையைச் செலுத்தினர்; களிறும் பிடியும் அவற்றிலிருந்து தோன்றி மருவிப் புணர்ந்தன; யானைமுகக்கடவுள் அவதரித்தார் என்று வரலாறு கூறப்படுகின்றது.


உபபுராணங்கள் பதினெட்டினுள் ஒன்றாகிய பார்க்கவ புராணத்தில் விநாயகரின் பரத்துவமகிமையே பேசப்படுகிறது. எனவே அது விநாயகபுராணம் என்று பெயரும் பெற்றிருக்கிறது. அதில் உபாசனாகாண்டம், லீலாகாண்டம்என இருகாண்டங்களில்முறையே விநாயகப்பெருமானைமும்மூத்திகள், தேவர்கள், முனிவர்கள், அரசர்கள், யாவரும் உபாசனை புரிந்து வரம் பெற்றசெய்திகளும் அவ்வப்போது விநாயகப் பெருமான் தாங்கியருளிய திருமூர்த்த மகிமைகளும் விபரிக்கப்பட்டுள்ளன. அத்தோடு சதுர்த்திவிரதம், சங்கடஹரசதுர்த்திவிரதம், என்பவற்றின் தோற்றவரலாறு, அநுஷ்டித்தல் முறை, பூசை முறைகள் என்பனவும், சகஸ்ர நாம அர்ச்சனை, அஷ்டோத்திர அர்ச்சனை, ஷோட ஸநாம அர்ச்சனை, என்பனவும் இந் நூலிலேதான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (இப்பார்க்கவ புராணத்தின் முக்கியத்துவத்தைக் கருதி கச்சியப்ப மாமுனிவர் என்பவர் தமிழிலே விநாயக புராணம் என்ற பேரிலே மொழிபெயர்த்துப் பாடியுள்ளார்)

திருமுறைகளில் பிள்ளையார்


சைவசமத்தின் மிகப்பிரதான தோத்திர நூல்களான பன்னிரு திருமுறைகளுள் பதினாராம் திருமுறையிலேயே விநாயகபரத்துவமான தோத்திர நூல்கள் காணப்படுகின்றன. நம்பியாண்டார் நம்பி என்ற




கல்ச அபிஷேக கும்பங்கள் வீதியுலாவரும் காட்சி



மஹாகும்பாபிஷேக கலசம் வீதியுலா



மூலஸ்தான விமான கலச அபிஷேகம்



பஞ்சமுக விநாயகருக்கு கும்பாபிஷேகம்



மகாலட்சுமி கும்பாபிஷேகம்



சுப்பிரமணியர் கும்பாபிஷேகம்



வைரவர் கும்பாபிஷேகம்





கும்பங்கள் வீதியுலா வரும் காட்சி...



கோவாசம்



தசதர்சணம்



நிர்வாசகத்தலைவர் டாக்டர் ரவிராஜிற்கு
ஆதின குருக்கள் சந்திரகாந்தக் குருக்களால்
பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும்போது



பொருளாளர் கௌரவிக்கப்படும்போது



தொண்டர் சபை அங்கத்தவரிற்கு
டாக்டர் ரவிராஜ் அவர்களால் கௌரவிக்கும்போது



தொண்டர் சபை அங்கத்தவர் கௌரவிக்கப்படும்போது



ஆலய முகப்புத் தோற்றம்



பஞ்சமுக விநாயகர் வாசல் கோபுரம்




இரட்டைப் பஞ்சாங்க வேலையுடன் கூடிய
வசந்தமண்டபம்



இராஜகோபுரம், மணிமண்டபம் பக்கப்பார்வை



இராஜகோபுர கலச அபிஷேகம்



மூலஸ்தான விநாயகர் மஹாகும்பாபிஷேகம்

விநாயகரின் பழவடியார் தன் குல தெய்வமாகிய திருநாரையூர்ப் பொள்ளாப்பிள்ளையார் மீது திருவிரட்டை மணிமாலையொன்று பாடியுள்ளார். சில பரணர்கள் பாடிய "மூத்த நயினார் திருவிரட்டை மணிமாலை" எனும் பிரபந்தமும் உண்டு. இவ்விரு பிரபந்தங்களுமே திருமுறைகளுள் உள்ள விநாயகர் மீதான தனிப்பிரபந்தங்கள் ஆகும். நம்பியாண்டார் நம்பியின் பிரபந்தம் கவித்துவச் சிறப்புடன் பக்திச்சிறப்பும் பொருந்தியதாக அமைந்துள்ளது. இவ்வாறே மூத்தநயினார் திருவிரட்டைமணிமாலையில் விநாயகருளால் நாமடையும் பெரும்பேறுகளும் விநாயகர் விரும்பும் கனிகள் பாஷணங்களும் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன. விநாயகரினருள் மாட்சியைக் கூறும்போது "திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருகும்" என்றும் "விநாயகனே வெவ் வினையை வேரறுக்க வல்லான், விநாயகனே வேட்கை தணிவிப்பான்" என்றும் "விநாயகனே என்றிருக்கமாட்டாரிடத்தே மகாலக்ஷ்மி இருக்கமாட்டாள்" என்றும் பேசப்பட்டுள்ளது. விநாயகரின் படையல்கள் பற்றி "வாழைக்கனி, பலவின்கனி மாங்கனி, அப்பம், மோதகம், எள்ளுருண்டை" என்றவாறு பாடல்களில் இடம் பெறுகின்றன.

பதினோராம் திருமுறைதவிர்ந்த ஏனைய திருமுறைகளில் சிவனோடு தொடர்பு படுத்திய வாறே பாடப்பட்டிருப்பதனைக் காணமுடியும். தேவாரங்களில் சம்பந்தரும் அப்பரும் விநாயகரை அடிக்கடி நினைவிற் கொள்கின்றனர். விநாயகரின் அவதார மகிமைவரலாற்றை முதன்முதலிற் தமிழிற் பாடியவர் சம்பந்தப் பிள்ளையாரேயாவார். சம்பந்தர் பாடியருளிய "பிடியதனுருவுமை கொள" எனத் தொடங்கும் தேவாரப்பாடலே அதுவாகும். திருநாவுக்கரசுசுவாமிகள் கஜமுகாசுரனைச் சங்கரிப்பதற்காகவே சிவன் விநாயகரைப் படைத்தருளினார் என்று போற்றுகின்றார்.

"கைவேழ முகத்தவனைப் படைத்தாற் போலும் காய சுரனை அவனாற் கொல்வித்தார் போலும்.." என்ற திருத்தாண்டகப் பாடலடிகளில் இச் செய்தி இடம்பெற்றுள்ளது. திருவிசைப்பாவில் "குமார விநாயக சனக" என்றொரு தொடர் இடம் பெற்றுள்ளது. இதன் பொருள் குமரனுக்கும் விநாயகருக்கும் தந்தை எனப் பொருள் தருகின்றது. திருமந்திரக்காப்புச் செய்யுளில் "நந்திமகன்" என்றும் "ஐந்துகரத்தன்" என்றும் "இளம்பிறைபோலும் எயிற்றன்" என்றும் விநாயகர் போற்றப்படுகின்றார்.

பெரியபுராணத்தில் மற்றைத்தமிழ்க் காப்பியங்கள் நூல்களிற் போலன்றி இரு நடராஜர் வணக்கப் பாடலுக்கடுத்ததாகவே ஒரு காப்புப் பாடல் இடம் பெறுகின்றது. பெரியபுராணம் பாடுவதற்குத் தில்லைத் திருக்கூத்தனே "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்ததாலேயே இவ்வாறு சேக்கிழார் இயற்றியுள்ளாரெனலாம்.

திருப்புகழில் விநாயகர்

பதினாயிரம் சந்தத் தமிழ்த்திருப்புகழ் பாடல்களால் முருகனைத் தோத்தரித்த அருணகிரிநாதர் விநாயகரின் அருள் மாட்சியை ஐந்து பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவற்றுள்ளும் "உம்பர்தரு" "கைத்தலம் நிறைகனி" எனும் இருபாடல்களிலும் முழுமையாகவும் "பக்கரை விசித்திரமணி" "விடைமடைசுவேலை" "நினது திருவடி" எனும் மூன்று பாக்களிலும் முருகனருளுடன் சரிபாதியாக இணைத்தும் பாடியுள்ளார். இவ்வைந்து பாடல்களிலும் தனித்தனியான சிறப்புக்களைக் காணமுடியும்.

"உம்பர்தரு" எனும் பாடலில் விநாயகப் பெருமானை யாகி வந்து வள்ளிப்பிராட்டியை முருகப்பெருமானொடு கூட்டி வைத்த புராணவரலாறு சிறப்பாக இடம்பெறுகிறது. "கைத்தல நிறைகனி" எனும்



பாடலில் திரிபுரதகனத்திற்காக சிவபிரான் தேரேறிப் புறப்படுகையில் தன்னை நினையாதபடியினால்விநாயகர்தேரின்அச்சினை ஒடியுமாறு செய்தருளிய திருவிளையாடல் நினைந்துருகிப் பாடப்பட்டுள்ளது. "பக்கரைவிசித்திரமணி" எனும் பாடலிலும் விநாயகருக்கு விஷேட காலங்களில் நிவேதிக்க வேண்டிய 21 நிவேதனப்பொருள்கள் பட்டியலிட்டுக் காட்டப்படுதல் சிறப்பாகும். "நினது திருவடி" எனும் பாடலிலும் விநாயகருக்குரிய படையல்கள் நினைந்து போற்றப்படுகிறது. "விடை மடைசு வேலை" எனும் பாடலில் கஜமுகாசுர சங்கார மகிமை சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளது.

தமிழகத்தில் விநாயகர் வழிபாடு

பிள்ளையார்வழிபாடுகி.பி7ஆம்நூற்றாண்டில் (பல்லவர்காலத்தில்) சிறுத்தொண்டர் தலைமைதாங்கிச் சென்று புலிகேசியுடன் நிகழ்த்திய வாதாபிப் பெரும்போரின் பின்புதான் தமிழகத்திற்கு அறிமுகமாகியது என்று சிலர் கூறுவர். ஆயினும் அகத்தியரால் வாதாபிக்கும் கொண்டு வரப் பெற்ற விநாயகரை சிறுத்தொண்டர் கணபதீச்சரத்தலத்திற்குக் கொண்டு வந்தார் என்று சாதாரணமாகப் பேசப்படும் செய்தி பெரியபுராணத்துச் சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் இடம் பெறாமை கவனிக்கவேண்டிய விடயமாகும்.

அப்படி சிறுத்தொண்டர் வாதாபி கணபதியைக் கொண்டுவந்த செய்தி உண்மையாக இருந்தாலுங்கூட விநாயகவழிபாடு அதற்குமுன் தமிழகத்தில் இல்லையென அறுதியிட்டுக் கூற முடியாது. சங்கமருவியகால நூலாகிய மணிமேகலையில் அகத்தியரின் கமண்டலத்துள் அடங்கியிருந்த காவேரியை விநாயப் பெருமான் காகமாகி வந்து கவிழ்த்த வரலாறு பேசப்படுகிறது. "கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை" என்ற தொடர் மணிமேகையில் வருதல் காணலாம்.



சோழர்காலத்தில் நம்பியாண்டார் நம்பி வழிபட்ட திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார் கோவிலின் மகத்துவம் விகாசமடைவதைக் காணமுடியும். திருமுறைகளைக் காட்டியருளிய பெருமை நாரையூர்ப் பெருமானுக்கேயுண்டு. கந்தபுராணத்தில் காஞ்சியிற் கோயில் கொண்டெழுந்தருளும் "விகடசக்கரவிநாயகர்" சிறப்பான இரு தோத்திரங்களாலே துதிக்கப்பட்டிருக்கிறார். காவிரிநீங்குபடலம், கஜமுகன் உற்பத்திப்படலம் என இருபடலங்களில்விநாயகர்அவதாரமகிமை விரிக்கப்பட்டிருக்கிறது.

இன்று, பாடல்பெற்றதலங்கள் தோறும் சிறப்புடைய தனிப்பெயர்களோடு விநாயகப் பெருமான் இடம்கொண்டு அருளிவருகின்றார். சிதம்பரத்துக் கற்பகவிநாயகரும், மதுரை முக்குறுணிவிநாயகரும் விருத்தாசலத்து ஆழத்துப்பிள்ளையாரும், திருச்சியில் உச்சிப்பிள்ளையாரும், வேதாரணியத்து வீரகத்திவிநாயகரும் திருவலஞ்சுழி வெள்ளைப் பிள்ளையாரும் எல்லோரையும் தம்பாலீர்ந்து அருள்பாலித்து வருகின்றனர். பிள்ளையார் பட்டி கற்பகவிநாயகர் தலத்தை அறியாத சைவசமயிகளே இருக்கமுடியாது. தேவகோட்டை நகரத்தார்களின் பராமரிப்பிலுள்ள இத்தலம் பாடல் பெற்றதொரு சிவத்தலமாகவுள்ள போதிலும் இன்று கற்பக விநாயகரே ஆட்சியிலுள்ளார். தமிழகத்திலே விநாயகருக்கு கொடியேறி விழாநடைபெறும் ஒரேயொருதிருக்கோயில் இதுவேயாகும். இங்கு ஆவணிச்சதுத்தியில் நிகழும் தேரோட்ட விழா மிகச் சிறப்பானதாயுள்ளது.

இவ்வாறே பாரதிவழிபட்ட மணக்குள விநாயகர் கோயிலும் இன்று மிகவும் சிறந்ததலமாக விநாயகபக்தர்களைக் கவரும் அருட்சிறப்பு மிக்கதாக இலங்கிப் பொலிகிறது. திருச்சிநகரை ஆட்சிசெய்பவர் உச்சிப்பிள்ளையார் ஆவார். தூரநின்று

பார்ப்பவர்களுக்கு யானை படுத்திருப்பது போன்று காட்சிகொடுக்கும் மலையாகிய திருச்சிராப்பள்ளியிலே தாயுமானசுவாமிகோயிலுக்கும் மேலே உச்சிமலையில் இருந்தபடி இருந்ததனை அறிந்து அருளுகின்றார் ஆனைமுகப்பிள்ளையார்.

தமிழகத்துத் தலங்களில் திருச்செங்காட்டங்குடிப் பிள்ளையார் பட்டி, திருவிடைமருதூர் ஆகிய தலங்களில் விநாயகர் தம்தந்தையாகிய சிவபிரானைப் பூசைசெய்ததாக ஐதிகமுண்டு. கஜமுகாசுரனைக் கொன்ற தோஷநிவர்த்திக்காக விநாயகர் ஈஸ்வரனைப் பூசித்த தலம் கணபதீச்சரம் என்று கூறப்படுகிறது. இதனை விநாயகபுராணம், வரதபண்டிதரின் பெருங்கதை என்பன எடுத்துப்பேசும். பிள்ளையார் பட்டிக் கற்பகவிநாயகமூர்த்தி இருகரங்களையுடையவராகக் காணப்படுகிறார். வலதுகரத்தில் சிறியசிவலிங்கமும் இடதுகரத்தில் தீர்த்தச் செம்பும் காணப்படுகின்றன. இது சிவபூசையின் வடிவம் என்பது கூறாமேயமையும். திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமிகோயிலின் அர்த்தமண்டபத்திலுள்ள விநாயகரே மகாலிங்கசுவாமியைப் பூசிக்கிறார் என்ற பாவனையிலேயே கிரியைகள் நிகழ்வதாக அவ்வாலயதல புராணம் கூறுகின்றது.

ஈழத்தில் கணபதி வழிபாடு

தமிழகத்திற் போலவே கபதிவழிபாடு ஈழத்தில் எப்போது ஒன்பதாம் நூற்றாண்டில் மாருதப் புரவீகவல்லி யாழ்மாவட்டத்தில் ஏழுவிநாயகர் ஆலயங்களைக் கட்வித்தாள் என்ற செவிவழிச் செய்தி யுண்டு. சோழராட்சியுடன் காஞ்சிப்பிராமணர் வருகையும் பணிகளும் வலுவடைய விநாயகர் வழிபாடும் முருக வழிபாடும் முதன்மைபெறத் தொடங்கின.

கந்தபுராண அரங்கேற்றத்திற்கு இங்கிருந்து காஞ்சிக்குப் போனோரில் அரியாலை நீர் நொச்சித்தாழ்வு விநாயகராலய அருச்சகராகிய கச்சிக்கணேசையரும் இடம்பெற்றிருந்தார் என்பர். இதன் மூலம் அக்காலத்தில் அரியாலையில் விநாயகர் ஆலயம் சிறப்புற்றிருந்ததை அறியமுடிகிறது. அத்துடன் அவர்பெயர் "கச்சிக்கணேசையர்" எனப்படுதலால் அவர் காஞ்சியுடன் தொடர்புடையவர் காஞ்சிப் பிராமண மரபினர் என்பதை ஊகிக்கின்றது. (கச்சி என்பது காஞ்சிபுரத்தின் மரூஉப்பெயர்) ஆரியச்சக்கரவர்த்திகள் கால வரலாற்று நூலாகிய கைலாயமாலையில் நல்லூரில் கைலாயபிள்ளையார், கைலாசநாதர், கைலாயநாயகி கோயில்கள் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் நிகழ்ந்த வரலாறு சிறப்பித்துப் பேசப்படுகிறது.

யாழ்ப்பாண அரசர்களாகிய பரராஜசேகரன், செகராசசேகரன், அரசகேசரி ஆகியோர்முறையே இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில், செகராஜசேகரப்பிள்ளையார்கோயில், நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார்கோயில் என்பவற்றை முறையாக எடுப்பித்தனர் என்று செவிவழிச் செய்தியுண்டு. கருணாகரத்தொண்டமான் என்ற அமைச்சன் உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலைக் கட்டினார் என்று அத்தலவளாகத்துள்ள கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் சைவசமயக் கிரியை மரபும் திருமுறைப்பண்ணிசையும் பேணிக்காத்த வேதாரணியச் சைவக் குருமார் மடங்களமைத்துத் தங்கிவாழ்ந்த ஊர்கள்தோறும் "வீரகத்திவிநாயகர்" என்ற தம்வேதாரணியவிநாயகரைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்துள்ளனர். அந்த மடங்களே இன்று வீரகத்திவிநாயகர் கோயில்களாக மிளிர்கின்றன.

இணுவில் ஊரெழு போன்ற ஊர்களில் "மடத்துவாசல் பிள்ளையார்" என்ற பெயர்கள் பயில்வது இதற்கத்தாட்சியாகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்கள் எல்லாவற்றுக்கும்



பொதுவான பண்பு எது என்று ஆராய்ந்து பார்த்தால் கொடியேறித் தேரோட்டவிழா நிகழும் ஒரு விநாயகர் கோயிலாவது இருக்கும் என்பதைக் குறிப்பிடமுடியும்.

இது யாழ்மண்ணின் தனிப்பெருஞ்சிறப்பு. சில ஊர்களில் மூன்று நான்கு பெரிய விநாயகர் கோயில்கள் கூட உள்ளன. கற்பகப் பிள்ளையார், சிந்தி விநாயகர், வீரகத்தி விநாயகர், அரசடிப்பிள்ளையார், ஆலடி விநாயகர், இத்தியடிப் பிள்ளையார், அத்தியடிப் பிள்ளையார், இலுப்பையடிப்பிள்ளையார், மாணிக்கப்பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார், முறிகண்டிப்பிள்ளையார், அமிர்த கழிப்பிள்ளார் என்றவாறு இலங்கையெங்கும் பிள்ளையார் மயந்தான்!

வடமராட்சி கரவெட்டி தச்சன்தோப்பில் கருவறைமுதல் கோபுரவரை கற்றளியாகவே கட்டப்பட்ட சிறப்பைக் காணமுடிகின்றது. மானிப்பாய் மருதடி சிறப்புமிகு சிற்பக்கற்றளியாகி வருகிறது; இங்கு நான்கு வாயில்களிலும் போபுரங்களும் எழுகின்றன. காரைநகர் வாரி வளவிலும் இணுவில் பரராஜசேகரத்திலும் நான்குவாயில்களிலும் கோபுரப்பொலிவு வந்துவிட்டது. இவ்வாறாக விநாயகர் ஆலயங்களின் பொலிவழகையும் புதுமை மகிமைகளையும் ஈழத்திலேயே காணமுடிகிறது.

விநாயகராலய மஹோற்சவ விழாக்கள்

ஸ்வாயம்பு ஆகமம், விஜயாகமம் என்ப வற்றிலுள்ள ஒவ்வொர் படலங்கள் விநாயக மகோற்ஸவ விதியுரைப்பன. இவைகளின் உதவியுடன் குருபாரம்பரியப்படி எழுதப்பட்டுள்ள பத்ததிக்கிரமம் பேணி மகோற்ஸவங்கள் நிகழ்ந்துவருகின்றன. பிரம்மஸ்ரீ ஆத்மநாதஸர் மாவின் விநாயகராலயமஹோற்சவ விளக்கநூலும் ஊரெழுக்குருபரம்பரை வழக்கிலுள்ள பத்ததிப்பதிப்பும் குறிப்பிடத்தக்கவை. விநாயகர் ஆலய மஹோற்சவத்தின்போது உலாவிற்கான வாகனங்களை ஸ்வாயம்பு ஆகமம் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளது.

"பிரதமம் சிவிகாம் சைவ த்விதீயே பிருஷிவாஹனம் பூதம்து திருதீயே புரோக்தம் சதுர்த்தேவிருஷவாஹனம்பஞ்சமேமூஷிகாரூடம் கஜாரூடந்து ஷஷ்டகே ஸப்தமே கேசரீ ப்ரோத அஸ்வவாஹனமஸ்டகே ரவமே ரதமாரோப்ய தஸமேதீர்த்தமாஸரேத்" இவ்வாகமவாக்கின்படி முறையே (1) சிவிகை (2) யாளி, (3) பூதம், (4) கற்பகதரு, (5) மூஷிகம், (6) யானை, (7) சிங்கம், (8) குதிரை, (9) தேர் ஆகியவற்றில்திருவிழாச் செய்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. இவ்வொழுங்குமுறையில் சிறிது மாற்றங்கள் காணப்படினும் இவ்வூர்திகளிற் பல நம்நாட்டு விநாயகராலயங்களில் வழக்கிலிருக்கக் காண்கிறோம்.

விநாயகர் விரதப் பழக்கம்

விநாயகர்க்குரிய விரதங்களாக ஆவணிச்சதுர்த்தி, சங்கடஹரசதுர்த்தி, பெருங்கதைவிரதம் ஆகியனவும் வைகாசிவளர்பிறை வெள்ளிக்கிழமைகளும் விதிக்கப்பட்டுள்ளன. பெருவழக்காக ஆவணிச் சதுர்த்தியாதியானசதுர்த்திவிரதமும்பிள்ளையார் பெருங்கதைவிரதமுமே பின்பற்றப்படுகின்றன. சங்கடஹரசதுர்த்தி தமிழகத்திற் போலல்லாது சிற்சில தலங்களிலேயே அநுஷ்டிக்கப் படுகின்றது. எனினும் வறுமை, நோய் பிணி, கடன் தொல்லைகளிலிருந்து மீள இவ்விரதம் அதிகமுதவும். விநாயகஷஷ்டி எனப் பெரிய பிள்ளையார்கதை விரதம் பலநூற்றாண்டுகளாக நம்மீழவர் வழக்கிலுள்ளதென்பதற்கு ஒல்லாந்தர் காலஇலக்கியமாகியவரதபண்டிதரின் "பிள்ளை யார் கதை" தக்கசான்றாகிறது.

சுன்னாகத்தில் விநாயகர் வணக்கம்

மேற்குறித்த விரதபண்டிதரின் வாழ்பதி சுன்னாகமே! அவர் செய்த பிள்ளையார் கதையிற் காட்டப்படும் பூசை, படையல், வழிபாடுகள் சுன்னாகம் சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் நிகழ்ந்தவற்றின் பிரதிபலிப்பே என்றால் யாருமே மறுக்க மாட்டார்கள். அவ்வளவிற்கு ஐயரவர்கள் உணர்வொன்றில் பாடுகின்ற தன்மையை அந்நூலிற் காணமுடிகிறது. இன்று தமிழ்கூறும் நல்லுலகெங்கிலும் சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலின் பூசகராயிருந்த வரதபண்டிதரின் "பிள்ளையார்கதை" பக்தி மணவிக சிதமாகப் பயிலப்படுகின்றது என்றால் சந்திரசேகர விநாயகரின் வரப்பிரசாத மஹிமையே மகாமஹிமையென உளம் உவப்புறுகிறது.

ஓம் கணேசாய நமஹ.

சைவப்புலவர் ஏ. அநுசாந்தன் M.A.
ஆதீனப்புலவர்,
திருவாவடுறை ஆதீனம், தமிழ்நாடு.

சங்கற்பம்

"இன்னின்ன வருட, மாச, பக்ஷ, திதி, நக்ஷத்திர, யோக, கரணங்களோடு கூடிய இன்னநாளில் என் குடும்ப நன்மைக்காக - அறம் பொருள், இன்பம், வீடு இவைகளைப் பெறுதற்காக - வெற்றி, நலம், ஆயுள், வீரம் இவை வளர்தற்காக விநாயகரை விதிப்படி பூசிக்கின்றேன்"



பதினொராந் திருமுறையும் விநாயகப் பெருமான் தோத்திரங்களும்

பன்னிரு புலவர்கள் பாடிய நாற்பது நூல்களின் தொகுப்பே பதினொராந் திருமுறை. கி.பி 10ஆம் நூற்றாண்டில் சோழ அரசன் வேண்டு கோளுக்கமைய நம்பியாண்டார் நம்பி அவர்களால் இத்திருமுறை தொகுக்கப்பெற்றது. திருநாரையூரில் ஆசிசைவ மரபில் தோன்றியவர் நம்பியாண்டார் நம்பி. இவர் திருநாரையூர் பொல்லாப்பிள்ளையாருடைய திருவருளை மிக இளவயதிலேயே பெற்ற பெருமைக்குரியவர். திருத்தில்லையிலிருந்து தேவாரத்திருவேடுகளை, அப்பிள்ளையார் திருவருள் கண்டு பிடித்தவர். திருமுறை கண்ட சோழ அரசன் வேண்டுகோளுக்கமைய, திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்ளை முதன் மூன்று பதிகங்களாகவும், திருநாவுக்கரசர் அருளிய பதிகங்களை நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திகள் அருளிய தேவாரம் ஏழாந்திருமுறையாகவும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்திநம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலிய முதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பது மெய்யடியார்கள் அருளிச் செய்த விருவிசைப்பா முதலியவை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் பத்தாம்திருமுறையாகவும், திருவாலவாவுடையார் 1, காரைக்கால் அம்மையார், 3, ஐயடிகள் காடலர் கோன் நாயநார் 1, சேரமான் பெருமான் நாயநார் 3, நக்கீர தேவ நாயினார் 10, கல்லாட தேவ நாயனார் 1, இளம் பெருமானடிகள்1, அதிசாலடிகள்1, பட்டினத்துப் பிள்ளையார்5, நம்பியாண்டார் நம்பி 10, ஆகிய பன்னிருவர் பாடியருளிய நாற்பது நூல்கள் பதினொராம் திருமுறையாகவும் வகுத்துத் தொகுத்தவர். நம்பியவர்களால் வகுத்துத் தொகுக்கப்பெற்ற நாற்பது நூல்களிலும் சிதைவுற்றன போக இப்பொழுது கிடைக்கப் பெற்றவை ஆயிரத்துநானூற்று முப்பது பாடல்களாகும்.



பதினொராம் திருமுறையிலமைந்த நாற்பது நூல்களில் சிவபெருமானைப் போற்றும் நூல்கள் இருபத்தைந்தாகும். முருகக் கடவுளைப் போற்றுவது திருமுருகாற்றுப் படை, விநாயகர் பெருமானை போற்றுவன மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை, விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்ற மூன்று நூல்களாகும். மற்றைய பதினொரு நூல்களும் இறைவனுடையதிருவருளைப் பெற்ற திருத் தொண்டர்களாகிய சிவனடியார்களின் சிறப்பைக் கூறுவனவாகும். இவ்வாறு முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானையும், அவருடைய திருக்குமாரர்களாகிய மூத்த பிள்ளையார், முருகப் பெருமானையும், சிவனடியார்களையும் போற்றும்திருமுறைகளைக் கொண்டமைந்தமை பதினொராம் திருமுறைக்கு ஒரு தனிச் சிறப்பாகும்.

இப்பதினொராம் திருமுறையில் இறைவனுடைய திருவருள் மொழியாகிய 'திருமுருகப் பாசுரம்' முதற் கண் அமைந்துள்ளமை மேலும் ஒரு ஒப்பற்ற சிறப்பாகும். இத் திருமுருகப் பாசுரம் பன்னிரண்டடிகளாலாகிய ஒரு சிறு நேரிசை யாசியப்பா -

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு

அன்னம் பயில் பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவகப் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி யொழிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக் கீழ்க்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனை
மாண் பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

இப்பாடலின் முதன் நான்கடிகளில் இதனைப் பாடிய சிவபெருமான் சிறப்பும், அடுத்துள்ள நான்கடிகளில் அவ்விறைவனால் பாடப்பெறும் புகழமைந்த பாட்டுடைத் தலைவராகிய சேரமான் பெருமானுடைய சிறப்பும், இறுதியில் உள்ள நான்கடிகளில் இதனைப் பாடுவதற்கு காரணமாகிய பாணபத்திரன் என்னும் அடியவருடைய அன்புரிமைச் சிறப்பும், அவருக்கு பொருள் அளித்த அனுப்புக என்னும் செய்தியும் குறிக்கப் பெற்றுள்ளன.

இனி இத் திருமுறையில் தொகுத்துள்ள விநாயகர் தோத்திரங்களைப் பார்க்கலாம். இத் தொகுப்பில் இருபதாவது நூலாகத் தொகுக்கப்பெற்றது. கபிலதேவ நாயனார் பாடியருளிய "மூத்தநயினார் இரு இரட்டை மணிமாலை" இந் நூல் இரு வேறு மணிகளால் கோர்க்கப்பட்ட மாலை போல, வெண்பா, கட்டளைக்கலித்துறையும் அடுத்துவர அந்தாதித் தொடரால் அமைந்த இருபது செய்யுள்களால் விநாயகரைப் போற்றுகின்றது. விநாயகரை வழிபட்டு வந்தால் அவன் மெய்யடியார்களுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்வார் என்பதை விளக்கக் கூறுகின்றன. 'திருவாக்கும்' எனத் தொடங்கி 'மலர்த்திருவே' என முடிகின்ற அழகு ஆனந்தத்தை தருகின்றது. இந்நூலின் முதற் கண் அமைந்துள்ள பாடலாகும்.

திருவாக்கும் செய் கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

யானை முகத்தானை அன்போடு கைகுவித்து வணங்கினால் செல்வம் பெருகும், செய்யும் தொழிலில் வெற்றி கிட்டும், செம்மையான சொல் பெருகும், பெருமை சேரும், அத்துடன் சாரூப பதவியும் கொடுக்கும். ஆதலால் வானோரும் வணங்குவர் என்பார்.

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் அறியானைக்
கண்ணுவதும் கைந்தலங்கள் கூப்புவதும்
மற்றவன் தாள்
நண்ணுலலும் நல்லார் கடன்.

உலகோர்க்கு அருளும் அருளாளனாக உள்ள களிப்பு மிக்க யானைக் கன்றைக் கணபதியை செம்பொன் ஒளிவடிவினனை எண்ணுலதும் கைகூப்புவதும் அவன்திருவடிகளை அடைதலும் நல்லால் கடன் எனக் கூறுகின்றார்.

நல்லார் பழிப்பில் எழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதகமேபுரம் மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயகனே யென்ற மெய்ம் மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாய் இருக்க மலர்ந்திருவே
(20)

ஆனைமுகக் கடவுளைப் போற்று வோரிடத்தன்றி பிறரிடத்தில் திருமகள் தங்கமாட்டாள் எனவும் விநாயகப் பெருமானை வணங்குவாரிடத்துத்தகுவாள் எனவும் கூறுகிறார்.

அதிராரடிகள் அருளிச் செய்த "மூத்த பிள்ளையார் திரு மும்மணிக் கோவை" இருபத்தைந்ததாவது நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூவகைப் பாடல்களால் அமையப் பெற்றது மும்மணிக்கோவை



என அழைக்கப்படுகிறது. முப்பது பாடல்களே இன்று கிடைத்துள்ளன. தம்மை அன்பினால் வழிபடும் மெய்யடியார்களது பிறவிப்பிணியைப் போக்கவல்லவர். அவருடைய திருவடிகளை எண்ணி வாழ்வார்க்கு மனக்கவலையில்லை. யாம் மூத்த பிள்ளையாருடைய திருவடிகளை இறுகப் பற்றினால் மனக்கவலையால் மதிமயங்கும் இயல்பு இல்லாமற்போகும் போன்ற செய்திகள் இக் கோவையில் காணப்படுகின்றன.

மின்னெடுங் கொண்டல் அற்றிறு முழக்கத்து
ஓவற விளங்கிய துளைக்கைக் கடவுளை
யாம்மிக வழுத்துவ தென்னோ அவனேல்
பிறந்ததிவ் வுலகின் பெருமூ தாதை
உரந்தரு சீரமர்த் தவற்கே வரைந்தது
மேருச் சிமயந்து மீமிசை
வாரிச் செல்வன் மகள் மகன் மொழியே.

யானை முகக் கடவுளை யாம் வணங்க காரணம் என்னவென்றால் அவர் இல்லையேல் பாரதக் கதை தோன்றியிராது. மேருமலை மீது பரதவன் மகளாகிய பரிமளகத்தியன் மகனான வியாசர் கூறிவர விநாயகப் பெருமான் எழுதினார் என்க. இவ்வாறு விநாயகப் பெருமானின் அருட்டிறன்கள் பலமும் மணிக் கோவையில் காணப்படுகின்றன.

இத் திருமுறையில் முப்பத்தொராவது நூலாகத் தொகுக்கப்பட்டதே திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை. ஆனால் இம் மணிமாலை கூறும் செய்தி அற்புதமானது. இன்று தமிழ் வழங்கும் நல் உலகில் மிக அரிய, உயர்ந்த அருட் செல்வமாகப் போற்றப்படும் பன்னிரு திருமுறைகளும் வெளிவரக் காரணமாயிருந்தவர் இப் பொல்லாப்பிள்ளையார். அவரால் ஆட்கொள்ளப்பட்ட நம்பியாண்டார் நம்பி அவர்கள் முதலில் பாடிய தோத்திரமாக இதனைக் கூறுவர். நம்பியாண்டார் நம்பி அவர்கள் பாடிய பத்து நூல்கள் இத் திருமுறையில் காணப்படுகின்றன. சுந்தர மூர்த்தி நாயனார் "திருத்தொண்டர் தொகை" யின் வழி நூலாக அவர் பாடிய "திருத் தொண்டர் திருவந்தாதி" பிற் காலத்தில் திருத் தொண்டர் மாக்கதை" எனும் பெரிய புராணம் தோன்ற வழி கோலியது. அது மட்டுமல்லாது பதினொராம் திருமுறையில் சிவனடியார்களைப் போற்றிய நூல்களும், பிற்காலத்தில் 'பெரிய புராணம்' பாடுவதற்கு செய்திகளை வளங்கியுள்ளன.

திருநாரையூரில் எழுந்தருளியுள்ள பொல்லாப்பிள்ளையார் மீது வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் இருவகைப் பாக்களால் அந்தாதித் தொகையில் பாடப் பெற்றதாகவின் திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலையெனப் பெயர் பெற்றது. இதன் கண் அமைந்துள்ள இருபது பாடல்களையும் அன்போடு ஓதுவர். விநாயகப் பெருமான் திருவருளை இலகுவில் பெறுவர் என்பது திண்ணம். இவ்வாறாக பதினொராம் திருமுறையில் விநாயகரைப் போற்றும் அறுபத்து மூன்று பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றை ஓதிப் பயன் பெறுவார் நீடு வாழ்க.

என்னை நினைத் தடிமை கொண்டென் இடர் கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - வன்னை
விரசு மகிழ் சோலை வியன் நாரை யூர் முக்கண்
அரசு மகிழ் அத்தி முகத் தான். (1)

மலஞ் செய்த வல்வினை நோக்கி உலகை வலம் வரும்
புலஞ் செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேற்
கலஞ் செய்த நாரைப் பதியான் தன்னைக் கனிதரவே
வலஞ் செய்து கொண்ட மனங்களிலே யுன்னை
வாழ்த்துவனே (8)

திருமதி கலாதேவி பொன்னம்பலம்
தெல்லிப்பழை

பிறவிப் பிணி நீக்கும் நெறிகள்

நாம் இந்தப் பிறவி எடுத்ததன் நோக்கம் இறைவனை அடைந்து முத்தி இன்பம் பெறும் பொருட்டு என்கிறார் ஆறுமுக நாவலர். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி பல் மிருகமாகி பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்கிறார் மணிவாசகப் பெருமான். இத்தகைய பிறவித் துன்பம் நீங்கி, பிறவாத பேரின்ப நிலையை அடைய நாம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிபாட்டு முறைகளுள் ஒன்றைப் பின்பற்ற வேண்டும். சைவசமயிகள் மேற் கூறிய சைவ நாற்பாதங்களுள் ஒன்றைப் பின்பற்றி சிவனின் திருவடி நீழலில் இருக்கும் பேரின்பப் பெரு வாழ்வு பெறலாம். யார் சைவ சமயிகள்? மது, மாமிசம் புசியாதவராய், சிவதீட்சை பெற்று முறைப்படி சந்தியாவந்தனம் செய்து சிவனை முழுமுதற் கடவுளாக வழி படுபவரே சைவர் எனப்படுவர்.

இவர்கள் ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத் தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத் துறவு, அடக்கம், அறிவோடு அர்ச்சித்தல் என்ற பதினாறு அறங்களையும் பின்பற்றுவர் என சிவஞான சித்தியார் 113வது பாடலில்குறிப்பிடப்பட்டுள்ளது. மனம், வாக்கு, காயம் அதாவது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றினாலும் இறைவனை வழிபட வேண்டும். இதனை, "மானுடப் பிறவி தானும் வகுத்தது மனம், வாக்கு, காயம்

ஆன இடத்து ஐந்து ஆகும் அரன் பணிக்காக அன்றோ" என அருணந்தி சிவாச்சாரியார் தெளிவுபடுத்தி உள்ளார்.

சரியை

மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் சிவனை நினைந்து உடம்பினால் செய்யப்படும் வழிபாடு சரியை எனப்படுகிறது. திருக்கோவிலைக் கூட்டிச் சுத்தம் செய்தல் (திருவல கிடுதல்), சுத்தமான பசுவின் சாணம் கொண்டு மெழுகுதல் (திருமெழுக்கிடல்), அதிகாலை வண்டுகள் மொய்பதற்கு முன்கைநகம்படாமல்மலர்களைக் கொய்தல், இண்டை, தொடை, கண்ணி, பந்து, முதலிய பூமாலைகளைத் தொடுத்தல் பன்னிரு திருமுறைகளை பக்தியுடனும், பண்ணுடனும் பாடுதல், பசுவின் நெய், எள் எண்ணெய் முதலியவற்றால் தீபம் ஏற்றல், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ ஆகிய நால்வகை மலர்களையும் கொண்ட நந்தவனம் அமைத்தல், சிவவேடப் பொலிவு உடைய சிவனடியாரைச் சிவனாகவே நினைத்து வழிபடுதல் என்பன சரியைத் தொண்டுகள் என சிவஞான சித்தியார் 271வது பாடல் கூறுகிறது.

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

என அப்பர் சுவாமிகள் சரியைத் தொண்டு பற்றிப் பாடியுள்ளார்.



சரியை நெறியில் இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவுமுறைஆண்டானுக்கும் அடிமைக்கும் உள்ள உறவு

முறை போன்றது. இதனை தாச மார்க்கம் எனக் குறிப்பிடுவர். தாச மார்க்கம் பற்றி திருமந்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"எளியனற் றீபம் இடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே"

திருக்கோயில் மணி, சேமக்கலம் அடித்தல், தீவர்த்தி, குடை, கொடி, ஆலவட்டம் பிடித்தல், சாமரை வீசுதல், சங்கு ஊதுதல், வாகனம் காவுதல், பூசைத் திரவியங்கள் கொடுத்தல் முதலியனவும் சரியைத் தொண்டுகள் ஆகும். இறைவன் கருணையை நினைந்து இறையன்புடன் சரியை நெறியில் வழிபாடு செய்தவர்கள் சிவலோகத்திற்குச் சென்று அவ்வுலகத்தில் உள்ள போகங்களை அனுபவிக்கும் சாலோக பதவியைப் பெறுவர்.

சைவ சமய குரவர்களுள் திருநாவுக்கரசு நாயனார் சரியை நெறி நின்று சாலோக முத்தி பெற்றார். ஆலயங்கள் எங்கும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என உழவாரத் திருத் தொண்டு புரிந்தவர். அப்பர் உழவாரத் திருப்பணி செய்யும் போது செங்கற்களுடன் பொன்கற்களும் இருந்தன. அவர் செங்கற்களை அப்புறப்படுத்தியமாதிரியேபொன்கற்களையும் அப்புறப்படுத்தினார். இதனை சேக்கிழார் பெருமான்

" கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஒடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்"

என பெரிய புராணத்தில் பாடியுள்ளார். அப்பூதியடிகள், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், அதிபத்த நாயநார், கண்ணப்ப நாயனார், மூர்த்தி நாயனார், திருநாளைப் போவார் நாயனார், முருக நாயனார், தண்டியடிகள் போன்றோரும் சரியை நெறி நின்று சாலோக பதவி பெற்றவர்கள்.

இந்நாளில் பலர் சரியைத் தொண்டு செய்கிறோம் என்கிறார்கள். எவ்வாறு செய்கிறார்கள்? சிவதீட்சை பெறாமல், சந்தியாவந்தனம் செய்யாமல், தொண்டு செய்யும் போது வீண் வார்த்தை பேசி, விளையாடி சிவ சிந்தனையின்றி செய்கிறார்கள். இதனைத்தான் "குளிக்கப் போய் சேறு பூசுவது" எனக் குறிப்பிடுவர். "அரசன் தன் பாதம் மறந்து செய் அறங்கள் எல்லாம் வீண் செயல்" என அருணந்தி சிவாச்சாரியார் கூறியுள்ளார்.

கிரியை

மந்திர தந்திரங்களைக் குரு மூலமாக அறிந்து விசேட தீட்சை பெற்றோர் செய்யும் வழிபாட்டு நெறி கிரியை எனப்படும். சரியை நெறியில் நின்று தனது உடம்பை சிவனுக்கு உரிய சாதகன் கிரியை நெறியில் ஐம்பொறிகளையும் சிவார்ப்பிதஞ்ச் செய்கி றான் வாசனையுள்ள புதிய மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனத்திற்குத் தேவையான பால், தயிர், நெய், அபிஷேகத் திரவியங்கள் முதலிலே தேடிக் கொள்ளல் பூத சுத்தி முதலிய பஞ்ச சுத்தி பண்ணுதல், ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்தல் பரஞ்சோதியைப் பாவனை பண்ணி ஆவாகனஞ் செய்தல் தூயபக்தியோடு அர்ச்சனை செய்தல், அஞ்செழுத்து மந்திரங்களை துதித்து வழிபடல், விருப்பத்தோடு அக்னி வளர்த்து ஓமம் செய்தல் என்பன கிரியை வழிபாடு என சிவஞான சித்தியார் 271வது பாடல் கூறுகின்றது.

கிரியை நெறியில் இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவுமுறை தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவுமுறை போன்றது. இதனை சற்புத்திர மார்க்கம் எனக் குறிப்படுவர். சற்புத்திரமார்க்கம் பற்றி திருமந்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

" பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்தல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை

நேசித்திட்டன்னமும் நீர்சுத்தி செய்தல் மற்
றாசற்ற சற்புத்திரமார்க்கமாகுமே"

சிவலிங்க பூசை செய்தல், திருமுறைகளை ஓதுதல், இறைவனைப் போற்றித் துதித்தல், திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல் குற்றமற்ற விரதங்களை அனுஷ்டித்தல், உண்மை பேசுதல், மனம், வாக்கு , காயம், ஆகிய முக் கரணங்களையும் எந்நேரமும் தூய்மையாக வைத்திருத்தல், பிற உயிர்களிடத்து அன்பும் பரிவும் காட்டுதல், அன்னதானம் செய்தல், ஆன்ம சுத்தி செய்தல் என்பன சற்புத்திர மார்க்கத்திற்குரிய ஒழுக்கங்கள் ஆகும். கிரியை நெறியில் நிற்பவர்கள் இறைவனுக்கு அட்ட புஷ்பம் சாத்தி வழிபடுவர். அட்ட புஷ்பங்களாவன : கொல்லாமை, ஐம்பொறி அடக்கம், பொறுமை, அறிவுடைமை, வாய்மை தவமுடைமை, அன்புடைமை, அருளுடைமை என்பனவாம்.

கிரியை நெறியில் வழிபாடு செய்தவர்கள் சிவலோகத்திற்குச் சென்று அவ்வுலகத்தில் உள்ள போகங்களை அனுபவிப்பதோடு சிவபெருமானுக்கு அருகில் இருக்கும் சாமீப பதவியைப் பெறுவர். சைவ சமயக் குரவர்களுள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கிரியை நெறி நின்று சாமீப முத்தி பெற்றார். மனம் , மொழி, மெய்யால் சிவனையே நினைத்து , சிவபூசை பண்ணிய சண்டேசுவர நாயனாரும் சாமீப பதவியைப் பெற்று சிவனருகில் இருக்கும் பேறு பெற்றார்.

யோகம்

சரியை, கிரியையிலும் உயர்ந்த நிலை இது. இறைவனை மனதினால் வழிபடுவது யோகநெறி , இதற்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணனை தியாணம், சமாதி ஆகிய அட்டாங்க யோக உறுப்புக்கள் உள்ளன. இவ்வட்டாங்க யோகங்களிலும் பயிற்சி பெற்று படிப்படியாக முன்னேறி யோக நெறியை அணுசரிக்க முடியும். இங்கு இயமம், எனப்படுவது கொல்லாமை வாய்மை, கள்ளாமை, பிறர் மனைவியரயும் பொது மகளிரையும் விரும்பாமை இரக்கம், வஞ்சனை இல்லாமை, பொறயுடைமை, மனங்கலங்காமை, அற்பாகாரம், சுசியுடைமை என்னும் பத்துமாம்.

ஐம்பொறிகளையும் ஒடுக்குதல், சுவாசத்தை நிலையில் நிறுத்துதல், மனத்தை ஒரு வழிப்படுத்தல் உடம்பினுள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞை, முதலிய ஆறு ஆதாரங்களையும் தரிசித்தல், உயிரை அவ்வாதாரங்களுக்கு மேலே செலுத்துதல் சிரத்தின் நடுவிலுள்ள சந்திர மண்டலத்தில் இருந்து ஒழுகும் அமிர்த தாரையால் உடல் முழுவதையும் நிறைத்து நிலைத்திருக்க வைத்தல், முழுச்சோதி வடிவான சிவப்பிரகாசத்தைக் கண்டு சமாதி கூடி ஆனந்தத்தில் அழுந்தி இருத்தல் என்பன யோக நெறி எனச் சிவஞானசித்தியார் 273 வது பாடல் கூறுகின்றது.

யோக நெறியில் இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவுமுறை தோழனுக்கும் தோழனுக்கும் உள்ள உறவுமுறை போன்றது இதனை சக மார்க்கம் எனக் குறிப்பிடுவர். சக மார்க்கம் பற்றி திருமந்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:-

" யோகச் சமாதியினுள்ளே அகலிடம்
யோகச் சமாதியி னுள்ளே உளரொளி
யோகச் சமாதியி னுள்ளே உளச்சத்தி
யோகச் சமாதியி உகந்தவர் சித்தரே"

யோக நெறியில் நிற்பவர்களிடம் அட்டமா சித்திகளைச் செய்யும் ஆற்றல் நிரம்பி இருக்கும்.

அவையாவன:-

அணிமா - அணுவளவாகச் சுருங்கும் ஆற்றல்

இலகிமா - கனமற்றதாக்கும் ஆற்றல்

மகிமா - உருவத்தைப் பெரிதாக்கும் ஆற்றல்



பிராப்தி - வேண்டியவற்றை அடையும் ஆற்றல்

கரிமா - மிகக் கனமாயிருக்கும் ஆற்றல்

பிரகாமியம் - நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஆற்றல்

ஈசத்துவம் - படைத்தல் போன்ற மேலான செயல் புரியும் ஆற்றல்

வசித்துவம் - யாவற்றையும் வசப்படுத்தும் ஆற்றல்

யோக நெறியில் நின்றவர்கள் சிவபெருமான் கொண்டுள்ள திருமேனிகளில் ஒன்றைப் பெற்று, சிவலோகத்தில் சிவபோக அனுபவம் உடையவராய், சாரூப பதவியைப் பெறுவார். சைவ சமய குரவர்களுள் சுந்தர மூர்த்தி நாயனார் யோகநெறி நின்று சாரூபமுத்தி பெற்றார். திருமூலநாயனார் பெருமிழலைக் குறும்பர் சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோரும் கிரியை நெறி நின்று சாரூப பதவி பெற்றவர்கள்.

ஞானம்

அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாக நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை அறிவால் வழிபடுதல் ஞான நெறி எனப்படும். கேட்டல், சிந்தித்தல் தெளிதல், நிட்டை கூடுதல் என்ற நான்கு அங்கங்கள் இந்நெறிக்கு உண்டு.

கேட்டல் :- பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும் தக்க ஆசிரியர்களிடம் கேட்டல்.

சிந்தித்தல் :- அவற்றைக் காரண, காரிய இயைபு படுத்தி எடுத்துக் காட்டுகளையும் கருத்தில் கொண்டு சிந்தித்தல்.

தெளிதல் :- அவற்றில் சந்தேகமோ, விபரீதமோ இன்றி சைவசித்தாந்தம் மெய்யானது எனத் தெளிதல்

நிட்டை கூடுதல் :- சிவபெருமானின் திருவருளைச் சித்தித்தல் இன்றி நமக்கு எந்த விதமான செயலும் இல்லை என நினைத்து, சிவபெருமானையே சதா காலமும் நிட்டை கூடி நினைத்திருத்தல்.

இந்நிலையில் சிவன் சீவன் முத்தர்களை அதிட்டித்து நின்றோ, குருநாதனாக வந்தோ, மானிட சட்டை தாங்கி வந்தோ ஞான தீட்சை நல்குவான்.

புராணங்களும், வேத சிவாகமங்களும், சாத்திரங்களும், வேறு பல சமயநூல்களும், ஆகிய எல்லாக் கலை ஞானங்களையும் ஆராய்தல், ஆராய்ந்து பல சமயங்களிலும் கூறப்படும் பொருள்கள் பலவும் உண்மையற்றவை என்று கண்டு கழித்தல், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும் வகுத்துக் காட்டி, பாசம், பசு இரண்டிற்கும் தலைவனாய் விளங்கும் பரம சிவனின் சிறப்பியல்பைத் தெளிவாகக் கூறும் சித்தாந்த நெறியே மேலானதெனத் தெளிதல், அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் என்னும் வேற்றுமை இன்றிச் சிவத்துடன் அத்துவிதமாய்க் கலந்து நிற்றல் என்பன ஞான நெறியில் அடங்கும் என் சிவஞான சித்தியார் 274வது பாடல் கூறுகிறது.

ஞான நெறியில் இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவுமுறை குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவு முறை போன்றது. இதனை சன்மார்க்கம் எனகுறிப்பிடுவர். சன்மார்க்கம் பற்றி திருமந்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்க கீர்த்திக்கப் பாதங்கள் கூடக்
குருபக்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தரும்முத்தி சார்பூட்டும் சன்மார்க்கந் தானே"

ஞான நெறியில் நின்றவர்கள் சிவபெருமான் திருவடி நீழலில் என்றும் நித்தியமான பேரின்பத்தை அனுபவித்திருப்பர் இதனை சாயுச்சிய முத்தி எனவும் பரமுத்தி எனவும் கூறுவர். சைவ சமய குரவர்களுள் மாணிக்க

வாசக சுவாமிகள் ஞான நெறி நின்று சாயுச்சிய முத்தி பெற்றார்.

"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே" எனத் தாயுமானவர் இந்நான்கு நெறிகளையும் பற்றிக் குறிப்பிடுகின்றார். சரியையை அரும்புக்கும், கிரியையை மலருக்கும், யோகத்தை காய்க்கும், ஞானத்தை கனிக்கும் ஒப்பிடுகிறார். சில நோய்களுக்கு அரும்பை மட்டும் உண்டால் அந்நோய் நீங்குவதைக் காணலாம். வேறு சில நோய்களுக்கு மலரை மட்டுமோ, காயை மட்டுமோ உண்டால் அந்நோய் நீங்குவதைக் காணலாம். அவ்வாறே சரியை நெறி நின்றாலும், கிரியை, யோக நெறி நின்றாலும் முத்தி பெறலாம்.

சரியையிற் சரியை, சரியையிற் கிரியை என ஞானத்தில் ஞானம் வரை 16 நெறிகள் உண்டு. அவையும் உபாயச்சரியையிற் சரியை, உண்மைச் சரியையிற் சரியை என வகுக்கப்பட்டு 32 நெறி முறைகள் உள்ளன. இங்கு உபாயம் என்பது உலகப் பயன்களை கருதிச் செய்வது. உண்மை என்பது எவ்வித பலனையும் எதிர்பாராது எல்லாம் சிவனுக்கே என சிவசிந்தனையுடன் செய்வது. முன்னையது பசு புண்ணியம் எனவும், பின்னையது சிவபுண்ணியம் எனவும் கூறப்படும். சிவபுண்ணியங்கள் செய்யச் செய்ய மலபரிபாகம், இருவினை ஒப்பு, சத்திநிபாதம் என்பன படிப்படியாக நிகழ்ந்து ஆன்மா முத்திப்பேற்றை அடையும்.

சித்தாந்த ரத்தினம்
கேசினி கோணேஸ்வரன்.

"எட்டுத்திசையும் பதினாறு கோணமு மெங்கு மொன்றாய்
முட்டித் ததும்பி முளைத் தோங்கு சோதியை மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித் தங்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே

- பட்டினத்தடிகள்

காணாபத்தியம் பற்றிய ஓர் நோக்கு

மனித வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்த அம்சங்கள் சமயமும் சமய சடங்குகளும் முதன்மையானதாக அமைந்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை. மனிதன் தம் பாரம்பரிய மரபுகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஏற்ற வகையில் எல்லாம் வல்ல பரம்பொருளினை பல்வேறுபட்ட வடிவத்தில் வணங்குகின்றனர்.

மரபு ரீதியாக இருந்து வருகின்ற மதங்களிலே வைதீகவழிபாட்டுமரபுகள், கணபதிவழிபாடுகள் முக்கியத்துமானதொன்றாகும். அறுவகைச் சமய தோற்றம் பற்றி திருமுறைகளிலும் மெய்கண்ட சாஸ்திரங்களிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அறுவகைச் சமயங்களை வடமொழியில் சண்மதங்கள் என அழைப்பர். இதன் கருத்து சட் என்றால் தமிழில் ஆறு, மதம் என்றால் சமயம், இதனையே அறுவகைச் சமயம் என்பர்.

கணபத்திய நெறி விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் காணாபத்தியம் எனப்படுகிறது. சண்மத பிரதித்தாபகர் என்னும் ஏகான்மவாதியாகிய ஸ்ரீசங்கராச் சாரியார் தமது காலத்தில் நிலவிய வைதீக சமயங்களான காணாபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் ஆகிய மதங்களை மீள புதுப்பித்தார்.

வைதீக மரபிலே காணாபத்திய வழி பாடு தொடர்பான போதுமான அளவு குறிப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. உருத்திரகானங்களுடன் தொடர்புடையதாகவே காணாபத்திய வழிபாடு இடம்பெற்றுள்ளதை அவதானிக்கமுடிகின்றது. சிவகாம புராணத்திலே சத்தியவான் அவளுடைய முழு ஆற்றலையும் ஒன்று திரட்டி தோற்றுவித்த பிள்ளையே கணபதி என்று கூறப்பட்டுள்ளது. வட இந்தியாவில் குப்த காலத்தில் கணபதி வழிபாடு சிறப்பாக இருந்ததுக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.

இற்றைக்கு சுமார் மூவாயிரம், நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மக்களின் பழம் பெரும் நூலாகிய தொல்காப்பியத்தில் விநாயகர் வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றது. விநாயகர் வழிபாடு பற்றி ஒருவகை குறிப்பு இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்டதாகக் காணப்படுகின்றது. கி. பி 4ஆம் நூற்றாண்டில் விநாயகரை கணபதியாக கருதி வழிபடும் முறை வட இந்தியாவில் காணப்பட்டது.

புராணங்களில் விநாயகருடைய உற்பத்தி தெளிவாகக் காணப்பட்டுள்ளது. கந்தபுராணத்தில் சிவனும் சக்தியும் நாரதீய புராணத்தில் சங்கடநாசனம் எனும் பகுதியில் நாரதர் துதி இடம்பெறுகின்றது. அதிலே விநயகர் பற்றிய பல குறிப்புக்கள் இடம்பெறுவதை அவதானிக்கலாம். கி. பி 6ஆம், 7ஆம் நூற்றாண்டிலே தட்சண தேசத்துக்கு குகைக்கோயில் சிலவற்றில் கணபதி சிலைகள் உண்டு என்பதற்கு தொல்லியல் சான்றுகள் காணப்படுகின்றது. இங்கு சப்த மாதர்களோடு காணப்படும் விநாயகர் சிலைகள் காணப்பட்டதாக ஆராய்ச்சிகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் குறிப்பிடுகின்றது.

ஆய்வாளர்களின் கருத்தின்படி தக்கண தேசமானது விநாயக வழிபாட்டைத் தமிழ் நாட்டிற்கு பரப்புவதில் அதிமுக்கிய பங்கினை வகித்தது. தமிழ் நாட்டில் கணபதி வழிபாடு மிகவும் தொன்மையானது என்பதற்கு பலகுறிப்புகள் கிடைத்துள்ளன. ஔவையாருடன் தொடர்புடைய கதை களிலே விநாயகர் தொடர்பான படங்கள் இடம்பெறுகின்றன. தமிழகத்திலே பிள்ளையார் பட்டி என்ற இடத்திலே செய்யப்பட்ட

தொல்லியல் ஆய்வுகள் கி.பி 5ஆம் நூற்றாண்டுக்கு முன்பே கணபதி வழிபாடுகள் அங்கு சிறப்பாக இருந்ததென்று கூறப்படுகின்றது என அறியமுடிகின்றது.

தேவாரப் பாடல்களில் கணபதி பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சம்பந்தருடைய தேவாரத்தில் உதாரணமாக "பிடியதனுருகுமை கொளமிகு கரியது....." எனும்பாடலில்கணபதியின்உற்பத்திதெளிவாக குறிப்பிடப்படுகின்றது. தமிழிலக்கியத்தின்படி கி.பி 8 ஆம் நூற்றாண்டில் இருந்து தென்னிந்தியாவில் விநாயக வழிபாடு மிகவும் பிரபல்யம் அடைந்திருந்ததை அவதானிக்க முடிகின்றது.

கணபதி வழிபாட்டு வளர்ச்சியில் புராண கதைகளும் அரபுக் கதைகளும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. எடுத்துக்காட்டாக ஔவையார் கதை, மாம்பழக்கதை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

விநாயகர் வழிபாட்டின் செல்வாக்கு

இந்துக்களின் வாழ்வியலில் எக்கருமத்தினைச் செய்வதற்கும் முன்னர் பிள்ளையாரினை வணங்கிய பின்னர்தான் கருமங்களினை அங்கு தொடங்குவது வழமையாகும். கோவில்களில் கூட, பூசைகளினை ஆரம்பிப்பதற்கு முன்னர் விநாயகருக்கு முதலில் பூசை செய்யப்பட்டதன் பின்னர் மற்றைய தெய்வங்களுக்குப் பூசை செய்யப்படும். எந்த இறைவனுடைய சன்னிதானத்திலும் விநாயகருக்கு ஒரு பதம் வகுக்கப்பட்டு முதலிலே வழிபாடுகள் செய்தல் விநாயகர் ஆலயங்களிலே அவர் மூலமூர்த்தியாக இருப்பார்.

சமயம் சார்ந்த இலக்கியங்கள், நூல்கள் அச்சிடுதல் தோத்திரங்கள் பஜனை படித்தல் ஆகியவற்றிலே முதலில் காப்பு எடுத்தல் இவை எல்லாம் விநாயகர் வழிபாட்டுடன் சமூகத்துக்கு உள்ள தொடர்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

சமய வழிபாடுகளின் விளைவாக சமூக சமயத் தொடர்புகள் வளர்ச்சியடைந்ததை அவதானிக்கலாம். தென்னிந்தியக் கோயில்களில் விநாயகருக்கு பதம் வகுக்கப்பட்டு அவருக்கு முதல் பூசையுடன் முதலிடம் கொடுக்கப்படுதல் சைவமக்கள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டபோதும் விநாயகரையே முதலிடத்தில் வைத்து வழிபாடு செய்கின்றார்கள். விநாயகப் பெருமான் ஞானகரன் சித்தி, புத்திகளைத் தருபவன், ஓங்காரன், விக்கினங்களை நீக்குபவர் என்ற வகையிலே கணபதியை சைவமக்கள் முக்கியப்படுத்தி வழிபடுகின்றனர். இவற்றை விட விநாயகப் பெருமான் சிவனுடைய மூத்த மகனாக காட்டப்படுகின்றார். இதனாலும் சைவமக்கள் இவருக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். இன்று சைவசமயிகளினால் விநாயகருடைய விரதங்கள் சதுர்த்தி, விநாயக சஷ்டி போன்ற விரத அனுட்டானங்களை பின்பற்றி வருவதை காணலாம். இவற்றின் வாயிலாக விநாயக வழிபாடு இக்காலப்பகுதி மக்களிடையேயும் சமயத்தவர்களிடையேயும் கலந்து சங்கமமாகிவிட்டதை அவதானிக்கலாம்.

உசாத்துணை நூல்

1) சி. க. சிற்றம்பலம் (1996), "ஈழத்து இந்து சமய வரலாறு"

2) ப. கோபாலகிருஸ்ண ஐயர், "இந்துப் பண்பாட்டு மரபுகள்"

3) மா. இரத்தின சபாபதிப்பிள்ளை, "விநாயகர் உண்மைப் பொருள் விளக்கம்"

சி. சிவேசன்,
விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

நலம் தரும் நாயகன்

"பிடியதன் உரு உமை கொளமிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடுமவர் இடர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

நாம் எழுதத் தொடங்கும் முன் 'உ' எனும் பிள்ளையார் சுழி போட்டே எழுதுவது வழக்கம். விநாயகன் ஓங்கார வடிவினன். அ + உ + ம் எனும் மூன்றெழுத்துக்களின் கூட்டொலியே ஓம். அதன் நடுவெழுத்தான உகர வடிவமே பிள்ளையார் சுழி.

மஞ்சள், சாணம், சந்தனம் முதலியவற்றால் பிள்ளையாரைப் பிடித்து வைத்தால் அவர் அனைவருக்கும் அருள்பாலிக்க எழுந்தருளுவார். விநாயகருக்குரிய மலர்களாக அறுகு, எருக்கம்பூ, வெள்ளெருக்கம்பூ, சூரியகாந்தி, அலரி, மருது, மாதுளை, செண்பகம், பாதிரி என்பன கூறப்படுகின்றன. பத்திரங்களாக வன்னி, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி என்பன கூறப்படும். துளசி விநாயகருக்கு ஆகாது.

விநாயகரை வணங்கமூன்றுமுறை நெற்றியிலே குட்டிக்கும்பிடுவது வழமை. அறிவைத் தருபவர் ஞானவிநாயகன் என்றழைக்கப்படுகின்றார். தெளிவான அறிவைத் தரவும் இறை ஞானத்தை ஏற்படுத்தவும் குட்டிக் கும்பிடப்படுகின்றார்.

தோப்புக் கரணம் போட்டு வழிபடுவது மிக முக்கியமானதொன்றாகும். "த்வாப்யாம் கர்ண" என்பது தோப்புக் கரணம் என மருவி வழங்குகின்றது. இரண்டு காதுகளையும், வலது கை இடது காதையும், இடது கை வலது காதையும் மாறிப்பிடித்துக் கொண்டு உட்கார்ந்தும் எழுந்தும் செய்யும் வணக்கம் தோப்புக்கரணமாகும். இது மூன்று முறை செய்யப்பட வேண்டும்.



இச் செயற்பாட்டை மேலைத் தேசத்தவர் பிரயோக விஞ்ஞானத்தில் சிகிச்சை முறையாகக் கையாள்வது இன்றும் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

விநாயகருக்குப் பிடித்தவை

கரும்பு, எள்ளு, அவல், பொரி, தேங்காய், மாதுளை, விளாம்பழம், நாவற்பழம், மோதகம்

விநாயக ரூபங்களும் பலன்களும்

ஏகாக்ஷர கணபதி - கணபதி அருள் கிடைக்க
மகா கணபதி - பரிபூரண சித்தி
த்ரைலோக்கிய மோஹனகர கணபதி - எல்லாவுலகயுங் காப்பாற்ற
ருணகர கணபதி - கடன் நீங்க
மகா வித்தியா கணபதி - தேவி அனுக்கிரகம் பெற
ஹரித்ரா கணபதி - உலக வசியம் பெற
வக்ர துண்டகணபதி - அதிர்ஷ்டலாபம்
நித்தி கணபதி - நிதி வளங்கிடைக்க
பால கணபதி - சந்தோஷம்
சக்தி கணபதி - சர்வ காரியமும் வெற்றிபெற
க்ஷிப்ர ப்ரஸாதகணபதி - துரித பலன் பெற
ஹேரம்ப கணபதி - மனச் சாந்தி
உச்சிஷ்ட கணபதி - திரிகால தரிசனம்
வீர கணபதி - தைரியம் பெற
ஸங்கடஹர கணபதி - துன்பம் நீங்க
துர்க்கா கணபதி - துக்க நிவாரணம்
யோக கணபதி - பயம் போக
நிருத்த கணபதி - கலை வளர்ச்சிக்கு
சித்தி கணபதி - எல்லாக் காரியமும் வெற்றி பெற
புத்தி கணபதி - அறிவு வளர்ச்சிக்கு



இந்திய உதவி உயர்ஸ்தானிகர், அவரின் செயலாளர்
நல்லை ஆதின முதல்வர் மற்றும் ஆறுதிருமுருகன்



இந்திய உதவி உயர் ஸ்தானிகர் ஸ்தபதி புருஷோத்தமனுக்கு
சிற்பசூடர் பட்டமும் தங்கப்பதக்கமும் வழங்கிக் கௌரவித்தல்



மஹாஅபிஷேகம் நடந்தபின்பு
எம்பெருமானின் அழகுத்தோற்றம்...



பஞ்சமுக விநாயகர், எழுந்தருளி விநாயகர்,
விசாலாட்சி சமேச விஸ்வநாத சுவாமி



தலவிருட்சம் வன்னிமரத்திற்கு தீபாராதனை

விநாயகருக்கு விருப்பமான பொருட்கள் சிலவற்றின் தத்துவங்கள்

◈ அறுகம்புல் - ஆறு இடங்களில் வேரூன்றி ஒரு கொடிபோல நிலத்தில் படர்வது அறுகு அல்லது அறுகம்புல் ஆகும். இது குளிர்மையானது. கோடைகாலத்திலும் வாடாது. இது ஓர் அரிய மூலிகையாகும். அறுகம்புல்லை நீரில் இட்டுக் காய்ச்சிக் குடித்தால் காய்ச்சல் தணியும். அறுகம் புல் உடலின் எடையையும், கொழுப்பையும் குறைக்கும். நரம்புத் தளர்ச்சியை நீக்கும். இரத்தப் புற்றுநோயை தணிக்கும். இரத்தச் சிவப்பணுக்களைப் பெருக்கும். நஞ்சினைக் முறிக்கும். இருமல், இரத்தச்சோகை, இதயக் கோளாறு போன்ற நோய்களுக்குச் சிறந்த நிவாரணி. "ஆல் போல்த்தழைத்து அறுகுபோல் வேர் ஓடி" என்பது போல் உலகஞ் செழித்து வாழ வேண்டும் என்பதைக் குறிக்க அறுகம்புல் சிறந்த வழிபாட்டுப் பொருளாக விளங்குகின்றது.

◈ விளாம்பழம் - விளாம்பழத்தின் புறவோடும் உள்ளீடான பழமும் தொடர்பில்லாமல் வெவ்வேறாய் இருக்கின்றன. இரண்டிற்கு மான இத் தொடர்பற்ற நிலை பழம் பழுத்த பின்னே ஏற்படுகின்றது. இவ்வாறே பக்தி என்ற நிலையில் பற்றற்ற நிலை ஏற்பட வேண்டும் என்பதையே இஃது உணர்த்துகின்றது.

◈ மோதகம் - விநாயகருக்கு மட்டுமல்லாது சிறுவர் முதல் முதியோர் வரை அதீத விருப்புடைய உணவு இதுவாகும். இதனைக் கொழுக்கட்டை என்றும் அழைப்பர். மாவும் பூரணமும் சேர்த்துச் செய்யப்படும் உணவாகும். பூரணம் என்பது அவித்தபயறு, சர்க்கரை, தேங்காய்த்துருவல் ஆகிய மூன்றினதும் கலவையாகும். மாவு உடலுக்கும் பூரணம் உயிருக்கும் ஒப்பிடப்படும். இவ்வுணவு எவ்வாறு எல்லோருக்கும் இனிமையாய் உள்ளதுவோ அதுபோல விநாயகனும் உயிர்கள் எல்லாவற்றுக்கும் இனியவனாய் விளங்குகின்றான் எனும் தத்துவத்தைக் காட்டுகின்றது.

◈ தேங்காய் - தேங்காயின் மட்டை, நார், ஓடு ஆகிய மூன்று பகுதிகளும் ஆன்மாவின் மும்மலங்களைக் குறிப்பதோடு அவை முறையே நீக்கப்பட்டு உயிராக இருக்கும் இளநீர் இறைவன் திருமுன் அர்ப்பணிக்கப்படுவதாகச் சிலர் கூறுவர். தேங்காயின் வெண்மை சத்துவகுணத்தையும் மூன்றாம் கண் ஞானக் கண்ணாகவும் கருதப் படுகின்றது. அதாவது சத்துவ குணத்தோடு பக்தியுடன் சஞ்சலமற்று ஞானக் கண் கொண்டு இறைவனைத் தரிசிக்க வேண்டும் எனும் தத்துவத்தையும் இது விளக்கி நிற்கின்றது. மேலும் நேர்த்தியின் பொருட்டுத் தேங்காய்களைச் சிதறுகாய் அடிப்பது (சூரைக்காய் அடிப்பது) விநாயகருக்கு மட்டும் உரியது என்ற நிலை இன்று மறைந்து விட்டது. சிதறுகாய் அகங்காரத்தின் முடிவினைக் குறிக்கின்றது. சிதறுகாயைப் பிரியமானவர்கள் எடுத்துண்பார்கள். இது உடைப்பவர் மறைமுகமாகச் செய்யும் தர்மமாகும்.

◈ வெள்ளரிப்பழம் - இப்பழம் நன்றாகப் பழுத்தவுடன் காம்பிலிருந்து கழன்று தரையில் விழுகின்றது. அதுபோல ஆன்மா பற்றறுத்து உலகப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும் எனும் தத்துவத்தை விளம்பி நிற்கின்றது.

தும்பிக்கையான் பாதம்
நம்பிக் கையோடு தொழுதால்
வல்வினைகள் எல்லாமே
நில்லாமல் ஓடி விடும்



கு. சுதாகரன், B.A(Hons)
அபிவிருத்தி அலுவலர், இந்து சமய விவகாரம்
மாவட்டச்செயலகம், இரத்தினபுரி.

சைவ வாழ்வு

இவ்வுலகின் கண் வாழ்கின்ற உயிர்கள் எண்ணற்றவை. அவற்றை எண்பத்து நூறாயிரம் யோனிபேதம் கொண்டவை எனத் திருவாசகம் வகைப்படுத்துகிறது. இவ் உயிர்க் கூட்டத்தில் உயர்ந்து விளங்குவது மனிதப்பிறப்பாகும். ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைக் கொண்ட நாம் மற்றைய விலங்குகளைப் போல உண்பதும் உறங்குவதும் இனத்தைப் பெருக்குவதும் என வாழாது இருகால்களால் நிமிர்ந்து நடக்கவும் பேசவும் சிரிக்கவும் கூடிய உயர்ந்த மனிதப் பிறவியை எடுத்துள்ளோம். எனவே அந்த உயர்ந்த பிறவிக்கேற்ற வாழ்வை நாம் மேற்கொள்ள வேண்டும். அத்தகைய உயர்ந்த வாழ்விற்கு நமது சமயமே வழி காட்டுகின்றது.

முழுமுதற்கடவுளாம் சிவபெருமானே தனது அடியவர்கட்கு அருள்செய்யமனிதஉருவம்தாங்கி வருகின்றான். சம்பந்தப்பிள்ளைக்குப் பால் கொடுக்க அப்பருக்கும் சுந்தரருக்கும் பொதி சோறு வழங்க, சிறுதொண்டரிடம் பிள்ளைக்கறி கேட்க செம்மனச்செல்வியிடம் கூலியாகப் பிட்டு வாங்கியுண்ண வந்த சம்பவங்களைக் குறிப்பிடலாம். மனித உடல் எடுத்தே பெரியோர்கள் ஞானிகள் சித்தர்கள் யோகிகள் எனப்பலரும் சிவனை வழிபட்டு மேனிலை பெற்றுள்ளார்கள். இவை எல்லாம் மனிதப் பிறப்பின் மாண்பினை விளக்கி நிற்கின்றன.

இத்தகு சிறப்புடை மனித வாழ்வியலை வனப்படையவும் வண்ண வடிவம் பெறவும் தக்க பயன்பெறவும் ஒழுங்கான வாழ்வியற் சட்டங்கள் தீர்க்கதரிசிகளாலும் தெய்வத்தாலும் ஒழுங் கமைக்கப்பட் டுள்ளன. இவ்வாறு மாசுமறுவற்ற கொள்கைகள் மேன்மை கொள் சைவநீதி வழி பேணப்படுவதே சைவ சமய வாழ்க்கை முறை யாகும்.

சைவநெறி என்பது தனித்துவமான வாழ்க்கை ஆகும். அன்பு, கருணை, ஈகை, சீவகாருண்யம் போன்ற உயர்குணங்களைத் தன்னகத்தே கொண்டு ஆதியும் அந்தமுமில்லா பிறவா யாக்கைப் பெரியோனாகி அன்பே உருவாகி, ஆண், பெண் இணைந்த வடிவுடைய சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்ட நெறியாகும். சைவம் சிவசம்பந்தம் உடையது. சிவம் அன்பு சம்பந்தம் உடையது. அன்பு வாழ்க்கை சம்பந்தம் உடையது. எனவே சைவாழ்வே உயர்வாழ்வாகும். இதனையே சைவநெறி, சிவநெறி எனக் குறிப்பிடுகின்றோம். இந்நெறியானது உயர்ந்த அறநெறிப் பண்புகளையும் உயர் அறிவியற் பண்புகளையும் நவீன விஞ்ஞான விளக்கங்களுக்கேற்புடையதாகத் தன்னகத்தே கொண்டுள்ளது.

சைவவாழ்வைநாம்வாழசமயஅறிவுசித்தாந்த அறிவு இன்றியமையாதது. இவ்வறிவே சமய விழுமியங்களையும் தத்துவார்த்தங்களையும் நம்முள் நிலை நிறுத்தி நம்மை அதி உயர்ந்த மனிதன் (Super man) ஆக்கிவிடும். அத்துடன் ஆலயவழிபாடு, சிவாலயசேவை, சிவனடியார் வழிபாடு, ஞானநூல்களைக் கேட்டல், ஞானநூல்களைக் கற்றல் சத்சங்க சங்கமம் என்பவற்றில் அதீத ஈடுபாடு கொள்ளச் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழச் செய்து வானுறையும் சிவத்துடன் சேர்க்க வழிகாட்டும். எம்முன்னோர்கள் இவற்றைச் சிந்தையிற் கொண்டே சைவப்பாடசாலைகளை அமைத்து சைவவினாவிடை, சைவபோதம், பதின்னான்கு சைவசித்தாந்த சாத்திரங்கள், பன்னிருதிருமுறைகள், பதினெண்புராணங்கள், இதிகாசங்கள் போன்ற பயன்தரு நூல்களைக் கற்பிப்பதற்கானஒழுங்குகளைக்கையாண்டனர். அத்துடன் தாமும் சைவ வாழ்வு வாழ்ந்து இளஞ் சமுதாயத்திற்குச் சைவவாழ்வு வாழ வழிகாட்டிகளாகவும் அமைந்தனர்.

சைவாலயங்கள் சைவநிறுவனங்கள் என்பனவற்றில் சைவசமய அறநெறிப் பாடசாலைகள் அமைத்து சைவக்கல்வியை வளர்க்க வேண்டும். சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம் சமயஅறிவுப் பரீட்சைகள் நடத்தல் சைவசமய நூல்களை மலிவு விலையில் வெளியிட்டு வழங்குதல் சைவகலாச்சாரம் மிளிரும் வண்ணம் நாடகம், வில்லுப்பாட்டு முதலியவற்றை நடாத்திப் பரிசில் வழங்குதல் மூலம் மக்கள் நல்ல சமய அறிவைப் பெறவும் சைவ வாழ்வு வாழவும் உதவுதல் சிறந்த தொண்டாகும்.

சைவ சமயிகள் ஒவ்வொருவரும் சமயதீட்சை பெறவேண்டும். சமயதீட்சை பெற்றவனே சைவன் என்று சொல்லும் தகுதியைப் பெற்றவனாகின்றான். சமயதீட்சை பெற்றவனே விரதம் அனுட்டிக்க, புராணம் படிக்க, உபயங்களைச் செய்ய வழிபடத் தகுதி உடையவன் ஆகின்றான். தீட்சைபெறாதவன் செய்கின்ற நற்செயல்களின் முழுப் பயனையும் பெற முடியாதவன் ஆகின்றான்.

திருநீறு, உருத்திராக்கம், சந்தனம், குங்குமம் என்பன சைவர்களின் விசேஷ அடையாளமாகக் கருதப்படுகிறது. இவற்றை நாம் முறைப்படி அணியவேண்டும். இச்சிவசின்னங்களைக்காணும் போது நமக்கு சிவபெருமானின் ஞாபகம் வரவேண்டும்"முழு நீறு பூசிய முனிவர்க்கும் அடியேன் என்கிறார் சுந்தரர் பசுவின் மலத்தை சிவாக்கினியிற் எரித்துப் பெறுவதே திருநீறாகும். 'பசு' என்பது பசுமாட்டையும் 'மலம் என்பது சாணத்தையும் அக்கினி என்பது நெருப்பையும் குறிக்கும். உயர்ந்த தத்துவப் பொருளில் 'பசு' என்பது ஆன்மாவைக் குறிக்க மலம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைக் குறிக்க "சிவாக்கினி" என்பது திருவருளைக் குறிக்க "திருநீறு" என்பது மேலாம் முத்தியைக் குறிக்கின்றது. அதாவது சைவவாழ்வின் பயனைக் குறிக்கின்றது.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சைவர்கள் சிவபெருமான் மீது நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு பிள்ளையார் முருகன், நாராயணன், வைரவர், வீரபத்திரர், அம்பிகை ஆகிய மூர்த்திகளைப் பரிவாரத் தெய்வங்களாக வழிபடுவதோடு திருநீறு உருத்திராக்கம் அணிந்து சிவனடி மறவாச்சிந்தையுடைய சிவனடியார்களிடத்து அன்பு கொண்டு சிவனாகப் பாவித்து அவர்களுக்குச் சேவை ஆற்ற வேண்டும்.

சைவர்களாகிய நாம் எமது அன்றாட வாழ்வில் கொலை, களவு, புலாலுண்ணல் மது அருந்துதல் பிறனில் விழைதல், எனும் பஞ்சமா பாதங்களை விலக்குவேன்" என்ற நித்திய விரதத்தை அனுட்டித்தல் வேண்டும் நாம் வாழ்வில் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. நற்காரியத்துக்கு நற்பலனும் தீயகாரியத்திற்கு தீய பலனும் உண்டு என்பது நியதி. எனவே நாம் எமது வாழ்வில் நல்வினைகளைச் செய்து உண்மைச் சைவ வாழ்வு வாழ்வது இன்றியமையாதது.

ஆதியும் அந்தமுமில்லாத சைவசமயத்தில் பிறப்பதற்கே முன்பு பல பிறவிகளில் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து உண்மைச் சைவர்களாக வாழ்வோம் என உறுதி கொள்வோம்.

சைவசித்தாந்த கலாநிதி, சைவசித்தாந்த பண்டிதர், சைவப்புலவர், B.A (Hons), M.A.
சைவசித்தாந்தம், **செ. கந்த சத்தியதாசன்.**



விநாயகருக்கு உகந்தவையும் அதன் தத்துவமும்

வெள்ளை எருது ஏறும் விரிசடையோனின் மூத்த புதல்வனே விநாயகப்பெருமான். கலியுகத் தெய்வமாம் கந்தப் பெருமானின் அண்ணன். ஓம் என்னும் மந்திரவடிவாக, பிரணவ சொரூபியாக விளங்குபவர் விநாயகர். இவரது திருமேனியின் தோற்றப் பொலிவை,

ஓங்கார வடிவான உன்பாத தாமரையும்
உபய பரிபுர மறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்க ளொருகோடி நிகரொளியும்
உத்தூள நீற்றினொளியும்
பாங்கார கஜாந நமும் உபயகரமும் வளர்புயப்
பவளாசலங்க ணான்கும்
பாசமுடனங்குசங் கொம்பேரிலட்டுகம்
பட்சிமொடு வைத்த கரமும்
நீங்காத அருண்மாரி பொழியுந்தரியம்பகமும்
நிறையுமும் மத மாரியும்
நீள்சுடாடவியும் வெண்பிறையு மொரு தொந்தியும்
நெஞ்சிலொரு காலும் மறவேன்
காங்கேயன் மகிழ் தமையனே கங்கை நதி பெருகு
காசி வாழ் துண்டிராஜ
கணபதியெனும் பெரிய குணமேருவே அருட்
கருணாநிதிக் கடவுளே
என்ற பாடல் விளக்கிக் கூறுகின்றது.

விநாயகருக்குச் சிறப்பான உவப்பான பல பொருட்களும் வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன. அவற்றிலே பிள்ளையார் சுழிபோடுதல், நெற்றியில் குட்டிக்கும்பிடுதல், தோப்புக்கரணம் போடல், வன்னி, அறுகு பொன்றவற்றினால் வழிபடல், இனிப்பான உணவுப் பண்டங்களைப் படைத்தல் போன்றன குறிப்பிடத்தக்கனவாகும்.



ஓம் என்பது பிரணவமந்திரம். இதுவே வேதத்தின் மூலம். ஓம் என்ற சொல்லில் அகர, உகர, மகர ஒலிகள் உள்ளன. சிவமும் (அகரம்) சக்தியும் (உகரம்) நெருப்பும் சூடும்போல அத்துவிதமாய் சைதன்னிய மயமாய் பிரிப்பின்றியிருக்கும். நட்சத்திர வடிவோடு தண்ட வடிவு சேரும்போது உ என்னும் எழுத்து நாத விந்துக்களின் வரிவடிவாகி மூலமனு எனப்படும் பிள்ளையார் சுழியாய் அமைவதாகக் காமிகாகமம் கூறுகின்றது. விந்து புள்ளி வடிவம். இது சக்தி. நாதம் கோடு வடிவம். இது சிவம். சக்தியும் சிவமும் இணைந்த வடிவமே பிள்ளையார் சுழி. நாதவிந்துக்களை ஒலிக்க முடியாது. எனவே இஃது ஊமை எழுத்து மௌனக்குறி.

ஆமை ஐந்து உறுப்புக்களையும் தன்னுள் அடக்கிக் கொள்வது போல "ஓம்" என்னும் பிரணவத்துள் சிவமும் சக்தியும் விநாயகரும் அடங்குவதால் மூவரையும் பிள்ளையார் சுழி உணர்த்துகின்றது. உயிர்புள்ளி. கோடு இறைவன். உயிரும் இறையும் கலந்தால் பேரின்பம். புள்ளியும் கோடும் இணைந்த பிள்ளையார் சுழி பேரின்பப் பெருவாழ்வின் அடையாளம். அகரம், உயிர், உகரம் இறைவன் உயிர் இறைவனுடன் இரண்டறக்கலந்து இறைவனாகவே புலப்படும். புள்ளியானது கோட்டுடன் இணைந்து உகரமாகி நிற்கும் பிள்ளையார் சுழியாக அமையும். இந்தநிலை அத்துவிதமாய் நிற்கும் சுத்தாத்துவித சித்தாந்த முக்திநிலை. இதுவே பிள்ளையார் சுழி உணர்த்தும் தத்துவம் ஆகும். இதனையே திருமந்திரத்தில் திருமூலரும்

"ஊமை எழுத்தொடு பேதம் எழுத்துறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்

ஓமயமற்றது உள்ளொளி பெற்றது
நாமயமற்றது நாமறியோமே"

எனப்பாடியுள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும்.

பிள்ளையாரை வழிபடும்போது முட்டியாகப் பொத்திப்பிடித்த இரண்டு கைகளினாலும் வலதுகை வலது நெற்றியிலும் இடதுகை இடதுநெற்றியிலும் பொருந்த நெற்றியில் மூன்றுமுறை குட்டி வழிபடுவர். இது நெற்றியில் குட்டிக்கும்பிடுதல் எனப்படும். நெற்றிப் பொட்டில் குட்டிக் கும்பிடும்போது அங்கே உள்ளடங்கியிருக்கும் அமிர்தகலசத்தை எழுப்பி அங்கேயுள்ள அமிர்தம் தேகம் முழுவதும் பரவி, நாடிகளில் பாய்ந்து சோம்பல் முதலிய அவகுணங்களை விரட்டி நல்ல மனநிலையை அளிக்கிறது.

வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்தெழுந்து வழிபடல் தோப்புக்கரணம் போடுதல் எனப்படும். நமது காலிலிருந்து தலைவரை நரம்புகள பல உள்ளன. நாம் தோப்புக்கரணம் போடுவதால் அந்த நரம்புகள் சுருங்கிச் சோர்வடையாமல் இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்குப் பலம் கொடுக்கிறது. அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால் மனதில் சாந்தமான நினைவுகள், எண்ணங்கள் தோன்றும். தோப்புக்கரணம் மூலாதாரத்தில் உள்ள சுஷும்னா நாடியைத் தட்டி எழுப்புவதற்காகப் போடப்படுகிறது.

மூலக்கனல் என்று கூறப்படுவதே சுஷும்னா நாடி. இது மனிதனின் அடிவயிற்றின் கீழ் ஓங்கார ரூபத்தில் அமைந்துள்ளது. இதனைத் தட்டிச் செயற்படுத்தி மேல்நோக்கி ஸஹஸ்ரார மண்டலம் வரை செலுத்தி சிரசிலிருக்கும் அமிர்தத்துடன் கலந்து அவ்விடமே அதனை நிலை நிறுத்திக்கொண்டால் மனிதன் தன் நிலை மறந்து பிரமத்துடன் ஐக்கியப்பட்டு பேரானந்தத்தை அனுபவிப்பான்.

அறுகம்புல்லினால் பூசை செய்தால் ஆனந்தமடைவார் விநாயகர். அறுகுக்கு "தூர்வை" என்ற பெயரும் உண்டு. ஆலமரம் பூமிக்கு மேல்உயரமாகவளர்ந்துபடர்ந்துவிரித்த குடைபோல் உள்ளது. அறுகு பூமியின் மேல் படர்ந்து பசுமையாக இருக்கிறது. அதுபோல மனித சரீரத்தில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தில் குண்டலினி சத்தியாக விநாயகர் விளங்குகின்றார். அந்தக்குண்டலினிசக்தியானது அறுகு நிமிர்ந்து பசுமையாகப் படர்வது போல ஆறு ஆதாரங்களிலும் வேரூன்றிப் படர்ந்து ஸஹஸ்ராரம் என்ற தலை உச்சியை அடைந்து ஆலமரம் போல் தழைத்து விரிந்து இருக்க வேண்டும் என்ற தத்துவமாக விநாயகருக்கு அறுகினால் அர்ச்சனை செய்யப்படுகின்றது.

சமஸ்கிருத மொழியில் "வஹ்னி" என்றால் நெருப்பு என்று பொருள். நெருப்பைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதால் வன்னி என்று பெயர். சூரியகாந்தக் கல்லோடு சூரியஒளி கலந்தால் அதிலிருந்து தீ வெளிப்படுவது போல வன்னியின் கட்டையை, அதன் கட்டையைக் கொண்டு தயிர் கடைவது போல் கடைந்தால் தீ வெளிப்படுகின்றது. தீயை அடைந்த பொருட்கள் பஸ்பமாகி விடும். அதுபோல வன் வன்னி இலையைத் தொட்டமாத்திரத வினைதர்களின் பாவம் அழிகிறது. வன்னி இலையைக் கொண்டு பக்தியுடன் அர்ச்சனை செய்தால் தீயிலிட்டபொருள் சுத்தமடைவது போல மனிதனின் மனமும் புத்தியும் சுத்தமடைந்து தெய்வீக ஞானம் உருவாகும்.

விநாயகருக்கு உகந்த நிவேதனப்பொருட்கள் தேங்காய், வெல்லம், மோதகம், அப்பம், எள்ளுருண்டை, அவல், பொரி, கரும்பு, விளாம்பழம், என்பன ஆகும். இப்பண்டங்கள் நீராவியில் தயாரித்தவை. எள்ளானது சுவாசம் சம்பந்தமான நோய்களையும் கண் நோய்களையும் தீர்க்க வல்லது. நீராவியில் வெந்த பண்டங்கள்



சீரணிக்கக்கூடியவை. இந்த நைவேத்தியப் பண்டங்கள் பற்றி

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் ....." என ஔவையாரும் "கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி" என அருணகிரிநாதரும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உயிர் வாழ்க்கைக்குத் தலைவர் விநாயகர். சுயநலம், சுயலாப நோக்கம் என்பவற்றை வைத்துக் கொண்டு வாழக்கூடாது என்று உணர்த்துபவர். சுயநலத்தைத் தியாகம் செய்யவேண்டும். பிறர்நலம் நாடி ஆன்மீக வாழ்க்கை வாழ வேண்டும். அதன்மூலம் தெய்வீகத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். இதுவே உண்மையான விநாயகதத்துவம் ஆகும்.

திருமதி ரு. பகீரதன்
சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
ஆசிரியர்.

"பெரியோர்களைத் தரிசிக்கச் செல்லும் போதும் ஆலயத்திற்குப் போகும்போதும் வெறுங்கையனாய் ஒரு போதும் போகக்கூடாது. பெரியோர்களுக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு ஏதேனுமொன்றைக் கொண்டு செல்லல் வேண்டும்

- ஸ்ரீ கிராம கிருஷ்ணர்

" மனிதனாகப் பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி ஆதலால் பிறருக்காகத் தியாகம் செய்வதே மனிதன் கடமை. தியாகத்தின் மூலமே பிரமா உலகத்தைப் படைத்தார்; விஷ்ணுவும் அதன் மூலமே உலகத்தைக் காக்கிறார்; படைப்புக்கள் யாவும் தியாகமே"

- மகாத்மாகாந்தி.

திருக்குறளில் அறம்

மனிதன் அறநெறி பிசகாமல் வாழ்வினை நடாத்தினால் இம்மையில் சகல யோகமிக்க பெருவாழ்வும் மறுமையில் தகமை சிவஞான முத்தியும்கிடைக்கும். ஞானத்திற்கு அதிபதியான விநாயகப் பெருமானை இதயத்தாமரையில் இருத்தி வணங்கினால் சகல ஞானமும் எளிதாகக் கிடைத்துவிடும்.

விநாயகப் பெருமானின் கும்பாபிஷேக சிறப்புமலர் ஊடாக குறிப்பாக இளம் சமுதாயத்திற்கு திருக்குறள் கூறும் அறம் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

பதினென் கீழ்க்கணக்கு என்னும் வரிசையில் பதினெட்டு நூல்கள் அடங்கியுள்ளன. இவை அறநூல்கள், நீதிநூல்கள் என்று போற்றப்படுகின்றன. இந்த நீதி நூல்களில் மிகச் சிறந்தவையாக நாலடியாரும் திருக்குறளும் போற்றப்படுகின்றது. 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழியால் இதனை உணரலாம். இந்த இரண்டிலும் திருக்குறள் மிகச் சிறந்தது என்பது புலவர்பலரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

'திருக்குறளில் கூறப்பட்ட அறக்கருத்துக்கள் அனைத்தும் எல்லா மனிதர்களுக்கும் எக்காலத்திற்கும் எச்சூழலிற்கும் ஏற்புடையதாக அமைந்துள்ளன'. எனவேதான் இது உலகப் பொதுமறை என்ற போற்றப்படுகின்றது.

திருக்குறள் காட்டும் அறம்

திருவள்ளுவர் அறம் என்னும் சொல்லைப் பத்து வகையான பொருள்களில் 63 இடத்தில் பயன்படுத்தியுள்ளார்.

1. அறக்கடவுள் (77, 130, 204)
2. அறச்செயல் (93)
3. அறநூல் (141)
4. இல்லறம் (49)
5. ஒழுக்கம் (34, 35)
6. துறவறம் (23)
7. நீதி (32)
8. புண்ணியம் (63, 96)
9. முறைமை (197)
10. வழக்கம் (384)

இவற்றுடன் ஈகை, ஒழுக்கம், கடன், நல்லது, நன்று, முறை ஆகிய சொற்களும் அறத்தையே சுட்டுகின்றன.

திருவள்ளுவர் கண்ட அறம் வெறும் கொள்கை அன்று; செயல் நிலையில் மனித குலத்தின் துன்பத்தைத் துடைக்க உந்தும் ஒரு வகை உளவியல் பேராற்றல் ஆகும். திருக்குறள் சமயச் சார்பற்ற அறநூல் தனி மனித அறத்தையும் சமுதாய அறத்தையும் அனைத்துலக மனிதனுக்கும் வகுத்துரைக்கிறது. காலம், இடம், இனம், மொழி, சமயம் ஆகியவற்றைக் கடந்த நிலையில் அறத்தைப் போதிப்பது வள்ளுவர் வாய்மொழி. இந்துசமயி ஒருவனின் உயர் இலட்சியம் பரம புருஷார்த்தமாகிய வீடுபேறு அடைதல் ஆகும். தனி மனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் அறத்தைப் பேணி வாழ்க்கையை நடாத்துபவர்களுக்கு வீடு பேறு தானாகவே கிடைக்கும் என்பதனால் மனத்தால் நினைப்பதையும்,

இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு 36

என்பதனால் மொழியால் புகழ்தலையும்

கோளில் பொறியின் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை 37

என்பதனால் உடம்பால் வணங்குதலையும் எடுத்துரைக்கிறது.



கடவுட் கொள்கையில் கடவுளின் திருவடி களே உயிர்கட்குப் புகலிடமாகக் கூறப்படுகின்றது. திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரக்

குறள்கள் பத்தில் ஏழுகுறள்கள் கடவுளது திருவடியையே சிறப்பாகக் கூறுகிறது.

கடவுள் வழிபாடு, உள்ளத்தால் நினைத்தல் அல்லது தியானித்தல், வாயால் வாழ்த்துதல், தலையால் அல்லது உடம்பால் வணங்குதல் என்னும் மூன்று வகையில் நிகழ்கிறது. திருக்குறள் கடவுள் வாழ்த்தில் அடி சேர்ந்தார் என இரு குறள்களிலும் தாள் சேர்ந்தார் என இரு குறள்களிலும் வந்துள்ளன.

அடி சேர்ந்தார்

உ+ம் :

1. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்...

2. வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்..

தாள் சேர்ந்தார்

உ+ம் :

1. தனக்குவமையில்லாதான் தாள் சேர்ந்தார்...

2. அறவழி அந்தணன் தாள் சேர்ந்தார்....

"சேர்தல் - நினைத்தல் எனப் பரிமேலழகர் பொருள் கூறினார். புகலிடமாக அடைதல் எனவும் பொருள் கொள்ளலாம். கடவுளைப் புகலிடமாக அடைதல் மனத்தாலன்றிப் பிறவற்றால் ஆகாது. 38

இறைவனை மலர்தூவி வழிபடும் வழிபாட்டு முறையினைப் பற்றித் திருக்குறள் குறிப்பிடுகிறது. மலர் மிசை ஏகினான் என்பதற்குப் பரிதியார் என்பவர் பத்த சனங்கள் இட்ட புஸ்பங்களின் மேல் எழுந்தருளியிருக்கும் சிவன் எனப் பொருள் கூறுகிறார்.

திருக்குறள் கூறும் இல்லறம்



அறம் இல்லறம், துறவறம் என இரு வகைப்படும். நேர்மையான முறையில் வாழ்க்கைக்குத் தேவையான முறையில் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைத் தேடியும், சேகரித்தும் நம்முடையவை என்று உரிமை கொண்டாடும் வாழ்க்கை நிலை இல்லறமாகும். மனைவிக்காக கணவனும் கணவனுக்காக மனைவியும் தியாகம் செய்யத்தூண்டும் பயிற்சிக்களமாகும். இல்வாழ்வான் ஏனைய மூன்று ஆச்சிரம நெறிகளில் நிற்பவர்களாகிய பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவரையும் தாங்கிக் கொள்கிறான். உடலாலும் உள்ளத்தாலும் பொருளாலும் இல்லறத்தான் இவர்களுக்கு உதவியினைச் செய்கிறான். இல்லறமே ஆச்சிரம தர்மத்தின் அச்சாணி எனக் கூறப்பட்டுள்ளது. தர்ம சாஸ்திரங்களில் இல்வாழ்வான் காற்றுக்கு ஒப்பிடப்படுகிறான். இலைகுழைகளும் செடிகொடிகளும் ஜீவராசிகளும் காற்றினால் உயிர்ப்பைப் பெறுவது போல இல்வாழ்வானின் சேவை அனைவருக்கும் உதவுகிறது.

நல்லகணவனும் நல்லமனைவியும் இணைந்து நடாத்தும் இல்லறமே வீடுபேற்றினைத் தரும். கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் குறையாமல் அன்புசெலுத்திக் கருத்தொருமித்துப் பிறருக்குச் செய்யும் அறமே பண்பும் பயனும் உடையதாயிருக்கும் என்கிறார் வள்ளுவர்.

"மனைவியின் சிறப்பே இல்வாழ்வின் சிறப்பு என்பதால் மனையையும் இல்லத்தையும் ஆளும் சிறப்பு அவளுக்கு உண்டு. அன்பு, அமைதி, அடக்கம், அறம் குடிகொண்ட பெண் மனையை ஆளுகின்றபோது தான் மனை ஒளிமயமாய் இருக்கும்.39

கணவன் மனைவி இருவரும் ஒருவர் நெஞ்சில் ஒருவர் நீங்காது இருக்க வேண்டும். இருவரும் ஒருவருக்கு ஒருவர் குறையாத விருப்புடையவராக அமைந்து நடாத்தும் இல்வாழ்விற்கு இணையில்லை.

இல்லறத்தில் ஒழுக்கத்தை இருவர்க்கும் பொதுவாகத் திருக்குறள் கூறுகிறது. மனைவியைப் போல கணவனுக்கும் கற்பு நிலையானது. உன் மனைவியைப் பார்த்து அவளைப் போல நீயும் கற்புடையவனாய் நடந்து கொள்.

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத் தானே கொண்டொழுகின் உண்டு 40

உடம்புக்கு உயிர் வேண்டும். அந்த உயிருக்கு ஓர் உயிராக அன்பு வேண்டும். உடலும் உயிரும் போல அன்பும் வாழ்க்கையும் வேண்டும். அன்பைப் புரிந்து கொண்டால் உடம்பு கூட உனக்குச் சொந்தமில்லை. அன்பு நிறைந்த இல்லத்தில் சிக்கல்கள் வர வழியில்லை. 41

அறத்துப்பாலில் மங்கலம் ஆகிய மனைமாட்சியைச் சொன்ன வள்ளுவர் நன்கலமாய் மக்கட் பேற்றையும் குறிப்பார். மாநிலம் சிறக்க மக்கட் பேறு வேண்டும். அதுவும் அறிவறிந்த குழந்தைகள் வேண்டும். அவர்கள் நம்மைவிட அறிவாளிகளாய் அமைந்து விட்டால் பெற்ற பொழுதைவிடப் பெரிய இன்பம் காணலாம்.

தம்மின் தம் மக்கள் அறிவுடமை மாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாம் இனிது 42

காமத்துப்பாலில் காட்சி, ஐயம் தெளிதல், போன்றதமிழ் அகமரபுகளை விடாமலும் பிரிவு, ஆற்றாமை, ஊடல், கூடல் போன்ற கூறுகளைத் தவிர்க்காமலும் காமத்துப்பாலை அருளிய வள்ளுவர் பரத்தமை யைத் தவிர்த்திருப்பது அற நோக்கிலேயே ஆகும். பரந்தமையைக் கொண்டோரின் வாழ்க்கை அறவழிப்பட்ட வாழ்க்கையில்லை. அது இல்லறமாகாது என்பதே வள்ளுவரின் கருத்தாகும். பரத்தமையை மறுதலிக்கும் இல்வாழ்க்கை மட்டுமே அறவாழ்வும் உரிய வாழ்வும் என்கிறார்.

'பரத்தமையால் உடல் நலக்கேடு, பொருளாதாரச் சீர்கேடு, மனநலக்கேடு, ஆகிய வற்றுடன் சமுதாயத்தால் இழிந்த மகனாக கருதப்பெறும் கேடும் உடன் சேரும் என்கிறார். அறவழிப்பட்ட இல்லறத்தையே வள்ளுவர் வலியுறத்துகின்றார். 43

அறவழிப்பட்ட இல்லறத்தை மேற்கொண் டால் ஆட்கொல்லி நோயாகிய எயிட்சுக்கு இல்லறத்தில் இடம் ஏற்படாது.

திருக்குறள் கூறும் துறவறம்

உரிமைகளையும் உடமைகளையும் விட்டுக் கொடுத்தும் வேண்டாஎனத்துறக்கும் வாழ்க்கை நிலையே துறவு நிலையாகும். யான் எனும் அகப்பற்றையும் எனது என்னும் புறப்பற்றையும் உள்ளத்தால் துறந்து எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் ஒழுகும் வாழ்க்கை நிலையே துறவறமாகும்.

'துறவறத்தின் மேன்மையைப் போற்றும் வள்ளுவர் துறவித் தோல் போர்த்திய போலிச் சாமியார்களைச் சாடுவதிலும் சமுதாய நோக்கினைக் கடைப்பிடிக்கிறார். தேசத்திற்கும் சமுதாயத்திற்கும் மிகப் பெரிய சாபக்கேடு இத்தகைய போலிச் சாமியார்கள் என்பதை முதல்வர்

நெஞ்சின் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன் கணார் இல் 44

என்று உணர்த்துகிறார்.

உலகப் பற்றுக்களைத் துறந்து உற்ற நோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாமல் தவ நெறியில் நின்று சிறப்பென்னும் செம்பொருளைக் கண்டால் அது துறவற நெறி எனப்படும்.

அறவாழ்விற்கு வழிகாட்டும் திருக்குறள்

அனைத்துலக மனிதனைப் பாடியவர் வள்ளுவர். இவர் சாதி, சமயம், இன, இட, மொழி வேறுபாடற்ற மனித சமுதாயத்தைக் காண விழைந்தார். குறுகிய எல்லைகளை எல்லாம் கடந்து, உலகளாவிய நோக்குடன் திருக்குறளைத் திருவள்ளுவர் அருளியுள்ளார். இவருடைய அறக்கொள்கை மிகவும் பரந்துபட்டது. என்றைக்கும் பயன்படும் சிறப்புடையது.



அறம் சிறப்பையும் செல்வத்தையும் தர வல்லது. அறத்தைக்

காட்டிலும் சிறப்பான நன்மையைத் தரும் பொருள் எதுவும் உலகத்தில் இல்லை.

சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும்
அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு 45

வள்ளுவம் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச் சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. மனித வாழ்வியலைக் கூறும் பதிவுகளாகத் திருக்குறள் உள்ளது.

"சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாக திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது" 33

மனிதர்களின் வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவம் மூன்று அறங்களைக் கூறுகிறது.

1. ஆன்மீகம் அறம்
2. ஈதல் அறம்
3. காதல் அறம்

"வள்ளுவம் கடவுளை நம்புகிறது. ஆனால் அது ஆணுமல்ல, பெண்ணுமல்ல. வள்ளுவம் காட்டும் கடவுளுக்கு கோபுரங்கள், கோட்டைகள் இல்லை. வள்ளுவத்தின் கடவுளுக்குக் கணக்கும் இல்லை, வழக்கும் இல்லை, அது பேரறிவு; தூய்மையான அறிவு; குணங்களின் திருவுரு: இன்பத்தின் திருவுரு; அன்பின் திருவுரு; அறத்தின் அடையாளம்'.44

அறத்துப்பால் தனிமனித ஒழுக்கத்தையும் பொருட்பால் சமுதாய ஒழுக்கத்தையும் காமத்துப்பால் காதலர்கள் ஒழுக்கத்தையும் வலியுறுத்துகிறது. சமயத்துறையில் யாதொரு செயல்களையும் தொடங்கும் பொழுது கடவுளை வணங்கியே தொழுதல் வேண்டும் என்பது மரபு. திருக்குறளின் முதல் அதிகாரம், கடவுள் வாழ்த்தாகக் காணப் படுதல் இம்மரபினையே வலியுறுத்துவதாகக் கூற இடமுண்டு.

மக்களாய்ப் பிறந்தவர் கள் கடவுளை மன மொழி மெய்களால் வழிபடுவது இன்றியமையாதது என்பதை வலியுறுத்த வந்த கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரம்.

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக் கவலை மாற்றல் அரிது" 35

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" 30 (குறள் - 50)

"அறத்துப் பாலில் தனிமனிதன் நற்குண நற்செய்கையை உடையவனாய் மனைவி மக்களுடன் அன்பு செய்து வாழ்ந்து, செல்வம் முதலியவற்றின் நிலையாமையை உணர்ந்து, உள்ளத்துறவு பூண்டு, புலன்களை அடக்கி அருளுடையவனாய் மெய்யுணர்ந்து வீடுபேறு அடைய வேண்டும் என்ற கருத்து விளங்குகிறது" 31.

ஒரு தனி மனிதன் தான், சமுதாயத்தில் வாழும் மற்றொரு மனிதன், தன் குடும்பம், தன் சுற்றம், நட்பு, இனம், சமுதாயம், நாடு, உலகமக்கள், உலக உயிர்கள் என்னும் பல்வேறு நிலைகளில் பல்வேறு சூழலில் கைக்கொள்ளத்தக்க பொது அறங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புற்றுள்ள தொடர்புநிலை அறங்கள் ஆகின்றன. இவையே குறளில் பெரும்பான்மையும் நெறிமுறைப்படுத்தி உரைக்கப்படுகின்றன.

"திருக்குறளின் முப்பால்களிலும் ஊடுருவி நிற்பது அறமே; ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டுள்ள முப்பால்களையும் இயக்கிச் செல்வது அறமே எனலாம். மொத்தத்தில் திருக்குறளை ஓர் அறக்களஞ்சியம் என்று சொல்லலாம்.32

அறிவியல் நெறிகளைத்தான் வள்ளுவம் அடிநாதமாகவும் அடித்தளமாகவும் கொண்டுள்ளது. வள்ளுவத்தின் பிழிவு அறச்சாறு மட்டுமே. அடி முதல் நுணி வரை அறம் மட்டுமே மணக்கும் நூல் தான் திருக்குறள். அறம் இரண்டு வகைப்படும்.

1. காலத்திற்கேற்ப மாறுபடும்
2. எக்காலத்தும் யாவர்க்கும் பொதுவான அறங்கள்.

இவை என்றுமே மாறுபடுவதில்லை. இவற்றை அடிப்படையான அறங்கள் என்று கூறலாம். குறளின் அறக்கருத்துக்களை எவரும் மறுத்ததில்லை. இவ்வகையில் அடிப்படை அறங்களையே வள்ளுவம் போதிக்கின்றது என்பது வெள்ளிடை மலை. இன்பமெனும் குறிக்கோளை அடைவதற்கு அறம் நம்மை அழைத்துச் செல்லும். பொருளீட்டுவதிலும் இன்பம் துய்ப்பதிலும் ஒருவன் அல்லும் பகலும் அயராது முயன்றாலும் அவற்றில் அவன் எப்பொழுதுமே வெற்றி பெறுவது இல்லை. ஆனால் அறநெறியில் ஒழுகினால் அதன் பயனை அடைவது உறுதி. ஆனால் அறத்தின் பயனை அடைவதற்கு நெடுங்காலம் காத்திருக்க வேண்டும். முதலில் பல்வேறு இடையூறுகளும் இன்னல்களும் உண்டானாலும் இறுதியிலே அதன் பயனை அடைந்தே தீருவோம் என்பது மட்டும் மறக்க முடியாத ஈ ண்மை ஆகும். 46

"பிறிதொரு நன்மையை அடைய வேண்டும்." என்னும் நோக்கத்தோடு அறத்தைச் செய்வது அறத்தை விலைகூறி விற்பதாகும். எம்மனிதனும் கணப்பொழுதும் அமைதியாகச் செயலற்று இருக்க இயலாது. இதனைத் திருவள்ளுவர் அறச்செயல் என்னும் கருத்தின் மூலம் நிலை நாட்டுகிறார். பயனை எதிர்பாராது பணி செய்தவனின் செயலின் நன்மை கடலைவிட பெரிதாகும்.

பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது 47

தனி மனிதன் அறத்தினை ஒல்லும் வகையெல்லாம் ஓயாது கடைப்பிடித்து ஒழுகினால் அவனுக்கு இம்மை, மறுமை பலன்கள் கிடைப்பது உறுதி என்பது வள்ளுவரின் துணிபாகும்.

"சாமானிய மனிதன் மனிதனாக வாழ, இல்லறத்தில் ஈடுபட்டு ஏற்றமுற, துறவறத்தில் தோய்ந்து ஆன்மீக அனுபவத்தைப் பெற, சமுதாய வாழ்வில் தனி மனிதன் பிறரோடு நல்லதொரு மனித உறவைப் போற்றி வளர்க்கத் திருவள்ளுவர் தமது வான்மறையை வகுத்துள்ளார். 48

திருக்குறளில் சைவசித்தாந்தம்

தமிழினத்திற்குப் பெருமை சேர்க்கும் நூல்களில் தலையாயது திருக்குறள். தமிழர் சிந்தனையில் தோன்றிய உயர்தத்துவம் எனப் போற்றப்படுவது சைவசித்தாந்தம் திருக்குறளில் காணப்படும் சமயக்கருத்துக்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிகுதியாக உள்ளன.

"பிற சமயங்களுக்கு உடன்பாடற்ற கருத்துக்களைத் திருக்குறளில் காணமுடியும் ஆனால் சைவத்துக்கு உடன்பாடற்ற கருத்துக்களைத் திருக்குறளில் காணமுடியாது. குறளின் கருத்துக்கள் மட்டுமன்றி சொல்லாட்சிகள்கூட சைவசித்தாந்த நூல்களில் காணக்கூடியவை. 49

திருக்குறள் சைவ சித்தாந்தம் ஏற்றுக்கொள்கிற கடவுள், வினை, வினைப்பயன், மறுபிறப்பு என்பவற்றை ஏற்றுக்கொள்கிறது. அறத்தினை இறைவன் ஆணை எனக் கொள்கிறது. இறைவன் தன்னிலையில் குணங்கள் இல்லாதவன் குணங்களைக் கடந்தவன். இதனால் நிர்க்குணன், குணாதீதன் என்ற பெயர்கள் இவனுக்குண்டு. கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் வள்ளுவர் கடவுளை எண்குணத்தான் எனக் குறிப்பிடுகின்றார். தன் வயத்தனாதல், தூயவுடம்பின்னாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயற்கையாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகியன எண்குணங்களும் ஆகும். இவை இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது எனப் பரிமேலழகர் திருக்குறளுக்கு எழுதிய உரை நூலில் விளக்கம் தருகிறார். வினைகளை ஆன்மாக்களுடன் சேர்த்து வைப்பதற்கு இறைவன் ஒருவன் தேவை



எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது. செய்வான், செய்வினை, அதன் பயன், பயனை ஊட்டுவான் ஆகிய நான்கும் உள்பொருள் என்பதைத் திருக்குறளும், சைவசித்தாந்தமும் ஏற்றுக் கொள்கிறது.

"உலகத் தோற்றத்திற்கும் வினைப்பயன் அனுபவத்திற்கு வருவதற்கும் இறைவன் அல்லது ஒரு பேராற்றல் தேவையில்லை என்பது சமணர் கொள்கை. உலகியற்றியான் ஒருவன் உளன். அவனே வினைப்பலனை உயிருக்குச் சேர்க்கிறான் என்பது வள்ளுவர் கருத்து. 50

'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான் 51

அறிவின் வடிவினனாக இறைவனைக் கொள்வதை திருமுறைகளிலும் சித்தாந்த நூல்களிலும் காணலாம். மாணிக்கவாசகர் 'அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவே' என்று இறைவனை அறிவாகக் கண்டு போற்றுகிறார். 'அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து' என்று உமாபதி சிவாசாரியார் அருளிய திருவருட்பயனும் இறைவனை அறிவாகக்கண்டு அவரின்வியாபகத்தன்மையை விளக்குகிறது. மெய்யுணர்வினை உடைய வாலறிவன் என்று திருக்குறள் இறைவனைப் போற்றுகிறது.

அறிவுணர்வு, கடவுள் உணர்வு, எனப்பட்ட இருவகை உணர்வும் மக்களுக்குப் பெருகி நன்மை பயக்கும்படி சான்றோர்களால் வகுக்கப்படும் நெறிகள் முறையே ஒழுக்கநெறி வீட்டு நெறி எனக் குறிக்கப்படும் 'கேடில் விழுச்செல்வம்' எனப் போற்றப்படும் கல்வியின் பயனாவது அக்கல்வியைப் பெற்றார் இவ்விரு வகை நெறிகளினும் நிறைவுடன் நிற்கப் பெறுதல் ஆம் என்பது ஆசிரியர் திருவள்ளுவர் உள்ளக் கிடை 52.

திருக்குறள் கூறும் முடிந்த முடிபுகள்

1) மக்கள் உயிர்க்கு உறுதி பயப்பன அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றுமாகும்.

2) பொருளும் இன்பமும் அறத்தை அடிப் படையாகக் கொண்டு ஒழுகின் அல்லது உறுதியாகாது.

3) கடவுள் உண்மைக்கொள்கையும் கடவுள் வழிபாடும் உடையவர்களுக்கு அன்றி மற்றையோருக்குப் பயன்தராது.

4) கடவுளது ஆணையாகிய பணியே அறம்.

5) ஒருவன் ஒரு பிறப்பிற் செய்த அறம் பல பிறப்புகளுக்குத் தொடரும்.

6) முதல்வனது திருவருள் அதன் பயனை வகுத்துத் தருதலால் ஏற்படும்.

7) கடவுளை அறத்தின் முதலாகக் கருதி ஒழுகும் ஒழுக்கம் கடவுளை உணரும் மெய்ந்நெறியாகிய வீடு பேற்றுக்கு வழி வகுக்கிறது.

8) கடவுள் எனப்படும் முதற்பொருள் அறத்தின் முதலாயும் பயனாயும் உள்ளது.

9) திருக்குறளிற் கூறப்படும் மெய்ந்நெறி முடிவுகள் சைவசித்தாந்த முடிபுகளாகவே காணப்படுகின்றன.

பிறப்புக்கு முதல் காரணமாகிய அறியாமை நீங்கி முத்தியின்பத்துக்குக் காரணமாகிய செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வாகும்.

பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு 53

வினைப் பயனைச் செய்தவனே அனுபவிக்க வேண்டும் என்றே சைவசித்தாந்தம் கூறுகிறது. முன் செய்த வினை பயனுக்கு வருவதற்கு உடலோடு கூடிய பிறவி எடுத்து, அதில் புதிய வினை செய்யப்படுகிறது. இதனால் இன்ப துன்ப அனுபவங்கள் கிடைக்கின்றன. இவற்றின் மூலம் அறிவு விளங்குகிறது. ஆணவத்தின் பிடி ஓரளவு குறைகிறது. ஆயினும் புதிதாகச் செய்த வினையின் பலன் அனுபவத்திற்கு வருவதற்கு

மீண்டும் பிறவி எடுக்க வேண்டியுள்ளது. வினையினால் பிறவியும் பிறவியினால் வினையும் என்று பிறவிகள் சங்கிலித்தொடர்போல் மாறிமாறி வருகின்றன. இதனைப் பிறவிப் பெருங்கடல் என்று திருக்குறள் கூறுகின்றது.

பிறவிக் கடலை நீந்திக் கரையை அடைவதற்கு இறையருள் ஒன்று துணைபுரியும். இறையருளைப் பெறாதவர்களால் பிறவிக் கடலை நீந்த முடியாது. அவர்கள் இன்பதுன்ப சுழற்சியிலே சிக்கித்தடுமாறுவார்கள் சைவ சித்தாந்தம் கூறும் இக்கருத்தினை கடவுள் வாழ்த்தின் இறுதிப்பாட்டில் திருக்குறளும் கூறுகிறது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேராதார் 54

"இறையருளை இரண்டு வழிகளில் பெறலாம் அறிவின் வழி ஒன்று, அன்பின் வழி இன்னொன்று; அறிவினால் அவனின் பெருமையையும், பேரருளையும் உணர்ந்தபோது அவன்எமக்குஅன்னியம்இல்லாதவன்எம்முடன் இருந்து எமக்கு உதவுபவன் என்ற உறுதியான எண்ணம் உண்டாகிறது. அப்பொழுது அவனின் திருவடியை நோக்கி ஆன்மா செல்லும். 55

வாழ்வின் உயர்விற்கு வழிகாட்டும் வள்ளுவரின் அறிவுரைகள்

திருக்குறள் வாழ்க்கைக்கு இலக்கணம் கூறும் அறநூல். தமிழ் இனத்தின் சிந்தனைமுதிர்ச்சியைத் திருக்குறளில் காணலாம். வள்ளுவருடைய அறிவுரைகள் அனைத்துலகையும் வாழ்விக்க வழிகாட்டும் வான்பொருள்கள் அனைத்துலக மனிதனைப் பாடும் பாவலர் வள்ளுவர் என்று ஜி.யு.போப் ஐயா அவர்கள் கூறியுள்ளார்கள். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் மனித வாழ்வின் மூன்று நிலைகளாகும். அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நிற்கின்றன. வாழ்க்கை நெறியின் உடலாகப் பொருளையும், உயிராக அறத்தையும் உணர்வாக இன்பத்தையும் வள்ளுவர் கொண்டுள்ளார்.

திருக்குறளின் கருத்திலும் உரையிலும் காணப்படும் காலதேசச் சுவடுகள் மிக மிகக் குறைவாகும். வள்ளுவர் அறிவுறுத்துகின்ற அனைத்தும் மனித இனத்திற்குப் பொதுவான ஒழுக்கமும் அறிவுமாகும். ஒவ்வொருவரும் அடைய வேண்டிய குறிக்கோள் மட்டும் நன்மை பயப்பதாக இருந்தால் போதாது, அதனை அடைவதற்கான வழிமுறைகளும் செயல்முறைகளும் தூய்மையானதாக இருத்தல் வேண்டும் எனத் திருக்குறள் கூறுகிறது. பெற்றதாய் பசியால் வாடும் வறிய நிலையில் இருப்பினும் அப்பசியைப் போக்குவதற்காக சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்தல் கூடாது.

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை 56

பிறருக்குக் கேட்டைத் தருகின்ற தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக்கூடாது. கேடு நினைப்பவனுக்கே கேடுவிளையும் என்பதைப் பின்வரும் திருக்குறள் விளக்குகிறது.

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம் சூடும் சூழ்ந்தவன் கேடு 57

"தீமை செய்வது மட்டும் அன்று, தீமை எண்ணுவதும் கூடாது. தீய எண்ணம் எண்ணுவதும் வீண்போகாது; எண்ணத்தளவில் விதைத்த தீமை விளைந்தே தீரும். இது அறத்தின் சட்டம்; மீற முடியாத சட்டம். ஆகையால் மறந்தும் மற்றவனுக்கு கெடுதியானதை எண்ணக்கூடாது. எண்ணினால் எண்ணியவனுக்குக் கெடுதி விளையுமாறு அறம் எண்ணிவிடும் 58

"பேராசையால், பொறாமையால், அகங்காரத்தால் கோபம், பகைமை இவற்றுக்கு ஆட்பட்டுப் பிறருக்குத் தீமை செய்ய எண்ணினால், தனது கடமை நன்மை செய்வதே என்பதை மறந்து தீமை



செய்யத்திட்டம் இட்டால், அறத்தின் துணை இல்லாமல் போகும். 59

பொருள் சேர்ப்பதும் துன்பம் துய்ப்பதும் மனித முயற்சியின் பொதுவான குறிக்கோளாய் இருக்கிறது. சமுதாய வளர்ச்சிக்குப் பொருள் ஈட்டுவதும், இன்பம் துய்ப்பதும் வேண்டப்படுகிறது பொருளும் இன்பமும் அறத்தின் வழி வருதலே பண்பட்ட சமுதாயத்திற்கு ஏற்றதாகும். இதுவே பண்டைத் தமிழரின் சிறப்புடைய மரபாகவும் இருந்தது.

"சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படு உம் தோற்றம் போல" 60

அறம் செய்பவனுக்குச் செல்வம் கிடைக்கும். செல்வத்தால் பெறக்கூடிய இன்பமும் கிடைக்கும். அறத்தின் வழி வரும் செல்வமும் இன்பமுமே உயர்ந்தன என்ற கருத்தை வள்ளுவரும் அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தில் தருகிறார்.

சிறப்பு ஈனும்: செல்வமும் ஈனும்: அறத்தின் ஊங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு 61

"எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் அப்பழுக்கு அற்றவனாக வாழ வழி செய்வது அறம். அது மட்டும் அன்றி உதவி செய்பவனாக வளர்ப்பது அறம். இப்படி வாழ்ந்தால் கிடைக்கும் பரிசு மனநிறைவு; அதற்கு மேல் பாராட்டு; பல சிறப்புக்கள். எல்லாச் சிறப்புக்களையும்விட உயர்ந்தது, உள்ளம் உயர்ந்து, பாவ எண்ணத்திலிருந்து என்றென்றும் விடுபடுவதேயாகும். 62

அறவாழ்வு வாழ்பவன் மனிதனில் தெய்வமாக உயர்ந்துவிடுவான். அறவாழ்வு வாழ்பவனின் வார்த்தைகள் தெய்வவாக்காகவே இருக்கும். அறநெறி தவறாத ஒரு சமுதாயம் உருவாக வித்தைக்கு அதிபதியாகிய விநாயகனை நாம் அனைவரும் வேண்டித் துதித்து வணங்குவோமாக.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

"உருத்திராட்சமாலை தரிக்காமல் சிவபூசை செய்வோர் அதனால் வரும் பயனைப் பெறார். ஆகையால் உருத்திராட்சம் தரித்துக்கொண்டே சிவபூசை செய் சிவபூசையைக் கூறவே சிவமந்திரசெபம், சிவாலய சேவை முதலிய பிற புண்ணியங்கள் செய்யும் போதும் உருத்திராட்சம் தரித்தல் வேண்டும் என்பது சொல்லாமலே பெறப்படும்

- சைவசமய நெறி

"பூண்பதற்குக் கண்டிகையினைக் கூசியிடும் புல்லியரைக் காண்பதற்குக் கூசும் அரன் கைத்து"

- சைவ சமயநெறி

ஈழநாடும் விநாயகர் வழிபாடும்

சிவபூமி எனத் திருமூலர் சுவாமி களால் போற்றப்பட்ட ஈழநாட்டின் இருதய மாக விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப் பாணத்தில் பலநூறு வருடப் பழமை வாய்ந்த வழிபாடாக விநாயகர் வழிபாடு நிலவி வருகின்றது. விநாயகருக்குத் தனிக்கோயிலும் ஏனைய தலங்களில் விநாயகருக்குப் பரிவாரக் கோயிலும், ஸ்தம்ப மண்டபத்தில் விநாயகரை வரவேற்புத் தெய்வமாக இருத்துகின்ற பாரம்பரியமும் யாழ்ப்பாணத்தின் தொன் மைப் பண்பாடாக விளங்கிவருகின்றது. மேலும் எச்சுபகாரியங்களிலும் பசுவின் சாணியில், மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து கருத்திற் கொள்வதும், மார்கழி மாதத்தில் இல்லங்கள் தோறும் கோலமிட்டு விநாயகரை முப்பத்தொரு நாட்கள் பிடித்து வைக்கும் வழக்கமும் யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய விநாயகர் வழிபாட்டு அம்சமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயர் இலங்கையை 1505ஆம் ஆண்டு கைப்பற்றுவதற்கு முன்பு சைவசமயமும் சிவாலய வழிபாடும் ஈழநாட்டில் மிகவும் எழுச்சி பெற்று விளங்கிய மையை வரலாறு கூறுகிறது. அன்னியர் வருகைக்கு முன்பு ஈழத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மன்னர்கள் கட்டிய பெரிய விநாயகர் கோயில்கள் இருந்தன என்பதற்கு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், வாய்மொழி மரபுச் சான்றுகள் உள்ளன. சோழநாட்டு அரசிளங்குமரி மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் மாறும் பொருட்டு கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் நீராட வருகைதந்து தீராத நோய்மாறி நலம் பெற்றதற்காகப் பல பெருங்கோயில்கள் அவளது ஞாபகமாகக் கட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மட்டுமின்றி அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயில், வறுத்தலைப் பிள்ளையார், கொல் லங்கலட்டிப் பிள்ளையார், பெருமாக்கட வைப்பிள்ளையார் போன்ற விநாயகர் தலங் கள் அரசிளங்குமாரி காலத்தில் எழுந்தவை யெனவும் அவை பின் போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டன எனவும் கூறப் படுகின்றது. 1109இல் கருணாகர மன்னன் இணுவில் உரும்பிராய் கிராம எல்லையில் கருணாகரப்பிள்ளையார் கோயிலைக் கட்டு வித்தான் என அங்குள்ள கல்வெட்டு சான்று கூறுகின்றது.

கி.பி. 1475இல் சிங்கைப் பரராஜ சேகரன் யாழ்ப்பாணத்தை ஆண்டபோது நல்லூர் நகரத்தின் நான்கு புறங்களிலும் பெருங்கோயில்களைக் கட்டுவித்தான். கிழக்குத் திசையில் அவன் கட்டுவித்த வெய்யி லுகந்தப் பிள்ளையார் கோயில் முன்காலத்தில் மிகப் பிரசித்தமாக விளங்கியுள்ளது.

சிங்கைப் பரராஜசேகரனின் மைத்துனனும், மந்திரியுமான அரசகேசரி, நல்லூர் ராசவீதியில் குதிரை வண்டியில் போகும்போது நீர்வேலியில் குதிரை திசைமாறி வேகமாக ஓர் குளத்தை நோக்கிச் சென்றதாகவும், அவ்விடத்தில் தனது நேர்த்தியாக அரசகேசரி மிகப்பெரிய விநாயகர் கோயிலைக் கட்டியதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இத்திருக் கோயில் இன்று நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் என அழைக்கப் படுகிறது.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளை யார் கோயில் என்று இன்று அழைக்கப்படும் விநாயகர் கோயிலைத் தமிழ்வேந்தன் பரராசசேகரன் கட்டிப் பேணினான் என்றும், அன்னியர் வருகையால் அத்தலம் முற்றாக அழிந்து பின் அருகில் இருந்த



தீர்த்தக்கேணியிலும், மடத்திலும் பிள்ளையாரை மக்கள் பூசித்து வந்ததால் மடத்துவாசல் பிள்ளையார் என இக்கோயில் அழைக்கப்பட்டு வந்ததா கவும் இத் திருக்கோயில் பற்றிய வரலாற்று நூல் குறிப்பிடுகின்றது. பரராஜசேகர மன்னனின் சகோதரன் செகராசசேகரனால் கட்டப்பட்ட கோயில் அன்னியரால் அழிக்கப்பட்டதாக கூறப்பட்டாலும் இன்றும் இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் கோயில் என்ற நாமத்துடன் ஒரு கோயிலுள்ளது.

ஈழத்துப் புராதன சிவாலயங்களிலும் ஏனைய முருகன் தலங்களிலும் விநாயக வழிபாடு சிறப்புற்று விளங்கியுள்ளது. கீரிமலைப் பகுதியில் கடற்கரை எல்லையில் நிலத்தின்கீழ் மிகப்பழைய விநாயகர் விக்கிரகம் கண்டுடெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாணம் - செயலர் பிரிவு

வில்லூன்றி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

இராமபிரான் சிவபூசை செய்த இடம் எனவும், அவரது வில்பட்டு நன்னீர் ஊற்று தோன்றியதால் பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படும் இவ்வூரில் நூறு வருடத்திற்கு மேற்பட்ட விநாயகர் விக்கிரகம் காணப் படுகிறது. கல்வெட்டுக்கள், சாசனங்கள் உள.

ஞான செல்வவிநாயகர் கோயில் கொய்யாத்தோட்டம் சுண்டுக்குளி

1760 இல் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம்.

கரப்பிரான் பிள்ளையார் கோயில் - ஆனைக்கோட்டை

நூற்றி ஐம்பது வருட வரலாறு கொண்ட கோயில்.



ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் - அத்தியடி

இவ்வாலயத்தில் நூறு வருடங்களுக்கு முன் சிதம்பரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நர்த்தன விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடைபெற்றது.

வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்

பழமைவாய்ந்த இவ்வாலயத்தில் சித்தி புத்தி சமேத விநாயகர் அமைந்திருப்பது சிறப்பு அம்சமாகும்.

நல்லூர் - செயலர் பிரிவு

கைலாயபிள்ளையார் கோயில், நல்லூர்

நல்லூர் தமிழ்வேந்தர் காலத்தில் எழுந்த இவ்வாலயம் போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டது. இவ்வாலயத்தில் வடக்குக் கருவறையில் சிவனும், நடுவே விநாயகரும் தென்திசை நோக்கி அம்மனும் இருப்பது குறிப்பிடத்தக்கது. போரில் அழிந்த இவ்வாலய விக்கிரகங்கள் மறைத்து வைத்துப் பாதுகாக்கப்பட்டு, மீண்டும் ஆலயம் எழுப்பப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்ட தாக வரலாறு கூறுகிறது. இவ்வாலயத்திற்கு அருகிலேயே நல்லைநகர் நாவலர் பெருமான் பிறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாவலரது உறவினர்களே மீண்டும் இவ் வாலயத்தைக் கட்டினர். நாவலர் பெருமான் இவ்வாலயம் மீது ஊஞ்சல், பிரபந்தம் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

தொண்டைநாட்டைச்சேர்ந்தயாழ்பாடியின் காலத்தில் அவரது முதல் அமைச்சர் சேதிராயரின் வேண்டுகோளின்படி கச்சிக்கணேசப்பர்என்னும் அந்தணரால் பிள்ளையார் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக ஆலய வரலாறு கூறுகின்றது. இவ்வாலயம் பற்றி யாழ்ப்பாணச் சரித்திரநூலில் குறிப்புக்கள் காணப்படு கின்றன.

நல்லூர் பண்டாரிக்குளம் பிள்ளையார் கோயில்

100 வருடப் பழைமைமிக்க கோயில்.

திருநெல்வேலி கிழக்கு தலங்காவற் பிள்ளையார் கோயில்.


திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்



தீபஸ்தாபனம்



கிரியாகால நிகழ்ச்சியில் பரதம்



சு. சுதாகரன் அவர்கள் அன்பளிப்புச் செய்த பணத்தினை
ஆறுதிருமுருகன் அவர்கள் தேவஸ்தானம் சார்பில்
அநாதைச் சிறுவனுக்கு வழங்கும்போது



செயலாளர் கௌரவிக்கப்படும்போது

ஆலய நிர்வாக சபையினர்



இடமிருந்து வலம்: திரு. மு. சதானந்தன், திரு. கு. கமலயோகேஸ்வரன், திரு. மா. இராமலிங்கம், திரு. க. சிவம், திரு. ர. யோகராஜ், திரு. ச. கருணைநாதன், திரு. வை. கண்ணதாசன், திரு. க. ஜெகநாதன், திரு. க. தேவராஜா, திரு. க. செல்வக்குமாரன், டாக்டர். சு. ரவிராஜ், திரு. ம. கோணேஸ்வரன், திரு. பா. பாலபத்மன், திரு. தே. ராஜ்குமார், திரு. ஜ. கெங்காதரன், திரு. செ. யோகநாதன், திரு. சி. பாபுதாஸ், திரு. ச. நடராசா, திரு. இ. கவிக்குமார்

சமூகமளிக்காதோர் : திரு. இ. கார்த்திகேயன், தெய்வத்திரு. ச. சூரியகுமார்

கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் கோயில்

1880 இல் இவ் ஆலயம் மடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று எழுச்சி பெற்றுள்ளது. இவ் ஆலயத்தில் கந்தையா சுவாமிகள் (குடைச்சாமியார்) என்ற சித்தரின் சமாதிக்கோயிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கோண்டாவில் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில்

இவ்வாலயம் பற்றிய ஐதிகக் கதை களில் செகராசசேகர மன்னனே இக் கோயி லைக் கட்டினான் எனச்சொல்லப்பட்டு வருகிறது.

கோண்டாவில் நெட்டிலிப்பாய் விநாயகர் கோயில்

இவ்வாலயம் இன்று கோபுரத்தோடு பெருங்கோயிலாக வளர்ச்சி பெற்றுள்ளது.

சண்டிலிப்பாய் செயலர் பிரிவு

மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில்

மருதமர அடியில் விநாயகர் தானாகத் தோன்றியதாக ஐதிகம். எழுநூறு வருடமாக மருதமரம் உயிருடன் இருப்பதாக, அதன் தெய்வீகத்தன்மையை மக்கள் போற்றுகிறார்கள். ஆலய முன்றலில் மாட்டினை உணவுக்காக டச்சுக்காரர் வெட்டியபோது ஆலயக்கருவறை விநாயகர் மேற்குத் திசை நோக்கித் திரும்பியதாக வாய்மொழி மரபாகப் பேசப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த விநாயகர் தலமாக இத்தலம் இன்று விளங்குகிறது.

கட்டுடை அரசடி விநாயகர் கோயில், வடசேகரப் பிள்ளையார் பெரிய விளான் - பண்டத்தரிப்பு, மாதகல் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில், மாசியப்பிட்டி குளக்கரைப் பிள்ளையார் கோயில், இளவாலை கூத்துமலைப் பிள்ளையார் கோயில், வடலியடைப்பு புதராளை சித்திவிநாயகர் கோயில், சங்கானை வடக்கு விநாயகர் கோயில் என்பனநூறு வருடம் பழைமை வாய்ந்த கோயில்களாகும்.

கல்வளை ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

முந்நூறு வருடப் பழைமைமிக்க ஆலயம். நவாலியூர் சோமசுந்தரப்புலவரால் பாடப்பட்டது.

உடுவில் - செயலர் பிரிவு

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்

தமிழ் வேந்தர்கால வரலாறு கொண்ட கோயில்

இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் கோயில்

தமிழ்வேந்தர் வரலாறு பேசப்படும் கோயில் கி.பி. 1475 இல் கட்டப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவைச் சித்திவிநாயகர் கோயில்

மிகவும் பழைமை வாய்ந்த இத்திருக்கோயில் மீது வித்துவான் கணேசையர் பாமாலை பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுன்னாகம் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் ஆலயம்

வரத பண்டிதர் தான் இயற்றிய "பிள்ளையார் கதை" எனும் நூலை இவ்வாலயத்தில் அரங்கேற்றினார் என அறியப்படுகிறது.

இணுவில் கம்பனைப் பிள்ளையார் கோயில்

இவ் ஆலயத்தை அரசோலைப் பிள்ளையார் எனவும் அழைப்பர். சித்தர்கள், யோகிகள் இவ்விடத்தில் முன்பு தவம் செய்ததாக ஐதீகம்.

உடுவில் கற்பக விநாயகர் கோயில்

இணுவில் உடுவில் எல்லையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. நூறு வருட வரலாறு இவ்வாலயத்திற்கு உண்டு.

உடுவில் கற்பக்கொனை விநாயகர் கோயில்

உடுவில் குளத்திற்கு அருகில் அமைந்த இவ் ஆலயம் நூறு வருட வரலாறு கொண்டதாகவுள்ளது.

ஏழாலை ஆலங்கட்டை விக்னேஸ்வரர் கோயில்

ஏழாலைகிராமத்திலுள்ள பழைமை மிக்க விநாயகர் ஆலயம்.

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் கோயில் ஈவினை கற்பகவிநாயகர் கோயில்

நூறு வருடங்களுக்கு மேல் வரலாறு கொண்ட கோயில்



உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் கோயில்

மானிப்பாய் உடுவில் வீதியில் அமைந்துள்ள இவ்வாலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது. மூலமூர்த்தி, பணிக்கர் காலத்தது என வரலாற்றாளர் குறிப்பிடுகின்றனர். இவ்வாலயம் அருகே 300 வருடகாலதிருக்கேணி காணப்படுகிறது.

தாவடி வேதவிநாயகர் கோயில் ·

புராதன கோயில்கள் :

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார், குப்பிளான் சொக்கர்வளவு விநாயகர், கந்ததேராடை ஆலடிப்பிள்ளையார், சங்குவேலி சிவஞானப் பிள்ளையார்.

தெல்லிப்பழை - செயலர் பிரிவு

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில்

மாருதப்புரவீகவல்லியால் கட்டப் பெற்றது. மிகவும் புராதன வரலாறுடைய கோயில்.

அளவெட்டி அளகொல்லை ஸ்ரீ விநாயகர் கோயில்

மாருதப்புரவீகவல்லியால் ஸ்தாபிக்கப்பட்டு, பின் அந்நியர் வருகையால் அழிந்து 1845இல் மீண்டும் கட்டப்பெற்ற கோயில்.

இளவாலை ஆனைவிழுந்தான் விக்னேஸ்வரர் கோயில்

மாருதப்புரவீக வல்லி தான் அமைத்த விநாயகர் ஆலயங்களைத் தரிசிக்கச் செல்லும்போது அவருடைய யானை இந்த ஆலயத்தில் விழுந்து வணங்கிய தலமாகையால் இந்தப் பெயர் இவ்வாலயத்திற்கு ஏற்பட்டது. மூலமூர்த்தி சுயம்புலிங்கத் துடன் கூடிய விநாயகர்.



கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்

மாருதப்புரவீகவல்லியால் கட்டப் பெற்ற திருத்தலங்களில் இதுவுமொன்று.

அளவெட்டி பெருமாக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

மாருதப்புரவீகவல்லியால் கட்டப்பெற்றஏழு திருத்தலங்களில் இதுவுமொன்று. பத்தாயிரம் சதுரஅடி விஸ்தீரணமான தொன்மைமிக்க தாமரைக் குளம் இவ்வாலயம் அருகே காணப்படுகிறது. இவ்வாலயம் தொடர்பாக யாழ்ப்பாண வைபவமாலை என்ற ஆதிநூலில் சில தகவல்கள் காணப்படு கின்றன.

காங்கேசன்துறை காயாத்துறை ஆனந்தப் பிள்ளையார் கோயில்

ஆதியில் எழுந்த கோயில்களில் ஒன்றாகக் கருதப்படும் இக்கோயில் பற்றிய வரலாறு தெட்சணகைலாய மான்மியம், யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிட்டு இருப்பது சிறப்பம்சமாகும்.

தெல்லிப்பளை நீலியம்பனைப் பிள்ளையார் கோயில்

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் நீலி என்ற ஒரு வயதான அம்மையார் பனை மரத்தடியில் விநாயகரைப் பூசித்து வந்ததாக வரலாறு கூறுகிறது.

தெல்லிப்பளை காசி விநாயகர் கோயில் - (காசிப்பிள்ளையார்)

காசியிலிருந்து மூலவிக்கிரகம் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயில்.

கட்டுவன் சோழங்கராயர் விக்கின விநாயகர் கோயில்

நூற்றைம்பது வருட கால வரலாற்றி னைக் கொண்ட கோயில்

அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் கோயில்

பல வருடங்களுக்கு முன்னர் சம்பந்தஞானி என்றஇளவரசர்சமாதி அடைந்தஇடம். குருக்கள் ஒருவர் கிணறு ஒன்றைத் தோண்டியபோது அதில் தோன்றிய விநாயகரே வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

தெல்லிப்பளை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் கோயில்

நூறு வருடங்களுக்கு மேல் பழமைமிக்க கோயில்

கீரிமலை தீர்த்தக்கரைப் பிள்ளையார்

கிரிமலையில் தீர்த்தமாடும் அடியவர்கள் முதலில் வழிபாடு செய்யுங் கோயிலாக இவ்வாலயம் விளங்குகிறது.

பலாலி வடக்கு கொல்லன் கலட்டிப் பிள்ளையார் கோயில்

ஆதி விநாயகர் கோயில்களிலொன்று.

தையிட்டி அரசடி சித்திவிநாயகர் கோயில்

500 வருடங்களுக்கு முன்னர் இரண்டாம் இராஜேந்திரன் சோழமன்னனின் மந்திரி வரராசசிங்கன் இந்தியாவில் இருந்து மூர்த்தம் கொண்டுவந்து இவ்வாலயம் உருவாக்கப்பட்டதாக இவ்வாலய வரலாறு கூறுகிறது.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில்

150 வருட வரலாறு கொண்ட கோயில்.

பருத்தித்துறை - செயலர் பிரிவு

குடத்தனை காளிவயல் வீரகத்திப் பிள்ளையார் கோயில்

பழைய வரலாறு மிக்க ஆலயம்

பருத்தித்துறை அம்மன் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்

பழைய சிறிய ஆலயம்.

வல்விவட்டித்துறை நெடியகாடு - திருச்சிற்றம் பலப் பிள்ளையார் கோயில்

1824 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

பருத்தித்துறை அத்தியடிப் பிள்ளையார் கோயில்

மிகவும் தொன்மைமிக்க தலம்.

நூறுவருடப் பெருமை மிக்க பிற ஆலயங்கள்

துன்னாலை - நுணுவில் குளக் கோட்டு விநாயகர் கோயில்

வல்லிபுரக்குறிஞ்சி - குருக்கட்டுப் பிள்ளை யார் கோயில்

புலோலி - ஆத்தியவத்தை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்

தும்பளை - சணக்கிலாவத்தை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

பொலிகண்டி - உப்புக்கிணற்றடி சித்தி விநாயகர் கோயில்

துன்னாலை - வல்லியானந்தப் பிள்ளையார் கோயில்

பருத்தித்துறை - கனகராவளவுப் பிள்ளையார் கோயில்

குடத்தனை - ஆயிலடிப்பிள்ளையார் கோயில்

தும்பளை பெரியவளவு - ஸ்ரீவரதவிநாயகர் கோயில்

அல்வாய் வடக்கு - மாயக்கைப் பிள்ளையார் கோயில்

நெடியகாடு - பிள்ளையார் கோயில்

பருத்தித்துறை - ஸ்ரீ தெணிப்பிள்ளையார் கோயில்

வல்விவட்டித்துறை - கப்பலுடையவர் விநாயகர் கோயில்

தொண்டைமானாறு - தச்சன் கொல்லை பிள்ளையார் கோயில்

பருத்தித்துறை - கொட்டடிச் சித்தி விநாயகர் கோயில்

குடத்தனை - பிள்ளையார் கோயில்

பருத்தித்துறை - சின்னப்பிள்ளையார் கோயில்

மந்திகை வைத்தியசாலை - பிள்ளையார் கோயில்

தம்புருவளை தும்பளை சித்திவிநாயகர் கோயில்

ஒல்லாந்தர் கால வரலாறு கொண்ட கோயிலாக விளங்குகிறது.

கரவெட்டி - செயலர் பிரிவு

அல்வாய் தில்லையம்பலப் பிள்ளையார் கோயில்

வட இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். எண்கோண வடிவில் (மாட்டுத்தொழுவம் போல்) அமைந்த இவ் ஆலத்திற்குப் பல கர்ணபரம்பரைக் கதைகள் வாய்மொழி மரபாகப் பேசப்பட்டு வருகின்றன. மாடுகளுக்கு நோய் ஏற்படும் போது இத் தெய்வத்துக்கு பலவூர்



அடியவரும் நேர்த்தி செய்வர். வேளாண்மை சிறக்க நேர்த்தி வைப்பர். தினமும் குடம் குடமாக பால் அபிஷேகம் நடைபெறும்.

கப்புதூர் வீரகத்திப்பிள்ளையார் கோயில்

முந்நூறு வருடங்கள் பழைமையான தென்பது வரலாறு. கோவிற் புராணமுண்டு.

மாலைசந்தி அல்வாய் வரதராய விநாயகர் கோயில்

200 வருட வரலாறு கொண்ட கோயில்.

கரவெட்டி கிழக்கு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோயில்

தோம்புக்காலத்திற்கு முந்திய கோயில். இதற்கான நாட்டுப்பாடல்கள் உள்ளன.

கரவெட்டி வெல்லம் விநாயகர் கோயில்

150 வருட வரலாறுமிக்க கோயில்.

கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் கோயில்

1856இல் கொற்றர் பரமர் புண்ணியமடத்தில் உருவாகி இன்று பெருங்கோயிலாக விளங்குகிறது.

நூறு வருடப் பழைமை மிக்கவை

அல்வாய் புதுக்குளம் - கூரைப்பிள்ளையார் கோயில்

வல்லைவெளி - பிள்ளையார் கோயில்

வதிரி - மாணிக்கப்பிள்ளை யார் கோயில்

அல்வாய் - அரசடி விநாயகர் கோயில்

உடுப்பிட்டி - இமையாணன் கும்ப வாளி வீரகத்தி விநாயகர்

உடுப்பிட்டி - சமரபாகுதேவன் குறிச்சி கற்பக விநாயகர் கோயில்

வதிரி - அல்வாய் பூவர்க் கரைப் பிள்ளையார் கோயில்

கரணவாய் - வெற்றிக் காட்டுப் பிள்ளையார் கோயில்

வல்வெட்டி - மாடந்தை வீரகத்திப் பிள்ளையார் கோயில்

துன்னாலை - வல்லியானந்தப் பிள்ளையார் கோயில்

வதிரி - கனகரத்தினப் பிள்ளையார் கோயில்

அல்வாய் - குமிழடி விநாயகர் கோயில்

உடுப்பிட்டி - சித்திவிநாயகர் கோயில்

கரவெட்டி - கிழவி தோட்டம் விநாயகர் கோயில்

கரணவாய் - கலட்டிப் பிள்ளை யார் கோயில்

கோப்பாய் - செயலர் பிரிவு

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோயில்

அரசகேசரி மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றுக் கோயில்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில்

கல்வெட்டுச் சாசனங்களைக் கொண்ட தமிழ் வேந்தர் காலக் கோயில்

கோப்பாய் வெள்ளெருகலை - பிள்ளையார் கோயில்

300 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த தலமாகும்.

தம்பாலை கொல்லன்கலட்டி பொன்னம் பலவாணர் சித்திவிநாயகர் கோயில்

பழைமை வாய்ந்த கோயில்

உரும்பிராய் ஓடையம்பதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

1612 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பெருங்கோயில்.

அச்சுவேலி தோம்பூர் போதிராப்பிட்டிப் பிள்ளையார் கோயில்

மிகவும் பழைமை வாய்ந்த ஆலயம்.

கோப்பாய் வராம்பற்றை இலுப்பையடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்

மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயம். வயல் சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ளது.

வடகோவை ஸ்ரீ செல்வவிநாயகர் கோயில்

1839 ஆம் ஆண்டில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

சாவகச்சேரி - செயலர் பிரிவு

சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோயில்

200 வருடப் பழைமை வாய்ந்த ஆலயம். தலவிருட்சம் பெரிய மாமரம். அதன் சுற்றளவு 15 அடி.

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ வேதனப் பிள்ளையார் கோயில்

நூறு வருடங்களுக்கு முன் வேதாரணியப் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

கொடிகாமம் குளக்கட்டுப் பிள்ளையார் கோயில்

180 வருடப் பழைமைமிக்க ஆலயம்.

தாவளைசேகரப்பட்டி வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்

200 வருடப் பழைமை வாய்ந்த ஆலயம்.

மீசாலைதிருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்

200 வருடப் பழைமை வாய்ந்த ஆலயம்.

200 வருட பழைமை வாய்ந்த இப்பிரதேச ஆலயங்கள்

மட்டுவில் - செல்லப்பிள்ளையார்

சரசாலை - சிதம்பர விநாயகர்

புராணக்கேணி - ஸ்ரீ விரகத்தி விநாயகர்

மட்டுவில் - பனையடி வீரகத்திப் பிள்ளையார்

கும்பாவெளி - பிள்ளையார் கோயில்

மத்துவில் - தோட்டத்துப் பிள்ளை யார் கோயில்

மிருசுவில் - குருக்கள் மாவடி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

கல்வயல் - சித்தன் மாவடிப் பிள்ளையார் கோயில்

மறவன்புலோ - வள்ளக்குளம் வீரகத்திப் பிள்ளையார் கோயில்

கல்வயல் - புலுட்டையன் ஆயிலடிப் பிள்ளையார் கோயில்

கரம்பைக் குறிஞ்சி - கொம்புதட்டி ஸ்ரீ பிள்ளையார் கோயில்

வரணி -ஆரியர் கறுக்காய் - சித்திவிநாயகர் கோயில்

வரணி - கும்பிட்டான் புலம் ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில்

மிருசுவில் - அரசடிப்பிள்ளையார் கோயில்

நுணாவில் -கொல்லங்கிராய் பிள்ளையார் கோயில்

நாவற்குழி - ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

பெருங்குளம் - ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோயில்

நுணாவில் - புலுட்டையன் பிள்ளையார் கோயில்

நுணாவில் - மருதடிப் பிள்ளையார் கோயில்

நுணாவில் - வீரகத்திப் பிள்ளையார் கோயில்

வேலணை - செயலர் பிரிவு

நயினாதீவு செம்மணத்தம்புலம் வீரகத்தி விநாயகர் கோயில்

வேதாரணியம் வீரட்டானேஸ்வரர் ஆலயத்திற்கும் இவ்வாலயத்திற்கும் தொடர்புண்டு. 500 வருடப்பழைமை வாய்ந்தது.

பெரியபுலம் வீரகத்தி விநாயகர் கோயில்

600 வருடகாலப் பழைமைமிக்க ஆலயம்.

புளியங்கூடல் பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் கோயில்

300 வருட வரலாறு கொண்ட கோயில் .

புங்குடுதீவு பெருங்காடு சித்திவிநாயகர் கோயில்

300 வருட வரலாறு கொண்ட கோயில்

100 வருடக் கோயில்கள் :

இலந்தைக்காடு -வேலணை - ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

மண்கும்பான் - வள்ளைப்புற்றடி விநாயகர் கோயில்

மண்டைதீவு - திருவெண்காடு சித்தி விநாயகர் கோயில்

புங்குடுதீவு - ஆரியநாயகன்புலம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

ஊர்காவற்றுறை - செயலர் பிரிவு

காரைநகர் மருதடி ஸ்ரீ வீரகத்திவிநாயகர் கோயில்

1750 இல் ஸ்தாபிக்கப்பட்டது. தலவிருட்சம் மருதமரம்.



களபூமி கரப்பிட்டியங்கனை விக்கினேஸ்வரர் கோயில்

150 வருடப் பழைமைமிக்க கோயில்

100 வருடக் கோயில்கள்

காரைநகர் துறைமுகம் - சித்திரகூட ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

நாரந்தனை இரந்தன் - ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்

அனலைதீவு அரசன்புலம் - ஸ்ரீசங்கரநாதர் கணபதிப்பிள்ளை யார் கோயில்

நெடுந்தீவு - செயலர் பிரிவு

நெடுந்தீவு நெழவினி சித்தி விநாயகர் கோயில்

500 வருடங்களுக்கு முற்பட்ட கோயில். கல்வெட்டுக்கள், சாசனப் பாடல்கள் உள்ளன. இராமேஸ்வரத்துடன் நெருங்கிய தொடர்புடைய கோயில். போர்த்துக்கீசர் காலத்தில் மூலமூர்த்தி மறைக்கப்பட்டு பின் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

நெடுந்தீவு பெருக்கடி ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

500 வருட வரலாறு கொண்ட கோயில். நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் இயற்றப்பட்ட திருவூஞ்சற் பாடல்கள் நூல் வடிவிலுண்டு.

மகாவலித்துறை நெடுந்தீவு வீரகத்திப் பிள்ளையார் கோயில்

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்டதென வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. சிற்றரசன் வீகாமன் கட்டுவித்த கோயில்

சங்கானை - செயலர் பிரிவு



அராலி தெற்கு, ஆகாயக்குளம் பிள்ளையார் கோயில்

இது மிகப்பழைமை வாய்ந்த கோயில். ஆகாயன் என்ற அரசன் கட்டிய குளம் இவ்வாலயம் அருகே அமைந்துள்ளது.

பரராஜசேகரம் ஈஸ்வர விநாயகர் கோயில் கழிபுரம்

மிகப் பழைமை வாய்ந்த சரித்திரப் பிரசித்திபெற்ற கோயில். 250 வருட சிற்பத்தேர் இவ்வாலயத்தில் நூதனப் பொருளாகவுண்டு. இவ்வாலயம் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் பல பேசப்படு கின்றன.

துணவி அரசடி விநாயகர் கோயில்

100 வருடப் பழைமை மிக்க கோயில்.

வட்டு, கற்பக விநாயகர் கோயில்

பிராமணச்சி தோட்டப் பிள்ளையார் எனவும் இவ்வாலயத்தை அழைப்பர்

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

மிகவும் பழைமை வாய்ந்த கோயில்.

அராலி வடக்கு வட்டுக்கோட்டை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில்

100 வருடத்துக்கு மேற்பட்ட வரலாறு கொண்டதென வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. சிற்றரசன் வீகாமன் கட்டுவித்த கோயில்.

100 வருடக்கோயில்கள் :

சங்கானை - நொச்சியம்பதி விநாயகர் கோயில்

அராலி - உதறான் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கோயில்

சங்கானை - அத்தியடி விநாயகர் கோயில்

பொன்னாலை - பிள்ளையார் கோயில்

பூநகரி - செயலர் பிரிவு

பூநகரிப்பகுதியிலுள்ள பழைய விநாயகர் கோயில்கள்

செட்டியக் குறிஞ்சி - கொட்டில் பிள்ளை யார் கோயில்

சோபாலப்பிட்டி - ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

பொன்னாலைவெளி -ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்கல்மடம்கற்பகப்பிள்ளையார்கோயில், வெள்ளிப் பள்ளத்துப் பிள்ளையார் கோயில்

கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி - செயலர் பிரிவு

இராமநாதபுரம் நந்தவனப் பிள்ளையார் கோயில்

மிகப்பழைமை வாய்ந்த ஆலயம் என்பதற்கு அறிகுறியாகப் பழங்காலத்துக் கருங்கல் தூண்கள் இங்கு இருப்பதைக் காணலாம்.

பரந்தன் 2ஆம் கட்டை ஊற்று விநாயகர்

யோகர் சுவாமிகளால் ஸ்தாபிக்கப் பட்ட ஆலயம்.

உருத்திரபுரம் ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் கோயில்

90 வருடகாலப் பழைமைமிக்க கோயில்.

முல்லைத்தீவு - செயலர் பிரிவு

முறிகண்டிப் பிள்ளையார் கோயில்

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் முறிகண்டி என்ற ஊரில் வீதிக்கு அருகில் உள்ள ஆலயமே முறிகண்டிப் பிள்ளையார் கோயிலாகும். பிரயாணிகள் தமது காவற் தெய்வமாகக் கருதி வழிபாடு செய்வார்கள். இன, மத, வேறுபாடு இன்றி இவ்வாலயத்தை அனைவரும் வழிபாடு செய்வர்.

முள்ளியவளை ஸ்ரீ காட்டு விநாயகர் கோயில்

பரராசசேகர வன்னியனால் பரிபாலிக்கப்பட்ட வரலாற்றையுடையது. ஆலயத்தைப் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளும், நாட்டுப் பாடல்களும் உள்ளன.

முல்லைத்தீவு ஊற்றங்கரை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

பண்டார வன்னியன் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. வசந்தன்கும்மி, திருவூஞ்சல், வெண்பா தனித்துவமாகவுண்டு.

குமுளமுனை கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோயில்

சரித்திரச்சிறப்புவாய்ந்த ஆதிக் கோயில்களில் ஒன்று.

குமுளமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

சுமார் 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆலயம். பண்டாரவன்னியனால் பூசிக்கப்பட்ட வரலாறு உண்டு.

தண்டுவான் பிள்ளையார் கோயில்

300 வருடப் பழமை மிக்க ஆலயம்.

கொக்குத்தொடுவாய் கோட்டக்கேணிப் பிள்ளையார் கோயில்

100 வருடக் கோயில்கள் :

தண்ணீரூற்று - கணுக்கேணி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

செம்மலை - மாணிக்க விநாயகர் கோயில்

கொக்கிளாய் - கருநாட்டுக்கேணி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

நெடுங்கேணி - பழம் பாசிச்சந்தி பிள்ளையார் கோயில்

கொக்கிளாய் - அரசடிப் பிள்ளையார் கோயில்

தண்டுவான்-புளியங் குளத்துப் பிள்ளையார் கோயில்

வவுனியா மாவட்டம்

வவுனியா - செயலர் பிரிவு

பழைமைமிக்க விநாயகர் கோயில்கள் :

வவுனியா தெற்கு:

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கோயில், மூன்று முறிப்பு விநாயகர் கோயில், மருதோடை பிள்ளையார் கோயில், ஆச்சிகுளம் பிள்ளையார் கோயில், தவசியாக்குளம் விநாயகர் கோயில், கல்மடு - ஸ்ரீ விநாயகர் கோயில், வெளிக்குளம் சித்திவிநாயகர் கோயில், புதுக்குளம் சித்தி விநாயகர் கோயில், நொச்சிமோட்டை கருங்காலியடிப் பிள்ளையார் கோயில்

வவுனியா வடக்கு :

மருதோடை பிள்ளையார் கோயில், மாமடு நெடுங்கேணி விநாயகர் கோயில், நெடுங்கேணி நைனாமடு பிள்ளையார் கோயில், புளியங்குளம் குளக்கட்டுப் பிள்ளையார் கோயில், கனகராயன் குளம் - கரப்புக்குத்திப் பிள்ளையார் கோயில், சின்னப்பூவரசன்



குளம் அரசடி பிள்ளையார் கோயில், பட்டிக்குடியிருப்பு பிள்ளையார் கோயில், பெரிய பூவசரங்குளம் பிள்ளையார் கோயில், சின்னப்பூவரசங்குளம் மண்டலத்துப் பிள்ளையார் கோயில், மதியமடு புளியங்குளம் பிள்ளையார் கோயில், கனகராயன் குளம் கனகராயப் பிள்ளையார் கோயில், கோவிற் புளியங்குளப் பிள்ளையார் கோயில்

அனுராதபுர மாவட்டம்

கெக்கிராவைப் பிள்ளையார் கோயில்

100 வருடங்களுக்கு மேற்பட்ட ஆலயம்.

மருதங்கடவைப் பிள்ளையார் கோயில்

ஆதியில் எழுந்த கோயில்.

பொலனறுவை மாவட்டம்

வெலிகந்தை ஊத்துச்சேனை

வெள்ளிமலை ஸ்ரீ விநாயகர் கோயில்

மன்னம்பிட்டி - பிள்ளையார் கோயில்

திருகோணமலை மாவட்டம்

சாம்பல்தீவு வடலியம்பதி பிள்ளையார் கோயில்

மிகவும் ஆதிவிக்கிரகம் அமைந்த கோயில்.

உப்புவெளி சின்னத்தொடுவாய் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

250 வருடப் பழமை வாய்ந்த கோயில்.

ஆலடி ஸ்ரீவிநாயகர் கோயில் (டொக்கியாட் வீதி)

மிகவும் பழமை வாய்ந்த ஆலயம்.

செல்வ விநாயகபுரம் ஆலடி விக்னேஸ்வரர் கோயில்

மக்களால் நீண்டகாலம் வழிபாடு செய்யப் பட்டு வரும் பிள்ளையார் கோயில்.



திருகோணமலை மலையாவெளி இராசமலை சிற்றம்பலப் பிள்ளையார் கோயில்

காட்டுக்குள் காணப்பட்ட ஆதி விநாயகர் மீட்கப்பட்டு அமைக்கப்பட்ட கோயில்.

திருகோணமலை ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில்

200 வருடகாலப் பழமை மிக்க ஆலயம்.

கிண்ணியா ஆலங்கேணி விநாயகர் கோயில்

தம்பலகாமத்திலுள்ள ஆதி கோணநாயகர் ஆலயத்தோடு தொடர்பு பட்ட கோயில்.

சின்னக் கிண்ணியா ஊற்றடிப் பிள்ளையார் கோயில்

150 வருடப் பழமையானது

ஈச்சந்தீவு ஸ்ரீ பிள்ளையார் கோயில் உல்லாறு பிள்ளையார் கோயில்

பிற்காலத்தில் இப்பகுதியில் எழுந்த விநாயகர் கோயில்களாகும்.

குச்சவெளி ஸ்ரீசித்தி விநாயகர் கோயில்

கோணேசர் கோயிலுடன் தொடர் புடைய புராதன ஆலயம்.

தீரியாலை தஞ்சை விநாயகர் கோயில்

250 வருடம் பழமை வாய்ந்த கோயில்.

பழமை மிக்க கோயில்கள் :

உறைக்கிணற்றடி விநாயகர் கோயில், கும்புறுப்பிட்டி சித்தி விநாயகர் கோயில், திரியாய் விரதவிக்னேஸ்வரர் கோயில், நிலாவெளி இறக்கண்டி சிவஞான விநாயகர் கோயில், குச்சவெளி இரணைக்கேணி சிந்தாமணிப் பிள்ளையார் கோயில், நிலாவெளி புல்மோட்டை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில், குச்சவெளி வீரன்சோலை விநாயகர் கோயில், அலஸ்தோட்டம் - ஆனந்த விநாயகர் (புதிய கோயில்)

மூதூர் - செயலர் பிரிவு

கேணயூர் ஸ்ரீவருணகுல விநாயகர் கோயில்

ஆலய வரலாற்றுக் குறிப்புக்கள் செப்பு வட்டபலத்தில் வரையப்பட்டுள்ளன.

மூதூர் - 3ஆம் வட்டாரம் - சித்தி விநாயகர் கோயில்

காந்திபுரம் - கிளிவெட்டி ஸ்ரீபால விநாயகர் கோயில்

மூதூர் 7ஆம் வட்டாரம் - சித்தி விநாயகர் கோயில்

கட்டைப்பறிச்சான் ஸ்ரீகற்பக விநாயகர் கோயில்

பங்குளம் - கிற்றுள் ஊத்துப் பிள்ளையார் கோயில்

மட்டக்களப்பு மாவட்டம்

திருப்பழகாமம் ஸ்ரீ மாவேற்குடாப் பிள்ளையார் கோயில்

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட புராதன கோயில். பழங்குடி மக்கள் பராமரித்த கோயில் என வரலாறு கூறுகிறது.

வெல்லாவெளி - செயலர் பிரிவு

இப்பகுதியில் கடந்த நூற்றாண்டில் அமைந்த கோயில்கள் :

- தாந்தாமலைப் பிள்ளையார் கோயில்,
- கொக்கட்டிச்சோலை - அரசடித்தீவு மண்டபத்துப் பிள்ளையார் கோயில்,
- முதலைக்குடா - குறிஞ்சிநகர்ப் பிள்ளையார் கோயில், மண்டூர் நாகஞ்சோலை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில்
- ஆனைகட்டிய வெளி ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில்
- அம்பலாந்துறை - தீவுக்குடியிருப்பு சித்திவிநாயகர் கோயில்
- படையாண்டவெளி - பச்சையடிப் பிள்ளையார் கோயில்
- கொக்கட்டிச்சோலை - ஸ்ரீ முத்துலிங்கப் பிள்ளையார் கோயில்
- திக்கோடை அம்பாறைப் பிள்ளையார் கோயில்
- பூச்சிக்காடு வேம்பாறைப் பிள்ளையார் கோயில்
- சரவணையடி ஊற்று ஸ்ரீகற்பகப்பிள்ளையார் கோயில்
- மகிழடித்தீவு ஸ்ரீசித்தி விநாயகர் கோயில்
- ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில்
- வெல்லாவெளிப் பிள்ளையார் கோயில்
- குருக்கள்மடம் பிள்ளையார் கோயில்
- சின்னவத்தை பிள்ளையார் கோயில்
- மண்டூர் காக்காச்சியட்டை கருணை மனைப் பிள்ளையார் கோயில்
- வெல்லாவெளி அரசடிப் பிள்ளையார் கோயில்
- கொக்கட்டிச்சோலை முனைக்காடு - ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
- கடுக்காமுனை கொக்கட்டிப் பிள்ளையார் கோயில்
- வக்கியல்ல ஸ்ரீ ஆலையடிப் பிள்ளையார் கோயில்
- பாலையடிவட்டைப்புளியடிப்பிள்ளையார் கோயில்
- குருளைமடு பிள்ளையார் கோயில்
- அம்பிளாந்துறை ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரர் கோயில்
- நவகிரிநகர் ஸ்ரீ விக்னேஸ் வரர் கோயில்
- மாலையர்கட்டு ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
- முனைக்காடு - கொட்டாம்புலைப் பிள்ளையார் கோயில்
- பெரியபோரத்தீவு ஸ்ரீ முத்துலிங்க விக்னேஸ்வரர் கோயில்
- வம்மியடி - சங்குமக்கண்டிப் பிள்ளையார் கோயில்
- சின்னவத்தை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
- வக்கியல்ல ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்
- முனைத்தீவு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்
- முதலைக்குடா பாலையடிப் பிள்ளையார் கோயில்
- வாழைச்சேனை ஸ்ரீ முத்துலிங்கப் பிள்ளையார் கோயில்
- தம்பலவத்தைவீரையடிப் பிள்ளையார் கோயில்
- பண்டாரியாவெளி - ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் கோயில்



- வக்கிஎல்லகூழாவடிப் பிள்ளையார் கோயில்
- தும்பங்கேணி சங்குமக்கண்டிப் பிள்ளையார் கோயில்
- தும்பங்கேணி ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் கோயில்

வவுணதீவு - செயலர் பிரிவு

பிரதான கோயில்கள்

செங்கலடி - உன்னிச்சை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

கன்னன்குடா - சாளம்பைக்கேணி விநாயகர் கோயில்

வவுணதீவு - பிள்ளையார் கோயில்

மண்டலத்தடி - ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

வவுணத்தீவு - பாலையடி ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

பன்சேனை -
பிள்ளையார் கோயில்

ஆயித்தியமலை - நரிப்புல்தோட்டம் மாணிக்கப் பிள்ளையார் கோயில்

கரவெட்டி - நாவற்காடு பிள்ளையார் கோயில்

செங்கலடி - செயலர் பிரிவு

பிரதான கோயில்கள்

ஏறாவூர் - ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

வந்தாறுமூலை - உப்போடை வயற்கரை விநாயகர் கோயில், பெரியபுல்லுமலை வெள்ளக் கல் விநாயகர் கோயில்

ஐயங்கேணி - சித்திவிநாயகர் கோயில்

பெரியபுல்லு மலை - ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் , ஆறுமுகத்தான்குடியிப்பு மாவடிப் பிள்ளையார் கோயில் , சித்தாண்டிக்குடி அம்பலத்தடிப் பிள்ளையார் கோயில்

உன்னிச்சை - ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

மயிலம்பாவெளி ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

வந்தாறுமூலை - மருங்கையடி விநாயகர் கோயில்

மகிழவெட்டுவான் - பிள்ளையார் கோயில்

கோறளை - செயலர் பிரிவு

பிரதான கோயில்கள்

கதிரவெளி - ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

பால்ச்சேனை - மாணிக்கக்குளம் பிள்ளையார் கோயில்

கட்டுமுறிவு - கற்பக விநாயகர் கோயில்

கதிரைவெளி - முத்துலிங்கப் பிள்ளையார் கோயில்

இறாலோடை - பிள்ளையார் கோயில்

பால்ச்சேனை - ஸ்ரீசித்திவிநாயகர் கோயில்

காளான்கேணி - வட்டவான் பிள்ளையார் கோயில்

கற்பிட்டி -சித்திவிநாயகர் கோயில்

கோராவெளி - ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

வாழைச்சேனை - ஸ்ரீ கைலாசப்பிள்ளையார் கோயில்

தங்காங்கேணி - விநாயகர் கோயில்

கிரான் - சித்தி விநாயகர் கோயில்

ஆனைச்சுட்ட பொத்தானை - ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்

ஓட்டுமாவடி - ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் ஆலகண்டிப்பிள்ளையார் கோயில் , வாழைச்சேனை பிள்ளையார் கோயில்

புலிபாய்ந்தகல் - சின்னவெளிப் பிள்ளை யார் கோயில்

குடும்பிமலை -காங்கேஸ்வரப் பிள்ளை யார் கோயில்

காராவெளி - சித்திவிநாயகர் கோயில்

கல்குடா - மாணிக்கப்பிள்ளையார் கோயில்

சந்திரவெளி - புதுப்பிள்ளையார் கோயில்

வில்கமம் - பிள்ளையார் கோயில்

கறுவாக்கேணி - விநாயகர் கோயில்

மண்முனை வடக்கு - செயலர் பிரிவு

மாமாங்கப் பிள்ளையார் கோயில் மாமங்கேஸ்வரம்

கிழக்கிலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமைந்த தலம் மாமங்கேஸ்வரமாகும். மூலஸ்தானத்தில் சிவலிங்கம் உள்ளது. எனினும் விநாயகர் அங்கியுடனேயே சிவலிங்கம் காட்சியளிக்கின்றது. 1880 இல் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. புலவர்கள் பலர் இத்திருத்தலத்தின் மீது பாடியுள்ளனர்.

ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயில்

புலியன் என்ற வேடர் குலத்தலைவன் ஆட்சி புரிந்த இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மிகவும் பிரசித்திபெற்ற புராதன ஆலயமாகும்.

நாவற்குடா ஸ்ரீ கணேசர் கோயில்

1770 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பல வரலாறுகளைக் கொண்ட கோயில்.

மண்முனைப் பிள்ளையார் கோயில்

குளக்கோட்டன் கல்வெட்டில் இடம் பெற்றிருக்கும் ஆலயம்.

பிரதான கோயில்கள்

கல்லடி - சித்திவிநாயகர் கோயில்

சின்னஊறணி - மாவடிப் பிள்ளையார் கோயில்

புதுக்குடியிருப்பு - கள்ளமுனைப் பிள்ளை யார் கோயில்

கிரான்குளம் - கணபதிப்பிள்ளையார் கோயில்

கோட்டன் முனை - ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

ஆரையம்பதி ஸ்ரீ திருநீலகண்டப் பிள்ளையார் கோயில், புதுக்குடியிருப்பு பிள்ளையார் கோயில், புதுநகர் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்,

களுவாஞ்சிக் குடி

எருவில் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

களுதாவளைப் பிள்ளையார் கோயில். (300 வருடப் பழைமை வாய்ந்த இவ்வாலயம் மகிமை கூறும் "பட்டமம்" என்ற ஏடு உள்ளது)

களுவாஞ்சிக்குடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில், பட்டிருப்பு ஸ்ரீ விநாயகர் கோயில்.

குறுமண்வெளி ஆலையடிப் பிள்ளையார் கோயில்,

(கண்டி இராட்சியம் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் ஆட்சியில் இருந்தபோதும் அவன் கடலில் கண்டெடுத்துக் கொடுத்த விநாயகர் என ஆலய வரலாறு கூறுகிறது.

களுவாஞ்சிக்குடி வம்மியடிப் பிள்ளையார் கோயில், மகிளூர் பிள்ளையார் கோயில்

கோடைமடு ஆலையடிப் பிள்ளையார் கோயில், துறைநீலாவனை ஸ்ரீ தில்லையம் பலப் பிள்ளையார் கோயில், செட்டி பாளையம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில், தேற்றத்தீவு - கொம்புச்சந்திப் பிள்ளையார் கோயில், செட்டிபாளையம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில், தேற்றத்தீவு - கொம்புச்சந்திப் பிள்ளையார் கோயில், பெரியகல்லாறு - மடத்தடி விநாயகர் கோயில், களுதாவளை - ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில், எருவில் ஸ்ரீ புளியடிப் பிள்ளையார் கோயில், ஒந்தாச்சிமடம் ஸ்ரீ அரசடி விநாயகர் கோயில், துறைநீலாவணை சின்னப் பிள்ளையார் கோயில், மாங்காடு காட்டுப் பிள்ளையார் கோயில், மாவேற்குடா பிள்ளையார் கோயில்

அம்பாறை மாவட்டம்

கல்முனை - செயலர் பிரிவு

பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்

450 வருடங்களுக்கு முன்பாக கலிங்க தேசத்துச் சிற்றரசன் மன்னசிங்கன் இவ் வாலயத்தைப் பரிபாலித்து வந்ததோடு பல திருப்பணிகளைச் செய்து காணிகளையும் (நிந்தகம்) வழங்கியுள்ளான் என்பது வரலாறு. தாதன் கல்வெட்டில் இவ்வாலயம் பற்றிய செய்தியுண்டு.

கல்முனை சேனைக்குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

(400 வருடங்களுக்கு முந்திய பழைமை மிக்க ஆலயம்)



ஸ்ரீதரவைச் சித்திவிநாயகர் கோயில், கல்முனை - கதிரவேற் பிள்ளையார் கோயில், அம்பலத்தடிப் பிள்ளையார் கோயில், கல்முனை மாமாங்கப் பிள்ளையார் கோயில் துரவந்திய மேடு - பிள்ளையார் கோயில், சேனைக் குடியிருப்பு - ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்

சம்மாந்துறை - செயலர் பிரிவு

வீரமுனை ஸ்ரீ சித்தியாத்திரைப் பிள்ளையார் கோயில்

1537 ஆம் ஆண்டில் மதுரைப் பட்டின சீர்பாகதேவியனால் இப்பிள்ளையார் கொண்டுவரப்பட்டு ஆலயம் அமைக்கப் பட்டதாக ஆலயவரலாறு கூறுகிறது. ஆலயம் பற்றிய கல்வெட்டு சாசனமுண்டு.

நாவிதன்வெளி சித்தி விநாயகர் கோயில்

திருவொற்றியூரில் இருந்து வந்து குடி யேறியவர்களால் இவ்வாலயம் உருவாக்கப் பட்டது.

வேம்பையடிப் பிள்ளையார் கோயில்

விளாவடிப் பிள்ளையார் கோயில்

சம்மாந்துறை - சித்தி விநாயகர் கோயில்

சவளக்கடை - ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோயில்.

வீரமுனை - பிள்ளையார் கோயில்

வளத்தாப்பட்டி - மாணிக்கப்பிள்ளையார் கோயில், ஸ்ரீ கோரக்கர் விநாயகர் கோயில்

திருக்கோயில் பிரிவு

அக்கரைப்பற்று அக்கிராசப் பிள்ளையார் கோயில், தம்பிலுவில் செம் மண்புலை ஸ்ரீ சத்திவிநாயகர் கோயில், தம்பிலுவில் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில், வி நா ய க பு ர ம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்.

பொத்துவில் பிரிவு

பிரதான கோயில்கள்

சங்கமான் கண்டிப் பிள்ளையார் கோயில், பொத்துவில் சாளம்பைக்கலட்டிப் பிள்ளையார் கோயில், குண்டுமடு ஆலடிப் பிள்ளையார் கோயில், உசனை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்.

மொனறாகலை மாவட்டம்

பாலாறுவ ஸ்ரீகற்பக விநாயகர் கோயில் கதிர்காமம் கதிரமலைப் பிள்ளையார் கோயில் செல்லக்கதிர்காமம், மாணிக்கப்பிள்ளையார் (இருகோயில்களும் பிரசித்தமானவை. தினமும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் வழிபாடு செய்து வருகிறார்கள்).

பதுளை மாவட்டம்

பதுளை ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோயில்

நூறுவருட பழைமைமிக்க விநாயகர் கோயில்.

றெல்தும் முல்லை ஸ்ரீ ஆதிவிநாயகர் கோயில்

நூறு வருடங்களுக்கு முற்பட்ட கோயில்.

நுவரெலியா மாவட்டம்

அட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார், கொட்டலை ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்,

கண்டி மாவட்டம்

கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில்

(மிகவும் பழைமைமிக்க ஆலயம். சித்தர்களின் சமாதி இவ்வாலயத்தில் உண்டு. கண்டி அரசர் காலத்துக் கோயில்).

புசல்லாவ ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில், உளுகங்கை மடுல்கெல ஸ்ரீ கங்கை விநாயகர் கோயில், பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில், வத்துகாமம் ஸ்ரீ கண்கண்ட விநாயகர் கோயில்.

மாத்தளை மாவட்டம்

மாத்தளை கணங்காமம் பிள்ளையார் கோயில், இறத்தோட்ட செல்வ விநாயகர் கோயில்.

குருநாகல் மாவட்டம்

குருநாகல் ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில் (50 வருடம் பழைமை வாய்ந்த கோயில்)

இரத்தினபுரி மாவட்டம்

அழுல்பிற்றிபல மாணிக்கப் பிள்ளையார் கோயில்

கொழும்பு மாவட்டம்

மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் கோயில்

இவ்வாலயம் 1702 இல் ஸ்தாபிக்கப் பட்டது. புராதன ஆலயமாக வரலாறுகளில் கூறப்பட்டுள்ளது.

தெமட்டகொட விநாயகர் கோயில்

நூறு வருடக் கோயில்

பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயில்

சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் ஆடிவேல் காவடி நகர்பவனிவந்து இவ்வாலயத்தில் கொலுவிற்றிருந்து அருள் பாலிப்பது வழக்கம். தினமும் ஆயிரக் கணக்கான அடியவர்கள் வழிபாடு செய்வர்.

முகத்துவாரம் ஸ்ரீ சர்வாத்த சித்தி விநாயகர் கோயில்

இனமத வேறுபாடின்றி பலரும் இவ்வால யத்தைக் காலங்காலமாக வழிபட்டு வருகின் றனர்.

செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் கோயில்

புராதன கோயில் : கொட்டாஞ்சேனை ஸ்ரீ தம்பையா சத்திர விநாயகர் கோயில்

நுகேகொட பிள்ளையார் கோயில்

பம்பலப் பிட்டி ஸ்ரீ கதிரேசன் கோயில்

இங்கு மூலமூர்த்தி விநாயகர், இந்திய மக்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம். தினமும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் வழிபாடு செய்வார்கள்.

கொட்டாஞ்சேனை வரதராஜப் பிள்ளையார் கோயில்

அரசமர விருட்சத்திற்கு அருகில் ஆதி விநாயகராக வீற்றிருந்து அருள் பாலிக்கிறார்.

பேலியகொடை விநாயகர் ஆலயம்

களனி ஆற்றங்கரை அருகே புராதன ஆலயமாக விளங்குகிறது.

புத்தளம் மாவட்டம்

புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

200 வருடங்களுக்கு முற்பட்ட கோயில், கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஒரு பெரிய விளக்கு இவ்வாலயத்தில் உண்டு.

செம்பட்டை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

ஈழநாட்டில் அரச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட ஆலயங்களில் மிகவும் புராதன ஆலயங்கள் இங்கு எடுத்துரைக்கப் பட்டுள்ளன. குறிப்பாக பல புதிய விநாயகர் ஆலயங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் தோற்றம் பெற்றுள்ளன. சில தனிப்பட்ட வர்களின் பராமரிப்பிலுள்ள ஆலயங்கள் பதிவு செய்யப்பட்டாலும் வரலாற்றுத் தகவல்கள் ஆவணங்களின்றியும் உள்ளமை குறிப்பிடத் தக்கது. தென் இலங்கையில் 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரங்களின் பின் பல இந்துக் கோயில்கள் அழிவுற்று இன்று வரை பூசையற்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



துணைநூல்கள்

ம.பொ. செல்வரத்தினம் எழுதிய பழம்பெருவிநாயக வழிபாடு.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கும்பாபிஷேக மலர் - 1973.

உலக சைவ மாநாடு குறித்த சிறப்பு மலர் - 1978

இந்து சமயத் திணைக்களம் - பிரதேச அபிவிருத்தி அமைச்சு வெளியிட்ட இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் - 1984

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் சிறப்பு மலர்

வியாபாரி மூலை இன்பச் சிட்டி சித்தி விநாயகர் ஆய்வு நூல்

செ. இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம்.

(இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மணிமண்டபத் திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பட்ட 'ஜங்கரன் அமிர்தம்" சிறப்பு மலரில் வெளிவந்துள்ள கட்டுரை).

செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு. திருமுருகன்

தனித்து வேதாந்த விடத்தினிற் சென்று
மனத்தினைப் பொறிவழி செல்லா தடக்கி
நினைபெனு மாசையால் காற்றை விடுத்து
வனப்பெரு மான்மாவி லிருப்பது ஞானநிட்டை

பொழிப்புரை:

தனிமையான பற்றற்ற இடத்திலே சென்றிருந்து, பொறி வழிகளிற் செல்லாது மனத்தையடக்கி, நினைப்பெனும் ஆசை வழிச்செல்லும் மூச்சுக்காற்றை அடக்கி அல்லது விடுத்து, இருந்தபடி இருந்து ஆன்ம தரிசனம் பெற்றிருப்பதே ஞானநிட்டையாகும்.

பிள்ளையார் கதை - சிவராத்திரி புராணம் தந்த சுன்னாகம் வரத பண்டிதர்

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

"வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாத மலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

பூத பரம்பரை பொலிய சைவ நெறி தழைத்தோங்க அறிவாலும் சீலத்தாலும் சிறந்த அந்தணர்கள் பலர் எங்கள் நாட்டில் இருந்துள்ளனர். அவர்களைப் போல், பூரண அறிவும் நல்லொழுக்கமும் நிறைந்த பல அந்தணர்களும் வட இந்தியத் திருத்தலங்களிலிருந்தும் பாடல் பெற்ற தென்னிந்தியத் திருத்தலங்களிலிருந்தும் எங்கள் நாட்டிற்கு வந்து பயபக்தியுடன் சைவ சமயத்தை வளர்த்தனர். நமது பாரம்பரியங்களை அழியவிடாமற் காப்பாற்றுவதற்காகச் சிலர் ஆலயங்களைக் கட்டினர்; சிலர் பழைய புராணங்களுக்கும் சமயத் தத்துவநூல்களுக்கும் சிறப்பான உரைகளையும் எழுதினர். சிலர் சமயம் சம்பந்தமான புதிய நூல்களையும் எழுதினர்.

இத்தகையோருள் ஒருவரே காசிமாநகரத்திலிருந்து இந்நாட்டிற்கு வந்து சுன்னாகத்திற் குடியேறிய அரங்க நாதையரின் மைந்தனாகிய வரதபண்டிதர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த அறிஞர்களிடம் கற்றுத் தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்ற இவர், வேதம், ஆகமம், சித்தாந்த சாஸ்திரங்கள், திருமுறைகள் முதலானவற்றிலே நிறைந்த அறிவு பெற்றிருந்தார். கவி இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தமையால், வரத கவிராயர் என்றும்இவர் அழைக்கப்பட்டார்.

ஆண்டுதோறும் தில்லைச் சிதம்பரத்துக்குச் சென்று நடராஜப்பெருமானைத் தரிசிக்கும் வழக்கத்தை இவர் மேற்கொண்டிருந்தார். இவருடைய பக்தியையும் சமய அறிவையும் இரு மொழிப் புலமையையும் கண்டு வியந்த தில்லைவாழ் அந்தணர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவர் "சிவராத்திரி புராணத்தைப் பாடினார்.

இந்த உண்மையை,

கந்த மலர்ப்பொழில் புடைசூழ்
தில்லை வனத் தறிஞர்திருக் கடைக்கண் நோக்கி
முந்தவுரைத் தனப்பலரு மாயினும் நீ
யாகம நூல் மொழி வழாமற்
பந்தமறுத் திடுசிவராத் திரிவிரத
சரிதை தனைப் பாடு கென்னச்
செந்தமிழில் உயர்விருத்தப் பாவுதனால்
திரட்டி யொன்றாய்ச் செப்பலுற்றேன்.

என்று சிவராத்திரி புராணச் சிறப்புப் பாயிரத்தில் இவர் குறிப்பிட்டுள்ளார். ஏகாதசி புராணம், பிள்ளையார் கதை என்னும் அகவல் நூல், அமுதசாகரம் என்னும் வைத்திய நூல், தையிட்டி குருநாத சுவாமி மீது பாடிய 'கிள்ளைவிடு தூது' ஆகியவற்றையும் பல தனிப்பாடல்களையும் இவர் பாடியுள்ளார். இவற்றுள் "பிள்ளை யார் கதை" சுன்னாகம் அருள்மிகு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் சைவப்பெரியோர்களும் தமிழ் அறிஞர்களும் நிறைந்திருந்த சபையிலே அரங்கேற்றம் செய்யப் பெற்றது என முதியோர் வாயிலாக அறியக்கிடக்



கின்றது. இலக்கிய வரலாற்றில் " சுன்னாகம் வரதபண்டிதர் என்றே குறிப்பிடப்படும் இப்பெருமகன், திருமணம் காரணமாக அச்சுவேலியிற் குடியேறினார். அங்கே இவர் வாழ்ந்த இடம் இன்றும் " புலவர் வளவு" என்றே குறிப்பிடப்படுகின்றது. இவர் வாழ்ந்த காலம் 1656 -1710 ஆகும். இவரியற்றிய " குருநாத சுவாமி கிள்ளைவிடு தூது" என்னும் நூல், இவருடைய வழித்தோன்றல்களுள் ஒருவரான பண்டிதர் வ.மு. இரத்தினேஸ்வரஐயர் அவர்களால் அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது.

" தொன்மை மறவேல்" என்பதற்கிணங்க எங்கள் ஆன்றோர்- சான்றோர்களை என்றும் போற்றுவோம். நம் சமூகம் உய்ய அதுவே சிறந்த வழி.

சி. கந்தசுவாமி,

முன்னைநாட் பரீட்சைச் செயலர்,

கொழும்பு விவேகானந்த சபை.

தக்கசா தனத்திலிருந்து குருபரன் தாளை நோக்கி
மிக்கவெண் ணீற்றையள்ளி உடம்பினிற் தரித்து நன்கு
சிக்கிய மனத்தை நீக்கி நின்மலப் பரமந்தன்னில்
சொக்கியே நிற்பதன்றோ நல்லருள் ஞானநிட்டை

பொழிப்புரை:

பொருத்தமான இடத்தில் பொருத்தமான பயிற்சியுடன் இருந்து, குருநாதர்களில் சிறந்தவருடைய திருப்பாதங்களை நினைந்து அல்லது நோக்கியவாறு, பெருமைமிக்க வெண்ணீற்றை (விபூதியை) அள்ளி உடம்பிலே தரித்து, பந்தபாசங்களில் சிக்கித்தவிக்கும் மன இறுக்கங்களைத் தளர்த்தி மாசற்ற அல்லது மலபந்தம் விடுபட்ட முழு முதற் பொருளிலே திழைத்து நிற்பதன்றோ ஞானநிட்டை அல்லது திருவருட் தியானமாகும்.


1975இல் ஆலயத்தில் நடைபெற்ற காட்சிகள் சில....



1975இல் கட்டப்பட்ட
மூலஸ்தான துவிதள விமானம்



கொடிமரம்





1975இல் சாமி விஸ்வநாதக் குருக்களால்
நடாத்தப்படும் மஹாகும்பாபிஷேக காட்சிகள் சில...



தேர் வலம்வரும் காட்சி



இலட்சார்ச்சனை நடைபெறும் காட்சி



சுவாமி நாததம்பிரான் கதாப்பிரசங்கம்
செய்யும்போது அருகில் சபாரத்தினஐயர்,
சோமஸ்கந்தக் கருக்கள் அமர்ந்திருக்கிறார்கள்



ஆலயத்திற்கு யானை கொண்டு வரப்பட்டபோது
பக்தர்கள் மகிழ்ச்சியில் யானையுன் காணப்படுகின்றனர்



ஆலயத் தொண்டர்கள்



அமைதியாக வாழ்ந்து அரும்பணி ஆற்றிய அந்தணப் பெருமகன்

சிவஸ்ரீ சபாரத்தின ஐயர் சோமஸ்கந்தக்குருக்கள்

சுன்னாகம் ஸ்ரீசந்திர சேகரப் பிள்ளையார் கோவிலின் பிரதம குருவாக இருந்த சபாரத்தின ஐயருக்கும் தங்கம்மா அம்மாவுக்கும் ஏக புத்திரனாக 1921ஆம் ஆண்டு 18ஆம் திகதி 4ஆம் மாதம் பிறந்தவர் தான் சோமஸ்கந்தக்குருக்கள். இவர் இளமையில் நல்ல கல்வி அறிவு பெற்று, சீதாராமசாஸ்திரிகளிடம் சமஸ்கிருதம் கற்று சோதிடமும் நன்றாகக் கற்றார். இளமையில் இருந்து தந்தையார் சபாரத்தின ஐயருக்கு உதவியாக கோயில் பூசைகளும் செய்து வந்தார். இப்படி கோவில் பொறுப்புகளைத் திறம்பட நடத்தி வரும் காலத்தில். அல்வாய் சபாரத்தினக் குருக்களின் மகள் பாலாம்பிகையை 1939ஆம் ஆண்டில் திருமணஞ்செய்தார். அதன் பின்பு கோவில் முழுப்பொறுப்புகளையும் கவனித்து வந்தார். இவர் கோவில் பூசைகளையும் திருவிழாக்களையும் திறம்பட நடத்தி வந்தது மட்டுமன்றி சோதிடம் பார்த்துச் சொல்வதிலும் ஜாதகக் குறிப்புகள் கணிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். அத்தோடு நீண்ட காலமாக நினைத்தகாரியம் கூறும் இறைஅருளையும் பெற்று இருந்தார். விடியற்காலையில் வீட்டின் முன்பாக நினைத்தகாரியம் கேட்பதற்கு பலர் கூடி நிற்பர்.

ஐந்து பெண் பிள்ளைகள் பெற்றுவிட்டால் அரசனும் ஆண்டியாவான் என்ற பழமொழியைப் பொய்யாக்கும் வகையில் பதினொருபிள்ளைகளைப் பெற்று அரசனாக வாழ்ந்து காட்டியவர். எல்லாபிள்ளைகளையும் சமமாக நடத்தி அவர்கள் எல்லோருக்கும் நல்லகல்வி அறிவை ஊட்டி எல்லோருடைய திருமண வைபவங்களையும் சிறப்பாக நடத்தி நல்ல தொரு குடும்பம் பல்கலைக்கழம் என்பதற்கிணங்க குடும்பத்துடன் வாழ்ந்தவர். சோமஸ்கந்தக்குருக்கள் அவர்கள். பட்டுப் பீதாம்பரங்களே அல்லது தங்க நகைகளோ அணியாது ஆடம்பரம் இல்லாமல் அமைதியாக கிரிகைகளை முறையாகச் செய்வார்.

சுன்னாகத்தையும் அதனைச்சுற்றிஉள்ள கிராமங்களிலும் இவரது காலத்தில் இவர் குருக்களாக இல்லாத திருமண வீடு மிக மிக அரிதாகும். இதேவேளையில் இவர் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோவிலின் திருப்பணி வேலைகளிலும் தன்னை அர்ப்பணித்து வந்தார். நாங்கள் இளைஞராக சிரமதானத்தொண்டுபுரியும்காலத்தில்1975ஆம் ஆண்டு நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தை தானே நிதிசேகரித்து தானே பொருட்களைக் கொண்டு மிகவும் சிறப்பாக நிறைவேற்றி வைத்தார். அதன்பின்பும் 1993ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போதும் வெளிநாட்டில் இருந்து அங்கு சோதிடம் பார்த்தார். வந்த காசை கும்பாபிஷேகத்திற்கு அனுப்பியவர். தனது காணியையும் விற்று மிகவும் சிறப்பாக நிறைவேற்றி வைத்தார். அதன்பின்பும் நடைபெற்ற பல திருப்பணிவேலைகளை நிறைவேற்றிவைத்தார். தொண்டர்கள் சிரமதானப்பணி செய்யும் நேரத்தில் அவர்களுக்கு வேண்டியஉணவு, தேநீர் முதலியவற்றை வழங்கி வந்தார். ஒவ்வொரு வருடப்பிறப்பிற்கும் தொண்டர்களுக்கு கைவிஷேடம் வழங்குவார்.

இப்படி அரும்பணி ஆற்றிய அவரின் ராஜகோபுரக்கனவு 2013ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டமை மிகவும் சிறப்பாகும்.



மண்டலநாயகம் கோணேஸ்வரன்,
(செயலாளர்)

ஆலய வழிபாடு

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வழிபடும் சமயம் சைவசமயம் எனப்படும். சிவபெருமானை வழிபடுபவர்கள் சைவசமயிகள் எனப்படுவர். சைவசமயிகளுக்கு ஆலய வழிபாடு மிகவும் இன்றியமையாதது. சிவபெருமான் எழுந்தருளி அருள்புரியும் இடம் கோயில் எனப்படும்.

இத்தகைய கோயில்களுக்கு நாள்தோறுஞ் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். நாள்தோறுஞ் செல்ல முடியாதவர்கள் வெள்ளிக்கிழமைகளில், வேறு விரத நாட்களிலுமாவது தவறாது சென்று தரிசனஞ் செய்தல் வேண்டும். திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், பூரணை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, கந்தசஷ்டி, என்பன சிவாலய தரிசனத்திற்குரிய சிறப்பான புண்ணிய காலங்களாகும்.

கோயில் பரிசுத்தமான இடம்: ஆதலால் அங்கு செல்வோர் தம் உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். உடலிலுள்ள அழுக்கு உள்ளத்தை அழுக்காக்குவதோடு ஆலயத்தின் புனிதத்தையுங் கெடுக்கும். அசௌசம் உடையவரும், அசுத்தமான பொருளைத் தீண்டியவரும், நீராடாதவரும் ஆசாரமில்லாதவர்களாவர். ஆகையால் இவர்கள் கோயிலுக்குள்ளே செல்லுதல் ஆகாது.



திருக்கோயில் வழிபாட்டு முறை: கோயிலுக்குச் செல்வோர் உணவு கொள்ளு முன்னரே நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடைகளைத் தரித்து, விபூதியும் உருத்திராக்கமும் அணிந்து, சந்தியாவந்தனம் முதலியன முடித்துச் சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு மெல்மெல்ல நடந்து செல்ல வேண்டும்.

திருக்கோயிலைச் சமீபத்ததும் கை கால் கழுவி, ஆசமனம் பண்ணி தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்து வணங்கி, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே செல்லுதல் வேண்டும். அங்கே கொடித் தம்பத்தையும் பலிபீடத்தையும் நந்திதேவரையும் வணங்கிக் கொடித் தம்பத்திற்கு இப்பால் ஆண்கள் அட்டாங்க வணக்கமும், பெண்கள் பஞ்சாங்க வணக்கமும் செய்தல் வேண்டும். அட்டாங்க வணக்கமாவது; தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும் படி வணங்குவதாகும். இங்ஙனம் வணங்கும்போது பூமியிலே சிரசை வைத்து மார்பு பூமியிற்படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி பின் அம்முறையே மடக்கி வலப்புயமும், இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும், இடக்காதைப்பின்னும் பொருந்தச் செய்தல் வேண்டும். பஞ்சாங்க வணக்கமாவது: தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புகளும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாம். இவை தவிர, திரியாங்க வணக்கமும் செய்யப்படுதல் உண்டு. திரியாங்க வணக்கமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்து வணங்குதலாம். இது ஆண் பெண் இருபாலாருக்கும் உரியது. இவ்வணக்கங்களும் வீதி வலம் வருதலும் ஒருதரமேனும், இருதரமேனும் செய்தல் குற்றமாம். மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் ஏழு தர

மாயினும் ஒன்பது தரமாயினும் பன்னிரண்டு தரமாயினும் செய்தல் வேண்டும்.

கொடித்தம்பத்திற்கு இப்பால் வணங்கிய பின், இரண்டு கைகளையும் குவித்து திருவைந்தெழுத்தை உச்சரித்துக் கொண்டு, கால்களை மெல்ல மெல்ல வைத்துக் குறைந்தது மூன்று தரமாயினும், கூடியது இருபத்தொரு தரமாயினும் வீதிவலம் வருதல் வேண்டும். அங்ஙனம்வந்துமீண்டும்சந்நிதியிலேவணங்குதல் வேண்டும். ஆலயத்திலுள்ள மூர்த்திகளை வணங்குங்கால் முன்பு துவாரபாலகரை வணங்கிப் பின்பு திருநந்திதேவரை வணங்கி, "பகவானேஉம்முடையதிருவடிகளைஅடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்து அருள் பெறும் பொருட்டு அனுமதி தந்தருளும் என்று பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போய், முன்விக்கினேசுவரனைத் தரிசித்தல் வேண்டும். பின் சிவலிங்கப் பெருமான் சந்நிதியையும் உமாதேவியார் சந்நிதியையும் அடைந்து அர்ச்சனை செய்வித்து விபூதி வாங்கித் தரித்துக் கொள்ள வேண்டும். அதன்பின் முறையே சபாபதி (நடராசர்), தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலியோரையும் சமயகுரவர் நால்வரையும் வணங்குதல் வேண்டும். வணங்கும் போது இரண்டு கைகளையும் மார்பிலேனும், சிரசிலேனும் குவித்துக்கொண்டு தேவார திருவாசம் போன்ற திருமுறைகளை ஓதி முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி, வலக் காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கை யினாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்து எழுந்து கும்பிடுதல் வேண்டும். இப்படிக் குட்டுவதனால் அவ்விடங்களிலுள்ள நரம்புகளில் அமிர்தம் சுரப்பதாகவும், தாழ்ந்தெழுவதினால் அவ்வமிர்தம் உடல் முழுவதும் செல்வதாகவும் பெரியோர் கூறுவர். இவ்வணக்கம் தோப்புக்கர்ணம் அல்லது தோப்புக்கரணம் என வழங்கும்.

இறுதியாகச் சண்டேசுரரைத் தரிசித்துக் கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து மூன்று முறை கைகொட்டிச் சிவதரிசன பலனைத் தந்தருளுமாறு பிரார்த்தித்துவலப்பக்கமாகவந்து சிவசந்நிதியை அடைந்து இடப தேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துப் பலிபீடத்திற்கு இப்பால் மும்முறை வணக்கஞ் செய்து எழுந்து, அமைதியான ஓரிடத்தில் இருந்து திருவைந்தெழுத்தை இயன்றமட்டும் உருச்செபித்துக் கொண்டு சிவ சிந்தனையோடு அமைதியாக வீட்டிற்குச் செல்லுதல் வேண்டும்.

வணக்கமுறைகள்

வணங்குதல் வடமொழியில் நமஸ்காரம் என்று அழைக்கப்படும். ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கு, பணிவைக் காட்டுவதற்கு வணங்குதல் மிக முக்கியமாகும். இறைவன் சந்நிதானத்தில் கொடித்தம்பத்திற்கு முன்பாக விழுந்து வணங்குதல் வேண்டும். இது ஐந்து வகைப்படும்

ஏகாங்கம் - தலையை மட்டும் தாழ்ந்து பணிந்து வணங்குதல், பெரியவர்களைக் கண்டால் இவ் வணக்கமே செய்ய வேண்டும்.

தூவியாங்கம் - சிரசில் (தலையில்) வலக்கையை மட்டும் வைத்து வணங்குதல் (இது காவல்துறை யின் சலூட் அடிப்பதைக் குறிக்கும்)

திரியாங்கம் - சிரசில் இருகைகளையும் குவித்து வணங்குதல், கோபுரத்தைக் கண்டதும் இவ்வணக்கம் செய்ய வேண்டும் (இம் மூன்றும் இருபாலாரும் செய்யலாம்).

பஞ்சாங்கம் - தலை, இருகை, இரு முழந்தாள் எனும் ஐந்து உறுப்புகள் நிலத்தில் பொருந்த வணங்குதல் (இது பெண்கள் மட்டும் செய்ய வேண்டும்).

அஷ்டாங்கம் - தலை, இருகை, இருசெவி, இருபுயம், மோவாய், எனும் எட்டு அங்கங்கள் பொருந்த வணங்குதல் (இது ஆண்களுக்கு மட்டும் உரியது)



இவற்றில் பஞ்சாங்க வணக்கமும், அட்டாங்க வணக்கமும் விரும்பத்தக்கது. வணங்கும் போது மேற்கு அல்லது தெற்கில் கால்களை நீட்ட வேண்டும். சங்கிராந்தி, பிற்பகல், சூரிய கிரகண நாளில் மேற்கில் கால்களை நீட்டுதல் கூடாது. கொடிமரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் எந்த இடத்திலும் விழுந்து வணங்குதல் கூடாது.

மும்மூர்த்திகளுக்கு சிரசின்மேல் 12 அங்குலம் உயர்த்தியும், ஏனைய தெய்வங்களுக்கு சிரசின் மேல் கூப்பியும் வணங்குதல் வேண்டும். பகல் 12 மணிக்கு மேல் சூரியன் மறைவதற்கு முன் அஷ்டாங்க நாமஸ்காரம் செய்யலாகாது.

பிரதட்சணபலன்

பிரதஷிணம் இறைவனை வலம் வருதல் எனப் பொருள்படும். கர்ப்பகிரகம் திறந்துள்ள போதே பிரதட்சணம் செய்யப்படல் வேண்டும். உட்பிரகாரப் பிரதட்சணத்தை விட, வெளிப்பிரகாரப் பிரதட்சணம் மும்மடங்கு நம்மையைத் தரும்.

பிரதட்சணமும் எண்ணிக்கையும்

விநாயகருக்கு - ஒருமுறை

சிவனுக்கு - மூன்றுமுறை

அம்பாள் - நான்கு முறை

ஏனைய தெய்வங்களுக்கு - முன்று முறை

ஆலயத்தை வலம் வருவதால் ஏற்படும் பலன்கள்

மூன்று முறை - விரும்பிய காரியம் நடைபெறும்

ஐந்து முறை - காரிய வெற்றி

ஏழு முறை - நல்லகுணம், எண்ணம், அமைதி

ஒன்பது முறை - ஆயுள் விருத்தி உண்டாகும்

பன்னிரண்டு முறை - உடல் வலிமை

ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அடிமேல் அடிவைத்து அடிப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யக் கூடாது. ஆண்கள் முட்டுக்காலில் நின்று வணங்குதல் கூடாது.

காலையில் வலம் வருதல் - நோய் நீக்கம் (முற்பிறவியில் செய்த பாவம் நீங்கும்)

பகல் - வேண்டிய வரம், தனம் பெருகும்
(இருபிறவிகளில் செய்த பாவம் நீங்கும்)

மாலை - பாவநீக்கம் (இப்பிறவியில் செய்த பாவம்)

அர்த்த சாமம் - மோட்சம், வீடுபேறு என்பவற்றைத் தரும்

ஆறுகாலப் பூசைகளும் பலன்களும்

உஷத்காலம் (அதிகாலை)	-	ஆண், பெண் பிள்ளைகள் இவர்களுக்கு நன்மை
பிராதக்காலம் (காலை)	-	சுப, ஹோமாதி விருத்தி
மாத்யான்னிகம் (உச்சி)	-	அரசன், நாடு வளர்ச்சி
சாயங்காலம் (மாலை)	-	பயிர்த் தொழிலின் அபிவிருத்தி
பிற்பகல்	-	அரக்கர்கள் அழிவு
அர்த்த சாமம் (இரவு)	-	கால்நடைகளின் அபிவிருத்தி

அபிஷேக பலன்

தைலாபிஷேகம் (எண்ணெய்)	-	சுகம் கொடுக்கும்
மாப்பொடி	-	கடனைப் போக்கும்
நெல்லி முள்ளிப்பொடி	-	வியாதியைப் போக்கும்
மஞ்சள் பொடி	-	வசீகரணம் உண்டாகும்
ஜலதிரவியம்	-	சௌபாக்கியம் தரும்
பஞ்சகவ்யம்	-	தூய்மை உண்டாக்கும்
பஞ்சாமிர்தம்	-	புஷ்டி அளிக்கும்
நெய்	-	வெற்றியைத் தரும், மோட்சம் கிடைக்கும்
பால்	-	ஆயுள் பெருகும்
தயிர்	-	மக்கட்பேறு அளிக்கும்
தேன்	-	சுகமளிக்கும்
கரும்புச்சாறு	-	பிணி நீக்கும்
சர்க்கரை	-	பகையை அழிக்கும்
வாழைப்பழம்	-	பயிரை வளர்க்கும்
மாம்பழம்	-	சந்தானத்தை அளிக்கும்
மாதுளை	-	கோபத்தை நீக்கும்
நாரத்தை	-	நேர்மை அளிக்கும்
எலுமிச்சை	-	யமபயத்தை அழிக்கும்
அன்னம்	-	சாம்ராஜ்யம் தரும்
இளநீர்	-	போகம் அளிக்கும்
அன்னாபிஷேகம்	-	சாம்ராஜ்யம் அளிக்கும்
சந்தனம்	-	செல்வத்தை அளிக்கும்
கும்பம்	-	மோட்சம்
பத்ரோதகம்	-	பயத்தை நீக்கும்
சங்குஜலம்	-	வெற்றி
சஹஸ்ரதாரை	-	செழிப்பு



ஷோடசோப பலன்கள்

ஆவாஹனம்	-	இறைவனை அழைத்தல்
ஆசனம்	-	இருக்கை கொடுத்தல்
பாத்யம்	-	திருவடிகளைக் கழுவ நீர் கொடுத்தல்
அர்க்யம்	-	மரியாதையைக் காட்ட நீர் கொடுத்தல்
ஆசமனம்	-	அருந்த நீர் கொடுத்தல்
மதுவர்க்கம்	-	பால் பழம் கொடுத்தல்
ஸ்நானம்	-	நீராடல் (அபிஷேகம்)
வஸ்திரம்	-	உடைகொடுத்தல்
யஞ்ஞோபவீதம்	-	பூணுல் போடுதல்
கந்தம்	-	வாசனைத் திரவியமளித்தல்
புஷ்பம்	-	மலர் தூர்த்துதல்
தூபம்	-	சாம்பிராணி காட்டுதல்
தீபம்	-	விளக்கு ஒளி காட்டுதல்
நைவேத்தியம்	-	நிவேதனம்
தாம்பூலம்	-	வெற்றிலை பாக்குத் தருதல்
நீராஞ்சனம்	-	கற்பூரம் காட்டுதல்

நைவேத்தியங்களும் பலன்களும்

சர்க்கரைப்பொங்கல்	-	செல்வம் பெருகும்
பருப்புப்பொங்கல்	-	காரியசித்தி
புளி அன்னம்	-	வியாதி நிவர்த்தி
தேங்காய் அன்னம்	-	லஷ்மீகரம் (செல்வம் பெருகும்)
எலுமிச்சம்பழ அன்னம்	-	ரோகநாசம் (துன்பம் போகும்)
மிளகுச்சம்பா	-	வியாதி நிவர்த்தி (நோய் நீக்கம்)
கற்கண்டு அன்னம்	-	மங்களம் உண்டாகும்
பாயாசம்	-	தான்ய விருத்தி (பயிர் செழிப்பு)
வடை	-	ஆரோக்கியம், சரீரபலம்
தயிர் அன்னம்	-	வியாதி நீக்கம்
பட்ஷணங்கள்	-	துன்பம் போகும்
பானகம்	-	காரியசித்தி
பால் அன்னம்	-	ராஜபோகம்

தீபஷோட சோபசாரமும் பலன்களும்

தூபம்	-	உற்சாகத்தைத் தரும்
ஏகதீபம்	-	விழிப்பைத் தரும்

அலங்காரதீபம் - சாம்ராஜ்யத்தைத்தரும்

நாகதீபம் - லோகாதிபத்யம் தரும்

விருஷதீபம் - அரசை அளிக்கும்

புருஷாமிருகதீபம் - அரச சித்திகள்

சூலதீபம் - வயிற்றுவலி நீங்கும்

ஆமைதீபம் - நீர்க்கண்டத்தைத் தடுக்கும்

கஜதீபம் - ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும்

சிம்பதீபம் - ஆயுளைக்கொடுக்கும்

வியாக்ரதீபம் - விலங்குகளிடத்தில் பயத்தைப் போக்கும்

கொடித்தீபம் - மங்கலத்தைத் தரும்

மயூரதீபம் - புத்திரப்பேறு அளிக்கும்

பஞ்சாட்சர பூர்ணகும்பம் - சாம்ராஜ்யமளிக்கும்

நாஷத்திர தீபம் - பாதுகாப்பு ஆதிபத்தியம் அளிக்கும்

மேருதீபம் - எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும்

தீபாராதனை இறைவனின் திருவடி முதல் நெற்றிவரை திருக்கண்வரை நாடிவரை என வலமாக மூன்று முறை காட்டப்படவேண்டும்.

முதலாவது சுற்று - உலக நன்மைக்காகவும்

இரண்டாவது சுற்று - கிராம நன்மைக்காகவும்

மூன்றாவது சுற்று - வீட்டு நன்மைக்காகவும் காட்டப்படும்

இவற்றைத் தரிசிப்பதால் மனிதர்களுக்கு ஆயுள், செல்வம், மக்கட்பேறு உண்டாகின்றன.

ஹோமப் பொருட்களும் பலன்களும்

பலாசு - மக்கள் விருத்தி

கருங்காலி - வெற்றி

அரசு - செல்வம்

அத்தி - இன்பம்

சந்தனக்கட்டை - அமைதி

எள் - முத்தி

உழுந்து - பசுவிருத்தி

நெற்பொரி - சௌபாக்கியம்

பயறு - ஆயுள் விருத்தி

நெல் - ராஜவசியம்

வன்னி - வசியம்

ஆல் - ஆரோக்கியம்

வில்வம் - ஆரோக்கியம்



நாயுருவி	-	வீரலட்சுமி
தர்ப்பை	-	மோட்சம்
வெள்ளெருக்கு	-	துன்பம் போகும்
தேங்காய்	-	சர்வசித்தி
மா	-	ஐஸ்வர்யம்
நெய்	-	துன்பம் போகும்
எருக்கு	-	சௌபாக்கியம்
அறுகு	-	வீரம்
முருக்கு	-	கடாட்சம்

நவக்கிரகங்கள்	- நிவேதனம்	தானியம்	- நிறம்
சூரியன்	- சர்க்கரைப்பொங்கல்	கோதுமை	- சிவப்பு
சந்திரன்	- பால்பாயசம்	நெல்	- வெள்ளை
செவ்வாய்	- பொங்கல்	துவரை	- சிவப்பு
புதன்	- புளியோதரை	பயறு	- பச்சை
வியாழன்	- தயிர்சாதம்	கடலை	- மஞ்சள்
வெள்ளி	- நெய்ப்பொங்கல்	மொச்சை	- வெள்ளை
சனி	- எள்ளுச்சாதம்	எள்	- கறுப்பு
ராகு	- உழுந்துச்சாதம்	உழுந்து	- நீலம்
கேது	- சித்ரான்னம்	கொள்ளு	- பலவர்ணம்

கடவுள் பூசைக்குரிய பூக்கள்

விநாயகர்	- அறுகு, சண்பகம், பாதிரி, சூரியகாந்தி, வன்னி
சிவன்	- கொன்றை, வில்வம், தும்பை, சங்குப்பூ, செம்பருத்தி
விஷ்ணு	- துளசி, மாதவி, குருந்து, வாகை, மத்யாணி, கருங்காலி, கொன்றை, முருக்கு, அலரி, செம்பரத்தை, செந்திலகம், மருக்கொழுந்து
பிரமன்	- அலரி
முருகன்	- வெட்சி, கடம்பு, முல்லை, குறிஞ்சி, மல்லிகை, காந்தள்
சூரியன்	- தாமரை
உமா	- நீலோற்பலம், தாமரை, சூரியகாந்தி, செம்பவளமல்லி, நந்தியாவர்த்தை
இலக்குமி	- நெய்தல், செந்தாமரை
சரஸ்வதி	- வெண்தாமரை
வரலட்சுமி	- ஐந்துமடல் கொண்ட தாழம்பூ
துர்க்கை	- செவ்வெருக்கு, சிவப்பு அரலி, கொன்றைமலர்
அக்னி	- வன்னி

நவக்கிரகங்கள் - பூசைக்குரிய பூக்கள்

சூரியன்	-	செந்தாமரை	சந்திரன்	-	வெள்ளரலி
செவ்வாய்	-	செண்பகம்	புதன்	-	வெண்காந்தள்
வியாழன்	-	முல்லை	வெள்ளி	-	வெண்தாமரை
சனி	-	கருங்குவளை	ராகு	-	மந்தாரை
கேது	-	செவ்வல்லி.			

கடவுளுக்கு ஆகாத பூக்கள்

விநாயகர்	-	துளசி
சிவன்	-	தாழம்பூ
விஷ்ணு	-	அட்சதை (எருக்கம்பூ, ஊமத்தம்பூ)
வைரவர்	-	நந்தியாவர்த்தம், மல்லிகை
சூரியன்	-	வில்வம்
உமா	-	நெல்லி
துர்க்கை	-	அறுகு
இலட்சுமி	-	தும்பைப்பூ
சரஸ்வதி	-	பவளம்

எல்லாத் தெய்வங்களுக்கும் மல்லிகை, முல்லை, கருங்குவளை முதலிய பூக்களையும் உக்கிரமான தெய்வங்களுக்கு செந்நிறப் பூக்களையும் வழிபாட்டில் பயன்படுத்தலாம்.

கடவுள் வழிபாடும்		பலன்களும்
விநாயகர்		- தடைகள் நீங்க
மகா இலட்சுமி வரலட்சுமி	}	- செல்வம் சேர
தட்சணாமூர்த்தி		- நோய் தீர
சுப்பிரமணியர் செவ்வாய்க்கிரகம்	}	- வீடு, நிலம் பெற
சூரியன்		- ஆயுள் ஆரோக்கியம் பெற
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி		- மனவலிமை, உடல் வலிமை பெற
சந்தான இலட்சுமி சந்தான கிருஷ்ணர்	}	- புத்திர பாக்கியம் பெற
ஸ்ரீசரஸ்வதி தேவி		- கல்வி சிறக்க
ஸ்ரீ கஜலட்சுமி		- புதிய தொழில் தொடங்க
தான்ய இலட்சுமி		- விவசாயம் தழைக்க
ஸ்ரீ அன்னபூரணி		- உணவு கஷ்டம் நீங்க



திருச்செந்தூர் முருகன் - பகைவர் தொல்லை நீங்க

ஸ்ரீ முத்துமாரி - திருஷ்டி விலக

கும்ப தத்துவம்

குடம்	-	தசை
அதனுள் உள்ள நீர்	-	குருதி
அதனுள் உள்ள இரத்தினங்கள்	-	எலும்புகள்
குடத்தைச் சுற்றியுள்ள நூல்	-	நாடிகள்
செபிக்கப்படும் மந்திரம்	-	உயிர்
கூர்ச்சம்	-	தலைமுடி
மாவிலை	-	சடை
தேங்காய்	-	தலை
வஸ்திரம்	-	தோல் என்பவற்றைக் குறிக்கும்

கற்பூர ஆராத்தியின் தத்துவம்

பூஜை முடிவில் கற்பூர தீபம் காட்டுவது வழக்கம். இறைவனுக்கு கற்பூர ஆராத்தி எடுக்கும் போது கற்பூரம் எரிந்த பின்பு சாம்பலோ, தூசியோ வேறு எதுவுமே மிச்சம் இருப்பதில்லை. கற்பூரம் தன் வாசனையை ஞானத் துயில் இட்டு எதுவும் மீதம் இல்லாத நிலையில் தெய்வத்தை அடைகின்றது. கற்பூர தீபம் ஏற்றிக் காட்டுகையில் இறையருள் உலகத்தில் இருக்கும். அது எரிந்து சாம்பலாவது போல ஆண்டவனுடைய ஜோதியில் ஆன்மா கரைந்து ஒன்றுபட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

மணி அடிப்பதன் தத்துவம்

ஆலயத்தில் பூஜையின் போது வெளிப் பிரகாரத்தில் பெரிய மணி (கண்டாமணி) ஒலிக்கும். பூஜை நடைபெறும் போதும் சிவாச்சாரியாரின் இடது கையில் உள்ள மணி ஒலிக்கும். இவை அசுரர்களை நீக்கி தேவர்களை அழைப்பதற்காகவே அடிக்கப்படுன்றன.

அக்குமணியின் மேற்பகுதி	- இடபம்
நாக்கு	- சரஸ்வதி
தண்டு	- சூரியன்
நாதம்	- ஈஸ்வரன்
மணியின் அதிதேவதை	- வாசுதேவன்
நான்கு கால்கள் (பக்கங்கள்)	- இருக்கு, யசுர், சாமம், அதர்வம்



நைவேத்திய தத்துவம்

இறைவன் அருளால் கிடைத்த உணவுப்பொருட்களை இறைவனுக்குப் படைத்த பின் பிரசாதமாக அனைவருக்கும் வழங்குவதே வழமை. "நிவேதயாமி" என்றால் அறிவிக்கின்றேன் என்று பொருள். "உன் கருணையால் இந்த உணவு கிடைத்திருக்கிறது" என்று நன்றியை அறிவித்து உண்பது தான் இதன் பொருள். அதாவது நாம் உண்ணும் உணவு நம் உழைப்பால்

கிடைத்தாலும் அதற்கு வேண்டியதை அளிப்பவன் இறைவனே. அவனுக்கு அதை வைத்து அவன் அனுமதியுடன் உண்பதுதான் நைவேத்தியமாகும்.

அங்கப்பிரதட்சிண தத்துவம்

அங்கப்பிரதட்சிணம் ஆண்கள் மட்டும் செய்ய வேண்டும். ஆலயங்களில் பெரிய பெரிய மகான்கள், யோகிகள், தேவர்கள் வந்து வழிபட்ட இடம் கோயிலாகும். பல தேவர்கள் கோயிலுக்கு வந்து வழிபட்டுச் சாபவிமோசனம் பெற்றுள்ளனர். எனவே இவர்களின் திருவடி பட்ட அந்த இடத்தில் நம்முடைய தலை முதல் கால் வரை உள்ள அங்கங்கள் படும்படியாக அங்கப்பிரதட்சணம் செய்யும் போது அவர்களுடைய பாதம்பட்ட இடத்தின் புனிதத் தன்மையால் பாவங்கள் அகலுகின்றன. இதனால் நற்பயன் கிடைக்கின்றது.

மனத்தினை விடயபாதை சென்றிடா தடக்கித்
தினைப்பொழு தாயின் வாசனை வழிவிடாது
அனைத்துமாய் நிற்கும்ஞானதற்பர நிலையில் நின்று
வனப்பெரு மாய்கை தன்னை நீப்பது ஞானநிட்டை

பொழிப்புரை:

மனத்தைப் பிறவிடயங்கள் மேல் செல்லாது அடக்கி தினைப்பொழுதிலாவது உலக இன்பங்களில் செல்லவிடாது எல்லாமாக நிற்கும் திருவருள் கூட்டும் மேம்பட்ட நிலையில் நின்று எம்மை மாய்க்கும் துன்பத்தை நீக்குவதே ஞானநிட்டையாகும்.

பிள்ளையார் ஆயுதங்கள்

காலதேவன் நமது வாழ்க்கைப் பாதையைப் பல்வேறு வழிகளில், பலநாட்டு மக்களுடைய கூட்டுறவைக்கொண்டு கணந்தோறும் மாற்றி அமைகின்றான். அதனால் நமது அகவாழ்வு புறவாழ்வு இரண்டுமே மாறுகின்றன. நமது பண்டைய வாழ்வியலின் துணைப் பொருள்களான பாத்திர பண்டங்களும், போர்க்கருவிகளும் இன்று வேற்றுருவத்தில் வேறு வேறு பெயர் தாங்கி நிற்கின்றன. சில மறைந்தே போயின. ஆதலால் அவற்றைப் பற்றி இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் தெரிந்து கொள்ளவேண்டியது இயன்றியமையாதது.

கருவிகள், கருவிகளாக இருந்த காலத்திலே காரியப்பாட்டிற்கு வேண்டிய உருவும், தகுதியும் உடையனவாக இருந்தன. அவற்றில் ஆடம்பரமும், அணியழகும் அடிவைக்கத் தொடங்கிய காலத்து, எத்தனையோ இழைப்பு வேலைகளும் கொடிக்கருக்கு வேலைகளும், சிற்ப சித்திர வேலைகளும் கலந்துவிட்டன. அதனால் அவை ஆயுதங்களா? அல்லது அணியா? என்று கூட அறியமுடியாத நிலை நமக்கு ஏற்பட்டுவிட்டது. அவ்வண்ணமே (ஆயுதங்களை) போர்க்கருவிகளை மக்கள் கையாண்டகாலத்துக்கருவிகளாகவே இருந்தன. மன்னர்களும் மந்திரிகளும் கையாளுவனவற்றில் சித்திரம் கலந்தன. கடவுட்கைகளில் இருப்பன. என்றும் காட்சிப் பொருள்களாகவே இருப்பதால் அவை அழகுப் பொருள்களாகவே ஆயின. ஆதலால் அவைகளின் இயற்கையமைப்பையும், இன்று கடவுளர் கரங்களில் விளங்கும் அமைப்பையும் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. மற்றும், நாட்டிற்கு நாடு கருவிகளினுடைய அமைப்பு மாறியிருக்கிறது.



கல்லுக்கு உயிர்கொடுத்து, கற்பனைக்கு உறைவிடமாக்கி, கலைத் தெய்வத்தின் கருணையை விளங்கச் செய்த பல்லவர்களில் முற்காலப்பல்லவர்கள், சாளுக்கியர்கள் இவர்கள் சிற்பங்களில் கருவிகளின் அமைப்புநிலை வேறு. அவற்றினின்றும், பிற்காலச் சாளுக்கிய, பல்லவ, ஹொய்சள மன்னர்களின் சிற்பங்களிலுள்ள கருவிகளின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டது. அவற்றைக் கிடைத்தவரையில் கணபதி கரங்களிலுள்ள கருவி வகைகளைக் கொண்டு காட்ட முயலுவோம்.

1. பாசம்

இது கயிறு. பகைவர்கள் கையையும், கால்களையும் கட்டப் பயன்படும். ஒரு கயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து, எளிதில் அவிழ்க்கும் சுருக்கு முடிச்சாக இடப்பட்டிருக்கும். சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். விநாயகருக்குச் சிறப்பான கருவி. நாகமே பாசமாக அமைவதும் உண்டு. இதனை நாகபாசம் என்பார்கள். இதன் வகைகள் நான்கு.

2. அங்குசம்

இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கு, குத்தியடக்கக்கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருக்கப்பெற்றிருக்கும் யானைப் பாகன் இதனை யானைக்காதிலே மாட்டித் தொங்க விட்டிருப்பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்கு உரிய சிறப்புக் கருவிகளில் இதுவும் ஒன்று.

3. தந்தம்

ஒடிந்த யானைக்கொம்பு.

4. வேதாளம்

தசை நாரில்லாத அச்சமும் அருவெறுப்புந் தரத்தக்க பூத வடிவாக இருப்பது. இதனை ஏவிப்

பகைவர்களை விழுங்கச் செய்வது வழக்கம். இது வீரகணபதி கரங்கள் ஒன்றில் இருக்கிறது.

5. சக்தி

இது வேல். ஆறு கூரிய பகுதிகளையுடையது. தகட்டு வடிவானது. முருகனுக்குச் சிறப்பானது. விநாயகரும் வீரகணபதியாக விளங்கும்போது தாங்கியிருக்கிறார். இது பிடித்தபடியே எறியும் கருவிகளில் ஒன்று. வேல் மட்டும் இரும்பாலானது. இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம். இருமருங்கும் குத்தும் இயல்பினது. 'யானையெறிந்த வேல் ஏந்தல் இனிது' என்பர் வள்ளுவரும்.

6. அம்பு (Arrow)

இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப்பெறுங் கருவி. நுனி கூரிய முள்போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்ப்பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்றப் பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டுவது விரிந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.

7. வில்

இது அம்பு எய்தப் பயன்படுவது. மூங்கில், சிலையென்னும் மரம் முதலான வளையக் கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லினது இரு தலையிலும் தோல், அல்லது நார்க்கயிற்றானியன்ற நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக் கட்டி அதன் நடுவில் அம்பை வைத்துவிடுவது வழக்கம். எவ்வளவுக் கெவ்வளவு வில்லின் வலியும், நாணின் உறுதியும், இழுத்துவிடுபவன் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம்; அம்பின் நுனி பிறைமதி போலக் கவர் பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

8. சக்கரம்

இது விஷ்ணுவுக்கு உரிய சிறப்பான கருவி. இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. இதில் இரு வகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம் போன்றது. இது அழகுப் பொருளாக எத்தனையோ வடிவங்களிற் காணப்பெறுகின்றன.

9. கத்தி

இது இன்று அறவே மறந்துபோன கருவி. தலைப்பகுதிகுண்டாகத்தடித்துள்ளநீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது. தலைப்பக்கம் ஒரு மண்டை ஓடு போலவும், கம்பி முழங்கால் எலும்பாகவுங்கூட அமைந்திருப்பதுண்டு. இதனைக் குத்துக்கத்தியாகிய 'பிச்சுவா' என்பாரும் உளர்.

10. கேடகம்

இது கத்திவெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகை யாலும், வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டா மிருகம், இவற்றின் தோலாலும் செய்யப்பெறும். சதுரம், நீளச்சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பல வடிவங்களிற் செய்யப்பெறும்.

11. சம்மட்டி

இது இரும்பாலியன்றகனத்ததலைப்பகுதியை உடையது. இதன் நடுவில் தொளையிடப் பெற்றிருக்கும். இதில் கைபிடிக்கும் சிறுகழியைக் கோத்திருப்பார்கள். இதுவும், உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத்தாக்கப் பயன் படுத்தப்பெறும்.



12. கதை

குண்டாந்தடி. இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையை விட்டு அகலாதபடி, காவலாக இருந்து, உடையவனைப் பாதுகாப்பது.

13. நாகபாசம்

இதுவும் பாசவகைகளுள் ஒன்று.

14. சூலம்

இது மூன்று நுனிகளையுடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியது. சுரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப் பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோக்கப் பெற்றிருக்கும்.

15. குந்தாலி

இன்று, வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலை கனத்துக் கூரிய நுனியோடு இருக்கும் இரும்பானியன்ற கருவி இது. இதில் பலவகைகள் உள்ளன.

16. மழு

இன்று மரங்களை வெட்டப்பயன் பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது. 'வாய்ச்சி' என்னும் மரஞ்செதுக்குங் கருவியின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி.

17. கொடி

இது வெற்றிக்கு அறிகுறியானது. துணியாலியன்றது. அடையாளம் எழுதப்பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.



18. தண்டம்

இது நீளமான கைத்தடி. மரத்தாலானது.

19. கமண்டலம்

நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள் அந்தணர்கள் தங்கள் நாட்கடனைக் கழிப்பதற்காக வைத்திருப்பார்கள். இதுவும் அக்ஷமாலையும் ஆயுதங்கள் அல்லவானாலும் திருவுருவ நிலையை அறிந்துகொள்ள உதவும் கருவிகள்.

20. பரசு

இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவிதான். ஆனாலும் மழுவின் வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப் பெறும் கருவியாகும்.

21. கரும்புவில்

கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. போகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும், காமேஸ்வரியாகிய காமாட்சியும் தாங்கியிருப்பர்.

22. சங்கம்

இதுவும் விஷ்ணுவுக்குரிய சிறந்த ஆயுதம். வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்களை இதன் ஒலிகேட்டதும் ஒடுங்கி அடங்கச் செய்யும் அச்சக் கருவியுமாம். இதிலும் பல வடிவங்கள் உள.

23. புஷ்பபாணம்

தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களாலியன்ற பாணம். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். போக நிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு.

24. கோடரி

மரம் பிளக்கப் பயன்படும் கருவிபோலப் பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படுவது. இரும்பால், வாய் கூர்மையாகப் பின் பக்கம் கனமானதாக அமைந்துள்ளது.

25. அக்ஷமாலை

உருத்திராக்ஷ மாலை. இது தனித்தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவதும் உண்டு. மிகப் பழமையான திருவுருவங்களில் இது ஓராயுதம்போல் இருப்பதைக் காணலாம்.

26. சாமரம்

இது கவரிமான் வால்மயிரால் ஆனது. ஓர் ஆயுதம் அன்று. ஆனலும் விநாயகப் பெருமானுடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுத வரிசையில் து இடம் பெற்றிருக்கிறது.

27. கட்டுவாங்கம்

இது நீளமான கத்தி. போரில் படை களை வெட்டப் பயன்படுவது. இதில் ஒருமுனை யுடையதும், இருமுனையுடையதும் என இருவகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியுடையதும் உண்டு. பழங்கால மன்னர்கள் இடுப்பில் செருகியிருப்பது வழக்கம்.

28. தீ அகல்

ஒரு தீப்பிழம்பு. தீ அகலாகிய மழுவின் வடிவும் இப்படியேதான் இருக்கும்.

29. வீணை

இது ஓர் இசைக்கருவி. போர்க்காலங்களில் தளர்ந்த படைவீரர்களுக்கு உணர்ச்சியூட்டப் பயன்படுவது.

நன்றி: கணபதி.

திருவாவடுதுறை ஆதினம், சரசுவதி மகால்
நூல் நிலையம் மற்றும் ஆய்வுமையம்.

காணாபத்ய மதம்

இந்தகைய பெருமை வாய்ந்த கணபதியையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் ஒருமதம் நமது நாட்டில் உண்டு. வடநாட்டில் இந்த மதம் பரவத் தொடங்கிய காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்றான் என்று சங்கரதிக்விஜயத்தில் ஆனந்ததீர்த்தர் குறிப்பிடுகிறார்.

கொள்கை

கணபதி உலகக் கடவுள். படைத்தலாதி ஐந்தொழில்களையும் செய்பவர். சிவன் முதலிய எல்லாக் கடவுளருக்கும் தலைவர். 'கண்கண்ட தெய்வம் நீயே. படைப்போன்நீயே. காப்போன் நீயே. அழிப்பவனும் நீயே. உயர்ந்த பொருள்களுக்கெல்லாம் உயர்ந்த பொருளும் நீயே. எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும் வன்மையை வழங்குவாய் நீ. உலக முழுவதும் உன்னிடத்தில் உண்டாயின. உன்னில் ஒடுங்குகின்றன. பஞ்ச பூதங்களுக்கும் பிறப்பிடம் நீயே. நீயே பிரமன்; நீயே விஷ்ணு; நீயே ருத்திரன்; அனைவருக்கும் முதல்வன் நீயே. ஓம் கணபத்யாய நம: என்பது அவர்கள் செபிக்கும் மந்திரம். இவ்வாறு வழிபட்டவர்கள், மறுமையில் கணபதியின் உலகம் செல்வார்கள் என்பத அவர்கள் முடிபு. அவர்களால் வழிபடப் பெறுகின்ற கணபதி சக்தி கணபதியேயாம்.

"நன்றி கணபதி"


முன்னிளங்க காலத்தி லேபற்றி னேன்வெற்றி மீனுயர்த்த
மன்னிளங் காமன் தன் மைத்துன னோமணி நீலகண்டத்
தென்னிளங் காய்கரி றேஇமை யோர்சிங்க மே உமையாள்
தன்னிளங்க காதல னேசர ணாவுன் சரணங்களே.


- கபிலதேவநாயனார்.


திருவாவடுதுறை ஆதினம், சரசுவதி மகால்
நூல் நிலையம் மற்றும் ஆய்வுமையம். திருவாவடுதுறை.




கணபதியின் ஆயுதங்கள்









</transription>>>



15 16 17 18 19



20 21 22 23 24



25 26 27 28 29

செல்லாச்சி அம்மையார்

ஆறுமுக நாவலர் காலத்திலும் அதன் பின்னரும் கூட பெண்கள் பாடசாலைக் கல்வியை அதிகம் மேற்கொண்டிருக்காவிடினும் புராண சாஸ்திர சம்பந்தமான விளக்கங்களைக் கற்றறிந்தோர் வாயிலாகக் கேட்டும் சமயப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தும் கோயில்களுக்குச் சென்று வழிபட்டும் தமது அறிவை விருத்தி செய்து கொண்டனர். அநேகமான பெண்கள் அடக்கமாக, வெகு அமைதியாக இருந்தாலும் ஆன்மீகத் தேடல் மிக்கவர்களாகவும் ஆன்மீக ஈர்ப்பு மிக்கவர்களாகவும் வாழ்ந்தனர். இத்தகையோருள் உச்ச நிலை அநுபூதி பெற்ற அருட் செல்வியாக வாழ்ந்து மறைந்தவர் தான் "சுன்னாகத்தம்மா" என்று அழைக்கப்பட்ட செல்லாச்சி அம்மையார்.

செல்லாச்சி அம்மையார் சுன்னாகத்தில் 1867ஆம் ஆண்டு பிறந்தார். பரம்பரையாகத் தமிழும் சைவமும் பேணப்பட்டு வந்த குடும்பத்தில் உதித்த அம்மையார் சிலகாலம் அயலிலுள்ள பாடசாலையில் கற்றார். பின்னர் தமது வீட்டில் இருந்தவாறே முதலாம் இரண்டாம் சைவவினாவிடை இரண்டாம் நான்காம் பாலபாடம் முதலியநூல்களைக் கற்றுத் தேறினார். இரண்டாம் பாலபாடத்தின் முதற்பாடத்து முதல் வசனமாகிய "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது அம்மையாரின் மனதில் நன்கு பதிந்து வேரூன்றிக் கிடந்தது. நான்காம் பாலபாடத்திலுள்ள "கடவுள்" "ஆன்மா" "கல்வி" "தருமம்" "ஆச்சிரமம்" "நல்லொழுக்கம்" "கற்பு" "வீட்டுவேலை" போன்ற பாடங்களைப் பலமுறை படித்துத் தெளிந்து அவற்றைத் தமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டார்.

அம்மையார் வைத்தியப் பகுதியில் "அப்போதிக்கரி"யாகக் கடமையாற்றிய திரு முதலியார் தம்பு என்பவரை 1889ஆம் ஆண்டில் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உளர். அம்மையார் ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு உடையவராக இருந்தாலும் தமது இல்லறக் கடமைகளில் எள்ளளவும் தவறினாரல்லர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்தி பெற்ற கோயில்களில் "புராணபடனம் என்று ஒரு சிறப்பு நிகழ்வு இடம்பெறுவது வழக்கம். இவை படிப்பவர்க்குமட்டும் அன்றி பாமரமக்களுக்கும் ஆன்மீக அறிவுடன் இறைபக்தியையும் வளர்ப்பதில் பெரும் பங்கு வகித்தது. இதனை நன்குணர்ந்த அம்மையார் தாம் வாழும் சூழலில் அமைந்துள்ள சந்திரசேகரப்பிள்ளையார் கோயில், மயிலணிச்சிவன்கோயில் ஆகியவற்றில் இப்புராணபடனங்கள் ஒழுங்காகத் தொடர்ந்து நடைபெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு சிறப்புற நடாத்தினார்.

1905ஆம் ஆண்டு அம்மையாரின் கணவர் முதலியார் தம்பு சிவபதம் அடைந்தார். கணவரின் அந்திமக்கிரியைகளை குறைவற நிறைவு செய்த அம்மையார் அணிகலன்களைத் துறந்து வெள்ளாடைதரித்து உண்டியைச் சுருக்கித் தவ வாழ்க்கையில் ஈடுபட்டார். அம்மையார் செய்து வந்த செபம் தியானம் முதலியவற்றோடு திருப்தி அடையாது புறம்பேயும் சிவலிங்கத் திருமேனியில் சிவபெருமானைத் தியானிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் உண்டாகியது.

இக்காலத்தில் எதிர்பாராத முறையில் ஒரு சிவலிங்கம் கிடைத்தது. அது கிடைத்ததும் சிவன் கோயிற் குருக்களிடம் சிவ பூசை செய்யும் முறைகளைக் கேட்டறிந்து முறைப்படி சிவபூசை செய்துவந்தார். இவ்வாறு சிவத்தியானம் சிவபூசை செய்து வரும் காலத்தில் அம்மையாருக்கு சமாதிநிலை வந்துவிடும். மணித்தியாலக் கணக்காகப் பிரக்ஞையற்று இருப்பார். இந்தக் காலத்தில் தான் அம்மையாரிடம் அற்புதமான சித்திகள் வெளிப்பட்டன. இப்படிச் சித்திகள் ஏற்படவே துன்புற்றோரும் நோயாளிகளும் அவரிடம் வரத்தொடங்கினர். அம்மையாரின் ஸ்பரிசம், ஆசீர்வாத வார்த்தைகள் அவர் வாழ்த்திக் கொடுக்கும் திருநீறு, அவர்வீட்டுக் கிணற்றிலிருந்து எடுத்த குளிர்ந்த நீர் யாவுமே பெருந்தொகையான மக்களின் நோய்களையும் இன்னல்களையும் மற்றும் பிணிகளையும் போக்கடிக்கும் மருந்தாகவும் மந்திரமாகவும் ஆகின. அம்மையார் மக்களது துன்பநிலையில் இருந்து விடுபட உதவினாலும் இவற்றிலே தம்முடைய சக்தியோ ஆற்றலோ கொஞ்சமும் இல்லையென்றும் இவை எல்லாம் திருவருள் ஆணையால் நிறைவேறுகிறது என்றே பணிவாக உரைத்து இறைவன் அருளை எண்ணி எண்ணி வியப்பார்.

இவருடைய பக்தி வைராய்க்கியத்தையும் ஆன்ம ஈடேற்றத்தையும் அறிந்து கொழும்புத்துறை யோகர் சுவாமியவர்கள் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இவருடைய இருப்பிடத்திற்குச் சென்று ஆன்மீக விடயங்களைப் பற்றி ஆராய்வதும் கலந்துரையாடுவதும் உண்டு. திருவாசகமே தனது ஞானகுரு எனக் கூறும் அம்மையார் யோகர் சுவாமிகளுடன் சேர்ந்து தோத்திரப் பாடல்களைப் பாடி மகிழ்வார். அம்மையார் யோகர் சுவாமிகள் மீது பெரும் பக்தியும் மதிப்பும் கொண்டிருந்ததைப் போலவே சுவாமிகளும் அம்மையார் மீது பெரும் மதிப்புக் கொண்டிருந்தார் என அறிய முடிகிறது.

1914ஆம் ஆண்டு அம்மையாருக்கு அத்துவித ஞானி ஒருவரின் நட்பு கிடைத்தது. அதன்பின் அம்மையார் "தானே அதுவாய் அதுவே தானாய்" விளங்கினார்கள். நான் எனும் நினைவு முற்றாய் மறைந்தது. "நானும் இல்லையடி, நாதனும் இல்லையடி" என்று அதீத அநுபவப்பேறு பெற்று விளங்கினார். அம்மையாரின் பிற்கால வாழ்வில் அவரது இல்லத்தையடைந்து பத்து வருடங்களுக்கு மேல் கூட வாழ்ந்து வந்தவர் "பூசாரிக்கிழவன்" எனப் போற்றப்பட்ட ஆறுமுகம் அவர்கள். இவர் ஏழாலையைச் சேர்ந்தவர். சைவசித்தாந்த சாத்திரம் பயிற்சியும் வேதாந்த சாத்திர ஆராய்ச்சியும் அறிவும் கைவரப் பெற்றவர். அம்மையாருக்குப் பல வழிகளிலும் உதவியாக இருந்தவர்.

அம்மையாரின் வாழ்க்கையில் காணப்பட்ட பல நிகழ்ச்சிகளிலிருந்து அவர்கள் சர்வ வியாபக ஞானம் பெற்றிருந்தார்கள் என அநுமானிக்கக் கூடியதாக இருந்தது. இறைவனிடத்தில் தம்மை முற்றாக ஒப்புக்கொடுத்து அவர் இட்ட கட்டளைப்படியே வாழ்ந்து வந்தார்கள். உணவிலும் இறைவன் கட்டளையையே பின்பற்றி வந்தார்கள் என அறியக் கிடக்கிறது. பிறர் தமக்குச் செய்யும் வழிபாடுகளையும் அக்கட்டளைக்கமையவே அனுமதித்து வந்தார்கள். அம்மையார் தமது பூதவுடலை உதற வேண்டிய காலம் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்து உணவையே குறைத்து வெறும் நீராகாரம் மாத்திரமே ஒரு மாதகாலம் உட்கொண்டார் கடைசியில் அதனையும் நீக்கி விட்டார்.

பிற உயிர்கள் மீது அன்பு பொழிந்து, அமைதியாகவும் அடக்கமாகவும் ஆன்மீக வைராய்க்கியத்திலிருந்து இம்மியும் பிசகாது அநுபூதிச் செல்வத்தை எய்திய "சுன்னாகத்தம்மா" எனப் போற்றப்பட்ட



செல்லாச்சி அம்மையார் 18-01-1929 ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். சிவயோக சுவாமிகளின் ஆலோசனையின்படி அம்மையாரின் பூதவுடல் அபிடேகம் செய்யப்பட்டு சங்கநாதம் மணிஓசை, தேவாரப்பாராயணம் என்பவற்றுடன் மயானம் எடுத்துச் செல்லப்பட்டு அன்பர்களின் வழிபாட்டின் பின்னர் தீயுடன் சங்கமமாகியது.

அன்னாரின் நினைவாக வருடம் தோறும் தைமாதம் அச்சுவினி நட்சத்திரத்தன்று சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் குருபூசை சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

சேதுவிபுலானந்தா.
அம்மையாரின் பூட்டன்,

தேவாரப் பொன் மொழிகள்

" நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"
"ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை"
" அப்பலக்கூத்தனைத் தினைப் பொழுதும் மறந்துய்வனோ"
"படைக்கலமாக உன்நாமத்தெழுத்தஞ்சும் என்நாவிற் கொண்டேன்"
"பொற்பாதம் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே"
"முதல்வன் பாதமே பற்றாநின்றாரைப் பற்றா பாவமே"
"கற்றல் கேட்டல் உடையார் பெரியர்"

***


"எல்லாப் பொருள்களிலும் ஒரு பொருள் உனது அதுவே ஒன்றைப் பலவாக உண்டாக்குகின்றது. அப்பொருளைத் தங்கள் அகத்தே காண்பவரே அழியாத இன்பத்தைப் பெறுவர் - உபநிடதம்

"ஞால நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம்மாதியே"

- ஞானசம்பந்தர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழியில் குமாரசுவாமிப் புலவர்





சுன்னாகம் மயிலணியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். வடமொழியிலும், தென்மொழியிலும் ஆழ்ந்த புலமை உள்ளவர். இயல்பாகவே கவிதை படைக்கும் ஆற்றல் உள்ளவர். கட்டுரை எழுதுவதிலும், கவிதை இயற்றுவதிலும், ஒப்பாரும், மிக்காரும் இலாத் தனிப் பெருமையோடு விளங்கினார். செந்தமிழ் வளர்ச்சிக்கும், சைவத்திற்கும் அரும் பணி புரிந்தவர் இவர். புலவர் அவர்கள் பல செய்யுள் நூல்களையும், இலக்கண நூல்களையும், உரைநடை நூல்களையும் வெளியிட்டதோடு அல்லாமல் இலக்கியச் சொல் அகராதி என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.

புலவர் ஆரம்பத்தில் இயற்றிய நூல்களுள் பெரும்பாலானவை செய்யுள் வடிவில் அமைந்தவை ஆகும். அவை பதிக, ஊஞ்சல், சிந்து, இரட்டை மணி மாலை, அட்டகம், கும்மி என்பனவாகும். அவற்றுள் வதுளைக் கதிரேசன் பதிகம், வதுளைக் கதிரேசன் சிந்து, வதுளைக்கதிரேசன் ஊஞ்சல், மாவைப்பதிகம், மேக தூதக்காரிகை, மாவை இரட்டை மணிமாலை, சாணக்கிய நீதி வெண்பா, இராமோதந்தம் என்பவை குறிப்பிடத்தக்க சில நூல்களாகும்.

புலவர் அவர்களின் உரை நூல்களோ பல அவற்றை எல்லாம் இச்சிறு கட்டுரையில் குறிப்பிடுவது சிரமம் எனினும் ஒரு சிலவற்றையாவது கூறுவது பொருத்தமாகும். திருக்கரசைப் புராணப், பொழிப்புரை, சூடாமணி நிகண்டு, முதலாம் இரண்டாம் தொகுதிப் பதப்பொருள், மறையசை அந்தாதி அரும்பத உரை, நீதிநெறி விளக்கப் புத்துரை, இராமாயணம், பாலகாண்டம், அரும்பத உரை, ஏர் எழுபது பொழிப்புரை, கல்வளை அந்தாதி முதலியனவையாகும்.

இவருடைய இலக்கண உரைநூல்கள், யாப்பருங்கலப் பொழிப்புரை, வெண் பாட்டியல், பொழிப்புரை, தண்டியலங்காரப் புத்துரை, யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை, அகப்பொருள்விளக்கப்புத்துரை என்பனவாகும். இவற்றை விட இலக்கண சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம், என்னும் இரண்டு ஆராய்ச்சி நூல்களையும்எழுதிவெளியிட்டார்.

கண்ணகி கதை, தமிழ்ப்புலவர் சரிதம், இதோபதேசம், சிசுபால சரிதம் இரகுவம்சரிதா மிர்தம் போன்ற வசன நூல்களையும் எழுதினார்.



மேலும் இதோபதேசம், நகுலமலைக் குறவஞ்சி நாடகம், யாப்பருங்கலக்காரிகை (பழைய உரை), ஆசாரக் கோவை, ஆத்திசூடி வெண்பா, நான் மணிக் கடிகை, சிவ சேத்திரி விளக்கம், உரிச்சொல், நிகண்டு, திருவாதவூரர், புராண மூலம், பழமொழி விளக்கம் ஆகிய பதிப்புநூல்களையும் எழுதி உள்ளார். சதாசாரக் கவித்திரட்டு, சிவதோத்திரக் கவித்திரட்டு என்பன இவரது தொகுப்பு நூல்களாகும்.

குமாரப்சுவாமிப் புலவர் அவர்கள் ஆறுமுக நாவலரைச் சந்தித்தது முதலாக அவர் தம் காந்தசக்தியால் ஈர்க்கப்பட்டார். புலவரின் ஆற்றலை நாவலரும் கண்டார். உற்சாகப்படுத்தினார். இந்த உற்சாகம் புலவர்களை நாவலரைப் பின்தொடருமாறு செய்தது. நாவலரின் பிரசுரங்களைத் தப்பாமற் பெற்று வந்தார். புலவர் நாவலர் எழுதிய வசனங்களையும், கண்டனங்களையும் கருத்தூன்றிப் படித்தார். புலவரின் அறிவு வளர் பிறையாய் வளர்ந்தது.

தமக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நாவலர் மூலம் நிவர்த்தி செய்து கொண்டார். புலவர் அல்லாமல் தமது படைப்புக்களை அவரிடம் காட்டி அவர் அபிப்பிராயத்தைக் கேட்பதிலும் ஆர்வமிக்கவராக விளங்கினார்.

நாவலரது மாணாக்கர் பரம்பரையில் நேரடியாக வராதராயினும் புலவர் அவர்கள் நாவலர் பரம்பரையின் முக்கியத்தருள் ஒருவராக கருதப்படுவர். சிலர் புலவர் அவர்களுடன் நாவலர் பரம்பரை முடிந்து விட்டதாகவும் கூறுவர். இதற்குக் காரணம் புலவர்கள் செய்த பணிகளாகும்.



வண்ணைச்சைவப் பிரகாசக வித்தியா சாலையை நாவலரவர் களுக்குப் பின்பு உயர் கல்வி பீடமாக உயர்த்திய பெருமையில் புலவர்களுக்கு முக்கிய பங்குண்டு. அங்கு நடைபெற்ற காவிய வகுப்பில் உயிர் நாடியாக விளங்கியவர் புலவர் அவர்களே.

புலவர் அவர்கள் (1878 - 1888) வரை உள்ள காலப்பகுதியில் கிறீஸ்தவ மத கண்டனத்தில் முதல்வராக நின்றவர். ஆரம்ப காலத்தில் சிறந்த சமயப் பிரசங்கியாகவும் விளங்கியவர்.

புலவர் அவர்களை ஆறுமுகநாவலர் பெரிதும் பாராட்டியுள்ளார். தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை ஆறுமுகநாவலர் மூலமாக புலவர் அவர்கள் தெளிவுபடுத்திக் கொண்டார்.

1900ஆம் ஆண்டில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்தின் ஆலோசகராகவும், பரீட்சகராகவும் குமாரசாமிப் புலவர் அவர்கள் விளங்கினார்.

1903ஆம் ஆண்டில் பாண்டித்துரை தேவர் அவர்கள் மதுரைத் தமிழ் சங்கத்தை நிறுவினார். இதன் உறுப்பினராக இருக்குமாறு பாண்டித்துரைத் தேவர் அவர்கள் குமாரசாமிப் புலவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட பெரும் கௌரவமாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறாகத் தம் வாழ்நாள் முழுவதையும் சைவத்திற்கும், செந்தமிழ் மறுமலர்ச்சிக்கும் அர்ப்பணித்த புலவர் அவர்கள் 09.03.1922ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவருடைய மறைவு தமிழ் உலகத்திற்குப் பேரிடியாக விளங்கியது. இவரது பிள்ளைகள், உறவினர்கள், மாணவர்கள், நண்பர்கள் அனைவரும் சோகக் கடலில் மூழ்கினர். புலவர் அவர்களின் இறுதிக் கிரியைகளில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை இரங்கல் பாக்கள் மூலமும், உரைகள் மூலமும் வெளியிட்டனர். புலவர் அவர்களின் தலை சிறந்த மாணவர்களாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும், புலவர் மணி ஏ. பெரியதம்பிள்ளை அவர்களும், பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் அவர்களும் புலவரின் மறைவு குறித்து இரங்கல் பாக்கள் பாடியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக அமையும் எனக் கருதுகின்றேன்.

குமாரசுவாமிப் புலவர் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர் என அறியமுடிகிறது. அவரது சிரேஷ்ட மகன் கு. அம்பலவாணபிள்ளை அவர்கள் புராணபடலம், பிள்ளையார் கதை, சொற்பொழிவுகளை இவ் ஆலய மண்டபத்தில் நிகழ்த்தியுள்ளார். கனிஷ்ட புதல்வன் கு. முத்துக்குமார சுவாமிப்பிள்ளை பெருமானர் மீது சந்திரசேகரப்பிள்ளையார் இரட்டை மணிமாலை, சந்திரசேகரப் பிள்ளையார் மஹா கும்பாபிஷேக வாழ்த்து (1958) நூலிலும், ஊஞ்சல் பாட்டினை முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை கவிதைத் தொகுப்பு நூலிலும் வெளியிட்டுள்ளார். இப்பெரியோர்களைப் பின்பற்றி நாமும் விநாயகரைப் போற்றிப் பயன்பெறுவோமாக.

புலவர் இயற்றிய நூல்களின் அட்டவணை

செய்யுள் நூல்கள்

1. வதுளைக் கதிரேசன் பதிகம் (1884)
2. வதுளைக் கதிரேசன் சிந்து (1884)
3. வதுளைக் கதிரேசன் ஊஞ்சல் (1884)
4. வதுளை மாணிக்க விநாயகர் பதிகம் (1884)
5. துணைவை அரசடி விநாயகர் பதிகம் (1887)
6. துணைவைச் சண்முகர் ஊஞ்சல் (1887)
7. துணைவை அரசடி வைரவர் தோத்திரம் (1887)
8. மிலேச்சமதவிகற்பக் கும்மி (1888)
9. மாவைப்பதிகம் (1892)
10. மாவையிரட்டை மணிமாலை (1892)
11. மேகதூதக் காரிகை (1896)
12. நகுலேசுரர் ஊஞ்சல் (1896)
13. ஏகவிருத்த பாரதம் முதலியன (1896)
14. அத்தியடி விநாயகர் ஊஞ்சல் (1897)
15. அமராவதிபூதூர் பாலவிநாயகர் பதிகம் (1897)
16. ரகலாயபழள்ரளயார் ஊஞ்சல் (1904)
17. கோப்பாய் வெள்ளெருவை விநாயகர் ஊஞ்சல் (1905)
18. விளிசிட்டி பொற்கலந்தம்பை வைரவர் ஊஞ்சல் (1912)
19. சாணாக்கிய நீதி வெண்பா (1914)
20. தெல்லிப்பழை தில்லையிட்டி அம்மன் ஊஞ்சல் (1915)
21. பன்னாலை வள்ளிமலைக் கந்தசுவாமி ஊஞ்சல் (1916)
22. இராமேதந்தம் (1921)
23. அராலி முத்துமாரியம்மன் ஊஞ்சல் (1921)

உரை நூல்கள் (இலக்கியம்)

24. திருக்கரசைப் புராணம் பொழிப்பு (1890)
25. சூடாமணி நிகண்டு 1-ம் தொகுபதப்பொருள் (1895)
26. சூடாமணி நிகண்டு 2-ம் தொகுபதப்பொருள் (1895)
27. சூடாமணி நிகண்டு முதலைந்து தொகுதி (1900)



28. சூடாமணி நிகண்டு முதலைந்து தொகுதி (1900)

29. கலைச் சிலேடை வெண்பா அரும்பதவுரை (1901)

30. மறையந்தாதி அரும்பதவுரை (1901)

31. நீதிநெறிவிளக்கப் புத்துரை (1904)

32. திருவாதவூரர் புராணப்புத்துரை (1904)

33. முத்தகபஞ்சவிஞ்சதி குறிப்புரை (1909)

34. இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை (1918)

35. ஏரெழுபது பொழிப்புரை (1920)

36. கல்வளையந்தாதி பதவுரை (1921)

உரை நூல்கள் இலக்கணம்

37. யாப்பருங்காலப் பொழிப்புரை (1900)

38. வெண்பாப்பாட்டியல் பொழிப்புரை (1900)

39. தண்டியலங்காரப் புத்துரை (1903)

40. யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை (1908)

41. அகப்பொருள் விளக்கப் புத்துரை (1912)

இலக்கண ஆராய்ச்சி நூல்கள்

42. இலக்கண சந்திரிகை (1897)

43. வினைப்பகுபத விளக்கம் (1913)

வசன நூல்கள்

44. கண்ணகி கதை (1900)

45. தமிழ்ப்புலவர் சரித்திரம் (1916)

46. இதோபதேசம் (1920)

47. சிசுபாலசரிதம் (1921)

48. இரகுவமிச சரிதாமிர்தம் (1922)

பதிப்பு நூல்கள்

49. இதோபதேசம் (மொழிபெயர்ப்பு) (1886)

50. நகுலமலைக் குறவஞ்சி நாடகம் (1895)

51. யாப்பருங்கலக்காரிகை (பழையவுரை) (1900)

52. ஆசாரக்கோவை (1900)

53. நான்மணிக்கடிகை (1900)

54. ஆத்திசூடி வெண்பா (1901)

55. சிவஷேத்திர விளக்கம் (1901)

56. உரிச்சொனி கண்டு (1902)

57. திருவாதவூரர் புராண மூலம் (1902)

58. பழமொழி விளக்கம் (1903)

தொகுப்பு நூல்கள்

59. சதாசாரக் கவித் திரட்டு (1911)

60. சிவதோத்திரத் திரட்டு (1911)

அகராதி

61. இலக்கியச் சொல்லகராதி (1915)

உசாத்துணை நூல்:

இ. சிறீஸ்கந்தராசா

குமாரசுவாமிப் புலவர் 150ஆவது ஆண்டு நினைவுமலர்

மா. இராமலிங்கம் JP

கிராம அலுவலர்

சுன்னாகம் நகரம் மத்தி J/ 198

முன்னவனே யானை முகத்தவனே முக்தி நலம்

சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே - மன்னவனே

சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே

தற்பரனே நின்றாள் சரண்.

- இராமலிங்கசுவாமிகள்

சைவ சமயிகள் இலக்கணம்

கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்த புராணத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பதிப்பித்துள்ளார். அவ்வாறு பதிப்பிக்கும்போது " சிவபுராண படன விதி" என்ற தலைப்பில் சைவ சமயிகளுக்கு உரிய இலக்கணங்களை ஒழுங்குபடுத்தி எழுதியிருக்கிறார். அவற்றைச் சைவ அடியார்கள் நன்மை கருதித் தொகுத்துத் தந்துள்ளோம். அவற்றை அறிவதும் அதன்படி வாழ்வதும் சைவர்களது கடமையாகும்.

- ஆசிரியர்

நால்வகை யோனிகளுள் ஒரு யோனிவாய்ப் பட்டுப் பிறப்பவை யாவை அவை எல்லாம் பசுக்கள், அப்படிப் பிறத்தல் இல்லாதது யாது அது பதிப்பொருள் என்றும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும் வண்ணம் நிற்பது. ஆதலால் வேதம், புராணம், இதிகாசம் முதலிய நூல்களில் மற்றைத் தேவர்களெல்லாம் அப்படிப் பிறந்து இறத்தல் சொல்லப்படுதலாலும், சிவபெருமானுக்கு அது உண்டு என்பது எங்காயினும் சொல்லப்படாமையாலும் அநாதி முத்த சித்துருவாகிய முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற்றுணிபாம்.

இப்படித் துணியப்படும் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாகிய சிவபெருமானை வேதசிவாகம விதிப்படி மெய்யன்போடு வழிபடுபவர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றும் சொல்லப்படுவார்கள்.



இச் சைவர்கள் பல சமயத்தாருக்கும் பொது வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக்கொண்டே பின்பு தங்களுக்குச் சிறப்பு வகையால் வேண்டப் படும் இலக்கணங்களை உடையவர்களாய் ஒழுகுதல் வேண்டும்.

பொது விலக்கணங்களாவன: - கொல்லாமை, புலானுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர் மனை நயவாமை வரவின் மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறாமை, அடக்கம், கொடை, தாய், தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். இந்நன்மைகளில்லாத கிரியை ஞானங்கள் சிறிதும் பயன்படாவாம்.

சிறப்பிலக்கணங்கள்: - புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும். அவற்றுள் புறத்திலக்கணம் பத்து, உடலிலக்கணம் பத்து, அகத்திலக்கணம் மூன்று, ஆகச் சிவனடியாரிலக்கணம் இருபத்து மூன்று.

புறத்திலக்கணம் பத்தாவன: - விபூதி உருத்திராக்ஷம் என்னும் சிவ சின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத் தோத்திரம் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசை செய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலய தரிசனஞ் செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாகும்.

உடலிலக்கணம் பத்தாவன: - சிவபெருமானுடைய பெருமையைச் சிந்திக்குந்தோறும் பேசுந்தோறும் கண்டம் விம்முதல், நாக்குத் துடித்தல், உதடு துடித்தல், சரீர நடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறு வேர்வை கொள்ளல், நாக்குத் தழுதழுத்தல், ஆனந்தக் கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல் என்பவைகளாம்

அகத்திலக்கணம் மூன்றாவன:- பஞ்சாக்ஷரத்தை மானதமாகச் செபித்தல், மானத பூசை, சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.

இவ்விருபத்து மூன்றலிக்கணங்களுள் ஒன்றாகிய சிவபுராணங் கேட்டல்தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னை ஒழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொதுவிலக்கணங்களையும் விடுவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது. யாதினாலெனின், விபூதி ருத்திராக்ஷதாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராணமாகலினென்க. ஆதலால், சைவ சமயிகள் யாவரும் சிவ புராணம் கேட்டல் வேண்டும் என்பது துணிபு.

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனைமற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகம் விளங்கும் சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும், இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே !
முப்பழம் நுகரும் மூஷிக வாகன !
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளந்தனிற் புகுந்து.
குருவடிவு ஆகிக் குவலயம் தன்னில்
திரு அடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே

ஔவையார் அருளிய விநாயகர் அகவலுக்கான உரை

குளிர்ந்த சந்தனக் கலவை அணிந்த தாமரைபோன்ற
பாதச்சிலம்புகள் ஓங்காரநாதம் செய்ய
பொன் அரை ஞாணும் வெண்பட்டாடையும்
அழகிய இடையில் அழகு பிரகாசிக்க
குடம் போன்ற வயிறும் பருத்த ஒற்றைக் கொம்பும்
யானை முகமும், முகத்தில் சிந்தூரப் பொட்டும்
ஐந்து கைகளும் அங்குசப் பாசமும்
என் நெஞ்சில் நிலைத்திருக்கும் நீலத்திருமேனியும்
தொங்குகின்ற வாயும் நாலு பெரிய புயங்களும்
சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய மூன்று கண்களும்
கன்ன மதம், பீஜ
மதம், கபோ மதம் எனும் மும்மதமும்
இரு செவிகளும் ஒளி பொருந்திய கிரீடமும்
முப்புரிநூல் பிரகாசிக்கும் மார்பும்
சொல்லும் பொருளும் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதழ் நிறைந்த கற்பக விநாயகனே.
மா, பலா, வாழைப் பழங்களைச் சுவைக்கும்,
பெருச்சாளி வாகனனே
இப்பொழுதே என்னை ஆட்கொள்ளத் திருவுளம் கொண்டு
தாய்போல அன்பு செய்து குருவடிவாய் வந்து
முடிவில்லாத பிறவிப் பிணியை இல்லாமற்செய்து.
சிவாயநம எனும் மந்திரப் பொருளை தெளிவாக உணரவும்
இம்மந்திரம் மனதில் பதிந்து அருள் ஒளியோடு கலக்க
இப்பூமியில் குருவடிவாகிவந்து
திருவடி தீட்சை வைத்து உண்மைப் பொருளை உணர்த்தி
பிறவித் துன்பத்தால் வாடாமல் மகிழச் செய்து
தேவரீர் கையிலுள்ள கொம்பாயுதத்தால் என் வினை நீக்கி

ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயமும்
இன்புறு கருணையில் இனிதெனக்கு அருளிக்,
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்து எனக்கு அருளி,
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே,
இடை பிங்கலையின் எழுத்து அறிவித்து
கடையிற் சுழுகுமுனைக் கபாலமும் காட்டி,
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி அதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
கலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி,
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்,
சண்முக தூலமும் சதுர்முகச் சூக்கமும்

ஔவையார் அருளிய விநாயகர் அகவலுக்கான உரை

என்றும் தெவிட்டாத மந்திர உபதேசத்தைச் செவிவழிசெய்து
சுவைதரும் சிவஞான உணர்வின் தெளிவையும் தந்து
ஐம்புலன்களை அடக்கும் உபாயத்தை
என் மீது கொண்ட கருணையால் இனிதாய் அருளி
முப்பத்தாறு தத்துவக் கருவிகளையும் ஒடுக்கும் வழி அறிவித்து
நல்வினை தீவினை இரண்டையும் நீக்கி மலநாசம் செய்து
ஞானசாதனமான கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் ஆகிய நான்கு படிகளையும் அடையச் செய்து
ஆணவம் கன்மம் மாயை மலங்களின் மயக்கத்தை நீக்கி
உடலிலுள்ள ஒன்பது வாயில்களையும் ஓங்கார மந்திரத்தால் அடக்கும்
முறையையும் காட்டி
ஆறு ஆதாரங்களிலும் சுழுமுனை வழியே பிராணவாயு செல்லுமாறு அடக்கும் நிலையையும், நிலைபெயராது இருத்திப் பேச்சினை நீக்கி,
இடைகலை, பிங்கலைக்குரிய ஒவ்வொர் எழுத்தையும் அறிவித்து,
சுழுமுனை நாடி முடிவில் தலை ஓட்டில் உள்ள சகஸ்ர தளத்தைக் காட்டி
சூரியன் சந்திரன் அக்கினியாகிய மூன்று மண்டலங்களையும் சேர்ந்துள்ள முள்ளந்தண்டிலிருந்து
தொங்குகின்ற பாம்பைப்போல் குண்டலி சக்தியோடு சேர்ந்த உரைக்கக் கூடாத அசபா மந்திரத்தை
உரைக்கக்கூடிய ஓம் எனும் மந்திரத்தை எனக்குக் கூறியும்
மூலாதாரத்திலிருந்து எரிகின்ற விந்து அக்கினியை
பிராணாயாமத்தினால் எழுப்பும் கருத்தை உணர்த்தியும்
சகஸ்ரதளத்தில் அமுதம் சுரக்கும் நலையினையும் சூரியன் தன்மையையும் குமுதப்பூவின் நண்பனான சந்திரன் இல்பையும்
ஆறாதாரத்தின் நடுவாகிய கண்டச்சக்கரத்தின் பதினாறு இதழ்களுடன் கூடிய நிலையையும்
உடலாகிய இயந்திரத்தில் உறுப்புகள் ஒன்றையொன்று இயக்கும் முறையையும் காட்டி
ஆறுமுகங்களுடன் வியாபகமாய் இருக்கும் தன்மையும் நான்கு முகங்களோடு எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்



ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

எண்முகம் ஆக இனிதெனக்கு அருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி,
என்னை அறிவித்து எனக்கு அருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தி, என்செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி,
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்,
தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

ஔவையார் அருளிய விநாயகர் அகவலுக்கான உரை

தியானிக்கும் முகங்களோடு கூடிய உருவங்களாக எழுந்தருளியும்
சூக்கும் உடலின் தன்மையை நன்கு விளக்குமாறு
இவ்வுடலை இயக்கும் எட்டுத்தொகுதி உறுப்புகளின் நிலையைக் காண்பித்து
தலையாட்டுத் துவாரம் வழியே துவாதசாந்தவெளியினைக் காட்டி
துவாதசாந்தத்தில் இருத்திச் சாலோக முத்தியைத் தந்து
நீ அறிவு வடிவினை என்பதையுணர்த்திச் சாமீப இன்பத்தைத்தந்து
வினைகளின் மூலமாயுள்ள ஆணவமலத்தை அடங்கச் செய்து
சொல்லும் மனமும் அங்கிப் பதி ஞானத்தால் பேரின்பம் நுகருமாறு
எனது மனம் சிவமேயாகும் படி செய்து.
இருட்டைச்சார்ந்தபோதும், ஒளியைச்சார்ந்தபோதும் அவற்றின் மயமாய் ஞான உணர்வில் என்னைத் திளைக்கச் செய்து
அளவில்லாத பேரின்பத்தைத் தந்து
பிறவித் துன்பத்தை அகற்றி சன்மார்க் நெறிகாட்டி
சத்தத்தை இயக்கி அதில் பரந்துள்ள சதாசிவமூர்த்தியைக் காட்டி, சித்தத்லே சிவலிங்கத்தைக் காட்டி
அணுவிற் சிறிதாயும் அண்டத்தின் விரிவாயும் பரந்து வீற்றிருக்கும்
கணுமுற்றிய கருப்பஞ்சாறு போன்றினிக்கும் பேரின்பத்தை அத்துவிதமாய் உணரச் செய்து
சிவனடியார்வேடமும், நீறும்என்னில்நிலைக்கச்செய்து
மெய்யடியார்களுடன் என்னையும் சேர்த்து
ஐந்தெழுத்தில் அடங்கியுள்ள பதிபசுபாச உண்மைகளை என்மனதில் நிலை நிறுத்தியும்
உண்மை நிலையை யுணர்த்தி என்னை அடிமை கொண்டருளிய
பேராற்றல் படைத்தவனே உனது மணம் வீசும் பாத மலர்களைப் புகலிடமாகக் கொண்டேன்

உ

சுன்னாகம்
சந்திரசேகரப் பிள்ளையார்
மஹா கும்பாபிஷேக வாழ்த்து
1958

நேரிசை வெண்பா

ஆண்டு விளம்பிசேர் ஆறைந்து வைகாசி
ஈண்டு திதி ஏகா தசிகுருகாண் - மாண்புமிகு
ஏரம்பன் கும்பா பிஷேகம் இரேவதிநாள்
கூர்மிதுன லக்னமாம் கூறு. 1

வேதமொலி சுன்னாக வில்லவரா யன்வயலில்
போதமாம் தான்றோன்றிப் பொற்களிறாம் - மேதக்க
சந்திர சேகரப் பிள்ளையார் தாளிணையை
வந்தித்தல் வாழ்க்கைப் பயன். 2

கட்டளைக் கலித்துறை

தேசம் புகழ்ந்திடுஞ் சுன்னை நகர்மேவு சேண்வயலில்
வாசஞ் செயுமொரு மாமதஞ் சோர்முக வான்களிறே!
ஆசி புரிவோர் கிலேசம் நனிதீர்க்கும் அங்குசமும்
பாசமும் பாங்குற ஏந்திப் பணிபவரைப் பாலிக்குமே. 3

அகவற்பா

திருவளர் இலங்கை மருவுயாழ்ப் பாணப்
பெருவள நாட்டின் ஒருதனித் திலகமாய்ப்
பவப்பிணி அறுக்கும் தவப்பெருந் தலங்களும்,
தண்ணிலா எறிக்கும் விண்ணுலாஞ் சோலையும்,
தாமரைத் தடாகமும், காமரு கழனியும்,
சிந்தா விளக்கும், நந்தா வனங்களும்,
ஆவண வீதியும், காவலர் இருக்கையும்,
இன்றி அமையா இன்னன பலவும்
நன்னர் ஓங்கிய சுன்னைமா நகரில்



வில்லவ ராயன் மல்லல் வயலில்
தன்னிக ரில்லாத் தான்றோன் றியாகிப்
'போதமாம் ஞானப் பிரணவப் பொருளாய்
நாதச் சிலம்பொலி பாத பங்கயமும்,
பொன்னரை ஞாணும், வன்னத் துகிலும்,
பேழை வயிறும் வேழ முகமும்,
அஞ்சு கரமும், அங்குச பாசமும்,
மூன்று கண்ணும், நான்ற வாயும்,
ஒப்பினாற் புயமும், முப்புரி நூலும்,
துலங்கிரு செவியும், இலங்குபொன் முடியும்,
சந்தனப்பூச்சுறு செந்துவர் மேனியும்,
திலகசெந் தூரமும், இலகுவெண் நீறும்,
விம்மிதஞ் சேரும் மும்மதச் சுவடும்,
கூரிய மருப்பும், சீரிய மார்பும்,
பொற்புற மிளிரும் அற்புத விநாயக!'
முந்திய வினைதவிர் மூஷிக வாகன!
விக்னம் தீர்க்கும் விமலா! போற்றி,
புண்ணியப்பொருளாய்ப் புவியெலாம் மிளிரும்
கண்ணுதல் ஐங்கரக் கரியே! போற்றி,
நன்மை உலகினில் நனிசிறந் தோங்கவும்,
அறமுத னான்கும் திறம்பட நிலைக்கவும்,
அன்பெனும் சீரிய இன்மலர் சாத்தியுன்
பொற்பதம் போற்றுதும் அன்புடன் மிகவே. 4

விருத்தம்

சங்கோல மிடும்பழனஞ் சூழுஞ் சுன்னைத்
தனிநகரிற் களிற்றுருவாய்த் தோன்றி ஆங்கே
அங்கோல மிகுபோதம் அளித்தே வாழும்
அழகியசந் திரசேகரப் பிள்ளை யார்தான்
மங்காத திருவருளை மேவி இந்நாள்
மாண்புறுகும் பாபிஷேகம் செய்யப் பெற்றே
பொங்காதல் கரைபுரள அடியார்க் கென்றும்
பேரருளை இனிதளித்துப் போற்றும் மாதோ. 5

- கு . முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

உ

சுன்னாகம்
சந்திரசேகரப் பிள்ளையார்
இரட்டை மணிமாலை
1959

காப்பு

நேரிசை வெண்பா

சந்திர சேகரப் பிள்ளையார் தம்மேல்யான்
வந்தித் திரட்டை மணிமாலை - சந்தமுறப்
பாடிப் புகழ்ந்து பரவ அவன்மலர்த்தாள்
நாடிப் பணிவேன் நயந்து.

நூல்

நேரிசை வெண்பா

இன்பந் தருஞ்சுன்னை ஏரம்பன் எந்நாளும்
துன்பந் துடைத்துச் சுகந்தருவான் - அன்பினொடு
தஞ்சமென்ற மாலின் சருப்பவுரு வைத்தீர்த்தே
அஞ்சல் அளித்தான் அவன்.

கட்டளைக் கலித்துறை

அந்திப் பிறையணி ஐம்முகன் தந்த அறுமுகவன்
வந்தனை செய்திட வள்ளியை ஈந்த மதகளிறே
இந்திர னுக்கருள் ஏரம்ப னே! யுன் இணையடியை
வந்தித் திருக்கத் திருவருள் கூட்டுதி மண்ணினிலே!

நேரிசை வெண்பா

மலரோனும் வாசவனும் மாதவனும் - போற்றும்
அலரோங்கு சுன்னை அரன்சேய் - நலமோங்க
என்றுந் தொழுமடியார் இன்னல்கள் யாவையும்
பொன்றுவிப்பான் என்றே புகல்

கட்டளைக் கலித்துறை

புண்ணிய ரான புலவர்கள் போற்றிப் புகழ்ந்திடுமுக்
கண்ணினர் சுன்னைக் கணபதி யைத்தான் கருதிடுவோர்



எண்ணிய யாவும் எளிதினிற் பெற்றவன் இன்னடியை
நண்ணிடு வாரென நம்புது மேயிந்த மாநிலத்தே. 4

நேரிசை வெண்பா

மாங்கனி யைவேண்டி வையம் வலம்வந்த
காங்கேயன் சேருமுனங் காத்திருந்தே - ஆங்குற்ற
தந்தையை யேவளாவித் தானக் கனிபெற்ற
தந்திமுகன் தாளே துணை. 5

கட்டளைக் கலித்துறை

துகளறு போதக் களிற்றினை நாளுந் துதித்திடுவோர்
புகலருங் கல்வி பொருளருள் ஞானமும் பூரணமாய்த்
திகழ்பெரு வாழ்வெனுஞ் சிற்சுக வாரி திளைத்தினிது
புகழொடு காலத்தைப் போக்குவ ரேயிந்தப் பூமியிலே. 6

நேரிசை வெண்பா

பூத்திருக்கும் பொய்கை புடையமர் ஐங்கரன்
காத்திருந் தண்டினரைக் காத்திடுவான் - ஏத்தி
அழுதுபுரண் டன்புடனே அங்கவன்றன் பாதம்
தொழுது புரிந்திடுவாய் தொண்டு. 7

கட்டளைக் கலித்துறை

தொண்டேதவமெனக் கொள்ளுமெய் அன்பர்கள் தொல்லுலகில்
பண்டு வினையாற் பதமுத்தி பெற்றுப் பலனடைந்த
கண்டுமுன் தாளைக் கருதாது வாழ்ந்திடுங் கைதவர்கள்
உண்டுண் டுறங்கும் உயிரனை யார்மா உலகினிலே. 8

நேரிசை வெண்பா

மாமருதின் கீழுறையும் மாசாத்தன் தென்திசையில்
காமரு பூந்தண் கயத்தருகே - தேமருவு
செஞ்சாலி நெல்வயல்வாழ் செவ்வேளின் முன்னேதனை
நெஞ்சமே நெக்கி நினை. 9

கட்டளைக் கலித்துறை

நின்றாள் தொழுவார் நினைவுதான் சற்றுந் நிலைதளர்ந்து
குன்றா தருள்செய் கயமுக னைத்தான் குவலயத்தில்
கொன்றாய் அமரர் கொடுந்துயர் தீர்த்தாய்வெண் கோடுடைய
மன்றாடு நம்பன் மதலையே! வேத மதகளிறே. 10

நேரிசை வெண்பா

வேதப் பொருளாகி வெவ்வினையைத் தீர்த்தருளும்
போதக் களிறாகும் புத்தேளே! - நாதப்
பிரணவ ரூபியே! பிள்ளையா ரே! யெம்
அரன்சுதனே! யென்றென் றரற்று. 11

கட்டளைக் கலித்துறை

அல்லும் பகலும் ஒழியாது நின்புகழ் அன்புடனே
சொல்லும் படிக்குத் திருவருள் கூட்டிச் சொரிந்திடுவாய்
நெல்லும் பயறும் நிகரில் பயிர்செறி நீள்வயலில்
புல்லும் புலத்துறைப் புண்ணியன் சுன்னைப் புகர்முகனே. 12

நேரிசை வெண்பா

முக்கண்ணும் செஞ்சடையும் மும்மதமும் மாமுகமும்
தக்கபசும் பொன்முடியும் தாழ்செவியும்- விக்கினந்தீர்
அங்குச பாசமும் ஐங்கரமும் என்மனத்தே
மங்கா திருக்கவருள் வாய். 13

கட்டளைக் கலித்துறை

வாழ்வினை மெய்யென நம்பி மயங்கிநின் மாணடியை
ஆழப் பதித்தகத் தன்பாய் வழுத்தில னாயினுஞ்செய்
சூழும் வளஞ்செறி சுன்னாகத் தேயுறை தும்பிமுகா!
தாழ்வு வராதெனைத் தாங்குதல் உந்தன் தனிக்கடனே. 14

நேரிசை வெண்பா

தண்வயல்சூழ் சுன்னைத் தளியமர் ஐங்கரன்றான்
தெண்டனிடும் தொண்டன் திருநாரைப் - புண்ணியனாம்
நம்பிக்கு நல்ல திருமுறையை நாதனமர்
அம்பலத் தேயளித்தான் அன்று. 15



கட்டளைக் கலித்துறை

அறியாமை மல்கிய ஆணவம் மிக்க அடியவனாம்
சிறியேன் பிழையைச் செமித்தருள் கூர்வதுன் சித்தமன்றோ
பொறியளி மொய்மலர்ப் பொய்கை புடையமர் போதகமெய்ந்
நெறிதவ றாதவர் நெஞ்சினுள் ளேநிற்கும் நின்மலனே. 16

நேரிசை வெண்பா

நின்றும் இருந்தும் நினைவாய் அவன் நாமம்
சென்றவன் கோயிலைச் சேவிப்பாய் - என்றுமே
சுன்னைவாழ் ஏரம்பன் சோகத்தை நீக்கியே
அன்னைபோற் காப்பான் அறி. 17

கட்டளைக் கலித்துறை

அறிவுக் கறிவாய் அனாதியாய் வேதத்தின் ஆம்பொருளாய்
பொறிவழி செல்லும் புலன்களுக் கப்பாலாய்ப் போதனுமாய்
வெறிமலர்க் காசெறு வில்லன் வயல்வாழ் விநாயகன்றான்
செறிபவம் நீக்கிநற் றொண்டரைச் சேவடி சேர்க்குவனே 18

நேரிசை வெண்பா

நிலத்தினர்க் கேயருள்செய் நின்மலனாஞ் சுன்னைத்
தலத்தினராந் தந்திமுகன் தாளை - நலத்தால்
தொழுவார் துயர்துடைத்தே தொல்வினை நீக்கி
வழுவா தளிப்பான் வரம். 19

கட்டளைக் கலித்துறை

வரம்பில ஆகுல வாரிதி மூழ்கி மயங்குமின்
மரம்பொலி சுன்னை மருவுமுன் னோன்செம் மலரடியைச்
சிரம்பொலி யத்துதி செய்தே அவன்பேர் சிறந்திடவே
இருகை கூப்பிச் சேவித்துச் சாந்தியைப் பெற்று நனிஏதுவனே. 20

- கு . முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

உ

சுன்னாகம்

ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் திருவூஞ்சல்

காப்பு

திருமேவு கனகமலைச் சிகர மாகித்
திகழிலங்கைக் கொருமுகமாய்த் திகழ் யாழ்ப்பாணத்து
உருமேவு திலகமென உலகம் எல்லாம்
ஒங்கு புகழ்ச் சுன்னைநகர் உவந்து வாழும்
அருள்மேவு சந்திரசே கரப்பேர் பெற்ற
அகத்திமுகத் துத்தமனுக் (கு) ஐயிரண்டு
பொருள்மேவு கவிஊஞ்சல் இசையாற் பாடப்
போற்றுகவென்(று) அவனடியைப் போற்று வாமே

(நூல்)

மதியேறும் ஒலிதருமெய்ச் சைவ நூலும் 1
மறைநூலும் என இரு தூண் வயங்க நாட்டி,
விதியேறு மவற்றுணர்முப் பொருளே என்ன
விட்டவளை யொடுபலகை கயிறு மாட்டிக்,
கதியேறு மும்மையுமற் றவையி லாய்ந்து,
கண்டவர்நெஞ்செனக்கண்ட பீடம் ஏறித்,
துதியேறு விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்

தும்பைமுடித் துளதாதை திருக்கண் சாத்தத், 2
துரகமயில் வருகுமரன் துதிகள் சாற்ற,
அம்புவிஉண் டருள்மாயன் அடிகள் போற்ற,
அயனுமா சாத்தனும் வந்(து) அன்பின் ஏத்தச்,
சிம்புள்வடி வாய்வருவோன் கரங்கள் கூப்பச்
செகமுழுது மானக்கஞ் சிறந்து தேங்கத்
தும்பிமுகம் படைத்தவரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்



கங்கை உமைத் தாயார் மகிழ்ந்(து) அன்பு கூர, 3
கமலவளி தையரும் அருள் கண்டு சாரப்,
பங்கயவே தாவேத கீதம் பாடப்,
பழுதில்நா ரதமுனியாழ் பண்பின் நாடப்,
புங்கவர்கள் எங்குமலர் மழையே தூவப்
பூரணா னந்தமுடன் அடியேன் வாழத்,
துங்காகண நாயகரே! ஆடிர் ஊஞ்சல்
சுன்னை நகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்

வெள்ளை வாரணமகவான் கவரி புல்ல 4
விரிகனலோன் விரியும்ஒளி விளக்கங் கொள்ளத்
துள்ளிபடு பனிமழைநல் வருணன் தெள்ளச்
சுரர்கள தியபதினென் கணங்கள் துள்ள
விள்ளரிய வேதமறை யோர்கள் விள்ள
வெறுத்தடியேன் உலகாசை முழுதுந் தள்ளத்
துள்ளுநதிச் சடையாரோ! ஆடிர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்

கந்தருவர் பாடவர மகளிர் ஆடக் 5
கவிகைகவித்(து) இரவிமதி யோர்கள் நீட
முந்துசதா கதிஆல வட்டம் போட
முதியநான் மறைமுழக்கம் விண்மண் மூட
வந்துகண நாதர்புடை மகிழ்ந்து கூட
வறுமையெனும் பாவி எனை மருவா(து) ஓடச்
சுந்தரமா முகத்தவரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்

வல்லவையாம் வல்லவையும் சித்தி புத்தி 6
வல்லியவர்களுங்கூடமகிழ்ந்து கூடும்
வல்லனே! துப்புமலை வண்ணத் தானே!
வரதனே! வரனே என்(று) அழுது நெஞ்சம்
சொல்லிஅடி பரவுமடித் தொண்டனாகிச்
சுகம் பெறீஇ வறுமைஎலாம் தொலைந்து வாழச்
சொல்லரிய பூரணரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல் சக்கரவார்

கலிஉலகிற் தலைமை ஆகத் 7
தலைநாணின் றதுவென்னத் தரணி எங்கும்
புக்கபுக ழிந்நாடே நந்நா டாகிப்
பொலிய உம(து) அடிமலரின் பொற்பி னாலே
பக்கமெலா முற்றவய னாவ லாறு
பாயுநிலம் போல்விளையும் பண்பின் ஓங்கத்
துக்கவடி வற்றவரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்

எப்போதும் அடிபணியும் அடியார் வாழ 8
இலங்குதிரு விழாச்செய்யும் எழிலோர் வாழத்
தப்பில்திருக் கோயின்மதில் தந்தோர் வாழத்
தடாகமொடு நந்தவனஞ் சமைத்தோர் வாழச்
செப்பியஉன் தளிபுதுக்கிப் பிரதிட்டை செய்த
செல்வர்களும் அல்லலெலாந் தீர்ந்து வாழத்
துப்புமணி வண்ணத்தீர்! ஆடீர்ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்

சடைமதியும் முக்கண்ணுந் தனிநூன் மார்புந் 9
தவளமதிக் குழவியெனத் தயங்கு கோடும்
இடைஅரவக் கச்சுமங்கை எழிலுஞ் சென்னி
இலங்குமுடி யுங்கவரி இசைத்த காதும்
புடைபெயர ஒளிவீசு நுதலின் ஓடைப்
பொற்பும் அடி யேன்காணப் புரிந்து கொன்றைத்
தொடைபுனையுஞ் சடையாரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்

திருப்பெறும் ஓர்கோடுடையீர்! ஆடீர் ஊஞ்சல் 10
சேரார் தங் கோடுடையீர்! ஆடீர் ஊஞ்சல்
அருப்புவனத் தாற்கரியீர்! ஆடீர் ஊஞ்சல்
அரியவனத் தாற்கரியீர்! ஆடீர் ஊஞ்சல்
விருப்பொடு கைப்படையீரே! ஆடீர் ஊஞ்சல்
வில்லொடு கைப்படையீரே! ஆடீர் ஊஞ்சல்
சுருப்புமுதன் மதலையரே! ஆடீர் ஊஞ்சல்
சுன்னைநகர்க் கணேசரே! ஆடீர் ஊஞ்சல்.



வாழி

தரைவாழி, வாழிதவ மறையோர் வாழி,
தனவசியர் பூவசியர் தழைத்து வாழி,
நிரைவாழி, மகளிர்பதி விரதம் வாழி,
நிலமன்னர் வாழி, மறை முகில்கள் வாழி,
புரைதீர்மு ஷிகம் வாழி, சித்தி புத்தி
புனிதைகளும் வாழி, அருட்பொலிவினோடும்
மரைநேர்சே அடிவாழி, கணேசன் ஊஞ்சல்
வாழி, சுன் னாகநகர் வாழி வாழி,

எச்சரீக்கை

சுன்னாகநன் னகர் மேவிய தூயா! எச்சரீக்கை
துணையாய்இருந் தருள்வாழவருள் துரியா! எச்சரீக்கை
பொன்னாகவிற் பிடித்தான் அருள் புதல்வா! எச்சரீக்கை
புவிமீதில்என் இடர்தீர்த்தருள் புனிதா! எச்சரீக்கை

திறலார்கய முகவீரனைச் செகுத்தாய்! எச்சரீக்கை
தினந்தோறும்மெய் அடியார்க்(கு) அருள் செய்வாய்! எச்சரீக்கை
விறலார்வினை தீர்தாண்டருள் விமலா! எச்சரீக்கை
வேண்டும்வரம் தந்தாளுமை பாலா! எச்சரீக்கை

கல்லார் மனம் நில்லாஅருட் கடலே! எச்சரீக்கை
கண்டார்தினம் கொண்டாடுசெங் கதிரே! எச்சரீக்கை
சொல்லார்பிரணவமாயொளிர் தூயா! எச்சரீக்கை
சுரராதியர் தினமேதுதி சுடரே! எச்சரீக்கை

லாலி

ஐய லாலி! தும்பிக் கைய லாலி!
கைய லாலி! கரிப்பைய லாலி!

ஐய லாலி தும்பிக் கைய லாலி!
கைய லாலி கரிப் பையலாலி

பைய லாலி அருள் மெய்யலாலி
மெய்ய லாலி சுன்னைத் துய்ய லாலி!

பால லாலி எலிமேல லாலி
மேல லாலி தொந்திக் கோல லாலி
கோல லாலி சப்பைக் கால லாலி
கால லாலி சுன்னை காக்கு லாலி

பராக்கு

எண்திசையு மண்டுபுகழ் இறைவா! பராக்கு
என்னுயிர்க்(கு) உயிரான இனியாய்! பராக்கு
தொண்டுசெயும் அடியருளச் சோதீ! பராக்கு
சுகநிதியை அருளமுதச் சுவையே! பராக்கு

சித்திபுத்தி மகிழின்பச் சீலா! பராக்கு
சியேன் தன் பிழைபொறுக்குந் தேவா! பராக்கு
பக்தி செயும் அன்பருளப் பதியே பராக்கு
பங்கயனுங் காணரிய பரனே! பராக்கு

குலவு மருள் உமையீன்ற குமரா! பராக்கு
குஞ்சர முகத்தரிய கோலா! பராக்கு
நிலவுவிரி சடையாளர் நேயா! பராக்கு
நேடரிய பதமருளும் நீதா! பராக்கு

ஜெயமங்களம்

சுன்னைநகர் ஐங்கரற்கு ஜெய மங்களம்
தும்பிமுகக் கடவுளுக்கு ஜெய மங்களம்
இன்னல் இடர் தீர்ப்பவற்கு ஜெயமங்களம்
ஏகதந்தன் ஆனவற்கு ஜெய மங்களம்
அன்னை சக்தி மைந்தனுக்கு ஜெயமங்களம்
அழகு வயல் அமர்ந்தவற்கு ஜெயமங்களம்
முன்னைவினை தீர்ப்பவற்கு ஜெயமங்களம்
முக்தி தரும் முதல்வனுக்கு ஜெயமங்களம்.

இயற்றியவர் : சுன்னாகம் முருகேசபண்டிதர்



சந்திரசேகர விநாயகரே!

சகல கலைகளையும் தருவீர்!

சிந்தனையில் நினைந்து வணங்க சிவகதி அளித்து
சீரோடு சிறப்பும் நல்ல பேரோடு புகழுந் தரும்
சுந்தர வடிவுடைய வேலன் சுப்பிரமணியன் சோதரனே
சூரனைச் சங்கரித்த மூஷிக வாகனனே சுமுகனே
இந்திரன் முதலாய தேவர் ஏற்றித் துதித்து நிற்கும்
ஈசனார்தம் திருமகனே நேசமுடனுனைப்பணிந்தோம்
சந்திரசேகர விநாயகரே! சகல கலைகளையும் தந்து
அருள் புரிய வேண்டும் ஆனைமுகனே சரணம்! சரணம்!!

பந்த வினையகற்றி எமக்குப் பரம பதத்தை அளித்து
பாபவிமோசனமுந் தரும் பானை வயிற்றோனே!
சிந்தனையிலுனை இருத்தி சிரந்தாழ்த்திக் கரங் கூப்பினோம்
சீரோடு வாழ்வு தந்து வேரோடு எம்வினை களைந்து
எந்தனுக்குக் காட்சி தரும் சந்திர சேகர விநாயகரே!
ஏரம்ப மூர்த்தியே! ஏழைபங்காளனே! எலிவாகனனே!
கந்தனுடைய சோதரனே! கணபதியே! உனைப்பணிந்தோம்
காலனெமையணுகாது காத்தருள்வாய் சரணம்! சரணம்!!

கலாபூஷணம்

இராசையா ஸ்ரீதரன்

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரர்

கும்மிப்பாடல்

திருவாரூ ரென்னும் சிறந்த சுன்னாகம்
உருவாந் திருத்தலம் தோன்றி - அருள் பொழியும்
சந்திர சேகரன்பால் சார்ந்து கும்மி பாட அவன்
தந்திடுவான் காப்பு தனி.

வாழ்வாங்கு வாழவும் வாணாளெல் லாம் அடியார்
சூழ்வாங்கு சூழ்ந்து துதிக்கவும் - ஏழிசையால்
சிந்து நடையுடைய செம்மைசேர் கும்மிதனை
வந்தித்துப் பாடினேன் வாழ்த்தி.

சிந்து நடை தழுவிய கும்மிப் பாடல்

1. கும்மியடி பெண்காள் கும்மியடி - அன்பாய்
குனிந்து கும்மி யடியுங்கடி
நம்பியே சந்திர சேகரனை வாழ்த்தி
நாடிக் கும்மி யடியுங்கடி

2. வண்ணண்ணமான பட்டுடுத்தி சட்டை
வாய்ப்புடன் போட்டு வளையலிட்டு
சுன்னாகம் சந்திர சேகரனைப் போற்றி
சுற்றி வலம்வந்து கும்மியடி.

3. என்ன வரங்களைக் கேட்டாலும் நோக்கி
அன்ன வரங்களை அள்ளித்தரும்
மன்னன்போல் சந்திர சேகரனை வாழ்த்தி
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி.

4. முன்னர் வணங்கிய முத்துக் குமாரற்கும்
முருகேசர், குமாரசாமிப் புலவருக்கும்
எண்ணிலாப் புகழ்தந்த சந்திர சேகரன்
இணையடி போற்றிக் கும்மியடி.

5. தன்னை நினையாத முப்புரம் சேதித்த
தாதையின் தேரட்சை பொடியாய்ச் செய்த
சுன்னாகம் சந்திர சேகரனைப் பாடி
தொடர்ந்து கும்மி யடியுங்கடி



6. தேவரை வாட்டிய கஜாகரன் தன்னையே
தேடி யடர்த்திட்ட ஐங்கரனை
மூவரும் ஏத்திடும் முகுந்தன் மருகனை
முழுங்கிப் பாடிக் கும்மியடி.

7. வல்லபை மணாளனை வாரண முகத்தானை
னலதியே சுன்னாகம் கோயில் கொண்ட
ஐயனைச் சந்திர சேகரனைப் பாடி
ஆலயம் சுற்றிக் கும்மியடி

8. அவ்வைசெய் பூசையை ஏற்றவள் பாடிய
அகவலைக் கேட்டருள் செய்தவனை
செய்யனை சந்திர சேகரனைப் பாடி
சேர்ந்து கும்மி யடியுங்கடி

9. தன்னையே நோற்று தினப்புனம் வாழ்ந்திடும்
வள்ளியை காதல் செய் தம்பிக்காக
அன்னவள் அஞ்சிட சென்று சேய்க் கருளிய
ஐங்கரனை ஏந்திக் கும்மியடி.

10. எந்தையை சந்திர சேகரன் கோயிலை
எய்தி மும்முறை சுற்றிப் பாடி
வந்தவனை நெஞ்சில் வணங்கி ஏந்தி
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி.

11. சர்க்கரை மோதகம் அப்பம் அவல் வள்ளி
சாதம் வைத்தவனை அர்ச்சித் தேத்தி
பற்பல கீதங்கள் பண்ணிசை பாடியே
பணிந்து கும்மி யடியுங்கடி.

12. மாதந்தோறும் சதுர்த்தி சங்கட சதுர்த்தியை
வாரமாய் சந்திர சேகரனை ஏந்தி
காதலாய் நோற்று அன்னவள் பேர் கூறி
கைத்தலம் கொட்டிக் கும்மியடி.

13. கார்த்திகை மாசத்திருக் கார்த்திகை தொடர்
காத்திரு பது நாளாம் சட்டிவரை
பூர்த்தியாய சந்திர சேகரன நோற்றுப்
பொருந்திக் கும்மி யடியுங்கடி.

14. புத்திர பாக்கியம் தந்தவனை, எங்கள்
குமர்களைச் சோடியாய்ச் சேர்த்தவனை
சத்தி சிவனருள் சந்திர சேகரன்
தாளைப் பணிந்து கும்மியடி

15. அன்னையாய் அத்தனாய் தன்னைப் பணிந்திடும்
அன்பரை சந்திர சேகரதும்
பின்னமின்றிக் காப்பான் என்றவனைப் போற்றி
பேணிப் பணிந்தென்றும் கும்மியடி.

(கும்மி)

வணக்கம்

சுன்னாகம் சந்திர சேகரனை வழிபடுவோம்
எந்நாளும் நல்லோராய் இனிது நீடு வாழியவே.

வை. க. சிற்றம்பலம்
(புலவர் மணி)
இணுவில்



யாழ் . சுன்னாகம் சந்திரசேகர விநாயகரது நாலாவது கும்பாபிஷேக மலர்
வாழ்த்துப் பாமாலை

1. தாமரைக் குளங்கள் ஓர்பால், சாலி நெல் வயல்களோர்பால்
பூமலர்ச் சோலை யோர்பால், பொருந்திய சுன்னாகத்தில்
சேமநல்ல லங்கார மான சிறந்தகோ புரக்கோயிலில்
ஓமென வாழுஞ் சந்திர சேகர விநாயகனே போற்றி.

2. மாமணி யோசை யோடு மணிவிளக் கேற்றி நாளும்
பூமலர் மாலையிட்டுப் போற்றியே மூலத்தானம்
சாமகீ தங்களோதி சதுர்மறை யோர்க ளேத்தி
நாமார்ச் சனைகள் செய்ய நயக்கும் விநாயகனே சரணம்.

3. ஒருகொம் பிருசெவி மும்மதவேழ முகத்தினனொடு
மருவும் ஐங்கர சந்திர சேகர விநாயகனே
திருவும் உருவும் பொலிய இவ் வாலயம் எழுந்தருளி
பெரிதும் வணங்குவோர் கேட்டவை ஈயும் பெருமையனே.

4. அன்பினில் தோய்ந்த அடியார்க ளென்றும் அகங்குழைந்தே
என்பு முருகவே எம்பெ ருமானென்றிவ் வால யத்தில்
நன்றே சதுர்த்தி பெருங்கதை சட்டி விழாக்களுடன்
ஒன்றும் குறைவின்றி மகோற்சவம் தேர், தீர்த்த விழாவும் செய்வார்.

5. ஆண்டைந்து நூறு கடந்த வரலாற்றுடை ஆலயத்தில்
வேண்டி விநாயகர் தாள்போற்றி வாழ்ந்த மேதைகள் பலர்
நீண்ட புகழுடன் பல்லாண்டு பல்லாண்டு சென்ற பின்பும்
தூண்டா மணி விளக்குப் போல் வாழ்கின்றார் என்றும் வாழ்கவே.

6. அந்நாளிவ் வாலய சந்திர சேகர விநாயகர் முன்
பொன்னான பிள்ளையார் பெருங்கதை நூலை அரங்கேற்றிய
சுன்னாகம் வரத பண்டிதர், நாமம் இவ்வுலக மெல்லாம்
நன்னாயகமாய் விளங்குதல் இப்பெருமான் நல்லருளே.

7. மதுரைத் தமிழ்ச் சங்க பண்டித பரீட்சகரில் ஒருவராக
துதி செய்யும் அச்சங்கச் சஞ்சிகை செந்தமிழ் ஏடெழுதி
அதிபெரும் யாப்பணி, அகப் பொருள் வெளியிட்ட குமாரசுவாமிப் புலவர்போல
மதிசூடும் விநாயகரை ஏத்திச் செல்லாச்சி அம்மையார் முத்திபெற்றார் அவர்கள் வாழ்க.

8. ஆலய நிருவாக சபையோர் அதனின் தலைவரோடு சேர்ந்த
ஞாலமெலாம் போற்றும் வைத்திய கலாநிதி ரவிராஜ், உடனே
சாலவே ஐந்து தளமுடை இராச கோ புரத்தோடு, அதன் மருங்கே
மேலான, மணி மண்டபம் அன்னதான மண்டப மமைத்தார் அன்னார் வாழ்கவே.

9. சுன்னாகம் சந்திர சேகர விநாயகர் ஆலயம் போற்றிக் காக்கும்
பொன்னாம் பரார துவாச கோத்திர சந்திர காந்தக் குருக்கள் வாழ்க!
இந்நாளில் நாலாம் கும்பாபிஷேக மலராசிரியர், மலர் வாங்குவோர் வாழ்க வாழ்க!
தொன்னாள்போல் எந்நாளும் மங்கலம் இசைப்போர்
வணங்குவோர் தொடர்ந்து வாழ்கவே!

வணக்கம்

வாழ்க்குவோர் :- முதுபெரும் புலவர், கலாபூஷணம், புலவர் மணி
ஆசிரியர் :- வை. க. சிற்றம்பலம்
இணுவையூர்,
13. 08. 2013



சுன்னாகம், சந்திரசேகர விநாயகன் மேல் பாடிய கீர்த்தனம்

இராகம் : காபி **தாளம் : ஆதி**

எடுப்பு

என்ன புண்ணியஞ் செய்தோமோ - சுன்னாகம்
எந்தை சந்திர சேகர விநாயகன்தாள் தொழு தேத்த நாம்
(என்ன)

தொடுப்பு

கன்னலைத் தேனை கருணைக் கடலமுதை
கற்பக விநாயகனை கனிந்து குழைந்து பாட
மன்னவனாய் மக்களை மகிழ்ந்து காப்பவனை
மலரடி தொழுதேத்தி மனமார நாம் பாடவே
(என்ன)

விரிப்பு

ஐந்து கரம் மூன்று விழி ஆனைமுகங் கொண்டவனை
பிஞ்சு மதி புனைந்த பெருங் கும்ப வயிற் றோனை
வஞ்சிக் கொடி வல்லபை மணவாளனை ஏத்தி
நெஞ்சார மெய்யார வாழ்த்தி நாம் பாடுவதற்கே (என்ன)

எந்தை யென மக்கள் ஏத்திப் படைத்த அமுதை
இனிய அவல் மோதகம் இயைந்த களி அப்பத்தை
விந்தை யாய்ப் படைத்தேத்த விருந்தாக ஏற்பவனை
விண்ணவரும் போற்று விநாயகனை நான் பாடுதற்கே (என்ன)

வணக்கம்

'முதுபெரும் புலவர், கலாபூஷணம்
புலவர்மணி, ஆசிரியர்
வை.க. சிற்றம்பலம்
இணுவில்
13.08.2013

விநாயகரின் விரதம்

விநாயகருக்குரிய விரதம் சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம் என மூன்றாகும்.

சுக்கிர விரதம்

வைகாசி மாதத்து வளர்பிறை முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அனுட்டிக்கப்பெறும் விரதமாகும். விநாயகப் பெருமானைக் கும்பத்திலும் விம்பத்திலும் எழுந்தருளச்செய்து தேங்காய், கரும்பு, எள்பொரி, இளநீர், பழவர்க்கம் முதலியவற்றை நிவேதித்து வழிபடல் வேண்டும். பகல் முழுவதும் உணவு உண்ணாதிருந்து இரவிலே பழவர்க்கம் புசித்து காலையிலே அந்தணருக்குத் தானம் கொடுத்து அடியவரோடு பாரணை செய்தல் வேண்டும். இவ்விரதத்தை அநுட்டித்து அத்திரி முனிவர் சந்திரனையும் துர்வாசரையும் பிள்ளைகளாகப் பெற்றார். பிரமன் சிருஷ்டித்தொழில் கைவரப்பெற்றான். குபேரன் சங்கநிதி, பதுமநிதிகளைப் பெற்றான்.

விநாயக சதுர்த்தி விரதம்

ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தியிலே விநாயகக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும். இவ்விரதம் அநுட்டிப்பவர் அதிகாலை எழுந்து நீராடி நித்திய கருமானுஷ்டானங்களை முடித்து விநாயகர் வழிபாடு செய்தல் வேண்டும். வீட்டில் ஓரிடத்தைச் சுத்தப்படுத்தி மாவிலை, தோரணம், பூமாலை என்பவற்றால் அலங்கரித்து தங்கத்தால், வெள்ளியால் அல்லது மண்ணால் வசதிக்கு ஏற்ற படி விநாயகர் திருவுருவை அமைத்து ஆவகனாதி சோடோபசாரப் பூசை செய்து கரும்பு, நாவற்பழம், விழாம்பழம், முதலிய பழவகை, வெல்லம், பருப்பு, நெய், எள்ளுருண்டை பொரி, அவல், இளநீர், தேன், அப்பளம், வெள்ளரிப்பழம், திணைமா, வள்ளிக்கிழங்கு, கடலை, மோதகம், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலானவற்றைப் பெருமானுக்கு நிவேதித்துத் தீபாரதனை, அர்ச்சனை தோத்திரபாராயணம் செய்து வழிபடுதல் வேண்டும்.

அன்று மாசிப்பச்சை, கரிசலாங்கண்ணி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, மாவிலங்கை, நாயுருவி, சிறுவழுத்தலை, வண்ணநொச்சி, மந்தாரை, மருக்கொழுந்து, அரளி, கோங்கு, அரசு, வெள்ளெருக்கு, மருது, விஷ்ணுகிராந்தி, மாதுளை, ஜாதிமல்லிகை ஆகிய இருபத்தொரு பத்திரங்களால் விநாயகரை அர்ச்சித்தல் வேண்டும். விநாயகருக்கு உவப்பான அறுகினால் அர்ச்சிப்பது மிகவும் சிறந்ததாகும். இரண்டிரண்டாக இருபத்தொருதரம் அறுகினால் அர்ச்சிக்க வேண்டும்.

சுலபன் என்றொரு அரசன் நீதிவழுவாது தன் நாட்டை ஆண்டு வந்தான். அவன் மனைவி சுபத்திரைதினந்தோறும் யாசகர் பலர் அவனிடம் வந்து பொருள் பெற்றுச் சென்றனர்.

ஒருநாள் அரசன் சபையில் இருந்தவேளை மதுசூதனன் என்ற அந்தணன் அங்கு வந்தான். அவன் வறுமையால் வாடி மெலிந்திருந்தான். அவனது தோற்றத்தைக் கண்டு அரசன் நகைத்தான். அரசனின் சிரிப்பு அந்தணனுக்கு எரிச்சலை ஊட்டிற்று. ஏழைகளைக் கண்டு இரங்க வேண்டியவள் வறுமையால் வாடிய என்னைப் பார்த்து அறிவில்லாதவன் போல நகைத்தாய். எனவே நீ அறிவில்லாத பிராணியான கழுதை யாகித் துன்புறுவாய் எனச் சபித்தான் மதுசூதனன்.



இதைக் கண்ணுற்ற அரசி வெகுண்டு "தவறு செய்பவர்களை மன்னித்தல் மனிதப்பண்பு. அப்படியின்றிக்கோபங்கொண்டு சாபம் கொடுத்த நீ எருதாகப் பிறந்து உழலக்கடவாய்" என்றாள் இதனால் வெகுண்ட அந்தணன் "உன்கணவன் தவறு செய்ய அதைப் பொருட்படுத்தாது எனக்குச்சாபம்கொடுத்தாய் நீஇழிகுலப்பெண்ணாகப்பிறந்து அலைவாயாக" என்றான்.

இவர்கள் சாபம் பலிக்கத்தொடங்கியது. அரசன் கழுதையாகப் பிறந்து ஒரு சலவைத் தொழிலாளியிடம் இருந்தான். அவன் பொதி சுமப்பதற்குக் கழுதையைப் பயன்படுத்தினான். வேளாவேளைக்குப் போதிய உணவு போடுவதில்லை. இடையிடையே கழுதையை அடித்துத்துன்புறுத்துவான்.

அரசி சேரிப்புறத்திற் பெண்ணாகப் பிறந்து பலதுன்பமுழன்று கலங்கிக் காலத்தைக் கழித்து வந்தாள். பகற்பொழுதிலே புல்வெட்டி விற்று அவ்வருவாய் கொண்டு வாழ்க்கையை ஓட்டி வந்தாள்.

மதுசூதனன் எருதாகி உழவனொருவனிடம் வேலைசெய்தான். பகல் முழுவதும் உழுவதும் வண்டி இழுப்பதுமாக எருது நன்றாக வேலை செய்தது. இரவிலே உழவன் போடும் புல்லை உண்டு அரைவயிற்றை நிரப்பும் வேலைப் பழுவாலும், போதிய உணவு இல்லாததாலும் அவ்வெருது வருந்தியது.

ஒருநாள் சேரிப்புறப்பெண் புல் வெட்டுவதற்காக ஆற்றங்கரைக்கு வந்தாள். அங்கு கழுதையும் நின்றது. உழவன் புல் மேய்வதற்கென எருதை அங்கு கொண்டு வந்து விட்டான். அவ்வேளை மழை பொழியத் தொடங்கியது. ஆற்றங்கரையில் விநாயகர் கோயில் இருந்தது. வெட்டிய புற்கட்டுடன் பெண் கோயில் மண்டபத்திற்கு வந்து ஒதுங்கிநின்றாள். எருதும், கழுதையும் அப்பெண் நின்ற மண்டபத்தில் வந்து மழைக்கு ஒதுங்கிநின்றன. அன்று விநாயக சதுர்த்தி. கோயிலில் அடியவர்கூடி விநாயகருக்கு அபிஷேகம் செய்து கொண்டிருந்தன பகல் உணவு உண்ணாததாற் பெண் சோர்ந்திருந்தாள். பசியால்வாடியஎருதும், கழுதையும்பெண்ணின் பக்கத்திலே இருந்தஅறுகம் புல்லைக் கண்டு அதைஉண்ணவெண்ணி அதைப்பற்றிஇழுத்தன. தனது அறுகம் புற்கட்டை இவை இழுப்பதைக் கண்ட பெண் எருதை அடித்தாள். எருது கழுதை யை மோதியது. காற்றுப்பலமாக வீசவே எருதின் வாயிலிருந்தும், கழுதை வாயிலிருந்தும் புற்கட்டில் இருந்தும் அறுகம்புல் பறந்து சென்று விநாயகர் திருவுருவிற்பட்டது. இதைப் பார்த்த அடியவர்கள் அபசாரச் செயல் இதுவெனப் பெருமானுக்கு மீண்டும் அபிஷேகம் செய்தனர். பெண்ணையும், எருதையும், கழுதையையும் மண்டபத்தைவிட்டுச்செல்லுமாறு விரட்டினர். இதனாற் பெண்ணுடன் கழுதையும் எருதும் வீதியைச் சுற்றி அலைந்தன.

அவ்வேளை தேவகணங்கள் விமானத்தில் வந்து பெண்ணையும் கழுதையையும், எருதையும் விண்ணுலகிற்கு வருமாறு அழைத்தனர். இவ்வதிசயத்தைக் கண்டு அங்கு நின்றோர் "விண்ணுலகிற்குச் செல்லும் தகுதிதான் இவற்றிற்கென்ன? என வினாவினர் "விநாயக சதுர்த்தி தின மான இன்று பகல் உண்ணாது இருந்து அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்த பலன் இதுவாகும்" என்றன தேவகணங்கள். அறிந்தோ அறியாதோ அறுகினால் விநாயகரைப் பூசிப்பது பேறுதரவல்ல தொன்றாகும்.

விநாயக சதுர்த்தி அன்று பகல் ஒருவேளை உணவு உண்டு இரவில் பால்பழம் அல்லது பணிகாரம் உட்கொள்ளலாம். இயன்றளவு தானதருமஞ்செய்து மண்ணினாற் செய்த விநாய

கர் திருவுருவை ஆற்றிலே விடுதல் முறையாகும். இவ்விரதம் இருபத்தொரு வருடம் அநுட்டிப்பது சிறந்தாகும்.

ஒரு சமயம் தேவர்கள் முன்னிலையில் விநாயகர் திருநடனம் புரிந்தார். அவரின் தொந்தி, துதிக்கை, மோதகம், ஏந்திய கை என்பவற்றைப் பார்த்துச் சந்திரன் சிரித்தான். விநாயகர் கோபம் கொண்டு நீ அழகுடையவன் என்று நினைத்தாய். பெரியோர். சபையில் அடக்கமின்றி நகைத்தாய். உன்னைப் பார்ப்பவர்கள் அலைந்து திரியக்கடவர்" எனச் சாபமிட்டார்.

சந்திரன் ஒளி மழுங்கிப் பூவுலகிற்கு அடியிற் சென்று மறைந்திருந்தான். இந்திரன் உபதேசப்படி சந்திரன் ஏகாசர மந்திரத்தைச் செபித்து இருபத்தொரு வருடம் விநாயகரை வழிபட்டான். விநாயகரும் மகிழ்ந்து சந்திரனுக்கு அனுக்கிரகம் புரிந்தார். "ஆவணிமாத வளர்பிளைச் சதுர்த்தியில் உன்னைப் பார்ப்பவர் துன்புறுவர். ஏனைய காலங்களில் நீ முன்போல இருக்கக் கடவாய் அங்கர சதுர்த்தி தோறும் நீ உதயமாகும்போது என்னைப் பூசித்து உன்னை யாவரும் துதிசெய்யக்கடவர்" என்றார் விநாயகர். சந்திரனின் ஒருகலையைத் தமது முடியிற் சூடிப் பாலச் சந்திரவிநாயகரானார்.

தமயந்தி இவ்விரதத்தை நோற்றுத் தன்னைப் பிரிந்த நளனையும் அடைந்தாள். மாளவதேசத்துச் சந்திராங்கதன் என்ற அரச இவ்விரதமகிமையாற் பல சிறப்பும் பெற்றான்.

சங்கடஹர சதுர்த்தி

சங்கடஹர என்றால் உபத்திரவங்களைப் போக்குவது எனப் பொருள்படும். கடன், நோய், சிறைவாசம், மனக்கிலேசம் முதலிய துன்பங்களாற் பீடிக்கப்பட்டவர்கள். அத்துன்பங்கள் நீங்கி இன்பம் பெற நோற்கும் விரதம் சங்கடஹர சதுர்த்தி விரதமாகும். இவ்விரதம் ஆவணிமாத அபரபக்கத்(தேய்பிறை) சதுர்த்தியிலே சந்திரோதய காலத்தில் அநுட்டிப்பதாகும். மாசிமாத அபரபக்கச் சதுர்த்தியிலும் மாதம் தோறும் வரும் அபரபக்க சதுர்த்தியிலும் இவ்விரதம் அநுட்டிக்கப்படும்.

சங்கடஹர சதுர்த்தி அன்று அதிகாலையில் எழுந்து நீராடி நித்திய கரும அநுட்டானங்களை முடித்து விநாயகரைப் பூசிக்கவேண்டும். சந்திர உதயம் வரை எந்த உணவையும் உட்கொள்ளேன். உன்னையே நினைத்திருப்பேன், எனது மனத்துயரை நீக்கியருள்வாயெனச் சங்கற்பம் செய்து பூசையை ஆரம்பிக்க வேண்டும். அவல், மோதகம், எள் கலந்த கொழுக்கட்டை போன்ற இனிப்புப் பண்டங்களை விநாயகருக்கு நிவேதித்து அறுகினால் அர்ச்சிக்க வேண்டும். தரித்திரங்கள் நீங்க வேண்டின் குடை, பாதணி, (செருப்பு) பசு முதலியவற்றைத் தானம் கொடுத்தலும், பிராமணபோஜனம் செய்வித்தலும் வேண்டும்.

சந்திர உதய வேளையிலே விநாயகரைப் பூசித்துப் பின் ரோகிணியுடன் சந்திரனையும் பூசித்தல் முறையாகும். அதன்மேல் உப்புச்சேர்க்காத உணவு உட்கொள்வது சிறந்தது.

தன் ஆட்சியிலே நாட்டுமக்கள் சுபீட்சமடைய வேண்டி அரிச்சந்திரன் இவ்விரதத்தை அநுட்டித்தான். சங்கடஹர சதுர்த்தி விரதம் அநுட்டிப்போர் தம்மனக் குறை தீர்ந்து தாம் நினைத்தவற்றைப் பெறுவர்.

விநாயக சஷ்டி விரதம்

இவ்விரதம் பெருங்கதை விரதம் என்றும் பேசப்படும். கார்த்திகை மாத அபரபக்க பிரதமை தொடங்கி மார்கழி மாத பூர்வபக்க சஷ்டி வரை இருபத்தொரு தினங்கள் அநுட்டிக்கப்படும்.



முதலிருபது நாட்களும் ஒரு பொழுதுண்டு,

நியமமுடன் பிள்ளையார் கதை கேட்டு விநாயகரைத் தியானித்திருந்து இறுதி நாள் உபவாசமிருந்து மறுநாள் காலையிலே பாரணை செய்து விரதத்தைப் பூர்த்திசெய்தல் மரபு. இருபத்தொரு நாள்களில் விநாயகருக்குச் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனை செய்து ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொரு விதமாக இருபத்தொரு வகையான பட்சணங்கள் நிவேதித்து வழிபாடு செய்தல் வேண்டும். இவ்விரதகாலத்தில் இருபத்தோரிழையினாலான காப்புநூலினை ஆண்கள் வலது மணிக்கட்டிலும் பெண்கள் இடது மணிக்கட்டிலும் அணிவது மரபு.

திருமால் பொய்ச்சாட்சி சொல்லிய குற்றத்திற்காக உமாதேவியார் திருமாலைக் குருட்டுப் பாம்பாகும் படி சபித்தார். திருமால் பாம்பாகி ஓர் ஆலம் பொந்தில் இருந்து தவஞ்செய்தார். விநாயகப்பெருமான் திருமாலின் சாபத்தை நீக்கி அருள்புரிந்தார் அத்தினம் விநாயக சஷ்டி தினமாகும்.

சைவப்புலவர் செல்லையா நவநீதகுமார்,
திருவாவடுதுறை ஆதீன சமயப் பரப்புநர்.

பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாக வும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்.

நீ உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவது தான் நீ சமய வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கானமுதல் அறிகுறியாகும்.

கண்ணுக்கு புலப்படும் கடவுளாக விளங்கும் ஒரு சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும். இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.



சன்னாகம்

ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தான

புனராவர்த்தன நூதன பஞ்சதள இராஜகோபுர, திரிதள விமான பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2013

கணபதி துதி

"மஹாகாயம் பூதகணாதிசேவிதம்
கபித்த ஜம்பூபலஸார பக்ஷிதம்!
உமாஸுதம் சோகவினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாதபங்கஜம்."

நிருசிந்தாமணி

விநாயக அடியார்களே!

இந்துமஹா சமுத்திரத்தின் மத்தியில் குபேரதீபம், இரத்தினதுவீபம் என்று எல்லோராலும் போற்றப்படுகின்ற ஸ்ரீலங்காதீபத்தின் சிரசாக விளங்குகின்ற யாழ்ப்பாணத்தின் மத்தியில் சன்னாகம் எனும் பதியில் மருதநிலத்தின் மத்தியில் பல நூற்றாண்டுகளாக பக்தர்களுக்கெல்லாம் அருள்பாவித்துக் கொண்டு ஐயனாரின் அருகில் வீற்றிருக்கும் ஸ்ரீ சந்திரசேகர விநாயகப் பெருமானுக்கும் ஸ்ரீ பஞ்சவக்ர விநாயகர், ஸ்ரீ விசாலாக்ஷி சமேத விஸ்வநாத பெருமான், மஹாலக்ஷ்மித்தாயார், ஸ்ரீ சுந்தர சுப்பிரமணியர், பைரவர், சனீஸ்வரர், கும்போதர சண்டேஸ்வரர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஆனி மாதம் 14ம் நாள் (28.06.2013) சுக்கிரவாரமும், சதய நட்சத்திரமும் , சஷ்டி திதியும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பகல் 09.25 - 10.30 மணி வரையுள்ள சிங்கலக்ன சுபவேளையில் புனராவர்த்தன அஷ்ட பந்தன மஹாகும்பாபிஷேகம் விநாயகர் திருவருளும் அனைத்துக் குருவருளும் துணை கொண்டு நிகழவுள்ளது.

கர்மாரம்பம் : ஆனி மாதம் 10ம் நாள் (24.06.2013) திங்கட்கிழமை காலை 5.00 மணி

எண்ணெய்க்காப்பு சாத்துதல்: ஆனி மாதம் 13ம் நாள் (27.06.2013) வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல்


எல்லா தினமும் **தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்**

தயவு
இங்ஙனம்

ஆலய நிர்வாக சபையினர்
ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்
தொ.பே:0718474720, 0775132261

ஆதீன கர்த்தாக்கள்

முத்து பிரின்டர்ஸ். கே.கே.எஸ் வீதி. சன்னாகம்.



சுள்ளாகம்

ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் தேவஸ்தான

புனராவர்த்தன நூதன பஞ்சதள இராஜகோபுர, தீரிதள விமான பிரதிஸ்டா

மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ் – 2013

கிரியாகால விபரம்

(24.06.2013) ஆனி மாதம் 10ம் நாள் திங்கட்கிழமை

(25.06.2013) ஆனி மாதம் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை

(26.06.2013) ஆனி 12ம் நாள் புதன்கிழமை

(27.06.2013) ஆனி மாதம் 13ம் நாள் வியாழக்கிழமை

(28.06.2013) ஆனி மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

கும்பாபிஷேக குருமார்கள் விபரம்

பிரதம்ச பிரதிஷை

தேவஸ்தான சபாபதி விஸ்வரூப குருக்கள் சதுர்வேத. ஸ்ரீ

"விஸ்வரூபா தாந்த்ரா" பிரீபாரோமன்"

பிரம்ம ஸ்ரீ சோ.சந்திரகாந்தக்குருக்கள்

பிரதமகுரு ஆச்சார்யர் - சகல கலை ஞான ஆகம சிவாகம பிரவீண குரு

அதனாதி

"பிரதமகுரு" சிவஸ்ரீ எஸ்.தேவராகக்குருக்கள் (சன்னாகம்)

"சதுர்வேதம்" பிரம்மஸ்ரீ விஸ்வரூபசர்மா

(ஸ்ரீ துர்கா குருகுலம் - தெல்லிபளை)

தேவஸ்தான குரு

"பிரதமகுரு" சிவஸ்ரீ ச.பாலசுப்பிரமணியக் குருக்கள்

அருள் உரை

ஸ்ரீமத்பரிசோகக்கந்த பாலாசார்ய சுவாமிகள்

"நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்"

"வேதஜோதிகள்" ஆறு திருமுருகன்

முன்னாள் தெல்லிப்பழை மேலைப்புலோலி

சர்வபரிபாலகர்

"பிரதான ஸ்தானிகர்" சிவஸ்ரீ நாகு மஹாதேவ குருக்கள்

(ஸ்ரீ சண்முக சுவாமி - வேலணை)

யாகசாலைகுருக்கள்

பிரம்மஸ்ரீ தி.பாலமுருகக் சர்மா

பிரம்மஸ்ரீ மா.பரமேஸ்வரக் சர்மா

பிரம்மஸ்ரீ மா.சாந்தி சர்மா

பிரம்மஸ்ரீ சோ.ரவீன்திர சர்மா

பிரம்மஸ்ரீ மா.பத்மநாத சர்மா

பிரம்மஸ்ரீ ஸ்ரீ.சண்முகசர்மா

கிரகதோஷ்

பிரம்மஸ்ரீ நடராஜசுந்தரசர்மா (மானிப்பாய்)

பிரம்மஸ்ரீ கதிரவேலாயுதக் சர்மா (கரவெட்டி)

பிரம்மஸ்ரீ சோ.சச்சிதானந்தசர்மா (மல்லாகம்)

கோதாரானம்

இணுவில் தவசிலிங்க குருகுலாசாலைப்

உபயகர்த்தாக்கள்

பிரம்மஸ்ரீ சீதாராம சர்மா (கரவெட்டி)

சிவஸ்ரீ கு.பூந்தோற்றம்பி குருவினர்

திரு.ஸ்.கரவெட்டியார்

திருமதி.ராசன் ஜோடோ & விபுலோ

திரு.சதீஸ்


திரு.பாஸ்கரன்

திரு.ஜெயகுமார்

திரு.ஜெயராஜ்

திரு.ஸ்ரீகாந்

திரு.ஸ்ரீதரன



கலியுகம் முப்பாரதி மேரிபுத்
மிக்கநற்ப மையாய் மன்னிய
உலகெலாம் சேகரிக்கக் காரணம்
தமரி லீக்ரிஸ்வை பரமற்கதுவ்

முன்னையே யாவை முத்தமே முத்தமே
சொன்னையே தூய மெல்லிக்கதுவே மன்னையே
சிதமே நுங்களே தெற்சையைப் சேரமே
நற்பரே நீங் ஙன் சரண

கலைமகள் ஸ்ரீசந்திரசேகர விநாயக தேவஸ்தான புனராவர்த்தன சம்ப்ரோக்ஷண

மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

தீருவருட்செல்வங்கள் பொலியுற்றுத் தெருவுக லைமகளெம் பெயர் பெற்று மினங்கும் இலங்காபுரியின் வடபால் யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்த கலாசார மதும் நகரில் சகல ஆற்ற வோடுகளும் வழிபட்டு நலம் பெறும் வண்ணம் கோயில் கொண்டெழுந்தருளி, அருள்கொழிக்கும் ஸ்ரீ சந்திரசேகர விநாயகப்பெருமானுக்கும், பக்தவத்சல சந்திரசேகரப் பெருமானுக்கும், விசாலாட்சி சமேத விஸ்வநாதர் பெருமானுக்கும், வைய பரிவார மூர்த்திகளுக்கும் சகலகலாவல்லி ஸ்ரீதேவ வழகுடன் இப்பதி மாதம் 12ஆம் நாள் (28-10-93) வியாழக்கிழமையும் பூர்வபக்ஷ தசமித்திதியும் உத்தராடநாள் நட்சத்திரமும் சுபயோக சுபகரணமும் கூடிய சுபவேளையிலே மகாகும்பாபிஷேகம் செய்யத் திருவுள் கூட்டி மிகுப்பதாகவ் அடியார்கள் கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகளையும், மஹா கும்பாபிஷேகத்தையும் தரிசித்து வரப்பிரசாதம் பெற்றுய்வார்களாக.

கிரியாகால நிகழ்ச்சிகள்

இப்பதி மாதம் 9ஆம் திகதி (25-10-93) திங்கள்

காலை 6 மணி 02 நிமி. சந்திரோதயமின்:
ஆசார்யவரணம், விநாயக பரிபாரி, கணபதி, நிலைய பூஜை, மண்டப பூஜை, பேரதாபம், த்வஜாரோகணம்.

காலை 7 மணி முதல் இரவேயாக்ன ஹோமம், பலிபூசைகள், அங்குரார்ப்பணம், ஆசார்யவரணம், சிலாவாசிகேம் முதல காலிதாபனம், மகாகும்ப ஸ்தாபனம், கும்பாலாசன பிரவேசம்.

மாலை 2 மணி 02 நிமி. முதல் 10 மணி 11 நிமி. வரை: தூரிஸ்நானம், கோலாசல், பிலம்நாபனம், பஞ்சாங்கபூசை

இப்பதி 10ஆம் நாள் (26-10-93) செவ்வாய்

காலை 8 மணி முதல்: விசேஷ சந்தி, முகசுத்தி யாக மூலஸ்தான பூஜை, ஹோமம், மஹா நிர்வாண, பஞ்சகவ்யாராதனை, வேத பிரதிஷ்டை ஹோம, பரமாஹுதி

மாலை 4 மணிமுதல்: விசேஷ சந்தி, முகசுத்தி, யாகமூலஸ்தான ஹோமம் தீபாராதனை.

இப்பதி 11ஆம் நாள் (27-10-93) புதன்

காலை 6 மணி முதல் காலை 9 மணி வரை: ஸ்நபனங்கள் (மஹாகும்ப மண்டபம்) சுற்றுப் பிராகாரம்)

காலை 9 மணி விசேஷசந்தி, முகசுத்தி, நவகலச பூஜை, ஸ்நபனாரோகணம், பூர்ணாஹுதி, தீபாராதனை, பஞ்சதாரார்சனை.

காலை 9 மணி முதல் சிவசுசந்தி, கொடிமரசுத்தம், பரிவார மூர்த்திகள், பூர்வ பக்ஷ சுத்தாதி, தீபாராதனை, பஞ்ச முகார்சனை வேத விதேஸ்தீர நேமாத பாராயணம்.

இப்பதி 12ஆம் நாள் (28-10-93) வியாழன்

காலை 7மணி முதல்: விஸ்வரூபதரிசனம், வசந்தமண்டபத்தில் பரிவார மூர்த்திகளுக்கு, மஹாகும்ப மூர்த்திகளுக்கு, யாத்திராதானங்கள், மஹாகும்ப பிரதிஷ்டாசனம்.

காலை 9-35 மணிக்கு மேலை சுத்தாயமான சுபயோகத்தில் மற்றும் பரிவார மூர்த்தி, மஹாகும்ப மூர்த்திகளுக்கு, சிவாசார்யர்களால் சந்திர சூரிய சிரித்திரங்களை (1-11 மணிக்கும் மஹாகும்பாபிஷேக நிகழும், சமூகன் அபிஷேக) ஆரூடி நகரில் சுவாமியை ஆசீர்வாத மஹாபிஷேகம், தீபாராதனை பிரசாத வழங்குதல்.

காலை 5 மணிக்கு சாயரட்சை சுவந்த மண்டபத்தை நிகழ்ச்சியை

கும்பாபிஷேக கிரியாகால ஆச்சார்யர்கள்

பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ ராசி வி.சிவஸ்ரீமத் குருக்கள் குரிமடம்,

பிரதிஷ்டாசார்ய:

வேதாகம கிரியாரத்னம் கிரியாமணி கோ. சந்திரசேகரக் குருக்கள் (தேவஸ்தான பிரதம குருக்கள்)

பிரதிஷ்டாகலா: சிவாகம குலபரம்பரை பிரம்மஸ்ரீ ந. சதாசிவக்குருக்கள (தந்தை சண்முக சுந்தர அதிபர், நிறுவனர்: சிவாகமாதய குருகுலம் பிரம்மஸ்ரீ ச. தேவராஜக்குருக்கள் (அப்பாவி), பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள் (மாதகல்)

சிவாசார்யர்: "காஞ்சிய சிவாசார்ய" பிரம்மஸ்ரீ ப. ரவிசுகுமாரசிவாசார்யக்குருக்கள் (சோமாஸ்)
"முகவர் சிவத்ரீ" பிரம்மஸ்ரீ ந. சிவஸ்ரீதரக்குருக்கள் (சிவாகம வேத நெலயாளர், சுன்னாகம்)

கருமாசார்ய: பிரம்மஸ்ரீ க. மாதாரசுக்குருக்கள் (சந்தானம் நெல்லுக்குளம் அம்மன், சுன்னாகம்)
பிரம்மஸ்ரீ க. சண்முகசுந்தரக்குருக்கள் (மாரிமுத்து நெல்லுக்குளம் முருகமூர்த்தி, மல்லாகம்)
பிரம்மஸ்ரீ சி. சுரேஷ்பாலசுப்பிரமணியக்குருக்கள் (சின்ன நெல்லுக்குளம் முருகன், சுன்னாகம்)
பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக்குருக்கள் (நடராஜர் நெல்லுக்குளம், சென்னை)
பிரம்மஸ்ரீ கோ. வரதராஜக்குருக்கள் (புளியடி)
பிரம்மஸ்ரீ க. சத்தியமூர்த்திக்குருக்கள் (நாகபூஷணி நெல்லுக்குளம், சாவகச்சேரி)
பிரம்மஸ்ரீ ம. நெடுமாலடிகளுக்குருக்கள் (விஸ்வபட் நெல்லுக்குளம் மயிலிட்டி)
பிரம்மஸ்ரீ கை. நெல்லிலைவாசகுருக்கள் (மீசாலை)

உபகாரார்கள்: பிரம்மஸ்ரீ சே. சிவசுப்பிரமணிய (நீராவியடி)
பிரம்மஸ்ரீ ம. கிரிஜைவாசகர் (சோமாஸ்)

ஓதுவாராயன: தாசசாஸ்திர குருகுலமாணவர்கள்

சுருக்கம்: இவர் இன்ன பரிதி ந. சிவஸ்ரீ இன்ன " முருகன் முருகி " என்ன ஸ்தான சுவாக்கு. சி. ஆ. இன்ன சிவாசார்ய
மாணவர்: விண்ணகரம்பதி க. சுந்தரலிங்கம் குருசிவா. மாஸ்டர்.

மஹா மண்டபார்: விநாயகர் தொண்டர்கள்

நமிபு: சிரியாகாலங்களில் அடியார்கள் புடவை, பாக், சாரி, இனிப், பழவகை, தெய், தேன், தேங்காய் வெண்ணெய், கற்பூரம் மற்றும் அபிசேகத்திரவியங்களை இயன்றவரை தந்து சிரியாகால பெருவாழ்வு சிவனருள் பெற்றுய்வார்களாக.

மேலதிக விபரங்கள் வேண்டுவோர் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஸ்தானிகர் விநாயகர் தேவஸ்தானம்
சுன்னாகம்

16-09-1993

ஸ்தா. சோமஸ்கந்தக்குருக்கள்

கணபதிதுணை

சுன்னாகம்

அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்

" சந்திர சேகரம் "

ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு 2013

இடம் : மேற்படி ஆலய மணிமண்டபம்

காலம் : 11.08.2013 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : முற்பகல் 10.00 மணி

தலைவர்

பேராசிரியர் இலக்கிய கலாநிதி

ப. கோபாலகிருஷ்ணஐயர்

வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

வெளியீட்டுரை

பிரம்ம ஸ்ரீ சி. சிவசரவணபவன் (சிற்பி) M.A

ஓய்வு பெற்ற அதிபர்

ஆய்வுரை

கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்

தலைவர் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்

விழாவில் கலந்து கொண்டு கும்பாபிஷேக மலரை வாங்கி விநாயகர் அருளுக்குப் பாத்திரமாகுமாறு அடியவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆதினகர்த்தாவும் நிர்வாகசபையினரும்

05.08.2013 சுன்னாகம் ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் தேவஸ்தானம்

Karkamal (Pvt) Ltd. Jaffna

பிரார்த்திக்கின்றோம்

எம்முடன் இணைந்து நிர்வாக சபையின் உறுப்பினராகவிருந்து அரும்பணியாற்றிய சந்திரசேகரம் சூரியகுமார் அவர்கள் நோய்காரணமாக 01. 07. 2013 அன்று காலமானது எமக்கு ஆழ்ந்த கவலையையும் அதிர்ச்சியையும் தருகிறது. அன்னாரின் ஆன்மா விநாயகப்பெருமானின் கழலை அடைந்து பேரின்ப நிலையை அடையப் பிரார்த்திக்கின்றோம்.

03. 08. 2013

நிர்வாகசபை

ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்

சுன்னாகம்.



நன்றி

விநாயகப் பெருமானின் அருளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மலர் உருவாக்கம் எளிதாகவும் விரைவாகவும் நிறைவேற ஒத்துழைத்த ஆலய ஆதீனகர்த்தா அவர்களுக்கும் ஆசியுரை, வாழ்த்துரை, வாழ்த்துப்பா ஆகியவற்றை வழங்கிய சிவாச்சாரியார்கள், சுவாமிகள், பெரியோர்கள் தகவல்கள் , தரவுகளை வழங்கி உதவிய அன்பர்கள், கட்டுரைகளை வழங்கிய அறிஞர்கள், அச்சிடும்போது அவற்றை செவ்வை பார்த்து உதவிய பெரியோர்கள், நிதி உதவி வழங்கியும் இன்றைய தினம் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை ஆகியவற்றை நிகழ்த்திய பெரியோர்களுக்கும், முதற்பிரதி சிறப்புப்பிரதிகளை வழங்கவும் பெறுவதற்கும் வருகைதந்த பெரியோர்களுக்கும், பல்வேறு வழிகளிலும் உதவிய நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும், விநாயகப்பெருமானின் அடியவர்களுக்கும் சிறப்பாக இம்மலரை அச்சிட்டுத் தந்த கரிகணன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். மேலும் மஹா கும்பாபிஷேகம் முதல் மண்டலாபிஷேகம் வரை நடைபெற்ற சகல வேலைகளிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாக சபை

ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார்

தேவஸ்தானம்.

11.08.2013

Harikanan, Jaffna.